பக்கங்கள் : 22+VIII=30

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 08 ஞாயிற்றுக்கிழமை (22.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :177

### பௌத்த மத விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில்

# வெசாக்கை ஒட்டி திருமலையில் கதவடைப்பு 3 நாள் நிறுத்தம்!

## வடக்கு - கிழக்கில் 26 முதல் தொடர்ச்சியான ஹர்த்தால்

திருகோணமலை,மே22

திருகோணமலை நகரில் திடீரென நிறுவப்பட்ட புத்தர் சிலையை அகற்றுமாறு கோரி தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவந்த கதவடைப்புப் போராட்டத்தை இன்று முதல் மூன்று தினங்களுக்கு இடைநிறுத்துவது என முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

பௌத்தர்களின் புனித நாளான வெசாக் பண்டிகையை ஒட்டி, பௌத்த மத விழுமியங்களுக்கும் புத்த பெருமானுக்கும் மதிப்பளிக்கும் வகையில் சகல எதிர்ப்பு நடவடிக்கைகளையும் நிறுத்திக்கொள்ளத் தீர்மானித்திருப்பதாக திருமலை தமிழ்மக்கள் பேரவை அறிவித்திருக்கின்றது.

இந்த மூன்று நாள் அவகாசத்தினுள் சிலை அவ்விடத்திலிருந்து அகற்றப்படாவிடின் எதிர்வரும் 26ஆம் திகதி முதல் தமிழர் தாயகமாகிய வடக்கு - கிழக்கு முழுவதும் தொடர்ச்சியான கதவடைப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சர்ச்சைக்குரிய புத்தர் சிலையால் பெரும் பதற்றத்தின் பிடியில் சிக்கியிருந்த திருமலை நகரப் பகுதி நேற்றுமாலை - கதவடைப்புப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டதை அடுத்து மெல்ல வழமை நிலைக்குத் திரும்பியது.

நகரில் காணப்பட்ட அச்சநிலை ஓரளவு தணிந்தது. வீதிகளில் சனநடமாட்டம் தெரிந்தது.

புத்தர் சிலை விவகாரம் ஏற்படுத்திய பதற்றத்தையும் கலவரச் சூழலையும் தணிப்பதற்கு

(22ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறை அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு; பெண் பலி!

### பெரியகல்லாறில் நேற்றிரவு சம்பவம்

மட்டக்களப்பு,மே22

மட்டக்களப்பு - கல்முனை வீதியிலுள்ள பெரியகல்லாற்றிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீது நேற்றிரவு இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் 65 வயது வயோதிப பெண்ணொருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்ட பெண் அலுவலகத்தில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு இரவு உணவு எடுத்துச்சென்றவர் என தெரிவிக்கப்படுகிறது.

கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(22ஆம் பக்கம் பார்க்க)

### சமாதானம், நல்லெண்ணத்தை வலியுறுத்தி

## நகரில் வெசாக் கூடு கண்காட்சி முப்படைகளும் இணைந்து ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே 22

நாட்டில் நிரந்தர சமாதானம் மலரவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடும், அனைத்து மக்களும் இன, மத பேதமின்றி ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்ற உயரிய சிந்தனையோடும் பாதுகாப்புப் படையினராகிய நாம் யாழ்ப்பாணத்தில் வெசாக் தினத்தைக் கொண்டாடவுள்ளோம்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன்.

குடாநாட்டில் நிலைகொண்டுள்ள முப்படையினரும் பொலிஸாரும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள வெசாக் கொண்டாட்டம் நாளை திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று தினங்கள் யாழ்.பொது விளையாட்டரங்கில்

(22ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி பொதுக்கட்டமைப்பு ஓர் அமைச்சின் கீழேயே!

### ஜயந்த தனபால கூறுகிறார்

கொழும்பு,மே22

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான உத்தேச பொதுக்கட்டமைப்பு ஓர் அமைச்சின் கீழேயே செயற்படும். அதன் செயற்பாடுகள், நிதி வழங்கல் தொடர்பான விடயங்களில் அந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சரே நாடாளுமன்றத்துக்குப் பதில் அளிப்பார். எனினும், எந்த அமைச்சின் கீழ் பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்துவது என்பது இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை.

இந்தத் தகவல்களைத் தெரிவித்திருக்கிறார் அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால.

பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடந்த பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஒரு கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இத்தகவல்களை வெளியிட்டிருக்கின்றார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமன்னிப்பு காலம் நீடிப்பு

கொழும்பு,மே 22

இராணுவத்திலிருந்து விலகி தலைமறைவானவர்களுக்கான பொதுமன்னிப்புக் காலத்தை இராணுவம் மேலும் நீடித்துள்ளது.

மே 9 ஆம் திகதி முதல் மே 20 ஆம் திகதி வரை பொதுமன்னிப்புக்கான காலத்தை இராணுவம் முன்பு அறிவித்திருந்தது.

தற்போது இது மேலும் ஒருவார காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தயா ரத்னநாயக்க தெரிவித்தார்.

இதற்குப் பின்னர் தலைமறைவானவர்கள் தங்களை இராணுவத்திலிருந்து விலக்கக் கோரும் விண்ணப்பங்களை ஏற்கும் பணி முறையான ரீதியாக ஜுன் 13ஆம் திகதியிலிருந்து தொடங்கும் என்றார் அவர். (3)

## பொதுக்கட்டமைப்புக்கு சு.கட்சி அங்கீகாரம்

கொழும்பு.மே.22

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பைச் செயற்படுத்துவதற்கு ஜனாதிபதியின் சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அங்கீகாரம் அளித்துள்ளது.

கடந்த வியாழன் இரவு ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் கூடிய அக்கட்சியின் மத்திய

(22ஆம் பக்கம் பார்க்க)

## முதலில் பொதுக்கட்டமைப்பின் நகலை ஜனாதிபதி தரட்டும் என்கிறது ஜே.வி.பி.

### அதன் பிறகே அவருடன் பேசுவதற்கு முடிவு

கொழும்பு,மே22

ஆழிப்பேரலை அனர்த்தங்களின் நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பின் உத்தேச நகலை ஜனாதிபதி கையளித்தால் மட்டுமே அவரைச் சந்திப்பது என்று ஜே.வி.பி. முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பியின் தலைவர்களுடன் நான்கு சுற்றுப் பேச்சுக்களை நடத்தப்போவதாகவும் அந்தப் பேச்சுக்களில் இணக்கம் ஏற்படாவிட்டாலும் சரி ஏற்

(22ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே சூரியகாந்தியில்

- கண்கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம்?
- வியட்நாம் போர் : சில நினைவுகள்...
- பெருமைக்குரிய பொல்காவல வடே
- கண்ணாடிப் பூக்கள் உச்சக்கட்ட வன்முறை சினிமா
- பொதுக் கட்டமைப்பு: இக்கட்டில் சந்திரிகா

இவற்றுடன் -

- சிறுவர் பொழில்...
- இலக்கியப் பரல்
- கவிதைகள்...

## ரணிலின் பாதுகாப்பு வாகன அணிக்கான எரிபொருள் அரைவாசியாகக் குறைப்பு

### அரசின் நடவடிக்கையால் ஐ.தே.க ஆத்திரம்

கொழும்பு.மே22

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகத்தில் அரசு அரைவாசியை வெட்டிக் குறைத்ததைக் கண்டிக்கும் வகையில் அரசின் கூட்டங்கள் எதிலும் பங்குபற்றுவதில்லை என்று ஐ.தே.கட்சி முடிவு செய்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு வாகனங்களுக்கு வழங்கப்பட்டுவந்த எரிபொருள் விநியோகம் திடீரென 50 வீதத்தால் வெட்டப்பட்டுள்ளது. இதனால் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் வெட்டுக்கு எதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு

(22ஆம் பக்கம் பார்க்க)

# மத உணர்வு வேறு, மத வெறி வேறு திருமலையில் நடப்பது என்ன?



திருகோணமலை நகரின் மையப் பகுதியில் பேரினவாதக் கும்பல்களின் திட்டமிட்ட நடவடிக்கையின் விளைவாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையினால் கடந்த ஐந்து தினங்களாக நகரம் பெரும் குழப்ப நிலையினை அடைந்துள்ளது.

சட்டவிரோதமாகவும் நகராட்சி மன்றத்தின் அனுமதி பெறப்படாமலும் அமைக்கப்பட்ட இந்தச் சிலையினை அகற்றுமாறு கோரியும் இதற்கான கண்டனத்தை தெரிவித்தும் தமிழ் மக்கள் பேரவையின் வேண்டுகோளின் பேரில் கடந்த ஐந்து தினங்களாகவே இந்தக் ஹர்த்தால், கடை அடைப்பு என்பன இடம்பெற்றிருக்கின்றன.

இந்தக் ஹர்த்தால், கடை அடைப்பு என்பவற்றின் விளைவாக நகரமே ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. நகரப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஏகோபித்த குரலில் இந்த சிலையை அகற்ற வேண்டும் என்பதற்காக பல்வேறு தியாகங்களையும் எதிர்கொண்ட நிலையிலேயே இந்த ஹர்த்தால், கடை அடைப்பு என்பன மிகவும் வெற்றிகரமாக இடம்பெறும் வகையில் முகம் கொடுத்திருக்கின்றனர்.

மத உணர்வு என்பது வேறு, மத வெறி என்பது வேறு. மத உணர்வுடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்போது அதனை ஏற்றுக் கொள்ளவேண்டியது தவிர்க்கமுடியாத கடப்பாடாகும். இது மனித உரிமையும் கூட.

ஆனால், மத வெறியுடன் மேற்கொள்ளப்படும் செயலை தன்மானமுள்ள எந்த மனிதனும் அனுமதிக்கமாட்டான். திருகோணமலை பேருந்து நிலையத்தை அடுத்துள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்திலேயே இந்த புத்தர் சிலை அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு பக்கத்தில் புத்தர் பெருமானை எதிர் நோக்கும் நகர மீன் சந்தை மறு பக்கங்களிலோ மதுபானக் கடைகள். இந்த நிலையில் பக்திபூர்வமாக இங்கு புத்த பகவானின் உருவச் சிலை அமைக்கப்பட்டிருக்கின்றதா என்ற கேள்வி மனச்சாட்சியுள்ள எந்த மனிதனிடமிருந்தும் எழத்தான் செய்யும்.

இதுமட்டுமல்ல, இந்தப் புத்தர் சிலை அமைக்கப்பட்ட இடத்திலிருந்து நூறுமீற்றர் தொலைவில் பௌத்த ஆலயம் ஒன்று உள்ளது. அதனைத் தாண்டி நூறுமீற்றர் தூரம் சென்றாலோ பிரட்ரிக் கோட்டை பகுதியில் பிரமாண்டமான பௌத்த ஆலயம் ஒன்றினைக் காணலாம்.

இவ்வாறு மிகக் கிட்டிய தூரங்களில் பௌத்த ஆலயங்களும் குறிப்பாக பௌத்த யாத்திரிகர் விடுதியும் அமைந்திருக்கும்போது பொதுமக்களின் நடமாட்டம் மிக்கதான பேருந்து நிலையம், முச்சக்கர வண்டி தரிப்பிடம் என்பவற்றை இணைக்கும் மையப் பகுதியில் மீண்டும் ஒரு புத்த வழிபாட்டுத்தலம் தேவைதானா என்ற கேள்வி புத்திபூர்வமான ஒவ்வொரு மனிதனிடமும் எழவே செய்யும்.

இந்த சிலை இரவோடிரவாக அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க விடயம்தான்.

இந்தச் சிலை அமைக்கப்பட்ட இடத் தில் மிகவும் சிறியதான புத்தர் சிலையொன்று அமைக்கப் பட்டிருந்தது. இது முச்சக்கரவண்டி சாரதிகளின் வழிபாட்டிற்கென கூறப்பட்டு வந்தது. சுமார் ஒரு அடி உயரமான இந்தச் சிலை தொடர்பாக எவரும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை.

ஆனால், கடந்த ஞாயிறன்று நள்ளிர வில் நான்கு அடி உயர பீடமும் எட்டு அடி உயரமுமான இந்தச் சிலை கொண்டுவரப்பட்டு இரவோடிரவாக இந்தப் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டது. திருகோணமலை பொதுச் சந்தையும் மீன் சந்தையும் பேருந்து நிலையமும் அந்தப் பகுதியில்தான் அமைந்திருக்கின்றன. திங்களன்று காலை அந்தப் பகுதிக்குச் சென்றவர்களுக்கோ அங்கு பேரதிர்ச்சி காத்திருந்தது:

12அடி உயரமான இந்தச் சிலை இரவோடிரவாக அமைக்கப்பட்டதை உணர்ந்த தமிழ் மக்கள் விசமத்தனமான நிலையில் இந்தச் சிலை அமைக்கப்பட்டதாக உணர்ந்து கொண்டனர். இனக் குரோதத்தையும் மதக் குரோதத்தையும் உருவாக்கும் அடையாளச் சின்னமாக அமைந்துள்ள இந்த சிலையை அங்கிருந்து அகற்ற தமிழ் மக்கள் அணி திரண்டனர். ஏனைய மதத்தவர்களும் இந்தச் சிலையின் சூட்சுமத்தை உணர்ந்த நிலையில் அவர்களின் பேராதரவும் இந்த எதிர்ப்புப் போராட்டத்திற்குக் கிட்டியது.

இந்த நிலை விஸ்வரூபம் கொண்டபோது நீதிமன்றத்தின் தலைவாசலில் காலடி எடுத்து வைத்தது. நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராசா அவர்களோ இந்த சிலையை தற்காலிகமாக அகற்றுவதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறு திருகோணமலை நகராட்சி மன்றம் மற்றும் இதில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் உத்தரவு பிறப்பித்தார்.

இதேவேளை, கடந்த சில தினங்களாகவே இதனைப் பொறுக்கமாட்டாத விசமிகள் குண்டு வீச்சு, வாள்வெட்டு, துப்பாக்கிப் பிரயோகம் என்பனவற்றை மேற்கொண்டனர்.

இதன் விளைவாக காயங்களுக்கு உள்ளானவர்கள் திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையிலேயே சனிக்கிழமை காலை கடற்படைத் தளத்தில் மாநாடொன்று இடம் பெற்றிருக்கின்றது. இந்த மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அசோகா ஜயவர்த்தன, முப்படைகளின் தளபதி தயா சந்தகிரி, பொலீஸ்மா அதிபர் மற்றும் படை அதிகாரிகளும் தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன், கௌரிமுகுந்தன், சட்டத்தரணி கா.சிவபாலன், திருகோணமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் தவசிலிங்கம் மற்றும் இந்து, கிறிஸ்தவ இஸ்லாமிய சமய தலைவர்களும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகரவும் கலந்துகொண்டிருக்கின்றனர்.

இங்கு பேசிய விக்னேஸ்வரன் மூன்று தினங்களுக்குள் இந்த சிலை அகற்றப்பட வேண்டும் என கோரியிருக்கின்றார்.அல்லாத பட்சத்தில் 26ஆம் திகதி வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஹர்த்தால் இடம்பெறும் எனவும் தெரிவித்திருக்கின்றார்.

சங்கீத்

# திருமலையில் இயல்புநிலை ஏற்படுத்தாவிட்டால் வடக்கு-கிழக்கில் மக்களைத் திரட்டிப் போராட்டம்

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,மே22

திருமலை நகரில் திடீரென வைக்கப்பட்ட புத்தர் சிலையினால் உருவாகியிருக்கும் பதற்றம் தணிக்கப்பட்டு அங்கு இயல்புநிலை ஏற்படுத்தப்படாவிட்டால் வடக்கு - கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் ஒன்றுதிரண்டு பேராட்டங்களை முன்னெடுக்கும் நிலை உருவாகும்.

தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கை வருமாறு:-

தமிழர் தாயத்தின் தலைநகரான திருகோணமலையில் தமிழர்கள் மீது சிங்களக் காடையர்கள் மேற்கொண்டுவரும் காடைத்தனத்தை உடன் நிறுத்தவேண்டும். இதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுத்து அங்குள்ள பதற்ற நிலையினைத் தணித்து ஓர் இயல்பு நிலையினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிங்கள அரசாங்கம் தமது திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் தமிழர் தாயகப் பிரதேசங்களை ஆக்கிரமித்து வந்துள்ளது. தமிழர் தாய் நிலங்களை ஆக்கிரமிப்பதன் மூலம் அப்பிரதேசங்களை சிங்கள மயப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறது. அதில் ஒரு செயற்பாடே திருமலை நகரப் பகுதியில் புத்தர் சிலையை நிறுவியமை. இதனால், ஏற்பட்ட குழப்பமே இன்று ஏற்பட்டுள்ள பதற்ற நிலையாகும். இதனால் தமிழ் மக்கள் நாளுக்கு நாள் சிங்களக் காடையர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகி வருவதோடு அவர்களது உடைமைகளும் நாசமாக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தடுக்க அரசு எந்த நடவடிக்கைகளையும் எடுத்ததாகத் தெரியவில்லை. மாறாக மேலும் நிலைமையைச் சிக்கலாக்கி பிரச்சினையை வளர்ப்பதிலேயே அரசும் மற்றும் பேரினவாதக் கட்சிகளும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

திருகோணமலை, தமிழ் மக்களின் தாயகப் பூமி. அதனைச் சிங்களம் தமது திட்டமிட்ட குடியேற்றம் மூலம் அங்கு பௌத்தத்தைக் கொண்டுவந்து அதனை சிங்களவருடைய ஆளுகைக்குள் கொண்டுவருவதிலேதான் குறியாக உள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகியும் அரசு தமிழ் மக்கள் மீதும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் நிழல் யுத்தம் ஒன்றை நடத்தி தமிழ்மக்களுடைய போராட்டத்தை நசுக்கக் கனவு காண்கின்றது. அத்துடன் அரசானது போரினாலும் இயற்கையின் சீற்றத்தாலும் அழிந்த தமிழர் தாயகத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த பொதுக்கட்டமைப்பைக் கூட வழங்குவதற்கு சிங்கள அரசு பின்னடிக்கிறது என்றால் தமிழ் மக்களது உரிமையை சிங்கள அரசால் எவ்வாறு தரமுடியும்.

அந்தவகையில்தான் இந்தச் சமாதான கால சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிங்கள அரசு தமிழர் தாயகப் பிரதேசங்கள் மீது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் திட்டமிட்டு பௌத்த விகாரைகளையும் அமைத்து அதனை சிங்களமயப்படுத்த முனைகிறது.

இவ்வாறான சிங்கள காடையர்களது காடைத்தனமான செயல்களையும் மத ரீதியான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் தமிழர்களாகிய நாம் இனியும் அனுமதிக்கப்போவதில்லை. எனவே, திருகோணமலையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றி எமது உறவுகள் மீதான தாக்குதல்களை நிறுத்தி இயல்பு நிலையை ஏற்படுத்தாவிட்டால் வடக்கு - கிழக்கு தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு அரசிற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலை உருவாகும் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழன் புதைபொருள் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,மே22

'தமிழன் புதைபொருள்' என்ற ஆய்வு நூலின் மீள் பதிப்பு, வட்டுக்கோட்டை சின்னக் கதிர்காமம் ஆலயத்தின் தேர்த்திருவிழாவான இன்று வெளியிடப்படவுள்ளது.

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் அப்போதைய கல்விப் பகுதி உயர் அதிகாரியான அமரர் மு.சீவரத்தினத்தால் எழுதப்பட்ட 'தமிழன் புதைபொருள்' வட்டுக்கோட்டை காந்திஜி சனசமூக நிலையத்தினரால் மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அந்த நூலை சின்னக்கதிர்காம தேர்த்திருவிழாவின் போது இன்று முற்பகல் 11 மணியளவில் ஆலய அறங்காவலர் வெ.நல்வேல்நாதன் வெளியிட்டுவைப்பார். (அ)

## பத்திரிகையாளர் சங்க கூட்டம் செவ்வாயன்று

யாழ்ப்பாணம்,மே22

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது,.

சங்க அங்கத்தவர்களைக் கலந்துகொள்ளும்படி சங்கத்தின் தலைவர் செ.கதிர்காமத்தம்பி கேட்டுள்ளார். (3)

## பட்டதாரிப் பயிலுநர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே22

யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சகல பட்டதாரி பயிலுநர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளத் தில் உள்ள உயர் கல்வி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

பட்டதாரிப் பயிலுநர்களை தேசிய அடையாள அட்டை மற்றும் பதிவு இலக்கத்துடன் சமூகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (3)









யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் பாதுகாப்பு படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுவரும் வெசாக் கொண்டாட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று மாலை யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர்கூடத்தில் பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தினால் நடத்தப்பட்டது.

இதன்போது யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் விளக்கமளிப்பதையும் அருகில் பலாலி படைத்தள உயர் அதிகாரி உடவத்த, 51 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பன்னிப்பிட்டிய, 51ஆவது படைப்பிரிவின் சிரேஷ்ட அதிகாரி மாயதுன்ன, 51 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த கேணல் ரணசிங்க ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம் : பிரபா)

# பொதுக்கட்டமைப்பு உயிர் பெறுமா?

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகவே இப்போது எங்கும் பேசப்படுகின்றது. பொதுக்கட்டமைப்பு வருமா? வராதா? அவசியமா? அவசியமற்றதா? அது எப்படிப்பட்டதாக இருக்கும்...? என்றவாறெல்லாம் மக்கள் விவாதிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.**

**இந்தநிலையில், இந்தப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சமூகத்தின் பல்வேறு தரப்பினரிடமும் பெறப்பட்ட கருத்துக்களை வாசகர்களுக்காகத் தொகுத்துத் தருகின்றோம். படித்துப் பாருங்கள்!**

## தமிழ் மக்களை ஏமாற்றும் மற்றுமோர் உபாயம்!



சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை அரசியலை எடுத்துக்கொண் டால் தமிழ் மக்களைக் கையாள்வதற்கு - ஏமாற்றுவதற்கு காலத்துக்குக் காலம் பல தீர்வுத் திட்டங்கள், சமரச முயற்சிகள் என்பன ஏற்படுத்தப் பட்டன.

அதன் ஓர் அம்சமாகவே ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுக் கட்ட மைப்பு என்ற விடயத்தையும் நான் பார்க் கின்றேன்.

சாதாரண மக்களுடைய இயற்கை அழிவுக்குச் செய்யப்படு கின்ற புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளக் கூடிய கட்டமைப்பை அரசியலாகப் பார்க்கின்ற - அரசியல் லாபத்துக்காகப் பயன்படுத்துகின்ற நிலைமையே தென்னிலங் கையில் உண்டு.

பொதுக்கட்டமைப்பு என்பது பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினை களுக்குரிய தீர்வாக அமை யாது என்பதே உண்மை.

இலங்கையின் இறைமை தொடர்பான ஒருவிடயம் இங்கு முதன்மைப்படுத்தப்பட் டிருக்கிறது. கடலில் இருந்து 2 கிலோமீற்றர் தூரம் வரையான அபிவிருத்தி பற்றிய இழுபறிதான் பொதுக்கட்டமைப்புவிடயத்தில் தென்னிலங்கை சக்திகளிடம் எழுந்துள்ள முக்கியமான முரண்பாடு.

இலங்கை அரசு தமிழர்களுடைய அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுமென்று நாங்கள் கருதுவதென்பது ஒருவகையில் எங்களை நாங்களே முட்டாள் களாக் கிக்கொள்கின்ற செயற்பாடாகத்தான் இருக்கும்.

பொதுக்கட்டமைப்புக் கைச்சாத்திடப்பட்டாலும் அது தமிழர் நலனை நோக்கிய கைச்சாத் திடலாக இருக்காது. மாறாக, சர்வதேசச் சமூகத்திற்குக் காட்டுவதற்கும், சர்வதேச நிதியைக் கையாள்வதற்குமான ஓர் உபாயத்திற்கான கைச்சாத்திடலாகவே அது இருக்கும். அண்மை யில் கூட ஜனாதிபதி சந்திரிகா, ரூபவாஹினிக்கு அளித்திருந்த பேட்டியின் இறுதிக்கட்டத்தில் பொதுக் கட்டமைப்பு என்பது மாகாணசபைக்கு உட்பட்ட ஒரு நிர்வாக அமைப்புமுறை என்று கூறியிருக் கின்றார்.

ஜனாதிபதி என்னதான் பேசினாலும் அவர் ஜே.வி.பியைப் பகைப்பதற்கோ - அவர்களை விட்டு விலகிப்போவதற்கோ தயாராக இல்லை. அதுபோலவே ஜே.வி.பியும் அரசைவிட்டுப் போகத் தயாராக இல்லை. ஒட்டுமொத்தத்தில் இந்தப் பொதுக்கட்டமைப்பு என்பதை மீண்டும் ஒருதடவை தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றுகின்ற கருவியாகவே அரசு பயன்படுத்தப் பார்க்கின்றது.

**கே.ரீ.கணேசலிங்கம்**
(அரசறிவியல்துறை விரிவுரையாளர்)

## இதுவும் ஒரு நாடகம்தான்



முன்னைய காலத்தில் குதிரை வண்டிலில் குதிரைக்கு முன்பாக ஓர் அடி தூரத்தில் புல்லுக் கட்டு ஒன்று கட்டப் பட்டிருக்கும் அந்தப் புல்லைப் பார்தபடியே அந்தக் குதிரை முன்நோக்கிச் செல்லும் அந்தப் புல்லுக் கட்டு நிலையில் தான் பொதுக்கட்டமைப்பு.

பொதுக்கட்டமைப்பு என்பது ஓர் ஏமாற்று வித்தை. பொதுக் கட்ட மைப்பு என்று கூறி எமது மக்கள் ஏமாற்றப் பட்டுவருகின்றனர். தமிழர் வரலாற்றில் மற்றுமொரு ஏமாற்று நாடகம் அரங்கேறுகிறது.

தமிழரும் வாழ வேண்டும் என்ற எண்ணம் ஆழுந்தரப்பிடம் வரா விட்டால் எதுவும் நடக்காது.

**கே.பாலசுப்பிரமணியம்**
(மூத்த வங்கியாளர், இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர்)

## கரையோர அபிவிருத்தி புலிகளால்தான் சாத்தியம்



வடபகுதியின் கடற்றொழில் மற்றும் கரையோர மக் களின் வாழ்வு என்பன 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கீழ் நோக்கித்தான் போய்க் கொண்டிருக்கின்றன.

இதற்கு முதலாவது காரணமாக இருந்தது இராணு வத்தினரின் கெடுபிடிகள்தான் அதன்பிறகு இப்போது சுனாமிப் பேரழிவு ஏற்பட்டு கடற்றொழில் சமூகத்தை மேலும் சீரழித்தது.

இந்த அழிவுகளைக் கட்டியெழுப்புவது என்பது ஒரு பாரிய விடயம். சிறப்பான திட்டமிடலுக்கு கீழ் ஒழுங்கமைப் புடன் செயற்பட்டால் மட்டுமே இந்த இழப்புகளிலிருந்து நாங்கள் மீளலாம்.

இப்போது சுனாமியால் அழிவடைந்த பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு எங்க ளுக்கு நம்பிக்கையான - உளச்சுத்தியுடன் செயற்படக்கூடிய - தமிழ்மக்களின் பிரதி நிதி களான விடுதலைப் புலிகளால் மட்டும்தான் முடியும் .

நாங்கள் பல தலைமுறைகளாக சிங்கள அரசுகளாலும் எமது அரசியல் தலைவர்களாலும் ஏமாற்றப்பட்டு வெறும் அநாதைகளாக - நிர்க்கதியான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே மேலும் ஒருதடவை ஏமாறுவதற்கு நாம் தயாரில்லை.

எனவே, தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடலில்தான் எங்களுக்கு விடிவு கிடைக்கும் என்பதை நாங்கள் திட்டவட்டமாக - நூற்றுக்கு நூறு வீதம் நம்புகின்றோம். சுனாமியால் பாதிக்கப் பட்ட கரையோர தமிழ்மக்கள் உட்பட ஒட்டுமொத்த கடற்றொழிலாளர்களினதும் கருத்தும் இப் படித்தான் இருக்கிறது

**சி.தவரெட்ணம்**
(கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர்)

## விடுதலைப் புலிகளின் பங்களிப்புடனே பொதுக்கட்டமைப்பு வேண்டும்

சமாதான நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பொதுக்கட்டமைப்பு வரும் என சகலரும் எதிர்பார்த்தனர். பொதுக்கட்டமைப்பு வருமா என்ற ஐயப்பாடே தற்சமயம் உள்ளது.

வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல இலங்கையில் சமாதானம் நிலவவேண்டுமாயின் விடுதலைப் புலிகளின் பங்களிப்போடுதான் அது சாத்தியம். ஆகவே, விடுதலைப் புலிகளின் ஆதரவுடன்தான் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்.

பொதுக்கட்டமைப்புக் குறித்து ஜனாதிபதிமட்டுமே பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பேச்சில் மட்டமல்லாது, செயலிலும் இறங்கவேண்டும். பொதுக்கட்டமைப்பை செயல்வடிவில் கொண்டு வர அவர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**த.சற்குணராஜா** - பிரபல வர்த்தகர்.

## எதிர்பார்த்தவை நடக்கவில்லை



ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள பொதுக்கட்ட மைப்பு உருவாக்கப்படுவது தொடர்பான கருத்து வெளியே வந்தபோது சமயத் தலைவர்களும் பலதரப்பினரும் அதை வரவேற்றனர். சமாதான முயற்சிகளில் முன்னேற் றம் ஏற்படும் என்றும் இனங்களுக்கிடையில் ஒற்றுமை பலப்படும் என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டனர். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்புப்படி எதுவும் நடக்க வில்லை.

ஆழிப்பேரலையால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர் கள் வடக்கு- கிழக்குப் பிரதேச மக்கள்தான், அதிகம் தமிழர் - முஸ்லிம் மக்களே பாதிப்புக் குள்ளானார்கள். சிங்கள மக்கள் பெரிதாகப் பாதிக்கப்படவில்லை.

நாகர்கோயிலில் இருந்து நாயாறு வரையும் மூதூரில் இருந்து வாகரை வரையும் உள்ள கடலோரப் பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாகும். குடாநாட்டின் பல பிரதே சமும் அவர்கள் பகுதி யாகும்.

அவர்கள் மூலம் மீள்கட்டுமானத்தை மேற்கொள்வதுதான் நியாயமும் ஆகும்.

இந்தப் பிரதேச மக்களின் மீள் கட்டுமானப் பணிகளுக்கு கூடுதலான சர்வதேச உதவி தேவை. சர்வதேசம் வழங்கிய உதவி இன்னமும் சரிவர அங்கு வந்து சேரவில்லை.

சர்வதேசம் வழங்கும் நிதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிட்டும் என அந்த நாடுகள் மத்தியில் உணர்வு உள்ளது. அந்த உணர்வு மதிக்கப்படவேண்டும்.

கரையோரங்களில் ஆயிரம் மீற்றர் தூரத்தில் மக்கள் வாழ்ந்து வந்தனர் அதில் 50 மீற்றர் தூரமான பிரதேசம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டது? அந்தப் பிரதேசம் சர்வதேசம் வழங்கும் நிதியைப் பெற்று மீள்கட்டுமானம் செய்யப்படவேண்டும்.

புலம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் வழங்கும் உதவிகள் சரியான முறையில் அந்த மக் களைச் சென்றடைகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த நிதி சென்றடைவதை அரசு உறுதி செய்யவேண்டும்.

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**

## இடைக்கால சபையே இப்போது அவசியம்!



ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று 5 மாதங்கள் கடந்துவிட் டன. ஆகவே பொதுக்கட்டமைப்பின் தேவை காலம்பிந்திவிட்டது. அவசர தேவை பொதுக்கட்டமைப்பு அல்ல.20 வருட காலத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்கட்டுமானப்பணிகளை முன்னெடுப்பதற் கான இடைக்கால சபையே இன்றுதேவை.

பொதுக்கட்டமைப்பும் இடைக்கால நிர்வாக சபையும் சமாந்தர மாக ஏற்படுத்தப்படவேண்டும். இயற்கையால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்கட் டமைப்புக்கு பொதுக்கட்டமைப்பு எவ்வளவு தூரம் அவசியமோ, அதைவிடக் கூடுதலான அளவு அவசியமானது, மனிதர்களால் அழிக்கப்பட்ட மக்களின் மீள் கட்டுமானப் பணிகளுக்கு இடைக்கால நிர்வாக சபை யாகும்.

பொதுக்கட்டமைப்புப் பற்றிப்பேசி, இடைக்கால நிர்வாக சபைக்கட்டமைப்பு அடிபட்டுப்போக இடமளிக்கக்கூடாது .

பொதுக்கட்டமைப்புக்கு நாங்கள் எதிரானவர்கள் என்ற கருத்து இல்லை. யுத்தத்தால் 20 வருடங்களாகப் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் கட்டுமானத்துக்கு இடைக்கால நிர்வாகக்கட்ட மைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்பதே சகலரின் கருத்தாகும். கடந்த கால அனர்த் தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உதுவிகளில் பாகுபாடு காட்டக்கூடாது. சகலருக்கும் சரிசமனாக உதவிகள் கிடைப்பதை அரசு உறுதி செய்யவேண்டும்.

**எஸ்.பரமநாதன்**
(மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர்)

## பொதுக்கட்டமைப்புக்கான காலம் கடந்து விட்டது!



ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் கட்டுமானத் துக்கான பொதுக்கட்டமைப்பின் முக்கியத்துவம், தேவை இப்போது இல்லாமல் போய்விட்டது. பொதுக்கட்டமைப்பு எப்போதே, தேவைப் பட்டது. ஆனால், அக்கட்டமைப்புத் தேவையா என்ற நிலை தற்சமயம் ஏற்பட்டுள்ளது.

தேசிய அரசியலில் பெரிய விடயமாக நோக்கப்படும் - பேசப்படும் - பொதுக்கட்டமைப்பின் தேவை இல்லாமல் போய்விட்டது.

சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் ஊடாக மீள்கட்டு மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மக்கள் தமது இழப்புக்களில் இருந்து ஓரளவு மீண்டுவிட்டனர்.

உரிய நேரத்தில் வராததால் வந்தாலும் சரி வராவிட்டாலும் சரி என்ற நிலைக்கு பொதுக் கட்டமைப்புச் சென்றவிட்டது. தெற்கில் காட்டும் முக்கியத்துவம், அரசியல் பின்னணியைக் கொண்டதே தவிரவேறு எதுவும் இல்லை.

நீண்ட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்கட்டுமானத்துக்கான இடைக்கால நிர் வாக அமைப்பையே மக்கள் வேண்டி நிற்கிறார்கள். பொதுக்கட்டமைப்பை அல்ல.

**சி.வி.கே.சிவஞானம்**
(யாழ்.மாநகரசபையின் முன்னாள் ஆணையாளர்)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொதுக்கட்டமைப்பே வழி!



இலங்கை சுதந்திரம் அடைந்து 50 வருடங்கள் கடந்துவிட்டன. ஆட்சிக்கு வரும் அரசுகள் எல்லாம், தமிழ் மக்களுக்கு அதைச் செய்கிறோம், இதைச் செய்கி றோம் என்று கூறுவதைக் கேட்டு தமிழ் மக்கள் களைத்து விட்டார்கள்.

தமது சுதந்திரம், சுபீட்சத்தைப் பெறுவதற்காக தமிழ் இளைஞர்கள் ஆயுத மெடுத்து போராடினார்கள், நசுக்கப்பட்ட தமிழினம் இதனால் தலை நிமிர்ந்தது.

இந்த நிலையில் தான் ஆழிப்பேரலை அனர்த்தம் வந்து எம் தேசத்தை யும் மக்களையும் காவுகொண்டது. கரையோர மக்களின் வாழ்வாதாரங்கள் அழிக்கப் பட்டன.

இலங்கை மக்களுக்கு உதவி வழங்கவென உலக நாடுகள் ஓடி வந்தன. பெருமளவு நிதி உதவிகளையும் செய்தன.

எனினும் அவற்றை இலங்கை அரசு முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை. மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டப்பட்டது.

நிதியுதவியை வாரி வழங்கும் நாடுகள் எம்மக்கள் மீதான கவனத்தை உன்னிப்பாக அவ தானித்து வருகின்றன.

மக்களினதும், தேசத்தினதும் விடிவுக்கு, பொதுக் கட்டமைப்பு ஒன்றே வழியாக அமைவதால், உதவிவழங்கும் நாடுகள் அனைத்தும் பொதுக்கடமைப்பு அமைப்பதை வலியுறுத்தவேண் டும்.

சுனாமி அனர்த்த நிதியுதவிகள், பாதிக்கப்பட்ட மக்கள் அனை வருக்கும் சென்றடைய வேண்டும் இதற்கு பொதுக் கட்டமைப்பு ஒன்றுதான் இறுதி வழி.

**ஐ.மகேஸ்வரக் குருக்கள்**
(இந்துமத குருபீடாதிபதி)

| | | | |
|---|---|---|---|
| ராகு | | புத. வெ. சூர். ▲ | சனி |
| செவ். | இராசிச் சக்கரம் | | |
| | | | |
| | | சந். | கேது வியா. |

# இந்த வார இராசி பலன்

## 22.05.2005 – 28.05.2005

**மாற்றம்:**
சுவாதி நட்சத்திரம் 22-05-2005 சந்திரன் துலாமில் நிற்கும்.

### மேடம்

அநாதைகளுக்குக் கை கொடுக்கவும் அதனால் உங்களுக்கு நல்ல பெயர் ஏற்படும். உங்களுக்கு வாழ்வில் எத்தனை சூறாவளி ஏற்பட்டாலும் - தொழில ஸ்தானத்தில் புதிய உருவாக்கம், குடும்பச்சிறப்பு கொடுக்கும். கற்பனை, சங்கீதப் பிரியம், வீடுமனைச் சிறப்பு, பித்தரோகம், உஷ்ணபீடை கொடுக்கும். சட்டத்துறையினர்கள் நன்மை அடைவார்கள். *அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், சனி.*

### இடபம்

பதட்டநிலை, பெரியவர்கள் உதவி, எதிர்பாலாருடன் முறுகல் நிலை, பணவரவு என்பன தொடரும். பிரயாணமொன்றுக்குத் திட்டமிடுவார்கள். இனஜனக் கொண்டாட்டங்கள் கொடுக்கும். தொழில்நிலையில் மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. அரசியல்வாதிகளுக்கு இடமாற்ற நிலை ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### மிதுனம்

இடமாற்றம் செய்வதானால் அதிக இலாபங்கள் அடைவீர்கள், சட்டதிட்டம் பேச வாழ முடியாது. எனவே, சமாளித்துக் கொள்ளுங்கள். பொருள் ஏமாற்றம ஏற்படும், வயிற்றுநோ கொடுக்கும். குருத்துறையினர் நற்பலன் அடைவார்கள். வெளிநாடு போகச்சிந்தனை ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### கடகம்

குழந்தைச் செல்வம் குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும். காலை ஓர் எண்ணம். மாலை அதற்குமாறான செயற்பாடுகள். சகோதர வழியில் உதவிகளால் நற்பலன்கள், இலாபங்கள் அடைவீர்கள். தொழில் ரீதியில் இடமாற்றங்கள் ஏற்படும். புத்திரர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- புதன், வியாழன், வெள்ளி.*

### சிங்கம்

வருமானமில்லாத வாழ்வு அடிக்கடி வெறுப்பைக் கொடுக்கும். சகோதரத்துடன் கருத்து வேற்றுமைப்படுவீர். மாமன்வழி உதவிகள் கிடைக்கும். தொழில ஸ்தானத்தில் புதிய திட்டங்களைச் செலுத்தி நன்மைகள் அடைவீர்கள். பொருளுக்காகப் போராடுவீர்கள். குருத்துறை, வியாபாரத்துறையினர் தொழில் முன்னேற்றம் அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்:- ஞாயிறு, புதன், வியாழன்.*

### கன்னி

சொந்த பந்த உறவில் விரிசல்கள் வரும். பணவரவு உண்டு. தாய்வழியினர் உதவி செய்துவிட்டுக் குறைசொல்லுவார்கள். நன்மைகள் பலதை உறவினருக்குச் செய்வார்கள். காணி பூமியில் மாற்றங்கள் கொடுக்கும். மாமன்வழியில் மாற்றமுண்டு. தொழில் நன்மைகள் வெற்றி கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன், வெள்ளி.*

### துலாம்

பெரியவர்கள் நன்மை செய்வர். சகோதரங்களுக்கு நல்ல தல்ல. தோழர்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். வரவு அதிகரிக்கும். புதிய உற்பத்தியால் விவசாயிகள் இலாபம் அடைவார்கள். சட்டத்தரணிகள், சட்டத்துறையினர் நன்மை அடைவார்கள். பிரயாணங்களைத் தாமதிப்பது நன்று.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன், வெள்ளி, சனி.*

### விருச்சிகம்

உங்கள் பேச்சைக் கேட்டதும் ஆட்டம், பாட்டு எல்லாம் அடங்கிவிடும். எதிரிகள் பெட்டிப்பாம்பென அடங்குவர். பணவரவு, பிரயாண முயற்சி, சாஸ்திரவிருப்பு, சுகம் கொடுக்கும். ஆலயத் திருப்பணியால் மனத் திருப்தி ஏற்படும். இரும்பு, அரசியல், வியாபாரம் ஆகிய துறைசார்ந்தோர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, புதன், வெள்ளி.*

### தனுசு

பொருள் இழப்பொன்று ஏற்படலாம். நிதானமாக இருக்கவும். குடும்பத்தில் பேதங்கள் ஏற்பட்டாலும் உலகில் எதுவும் நிரந்தரமாகாது எனச் சமாதானம் அடையுங்கள். புதிய பொறுப்புக்கள் வரும். புத்திரரிடமிருந்து செய்திகள் வரும். பொதுத்தொண்டுகளால் புகழ்வரும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வெள்ளி.*

### மகரம்

எவரையும் நம்பி உங்கள் வீட்டிலேயோ தொழில் ஸ்தாபனத்திலோ பொறுப்புகளைக் கொடுத்து விடாதீர்கள். இதனால், இழப்புக்களைச் சந்திக்க நேரிடும். தொழிலில் சலிப்புவரும். வருமானம் தானே வருகின்றது. எதற்குச சோம்பல் அடைகிறீர்கள். கால் உளைவு அதிகரிக்கும். மருந்து எடுக்கவும்.

*அதிர்ஷ்டநாள்கள் :- ஞாயிறு, புதன், வெள்ளி.*

### கும்பம்

வீடுமனையில் அவதானமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் ஊக்கம் தருவார்கள். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். பொருள் வரவு ஏற்படும். சகோதர வழியிலிருந்து உதவிகள் கிடைக்கும். ஆராய்ச்சி, குருத்துறையினர்கள் நன்மை அடைவர். கொடுத்ததைத் திரும்பிப் பெறமுடியாமல் மனம் புழுங்குவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன், சனி.*

### மீனம்

பொருளால் வேதனை வரும். இனஜனங்களுடன் பிரசசினைப்படுவீர்கள். அயலவாகளுடன் போட்டிகள் ஏற்படும். தொழில் துறையில் ஊக்கத்தைப் பொறுத்து மாற்றங்கள் ஏற்படும். விவசாயம், வாசனைப் பொருள் விற்பனை, மருந்து, குருத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்:- ஞாயிறு, வியாழன், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

**திருநெல்வேலி ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா**

சிற்பிகள் நாயகி பத்திரகாளி அன்னை சித்திரத்தேரேறும் திருக்காட்சி காணத் திரண்டு வாரீர்.

**சாயி கணேசா ரேட்ஸ்**

76A, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(சி-42990)(26-11-14)

## கந்தர்மடம் செல்வநாகபூசணி ஆலயத்தில் நாளை தீ மிதிப்பு

கநதர்மடம் அரசடி வீதி, செல்வநாகபூசணி அமபாள் ஆலயத்தில் வைகாசி விசாக தினத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை விசேட பூசைகளும் தீ மிதிப்பு வைபவமும் நடைபெறவுள்ளன.

காலை 9 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும். மாலை 5 மணிக்கு அம்பாள் திருவீதியுலா வந்து தீ மிதிப்பு வைபவம் இடம்பெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு பொங்கல் மற்றும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும். (எ-204)

## விசேட யாகம்

யாழ்ப்பாணம், மே22

திருநெல்வேலி ஸ்ரீ காயத்திரி பீடத்தில் வைகாசி பூரணை தினத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு விசேட யாகங்களும் அபிஷேகமும் நடைபெறவுள்ளன. (எ-204)



உலகப் பிரசித்தி பெற்ற ஆன்மீக குரு
ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் ஜியின்
**வாழும் கலைப் பயிற்சி**
(பிராணாயாமம், பாஸ்திரிகா, சுதர்சன்கிரியா மூச்சுப்பயிற்சி உள்ளடங்கிய)

**இலவச அறிமுக உரை**

150 நாடுகளில் நடைபெறுகின்ற வாழும் கலைப் பயிற்சிப் பற்றிய இலவச அறிமுக உரை நிகழ்வு கீழ்க் கண்ட இடங்களில் நடைபெறுகின்றது.

22.05.2005 – இந்து வாலிபர் சங்கம், திருநெல்வேலி சந்தி. மாலை 5 மணி.
23.05.2005 – ஸ்ரீபரமானந்தர் சிறார் முதியோர் இல்ல ஆசிரமம், பருத்தித்துறை வீதி, வதிரி, கரவெட்டி. தொ.பே. 226 3136. மாலை 5 மணி (பு.நே.).
24.05.2005 – வீரசிங்கம் அரங்கு, யாழ்ப்பாணம். மாலை 4.30 மணி.

*அன்பில் மலருங்கள் அனைவரும் வருக! உங்களை உணருங்கள்*

*மேலும் விவரங்களுக்கு:-*
**வாழும் கலைஅறநிறுவனம், யாழ்ப்பாணம் மையம்.**
**தொ.பே. 077 9059 549, 077 9059 544, 222 6048.**
www.artofliving.org (45722)(52-11-14-26)

## வீரமணி ஐயர் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே22

இணுவையூர் மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.வீரமணி ஐயரின் நினைவாக நடத்தப்படும் பௌர்ணமி தின நாதோபாஸன ஆராதனை நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மகாவித்துவானின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

சாந்தியம் திட்ட இணைப்பாளர் இ.ர.சந்திரசேகரசர்மா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், எஸ்.நந்தனின் பாட்டுக் கச்சேரி நடைபெறும். இதில் வயலின் - கே.குகபரன், மிருதங்கம் - எஸ்.கமலதாஸ், கடம் - என். மாதவன் பக்கவாத்தியம் இசைப்பர்.

தொடர்ந்து திருமதி சாரதா பரஞ்சோதியின் பாட்டுக் கச்சேரி நடைபெறும். (எ-204)

SAMSUNG DIGITall
everyone's invited
SCX-4100
FLATBED LASER MULTIFUNCTION
Monochrome Laser Printer, Digital Copier & Colour Scanner
✓ Fast 14ppm print/copy Speed
✓ 600*600 dpi Resolution (Enhanced up to 4800*4800dpi)
✓ Up to 99 page Multi-copy, 50%-200% Zoom Rate
OS Compatibility
✓ Windows 95/98/Me/NT4.0/2000/XP, Various Linux OS (via USB Only)
3 In 1 | Total Document Solutions | Copy/Print Cost 1.00Rs | SAVE Cost, Time Space
Call us on 077-3053082
925, K.K.S. Road, Thatatharu, Jaffna.

உ
ஓம் ஸ்ரீராம ஜெயம்
**யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை**
**ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**
**நம்மாழ்வார் உற்சவம்**
23-05-2005 திங்கட்கிழமை காலை 9மணிக்கு ஆலயத்தில் நம்மாழ்வார் உற்சவம் நடைபெறும்.
ஸ்ரீமத் நாராயணனின் அடியார்கள் அனைவரும் இந்த உற்சவத்தில் பங்குபற்றி பெருமானின் திவ்ய பேரருளுக்குப் பாத்திரமாகி ஸ்ரீமகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.
பெருமாள் கோயில்,
யாழ்ப்பாணம். (சி-42989)(26-11-14) - ஆதீன மகாசபை.

**பதவி வெற்றிடம்**
**விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளர் பதவி**
கொழும்பு மெக்வூட்ஸ் லிமிட்டெட் கம்பனிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் விவசாய இரசாயனப் பொருள்கள் விற்பனையாளர் பதவிக்கு வெற்றிடமுள்ளது. விவசாயத் துறையில் தகுதியுள்ளவரும் அனுபவமுள்ளவரும் உடனே விண்ணப்பிக்கலாம். 10-06-2005 இற்கு முன்னர் உங்கள் விண்ணப்பங்களை எமக்கு அனுப்பிவைக்கவும்.
**மெக்வூட்ஸ் லிமிட்டெட்,**
விவசாய இரசாயனப் பகுதி,
10, நானரத்தினப் பிரதீப மாவத்தை,
கொழும்பு - 08.
தொலைபேசி: 011 - 2697965 - 9
(சி-42984)(26-11-14)

இப்பொழுது யாழ்ப்பாணத்திலேயே ஐந்து வர்ண இறப்பர் முத்திரை
ரூபா 600/= மட்டுமே!
தெளிவான, கவர்ச்சியான, விரும்பிய வர்ணத்தில் 10,000இற்கும் மேற்பட்ட பிரதிகள் இறப்பர் முத்திரையில் ஆச்சரியமா?
**ரெயின்போ லிங்ஸ்**
வேம்படிச் சந்தி.
(48724)(26-11-14)

**தவறிவிட்டது**
கொழும்பில் இருந்து யாழ்.நகருக்கு வரும் வழியில் முகமாலைச் சோதனைச் சாவடியில் முக்கிய ஆவணங்கள் அடங்கிய மருன் கலர் பாக் (Bag) 19-05-2005ஆம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
**வீ.முருகையா,**
முதலியார் வளவு,
K.K.S. வீதி, சுன்னாகம்.
T.P.: 0776590420.
(48727)

**STUDY IN LONDON**
September 2005
**UNIVERSITY OF EAST LODON**
STUDY AT A TOP BRITISH UNIVERSITY
Undergraduate & Postgraduate
✓ Architecture ✓ Finance Money & Banking ✓ Art, Fashion & Design ✓ Electronic & Electrical Eng ✓ Manufacturing System Eng ✓ Internet Engineering
✓ Bio - Sciences ✓ Bio Medical Sciences ✓ E.Commerce ✓ Sports Sciences ✓ Business Studies ✓ PG Diploma Civil Engineering
✓ Accounting & Finance ✓ Media & Communication ✓ Software Engineering ✓ Computer Forensics ✓ Computer Networks ✓ LLM ✓ LLB
* B.A. * B.Sc. * M.A. * M.Sc * M.B.A. * MPhil / PhD
**OVER 1000 COURSES AVAILABLE**
Affordable Tuition | Free Consultation | No Charges | Visa Guidence
Immediate Offers Made to Genuine
For Appoinments Contact:
Mr. Loho Gunesekara - Lohos Group
Official Representative & Education Adviser
Tel No's : 0777-917929 / 0714-124446
E-mail : loho@dialogsl.net web : www: uel.ac.uk
Office : Lucky Plaza Building SH2, 6th Floor, St. Anthony's Mw., Colombo 03.
(Weekdays by appoinment only 8 a.m. - 2 p.m.)
(சி-42986)
தமிழ் தொடர்புகளுக்கு :- Call Doctor INDRANI - 2862376

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## 33 ஆண்டுகளுக்கு முன்னர் அன்று இட்ட தீ!

ஈழத்தமிழரைப் பொறுத்தவரை இன்றைய தினம் - மே 22 அவர்களின் அரசியல் விடுதலைப் போராட்டத்தின் முக்கிய நாள்.

இலங்கையில் தமிழர்கள் அடிமைப்படுத்தப்பட்ட- இரண்டாம் தரப் பிரஜைகள் என்பது சட்டத்தின் மூலம் தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகளால் நிலைநாட்டப்பட்ட -தினம்.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற இலங்கையில், ஆட்சி அதிகாரத்தைச் சிங்கள - பௌத்தர்களாகிய பெரும்பான்மையினத்தவர்கள் தம்வசமாக்கி, தமிழினத்தை அடிமைப்படுத்திய நிகழ்வு 1948 பெப்ரவரி 4 இல் ஆரம்பமானது.

அதன் பின்னர் அந்தப் பேரினவாத அரசு, காலனித்துவப் பிடியிலிருந்து - தொடுசலிருந்து - தன்னை விடுவித்துக்கொண்டு, குடியரசாகி அதன்மூலம் ஈழத்தமிழர்களுக்கு நிரந்தர அடிமைப் பட்டயம் அறைந்த நாள் மே 22 ஆகும்.

இன்றைக்கு 33 ஆண்டுகளுக்கு முன்னர் 1972 மே 22 இல் இந்தத் துர்ப்பாக்கிய நிகழ்வு அரங்கேறியது.

ஈழத்தமிழர்களுக்கு எதிராக- சரித்திரத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு, மிக்ககொடூரமான போரைக் கட்டவிழ்த்துவிட்டு, தமிழர்களுக்கு என்றுமில்லாத பேரழிவுகளையும் பேரவலத்தையும் ஏற்படுத்தியவர் இன்றைய அரசுத் தலைவியான சந்திரிகா குமாரதுங்க. அவரின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கவே அவரின் ஆட்சியில்தான் அந்த அடிமைப் பட்டயம், புதிய அரசமைப்பு என்ற பெயரில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக அறையப்பட்டது.

இலங்கையின் சுதந்திரத்தை ஒட்டிய சோல்பரி அரசமைப்பைத் தன்பாட்டில் தூக்கி எறிந்துவிட்டு, அந்த அரசமைப்புக்குக் கீழ் தெரிவான தனது நாடாளுமன்றத்தைத் தேசிய அரசுப் பேரவையாக்கி, புதிய அரசமைப்பை 1972 மே 22 இல் கொண்டு வந்தார் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க.

தமிழர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் - அவர்களின் பிரதிநிதிகளால் புறக்கணிக்கப்பட்ட - அந்த அரசமைப்பு. அவர்களின் விருப்பத்துக்கு மாறாக தென்னிலங்கை அரசினால் அவர்கள் மீது திணிக்கப்பட்டது.

அந்த அரசமைப்புத் திணிப்பும், அதை ஒட்டிய காலத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு மேற்கொண்ட தமிழர் விரோத ஒடுக்குமுறை நடவடிக்கைகளுமே ஈழத்தமிழர்களை அவர்களது விடுதலை - சுதந்திரம் - வேண்டிய போராட்டத்தை ஆயுத வழிக்குத் திருப்பியது.

ஆயுதவழிப் போராட்டத்தில் பெரும் முனைப்புற்று, அதன்மூலம் தீர்க்கமான ஒரு கட்டத்தை விடுதலை வேள்வி நெருங்கியிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த விடுதலைக்குத் தூண்டிய - அதற்கு முக்கிய காரணமாக அமைந்த - அரசமைப்பு இந்த நாட்டில் கொண்டுவரப்பட்ட நாளை - தமிழர் மீது திணிக்கப்பட்ட தினத்தை- நினைவுகூர்வது மிகப் பொருத்தமானதுதான்.

சகல மதத்துக்கும் சமவுரிமை என்ற கோட்பாட்டைச் சிதறடித்து,பௌத்த மதத்துக்கென முன்னுரிமை கொடுக்கும் ஏற்பாட்டை -அதுவும் அரசமைப்பின் முதல் அத்தியாயங்களிலேயே வலியுறுத்தும் அத்தகைய சரத்தை - இந்த நாட்டில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியது அந்த அரசமைப்புத்தான்.

பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் அரசின் தலையாய கடமை என்ற ஏற்பாட்டை அந்த அரசமைப்புக்குள் கொண்டுவந்ததன் மூலம் அந்த மதத்தை முதன்மைப்படுத்தி, நாட்டில் ஏனைய மதங்களைப் புறம் ஒதுக்கி சிறுமைப்படுத்திய 1972 இன் கைங்கரியத்துக்கும் அரசமைப்பே காலாயிருந்தது. அதே போன்று சிங்களத்தை முதன்மைப்படுத்தி தமிழைப் புறக்கணிக்க வைத்த ஆதிக்க நடவடிக்கைகளுக்கும் அந்த அரசமைப்பே வழிசெய்தது.

மதங்களுக்கிடையே உயர்வு - தாழ்வு பார்க்காத இடதுசாரிகளைக்கொண்ட அரசுதான், இடதுசாரிகளின் தலைமையிலான குழுவின் ஏற்பாட்டில்தான், தனி ஒருமதத்துக்கு முன்னுரிமை கொடுத்து ஏனைய மதங்களைக் கீழ்மைப்படுத்தும் அந்த அரசமைப்பு உருவாக்கப்பட்டது.

'ஒரு மொழி - இருநாடு; இருமொழி - ஒருநாடு' என்று அன்றே தீர்க்கதரிசனத்தோடு பேசிய 'சிவப்புச் சட்டைக்காரன்' கொல்வின் ஆர்.டி.சில்வாதான் பின்னர் 1972 இல் ஒருமதத்தையும் மொழியையும் முதன்மைப்படுத்தி மற்றைய மதங்களையும் மொழியையும் சிறுமைப்படுத்தும் இந்த அரசமைப்பைத் தலைமைதாங்கி உருவாக்கினார் என்பது கசப்பான வரலாற்று உண்மை.

அந்த இடதுசாரிகள் அன்றுவிட்ட தவறின் விளைவுகளைத்தான் இந்த இலங்கைத்தீவு இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. 33 ஆண்டுகளுக்குமுன் அன்று இட்ட தீ இன்று பற்றிப்பரவி முழு இலங்கைத் தீவையுமே சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது.

# உள்வாரி டிப்ளோமா ஆசிரிய மாணவருக்கு கல்வி விடுமுறை வழங்குவதற்கு மறுப்பு

யாழ்ப்பாணம்,மே22

பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முழுநேரமாகக் கற்றுவரும் ஆசிரிய மாணவர்களுக்கு முழுச்சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்க வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு மறுத்து வருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கல்வி அமைச்சினால் அரச வர்த்தமானி மூலம் ஒருவருடம் சேவையைப் பூர்த்திசெய்த பட்டதாரி ஆசிரியர்களிடமும் கல்விப் புலத்தில் பணியாற்றுபவர்களிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இதற்கமைய விண்ணப்பித்தவர்களுக்கு இலங்கைப் பரீட்சைத்திணைக்களம் போட்டிப் பரீட்சை ஒன்றினை நடத்தி பின்னர் நேர்முகத்தேர்வினையும் நடத்தி விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கொழும்பு பல்கலைக்கழகத்திலும் கற்பதற்குக் கல்வி அமைச்சே வசதிசெய்தது.

கடந்த ஜனவரி மாதம் உரிய பல்கலைக் கழகங்களில் இக்கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் இணைந்து கொண்டவர்கள் முறைப்படி முழுச்சம்பளத்துடனான கற்கை விடுமுறைக்கு வலயக்கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு விண்ணப்பித்தனர்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர் 3 வருடகாலம் சேவையைப் பூர்த்திசெய்யாதவர்களுக்குச் சம்பளமற்ற விடுமுறை மட்டுமே வழங்கமுடியும் என செயலாளருக்குச் சிபார்சு செய்திருந்தார். இதனை அவ்வாறே ஏற்றுக்கொண்ட செயலாளரும் சம்பளமற்ற விடுமுறை வழங்குவதாக உரியவர்களுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு செய்யப்படும் நடவடிக்கைகள் அரச வர்த்தமானிக்கு முரணானவை என சம்பந்தப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்தும் எதுவித பதிலும் கிடைக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் வர்த்தமானி அறிவித்தலின்படி சம்பந்தப்பட்ட பட்டதாரிகளுக்குக் கற்கை லீவு வழங்க முடியும் என செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்த பின்பும் சம்பளமற்ற விடுமுறையை வழங்குவதில் வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு தனது முடிவில் எதுவித மாற்றத்தையும் செய்யவில்லை. இந்த அதிகாரிகளின் செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட டிப்ளோமா மாணவர் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஆசிரியக்கல்வி வாண்மை விருத்தி பற்றி அடிக்கடி பேசிக்கொள்ளும் இவர்கள் இவ்விடயத்தில் அக்கறைகாட்டாதிருப்பது விரக்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் சம்பந்தப்பட்டோர் தெரிவித்துள்ளனர்.

(8-405)

# ஊர்காவற்றுறையில் குடிதண்ணீர் விநியோகிக்க பவுஸர் வழங்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

ஊர்காவற்றுறை, மே22

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் நிலவும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டினை நிவர்த்திசெய்யும் முகமாகக் கிராமங்களுக்குக் குடிதண்ணீர் விநியோகிக்கக் குறைந்தது ஒரு பவுஸரையேனும் வழங்கியுதவுமாறு யாழ்.அதிபரிடமும் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் விநியோகத்துக்கென ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த இரண்டு பவுஸர்களும் தற்சமயம் பாரிய திருத்தவேலைகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளன. எனவே, அவற்றை உடனடியாகப் பயன்படுத்த முடியாத நிலையுள்ளது.

தற்பொழுது தொடரும் வரட்சி காரணமாக எழுவைதீவு. மெலிஞ்சிமுனை. ஊருண்டி. பருத்தியடைப்பு. சுருவல். தம்பாட்டி ஆகிய கிராமங்களில் வதியும் சுமார் ஆயிரத்து ஐந்நூறு குடும்பத்தினர் நாளாந்தம் குடிதண்ணீரைப் பெறுவதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இத்தகைய நிலை அடுத்துவரும் மாதங்களில் மேலும் மோசமடையலாம்.

வருடாந்தம் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவால் வரட்சிக் காலத்தில் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் கிராமங்களுக்கு இலவசமாகக் குடிதண்ணீரை விநியோகிப்பதற்கென சமூக சேவைகள் திணைக்களம் நிதியுதவி வழங்குவது தெரிந்ததே.

இவ்வருடம் இவ்வாறான நிதி ஒதுக்கீடு கிடைத்தாலும் அதனைப் பயன்படுத்தி குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ள பவுஸர்கள் இல்லாத நிலையே காணப்படுகின்றது.

எனவே. இவ்வாறான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு ஊர்காவற்றுறைப் பிரதேசத்திற்கு பவுஸர் ஒன்றையேனும் வழங்குவதற்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும் என எதிர்பார்க்கின்றோம் என்று ஊர்காவற்றுறை பிரதேசசபையின் வேண்டுகைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-16)

# இரட்டைப் பதிவுள்ள வாகனங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க விசேட ஏற்பாடு

இரட்டைப்பதிவுள்ள வாகனங்களை வைத்திருப்பவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. உதவி மோட்டார் ஆணையாளர் வ.பத்மநாதன் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2003ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் போது 500-, 501-, என்ற தொடர் இலக்கங்களில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு ஏற்கனவே வாகனப் பதிவு இலக்கங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அத்தகைய வாகனங்கள் ஏற்கனவே வழங்கப்பட்ட இலக்கங்களைப் பயன்படுத்துவதற்குத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான நடமாடும் சேவை ஒன்றும் விரைவில் நடத்தப்படவுள்ளது.

500-, 501- இலக்கங்களில் உள்ள வாகனம் தொடர்பான பிரச்சினைகளை இதன் மூலம் தீர்த்துக்கொள்ள முடியும்.

இத்தகைய பிரச்சினைகள் உள்ளவர்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் அவற்றிற்குத் தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவைதவிர. ஏற்கனவே பதிவுசெய்து அதற்கான புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவர்கள் பதிவுமாற்றத்திற்கு அனுப்பி புத்தகங்கள் கிடைக்காதவர்கள், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவது தொடர்பான பிரச்சினைகள் உள்ளவர்கள் தமது பிரச்சினைகளை எழுத்துமூலம் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அறிவிக்கலாம்.

இதன்மூலம், மோட்டார் வாகனம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-204-203)

# திருநெறிய இசைவிழாவில் இன்று கலைஞர் நடராசாவிற்குப் பாராட்டு

யாழ்பாணம்,மே22

நல்லை திருஞானசம்பந்தர் ஆலயத்தில் நடைபெற்றுவரும் திருநெறிய தெய்வீக விழாவின் இறுதி நாளான இன்று சங்கீத பூசணம் கே.ஆர்.நடராசாவின் இசைப் பணியைப்பாராட்டி கௌரவிப்பு விழா நடைபெறவுள்ளது.



இசைத்துறையில் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக அரிய சேவை செய்த இவர், மட்டக்களப்பு - விபுலானந்தாக் கல்லூரியில் முதலாவது முதல்வராகப் பணியாற்றியவர்.

திருநெறிய தெய்வீக விழாவின் இறுதி நாளான இன்று பண்டிதர் வி.பேரின்பநாயகம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தொடர்ந்து ஆர்.சுரசாகித்தியனின் இசையரங்கு இடம்பெறும். முதல் அணிசெய் கலைஞர்களாக ஜெனனி நல்லைநாதன் (வயலின்), ரி. வரோதயன் (மிருதங்கம்) ஆகியோர் பங்கேற்பர்.

அடுத்து ஆர்.சஸ்ரிக்குமரனின் இசையரங்கு இடம்பெறும். இதில் அணிசெய் கலைஞர்களாக எ.ஜெயராம் (வயலின்), என்.சதீஸ்குமார் (மிருதங்கம்) ஆகியோர் பங்கேற்பர்.

தொடர்ந்து மேரி சரோஜா ஜஸ்ரினின் இசைக்கச்சேரி இடம்பெறும். இதில் அணிசெய் கலைஞர்களாக பாக்கியலட்சுமி நடராசா (வயலின்), எஸ்.மகேந்திரன் (மிருதங்கம்), எஸ்.விமல்சங்கர் (முகர்சிங்) ஆகியோர் பங்கேற்பர்.

தொடர்ந்து இணுவில் தொண்டர்சபை வழங்கும் பக்தநந்தனர் இசை நாடகம் நடைபெறும்.

(எ-203)

## நாளை

*வைகாசி 09*
*திங்கட்கிழமை*
*23.05.2005*
*திதி : பூரணை*
*பின்னிரவு 02.11 வரை*
*நட்சத்திரம் : விசாகம்*
*பிற்பகல் 04.29 வரை*
*வைகாசி விசாகம்*
*பூரணை விரதம்*
*சுபநேரம் : 11.52 - 01.22*
*ராகுகாலம்: 07.22 - 08.52*
*(யாவும் பழைய நேரப்படி)*

# இன்று ஆலயங்களில் தேர்த்திருவிழா

குடாநாட்டில் உள்ள அநேக ஆலயங்களில் இன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. நாளை வைகாசி விசாக தினத்தன்று தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில், தொல்புரம் மத்தி கொட்டியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்மன் ஆலயம், வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் ஆலயம், கிளிநொச்சி இராமநாதபுரம் மாவடி ஸ்ரீ முத்திமாரியம்மன் ஆயைம் -

மட்டுவில் வேரக்கேணி கந்தசுவாமி ஆயைம், உரும்பிராய் பர்வதவர்த்தனி ஆயைம், நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆயைம், அனலைதீவு எழுவடிவயல் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம், பருத்தித்துறை கல்லூரி வீதி அத்தியடிப் பிள்ளையார் ஆலயம், கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்மன் ஆலயம், கந்தரோடை அருளானந்த விநாயகர் ஆலயம், நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம், சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணியசுவாமி ஆலயம்-

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம், நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம், வல்வெட்டி வேவில் வீரகத்திப்பிள்ளையார் ஆலயம், கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயம்-

சாவகச்சேரி சப்பச்சிமாவடிப் பிள்ளையார் ஆலயம், உடுப்பிட்டி இமையாணன் மேற்கு விஷ்வகுலப் பத்திரகாளி அம்மன் ஆலயம்.சித்தன்கேணி பெரியவளவு மாகா கணபதிப் பிள்ளையார் ஆலயம், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ஆகிய ஆலயங்களில் இன்று தேர்த்திருவிழா வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

(3-203)

## உதயவாக்கு

மனிதர்களின் செய்கைகளே அவர்கள் எண்ணங்களின் விளக்கமாகும்.

- லோக்கெ

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

12xxxx தொடர் இலக்கமுடைய மிட்சுபிசி லான்சர் சிவப்புநிற கார் விற்பனைக்குண்டு. (Full Option) தொடர்பு: 0777 758147, 0773249711. (44468)

நல்ல நிலையில் உள்ள Suzuki - Gs 125 மோட்டார் சைக்கிள் சகல ஆவணங் களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (சி-42947)

இரண்டு மாதம் நிரம்பிய நாட்டுக் கோழிக் குஞ்சுகள் (தடுப்பு மருந்து வழங்கப்பட்டவை) மொத்தமாக விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. விக்கி, சுப்பிரமணி வித்தியாசாலை அருகில் மாவடி, மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (45683)

ஒரு கைப் பாவனையில் உள்ள 12 Sri xxxx தொடர் இலக்கமுடைய Nissan Sunny காரும் 202 xxxx உடைய ஆட்டோவும் உடன விற்பனைக்குண்டு. தொடர்பு: Dr. சங்கர், 'இராஜ ஸ்தான்' சிவராஜா அவென்யூ, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி..(45675)

ஏகாந்த வீணை, வயலின், லுமாலா சைக்கிள், கமரா விற்பனைக்குண்டு. தொடர்பு: J.ஜெக சோதி, 54/14F, சுவாமியார் வீதி, வளன்புரம், கொழும்புத்துறை. (45634)

Bajaj 4S Champion மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 488192.(45682)

## நாய்க்குட்டி விற்பனை

அழகான காவலுக்குரிய Great Dane நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் விற்ப னைக்குண்டு. க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (45625)

காவலுக்குரிய டோபர்மான் கிறேட்டென் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 115, பொன்னம்பலம் றோட், அரியாலை, யாழ்ப் பாணம். T.P 0777 - 170069. (45708)

பெரிய நாய்கள் இரண்டும், கறுப்பு வெள்ளை நாய்க்குட்டிகள் இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.06, மதவடி ஒழுங்கை, திருநெல் வேலி. (45718)

45 நாள்கள் நிரம்பிய வெள்ளை, மண்ணிற முள்ள சுத்தமான, தரமான பொமெரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சீ.ஞானசேகரம் (ஆண்டவர்) அம்மன் வாணிபம், சாவல்கட்டு, ஆனைக்கோட்டை. (45720)

நல்ல இன ஜேர்மன் செம்பேட் அல்சேசியன் குட்டிகள் பூச்சி அகற்றிய நிலையில் (40 நாள்கள்) விற்பனைக்குண்டு. தொடர்பு: செல் லையா உருத்திரா, கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (சி/42975)

## வீடு விற்பனைக்கு

நாவலர் வீதியில் நல்லூர் Cross Road இற்கு அண்மையில் 5 பரப்புக் காணி 3000 சதுர அடி வரையிலான விஸ்தீரணம் உள்ள வீட்டுடன் விற் பனைக்குண்டு. தொடர்பு: 0777 - 706461.(45487)

நெடிமால, இறப்பர்வத்தை பெப்பிலியான வீதியில் (தெகிவளை விஷ்ணு கோயிலுக்கு அருகில்) 15 பேர்ச் விஸ்தீரணமுள்ள 6 அறைகள கொண்ட சகல வசதிகளுடன் கூடிய 27/52, ஆம் இலக்க வீடு விற்பனைக்குண்டு. நேரடித் தொடர்புக்கு: T.P.: 0112 - 730590. (45654)

யாழ்ப்பாணம், பெரிய கோயிலடி, மத்தியூஸ் வீதி, 2ஆம் ஒழுங்கையில் 1¾ பரப்புக் காணியில் அமைந்த மூன்று அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: N.செல்லத் துரை, 11, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். T.P 222 6358 அல்லது தாசன் 15/4, மத்தியூஸ் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 021 - 4590292. (45712)

அச்சுவேலி ஜோன் ராஜ வீதியில் 4 பரப்புக காணியில் அமைந்த 3 படுக்கையறை, களஞ்சிய அறை, 2 வரவேற்பறை மற்றும் இணைந்த குளியலறையுடன் சகல வசதிகளும் உடைய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 077 3028402, 0112 360963 சி42985)

யாழ்ப்பாணம்,. சுண்டிக்குளி பிளெச்சர் வீதி யில் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில்) 2 பரப்புக் காணியில் சகல வசதிகளும் கொண்ட 3 அறை பெரிய கோல் (ரெறசோ போட்டது) 2 குளியல் அறையுடன் கூடிய வீடு விற்ப னைக்குண்டு. தொடர்பு: 2729391. (சி/42929)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) - தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (45626)

புறொயிலர் 1Kg 180/- சுத்தம் செய்தது 270/- கல்பேட் 1kg 180/- மற்றும் புறொயிலர் குஞ்சு, கோழி எரு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், New R.S.K Farm பெரிய மதவடி மானிப்பாய் வீதி, உடுவில். (45670)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்து, 1972இல் பிறந்த, புனர்பூச நட்சத்திரம், லண்டனில் இருந்து வந்திருக்கும் கணனிப் பொறியியலாள ருக்கு படித்த அழகிய பொருத்தமான மணமகள் தேவை. தொடர்பு: சௌபாக்கியா திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். T.P. 222 6779. (45697)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1973ஆம் ஆண்டு பிறந்த, சித்திரை நட்சத்திரம், 4ஆம் பாதம் உயரம் 5அடி 11 அங்குலம் கிரகபாவ சங்கிகை 26¼, செவ்வாய் தோசமற்ற, லண்ட னில் வசிக்கும் மணமகனுக்கு வெளிநாடுகளில வதிவிட உரிமைபெற்ற மணமகளை (லண்டனில் வசிப்பவர் விரும்பத்தக்கது) பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: ஆனந்தி திருமண சேவை, இல. 01, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (45672)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1979 ஆம் ஆண்டு பிறந்த, சுவாதி நட்சத்திரம், நான்காம் பாதம் உடைய பிரான்ஸ்சில் வதிவிட உரிமைபெற்ற, மணமகனுக்கு படித்த அழகான மெல்லிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க் கின்றார்கள். தொடர்பு: 021 4591793. (45677)

யாழ்ப்பாணம் கௌரவ இளம் வயது 29 MBBS Doctor Newzeeland இவருக்கு MBBS Doctor மணமகள் தேவை. Multy Top Medi- aters, 8 B, First Floor, Vajira Road, Bamba- lapitiya, Colombo. 0777 422692. (C/42955)

யாழ் கௌரவ குடும்பத்தை சேர்ந்த, சொந்த மாகத் தொழில் புரியும் பட்டதாரி தொழிலதிபர் மணமகனுக்கு படித்த அழகிய 25-30 வயதிற் கிடைப்பட்ட மணமகள் தேவை. சுயவிவரம் சாதகம் அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். விளம்பர இல. 2593, C/o உதயன், யாழ்ப்பாணம். (45620)

யாழ்ப்பாணம் கௌரவ இளம் வயதுகள் முறையே 32 MBBS Doctor, 28 Mechanical Engineer, 32 MSc. Engineer London, 34 MSc. Engineer Australia, 32 Accountant Australia, 30 Accountant London, 43 Marin Engineer. இவர்களுக்குப் பொருத்தமான தராதரமுள்ள மணமகள்மார் தேவை. Multy Top Mediaters, 8 B. First Floor, Vajira Road, Bambalapitiya , Colombo. 0777 422692 (C/42954)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்து 1964இல் பிறந்த, விசாக நட்சத்திரம் 5' 6" உயரமான கனடாவிலிருந்து வந்திருக்கும் மணமகனுக்கு படித்த அழகிய பொருத்தமான மணமகள் தேவை. புகைப்படத்துடனும் ஜாதகத்துடனும தொடர்பு கொள்ளவும். சௌபாக்கியா திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். T.P.: 222 6779. (45696)

## வீடு வாடகைக்கு

பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் சகல வசதியுடனும் சகலதும் தனிப் பட்ட பகுதியாகவும் 3பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு வீடு உடன் வாடகைக்குண்டு. தொடர்பு: T.P. 021 222 7069. (45660)

திருநெல்வேலி, மருத்துவபீடத்திற்கு முன் பாக மூன்று அறைகளுடனான சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும். தொடர்பு: 17/3, கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P. 0777 - 732863, 0114 - 205618. (45570)

## தோட்டப் பராமரிப்பாளர் தேவை

தோட்டம் ஒன்றைப் பராமரிக்க அனுபவம் உள்ள தொழிலாளியோ/சிறிய குடும்பமோ விரும்பத்தக்கது. தங்குமிட வசதியும் உண்டு. நேரில் வரவும். தொடர்பு 40, கண்டி வீதி, சுண் டுக்குளி, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முன்பாக, யாழ்ப்பாணம். (45488)

## ஜோதிடம்

உள்நாட்டில், வெளிநாட்டில் பிறந்தவர்களின் ஜாதகங்களைப் பிழையின்றிக் கணிக்கவும், பலன்கள் விரிவாகக் கூறவும், விவாகப் பொருத தம் பார்க்கவும் சுப கருமங்களுக்கு நாள் குறிக்கவும் நாடுங்கள்: சோதிடர் எஸ்.சிதம்பர நாதன், புங்கடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை. (மந்திகை ஆஸ்பத்திரி தாண்டி கொடிகாம றோட்டில் புலோலி மெதடிஸ்த மிசன் பாடசா லைக்கு 4ஆவது வீடு) (45678)

## கோழிக்குஞ்சு விநியோகம்

அதிவிசேட பிறீமா சிவப்பு பேட்டுக்குஞ்சுகள உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ் ஆனைக்கோட்டைச் சந்தி, மதுரா 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், றஞ்சித் 517, ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம். T.P.: 222 2867, 222 3529.(45630)

தரமான நம்பர் 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 25.05.2005 மாலை விநியோகிக் கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும் தொடர்பு: றாஜீவ்- ஆனைக்கோட்டைச் சந்தி., றஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட், தூரகை - முதலாம கட்டை, பருத்தித்துறை.P.ரவி -சாவகச்சேரி., ஸ்ரீராம் - பஸ்நிலையம் முன்பாக பருத்தித்துறை., கௌரி ஸ்ரோர்ஸ் - பிரதான வீதி, பண்டத்தரிப்பு. T.P.: 222 2867, 222 3529 (45365)

## கடை விற்பனைக்கு

பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி தியாகு கலைக்கூடத்திற்கு முன்பாக உள்ள கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: 325, பரமேஸ் வராச்சந்தி, திருநெல்வேலி. T.P.: 021 222 6469 (வீதிச் சான்றிதழ் பெற்ற கடை). (45651)

## காணி விற்பனைக்கு

கச்சேரி கிழக்கு வீதியில் பாதுகாப்பான இடத்தில் 4½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். (தரகர் தேவை யில்லை) தொடர்பு: 077 6620059. (45438)

அச்சுவேலி தோப்பில் 8 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: க.அருணா னந்தன், மே/பா, ஆ.இரத்தினசபாபதி, சிறுப் பிட்டி கிழக்கு, வயிரவர் கோயிலடி, சிறுப் பிட்டி. (45674)

சாவகச்சேரியில், இந்துக்கல்லூரியின் சுற்று வட்டத்தில் டச்சு வீதி, மருதடிச் சந்தியில் வீடு கட்டக்கூடிய, தென்னை வளம் உள்ள காணி (5 2/3 பரப்பு) விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: S.கமலநாதன், கந்தசாமி கோயில் வீதி, சங்கத்தானை. 0777 676593. (45719)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யா திருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர் கள், வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக் கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண் கள் எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. புகைப்படம், ஜாதகத்துடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாக பூசணி அம்மன் திருமணமாலை, இல.289 A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207. (45057)

யாழ்.இந்து கிறிஸ்தவ மணமக்கள் எம்மி டம் உள்ளனர். தராதரமுள்ள பொறியியலாளர், டாக்டர், கணக்காளர், வெளிநாட்டு பிரஜாவுரிமை யுடைய ஆண்/பெண் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு. தொடர்பு: சௌபாக்கியா திருமண சேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். T.P 222 6779. (45695)

விபரங்கள் வழங்கப்பட்ட வயது அடிப்படை யில வகுக்கப்பட்ட, புகைப்படங்கள் இணைக் கப்பட்ட நூற்றுக்கணக்கான கடிதக் கோப்பு களிலிருந்து 'இலகு வழிச் சுயதெரிவு முறையில்' விரும்பும் நாட்டிலிருந்து மணமகனையோ, மணமகளையோ சுயமாகத் தெரிவு செய்யும் வசதி வாய்ப்புண்டு! தெரிவு செய்யப்பட்டவை சோதிட ரீதியாகப் பொருத்தமுடையனவா? அல்லவா என்பதையும் நீங்கள் நொடிப் பொழுதில் தெரிந்து கொள்ளலாம்! மேலதிக விவரங் களைச் செவ்வாய், அரச பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த கிழமை நாள்களில் மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலான நேர காலத்துள் மாத்திரம் திருமணப் பொருத் துநர் வேல்அமுதன் அவர்களிடம் விசாரித்தறிக! வேல் அமுதனின் கொழும்பு நேரடித் தொலைபேசி இலக்கங்கள்: 2360488, 4551139. (சி-42797)

உ

ஓம் சக்தி

ஏழாலை தெற்கு ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான

**வைகாசி விசாகப் பொங்கல் விழா**



23.05.2005 திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு வளத்துப்பொங்கல் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து காலை 10 மணிவரை பக்தர்கள் பொங்கல் பொங்கலாம்.

10.00 மணிக்கு விசேட பூசை
11.00 மணிக்கு ஆசீர்வாதம்
11.30 மணிக்கு அம்பாள் திருவீதியுலா வருதல்
12.00 மணிக்கு மாகேஸ்வர பூசை

அடியார்கள் அனைவரும் பொங்கல் விழாவுக்கு வருகை தந்து அம்பிகையின் அருள் பெற்றுய்வீர்களாக.

- தேவஸ்தானம் -

ஏழாலை தெற்கு, ஏழாலை (45714)(35)

## ஆத்மீக இந்திய திருத்தல யாத்திரை

திருப்பெருந்துறை தேர், சிதம்பரம் தேர், ஆனி உத்தரம் தரிசனத்தை முன்னிட்டு இராமேஸ்வரத்திலிருந்து வடகாசி காயா வரை (புட்டபர்த்தி உட்பட) ஓர் ஆத்மீக திருத்தல யாத்திரை நடைபெற இருக்கின்றது.

யாத்திரை ஆரம்பம்: **10.06.2005** (45 நாள்கள்)

இந்த யாத்திரையில் பங்குகொள்ள விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியிலோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

ஒருசில ஆசனங்களே மீதமிருக்கின்றன.

ஆத்மீக ஞானத்தை அடைய விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம்

**S.Pratheep,**
**C/o N. Navarathnam,**
Manipay Road,
Arukalmadam, Jaffna.
T.P.077 3024222

(45717)(35)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற் கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**
10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, (திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (சி/42495)

**SKY COMPUTER SYSTEM**
No.109, Kandy Road,
Chundikuli, Jaffna
Hot - line 0777 222478

**விற்பனைக்குண்டு**

**Pentium III 500MHZ IBM Computer with Multimedia**

10GB Hard Disk
128 MB RAM
15" Monitor
25,500/-

ஒருவருட உத்தரவாதத்துடன்
Unlimited soft ware & free dust cover
Pentium III 533 - 26,000/-
Pentium III 600 - 27,500/-
Pentium III 667 - 29,250/-
கச்சேரிக்கு அருகில். (சி-42877)(26-11-15)

## Organ/Violin Notes

இசைக்குறிப்புகள் பாகம் 37, கேள்வி ஞானம் Key Board exersice ஆகிய புத்தகங்கள் வெளி வந்துள்ளன.

**Karaweena Isai Manram**
75, Temple Rd., Nallur, Jaffna.
T.P. 071 3055991. (21-12-45)
(நல்லூர் ஆலயத்திற்கு தெற்கே 500m)
(45700)

## விற்பனையாகிறது

O/L சமூகக்கல்வியும் வரலாறும் பாடத்திற்குரிய 1100 வினாவிடைகள் கொண்ட புதிர்ப்பெட்டி

விலை 75/= மட்டுமே

**World Disk**
உலக நாடுகளின் விவரங்கள் பலவற்றை இலகுவாக அறியக்கூடிய விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

விலை 50/= மட்டுமே

கிடைக்குமிடம்:
**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 222 2573 (21-17-45)
(C/42941)

தனிப்பட்ட/குழு வகுப்புகள Animations in Flash Mx 1 Month. Rs. 2000/= வீட்டுப் படங்களும் (House Plans) வரைந்து கொடுக்கப்படும். 3 D Views Perspective views And Engineering Drawings T.P 077 908 6864.

15(47), யாழ்.வீதி, யாழ்ப்பாணம். (21-45-17)
(45709)

## மத்திய குழு அறிவிப்பு

கொழும்பு,மே22

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வாரம் தேசிய தொலைக்காட்சியில் தெரிவித்த கருத்துகள் அவரது தனிப்பட்ட கருத்துகள் அல்ல. அவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கருத்துகளாகும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானம் நிறைவேற்றியிருக் கிறது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் கடந்த வியாழனன்று மேற் படி மத்திய குழுவின் கூட்டம் நடைபெற்ற போது ஜனாதிபதியின் தொலைக்காட்சி உரை குறித்து மத்திய குழு அவருக்குப் பாராட்டும் தெரிவித் தது.

ஜனாதிபதியின் உரை தொடர்பில் முக்கியமான அரசி யல் கட்சிகள் பல பல்வேறு விமர்சனங் களைச் செய்து வரு வது குறித்துக் கவ னஞ் செலுத்திய மத் திய குழு ஜனாதிபதி யின் கருத்துகள் கட்சி யின் கருத்துகளென் றும், இதுதொடர்பில் எவரும் ஜனாதிபதியை விமர்சிப்பது தவறென் றும் குறிப்பிட்டு தீர் மானமொன்றை நிறை வேற்றியது.

அரசுக் கூட்டமைப பின் பங்காளிக் கட் சியினர் ஜே.வி.பியை யும் மேற்படி தொலைக் காட்சி உரையாட லில் ஜனாதிபதி வாங்கு வாங்கென வாங்கியிருந் தார் என்பது குறிப்பிடத் தக்கது. (க-8)

# பாரம்பரிய கிரியைகளுடனான பொங்கல் வற்றாப்பளை ஆலயத்துக்கே உரியது

வன்னிப் பிரதேசத்தில் பிரபல்யம் அடைந்த அம்மன் கோயில் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயிலாகும். முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளைக் கிராமத்தில் நந்திக் கடலின் கரையில் பாலைமரச் சோலைகளாலும் வேப்பமரச் சோலைகளாலும் சூழப்பட்டு, எழில்மிகு தோற்றத்துடன் இக்கோயில் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. வருடம் தோறும் வைகாசி மாத பௌர்ணமியை அண்டி வருகின்ற திங்கட் கிழமை வற்றாப்பளை கண்ணகை அம்மனுக்குச் சிறப்பாகப் பொங்கல் நடத்தப்படுவருகின்றது. ஈழத்தின் பல பாகங்களிலும்

வற்றாப்பளையில் சிலம்புடன் கண்ணகியம்மன்.



பக்தர்கள் வருகைதந்து பொங்கல், பூசை செய்து அருள் பெறுவார்கள்.

### ஆலய வரலாறு

இந்த ஆலயத்தின் வரலாற்றை அம்மன் சிந்து, பத்தும் பதியமும், பனிச்சை ஆடியசிந்து, வற்றாப்பளை கண்ணகி அம்மன் வரலாற்றுச் சிந்து, வற்றாப்பளை கண்ணகை அம்மன் தோத்திரம், வற்றாப்பளை கண்ணகி அம்மன் காவியம், அரிவி வெட்டுச் சிந்து ஆகிய செவிவழிப் பாடல்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இவைகள் தரும் கதைமரபு நான்கு முக்கிய வரலாற்றுக் கட்டங்களை உடையது.

சிலம்பு கூறலில் உள்ள 10 பாடல்களில் 'ஆநிரை மேய்த்து நின்ற சிறுவர்கள் முன் ஒரு நரை மூதாட்டி வந்தனள். சிறுவர்கள் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்தனர். மூதாட்டியின் பசியை அகற்றப் பாற்பொங்கலிட்டுப் படைத்தனர். அந்தி நேரம் கடந்து இருளானமையால் தீபம் தேவைப்பட்டது. மூதாட்டி பணித்ததற்கிணங்க கடல் நீரில் தீபமேற்றினர். அவர்களின் அன்புப் படையலை ஏற்று அருள் சுரந்து, தொடர்ந்து வைகாசி விசாகங் கூடிய திங்கள் நாளில் பொங்கல் மடை செய்யப் பணிதது மறைந்தாள் அந்த மூதாட்டி. இவ்வாறு காட்சி கொடுத்து மறையும்போது, தனது பெயர் கண்ணகி என்றும், தன் பெயருரைத்தால் ஆகும் பிணி போகும் என்றும் திருவாய் மலர்ந்தருளினாள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து இந்த இடத்தில் கோயில் அமைத்து வணங்கும் வழக்கம் ஆரம்பித்தது.

### வற்றாப்பளை கண்ணகை அம்மனும் காட்டுவிநாயகர் பொங்கலும்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல் வழிபாட்டு மரபில் இரண்டாம் கட்டமானது அயற்கிராமமான முள்ளியவளையுடன் தொடர்பானது. முள்ளியவளை ஈழத்தமிழ் வரலாற்று மூலகங்களிலொன்றான 'வையா பாடலிலும்', 'கதிரையப்பர் பள்ளு' என்ற பிரபந்தத்திலும் குறிப்பிட்ட பழைமையுடையது. இங்குள்ள காட்டுவிநாயகர் ஆலயம் சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட பழைமையுடையது. வற்றாப்பளை நந்திக் கடற்கரையில் காட்சி கொடுத்த இடத்தில் வேப்பமரத்தின்கீழ் பொங்கலிட்டு வந்தவர்கள் அப் பொங்கலுக்கு முன்னோடியான சில வழிபாட்டு நிகழ்ச்சிகளை முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயத்தில் விநாயகப் பெருமானுடைய அருளுடன் தொடக்கி வைத்தனர். வற்றாப்பளைப் பொங்கலுக்கு முதல் ஏழுநாள் மடைகளும், பொங்கலும் காட்டுவிநாயகர் ஆலயத்தில் இடம்பெறும். கோவலன் - கண்ணகி அம்மன் கூத்து வட்டக்களரியில், கரப்பு உடுப்பு அணிந்து அவ்வூர் கலைஞரினால் நேர்த்தி ஆற்றுகை இடம்பெறும்.



ஆலயத்தின் முகப்புத்தோற்றம். உள்ளே அம்மனின் எழுந்தருளி விக்கிரகம்.

**சரித்திரப் பிரசித்திபெற்ற வற்றாப்பளைக் கண்ணகையம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் நாளை நடைபெறுகிறது. அதனை முன்னிட்டு அந்த ஆலயத்தின் வரலாற்றுப் பெருமைகளை விரித்துக்கூறுகின்றார் கட்டுரையாளர்.**

## வீரம் செறிந்த மண்ணில் அருள் சுரந்திடும் கண்ணகி

### ஆகம மரபுச் செல்வாக்கு

மூன்றாவது கட்டமாகக் கூறுவதானால் - கண்ணகி வழிபாட்டு மரபிலே ஆகம மரபு செல்வாக்குப் பெறுவதைக் காணலாம். வேளாளரும் பிற தொழில்சார் குலப்பிரிவினரும் இணைந்து நிகழ்த்திவந்த பொங்கல் விழாக்களில் ஆகம நெறிப்படி பூசைபுரியும் அந்தணர்களும் பங்குகொள்ளத் தொடங்கினர்.

### பாரம்பரிய கிரியை முறைகளுடன் பொங்கல்

வற்றாப்பளை கண்ணகை அம்மனுக்குச் செய்யும் பொங்கல் பழைய பாரம்பரிய முறைகளுக்கு ஏற்பவே இப்போதும் நடைபெற்று வருகின்றது. வருடாந்தப் பொங்கலை ஞாபகமூட்டும் வகையில் பாக்குத் தெண்டல் நிகழ்ச்சி இடம்பெறும். ஒரு திங்கட்கிழமை ஆரம்பமாகும் இந்த நிகழ்ச்சி அடுத்த திங்கட் கிழமை அதாவது பொங்கலுக்கு முதல் திங்கள் தீர்த்தம் எடுத்து விளக்கு வைக்கும் நிகழ்வுடன் நிறைவுறும். குறிப்பிட்ட குலத்தில் உள்ள ஒருவர் புதிய பானையுடன் செல்ல அவருடன் கோயில் நிர்வாகத்தினர், பூசகர்கள், அடியார்கள் முல்லைத் தீவுக்கு அண்மையிலுள்ள சிலாவத்தை கடற்கரைக்குச் சென்று தீர்த்தம் எடுத்து, முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்திற்கு கொண்டுசெல்வர். (17ஆம் பக்கம் பார்க்க)

**கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ்மயில்**

---

# கிழக்கில் தொடரும் படுகொலைகளுக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவு பின்னணியில்

## குற்றஞ்சுமத்துகின்றார் ஜெயானந்தமூர்த்தி எம்.பி.

கிழக்கு மாகாணத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த ஒரு வருடகாலமாகவே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் படுகொலைகளும் தொடர்ந்து இடம்பெற்றவண்ணம் உள்ளன. இவற்றின் பின்னணியில் இராணுவம், இராணு வப் புலனாய்வுப் பிரிவு மற்றும் இவர்களுடன் இணைந்து இயங்குகின்ற ஆயுதக்குழுக்கள் செயற்படுகின்றன. இதனை எம்மால் நன்கு உணரக்கூடியதாகவும் உள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்க் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி.

மாமனிதர் சிவராமின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவதற்காகக் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த அவர், உதயனுக்கு விசேட செவ்வி அளித்தார். அந்தச் செவ்வியிலேயே ஜெயானந்தமூர்த்தி எம்.பி. இப்படித் தெரிவித்தார்.

அவரது செவ்வி வருமாறு:-

★ *கேள்வி:* கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினருடன் ஆயுதக்குழுக்கள் இணைந்து செயற்படுவதாக வெளியாகியிருக்கும் செய்திகள் குறித்து என்ன கூறவிரும்புகின்றீர்கள்?

✪ *பதில்:* தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்துச் செல்லுகின்ற - போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பவர்கள் இன்று படுகொலை செய்யப்படுகின்றனர். இது எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளவே இந்தக் குழுக்கள் அங்கு செயற்பட்டு வருகின்றன.

இத்தகைய ஆயுதக்குழுக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடமாடுவதுடன், இராணுவ முகாம்களுக்கு அண்மையாகவே தமது முகாம்களையும் அமைத்துள்ளன. இவர்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம் படுகொலைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்நிலையால், தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத் திற்காகவோ போராட்டத்திற்காகவோ வாய்திறப்பதற்குக்கூட அஞ்சுகின்ற நிலைமையே கிழககு மகாணத்தில் காணப்படுகின்றது.

ஆனாலும், இன்று நிலைமை மாறி வருகின்றது. மட்டக்களப்பில் தமிழ் மக்கள் தமது உரிமைக்காகக் குரல்கொடுக்கும் நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. இந்த வகையில் மட்டக்களப்பு சந்திவெளியில் 70 வயது முதியவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 20 இற்கும் மேற்பட்ட பொதுமக்களும் மாணவர்களும் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இவை அனைத்தும் இராணுவத்தினர் மேற்கொண்ட சம்பவத்தின் மூலமே இடம்பெற்றுள்ளன. ஆனாலும், எமது மக்கள் தமது இயல்பு வாழ்க்கை தொடரவேண்டும் என்பதற்காகப் புதிதாக அமைக்கப்பட்ட வீதிச் சோதனைச் சாவடியை அகற்றுமாறு கோரி ஜனநாயக ரீதியில் நடத்திய போராட்டத்திற்கு இராணுவத்தினர் கொடுத்த பதில் அடிதான் படுகொலை.

ஆகவே, இத்தகைய சம்பவங்களைக் கண்டித்து, மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள். இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள். இது மக்கள் அங்கு தமது இயல்பு வாழ்க்கையைப் பெறுவதற்குத் துணிந்துவிட்டார்கள் என்பதைத்தான் எடுத்துக்காட்டுகின்றது.

### பேரலை பாதித்தவர்களுக்கு இதுவரை உதவிகள் இல்லை

★ *கேள்வி:* ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகள் தொடர்பாக என்ன கூறவிரும்புகின்றீர்கள்?

✪ *பதில்:* அரசினால் மாதாந்தம் வழங்கப்படுகின்ற 5 ஆயிரம் ரூபாவையும் உலர் உணவுப் பொருள்களைப் பெறுவதற்கான நிவாரண முத்திரைகளையும் மட்டுமே அவர்கள் பெற்றுள்ளனர். இவற்றைத் தவிர வேறு எந்த வகையான உதவிகளும் மக்களை வந்தடையவில்லை.

தற்போது கிடைத்துவரும் உதவிகள் அனைத்தும் மக்களது அன்றாட வாழ்க்கைக்குப் போதுமானவை அல்ல. தற்போதைய உதவிகள் உடனடியான உதவிகளாக உள்ளனவே தவிர வாழ்வதற்கான நிரந்தர உதவிகளல்ல. குறிப்பாக, இந்த மக்கள் நிரந்தரமாகக் குடியிருப்பதற்கு வேண்டிய வீட்டுத்திட்டங்களோ அல்லது வீடுகளோகூட இதுவரை நிர்மாணிக்கப்படவில்லை.

இதே போன்று இந்த மக்கள் தமது தொழிலை மீள ஆரம்பிப்பதற்கு வேண்டிய செயற்பாடுகளைக் கூட சிறிலங்கா அரசு இன்னமும் மேற்கொள்ளவில்லை. குறிப்பாக, ஆழிப்பேரலை பாதித்த மக்களை எடுத்து நோக்கின், அவர்களில் 90 சதவீதமானவர்கள் கடற்றொழிலை மேற்கொள்பவர்கள். இந்த மீனவர்கள் மீண்டும் தொழிலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய தொழில் உபகரணங்கள் எவையும் இதுவரை வழங்கப்படவில்லை.

வீட்டுத்திட்டங்கள் எவையும் இதுவரை அறிமுகம் செய்யப்படாமையால் மக்கள் தற்காலிகக் கொட்டகைகளிலும் குடிசைகளிலும் கூடாரங்களிலுமே தற்போதும் வசித்துவருகின்றனர்.

காலநிலை மாற்றம் காரணமாக ஆழிப்பேரலை பாதித்த மக்கள் தொடர்ந்தும் கூடாரங்களில் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பெரும் சிரமத்துடனும் மோசமான நிலைமைகளுடனுமே அங்கு மக்கள் வசித்து வருகின்றனர்.

★ *கேள்வி:* மட்டக்களப்பில் நீங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டிய நிலையில் உள்ளீர்கள். இந்நிலையில், அங்கு வசிக்கும் முஸ்லிம் மக்களின் செயற்பாடுகள் பற்றி என்னகூற விரும்புகின்றீர்கள்?

✪ *பதில்:* கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அங்கு வசிக்கின்ற இஸ்லாமிய சகோதரர்கள், அமைதியை விரும்புவதுடன், தமிழ் மக்களுடன் இணைந்து வாழவே விரும்புகின்றனர். ஆனால், அரசியல்வாதிகளே முஸ்லிம் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

நாம் இடைக்காலத் தன்னாட்சி கேட்டபோது முஸ்லிம் அரசியல்வாதிகள் தமக்கும் இடைக்காலத்தன்னாட்சி வழங்க வேண்டும் அல்லது தனி நிர்வாக அலகுவேண்டும் என்று கோஷமிட்டனர். நாம் தற்போது பொதுக்கட்டமைப்பு வேண்டும் என்று கேட்கின்றோம். அவர்களும் அதற்கு சமமாக பொதுக்கட்டமைப்பு வேண்டும் என்று கேட்கிறார்கள். அதாவது, நாம் எதனைக் கேட்கின்றோமோ அவர்களும் அதனைக் கேட்கின்ற ஒரு நிலைப்பாடுதான் இருக்கின்றது.

வடக்கு - கிழக்கு என்பது ஓர் இணைந்த மாநிலம். இங்கு தமிழ் மக்கள் எத்தகைய உரிமைகளைப் பெற்று வாழ்கின்றார்களோ அதேபோன்றே இஸ்லாமிய மக்களுக்கும் சகல உரிமைகளும் உண்டு என்பதை முஸ்லிம் தலைவர்கள் அறிவார்கள். அது மாத்திரமன்றி சிங்கள மக்கள் இங்கு வசித்தாலும் அவர்களுக்கும் அதே உரிமைகள் உண்டு என்பதை அனைவரும் அறிவர். எந்த இனமக்கள் இங்கு வாழ்ந்தாலும் அவர்களுக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்படும். இதற்கு மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.



ஆனால், இவற்றையெல்லாம் தமிழர்கள் பெறுவதற்கு முன்னதாகத் தாமும் தமிழர்களுக்குச் சமமாக நின்று தமது மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக்கொடுத்தோம் என்ற அரசியல் செல்வாக்கைத் தேடுவதற்காகவே இத்தகைய செயறபாடுகளில் முஸ்லிம் அரசியல்வாதிகள ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டம் என்று பார்க்கும்போது முஸ்லிம மக்களுடைய பங்களிப்பு என்பது எவ்வளவு தூரம் இருக்கின்றது என்பது ஒரு கேள்விக்குரிய விடயமாக உள்ளது. இந்த நிலையில், முஸ்லிம் அரசியல்வாதிகள்தான் அங்கு குழப்பங்களை ஏற்படுத்தும் நிலைமை காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

### முஸ்லிம் தலைமையிடையே முரண்பட்ட கருத்துக்கள்

★ *கேள்வி:* முஸ்லிம் தலைமைகள் முரண்பாடான கருத்துக்களை முன் வைப்பது சம்பந்தமாக........?

✪ *பதில்:* முஸ்லிம் தலைமை என்று எதனைக் கூறுவது என்றுதெரியாத நிலைமையே இன்று காணப்படுகின்றது. அதாவது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு இடையே இன்று பல பிளவுகள் ஏற்பட்டு விட்டன. இதனால், அரசியல் தலைமையை - அரசியல் செல்வாக்கை - வாக்கு வங்கியை - தக்க வைத்துக்கொள்ள வேண்டிய தேவை முஸ்லிம் காங்கிரஸின் - தலைமைத்துவத்திற்கு இன்று ஏற்பட்டுள்ளது - என்றார். ★

**செவ்வி: நேசன்**

# Studying in LONDON
*could change your life forever....*

Middlesex University International

**கருத்தரங்கு**

மேற்படி பல்கலைக்கழகத்தில் பிரித்தானியா சென்று பட்டப்படிப்பினை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களிற்கான கருத்தரங்கு

காலம் 29.05.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணி

இடம் IIS City Campus, 181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இக்கருத்தரங்கில் மேற்படி பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

மாணவர்கள் தங்கள் தகைமைக்கு ஏற்ப கல்வியை தெரிவு செய்தல், கல்விகற்கும் காலத்தில் வேலைவாய்ப்புக்கள், Visa ஒழுங்குகள் பற்றிய விளக்கங்களை பெற்றுக்கொள்ள முடியும். ஆர்வமுள்ள மாணவர்கள், பெற்றோர்கள் இங்கு பற்றி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். ( A/L 2005 பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் பங்குபற்றிப் பயனடையலாம் )

UNDERGRADUATE & POSTGRADUATE SUBJECT AREAS

- Accounting, Finance & Economics
- Art, Design & Product Design Engineering
- Biological & Health Sciences
- Business & Management Studies
- Computing & IT
- Dance, Drama, Music & Performing Arts
- Humanities & Cultural Studies
- Law & Criminology
- Social Sciences
- Teaching & Education
- English & Mass Communication

Come, Join....
Middlesex University
a Top 20* UK university

Contact:
IIS City Campus
# 181, Navalar Road, Jaffna.
Tel No. 021 222 8060


## கொடுப்பனவு

நல்லூர்,மே22

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த அரச உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாகப் பெற்றுக் கொள்ளுமாறு ஆனைப்பந்தி உப தபாலதிபர் அறிவித்துள்ளார். (8-111)

## தேவாரத்திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம்,மே22

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்திவரும் பன்னிரு திருமுறைப் பாராயணம், அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் என்பன வைகாசிப் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை காலை 5 மணிக்கு யாழ். சத்திரத்து ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

ஆலயப் பூசையைத் தொடர்ந்து திருமுறைச் சுவடிகள் நால்வர் சிலைகளுக்கும் விசேட சோடசோபசார பூசை நடைபெற்று, திருமுறை அர்ச்சனை வழிபாடு, திருமுறைச் சுவடிகள் வீதி உலா, அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் சொற்பொழிவு என்பன இடம்பெறும். (எ)


**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

பண்டிதர் நரசிம்ம நாயுடு

World Expert Astrologer

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர்.

இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

பிள்ளையார் இன், அறை எண்.9, 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9122836.

Pillaiyar Inn, Room No. 9, 31, Manipay Road, Jaffna, Sri Lanka.

(45573)(26-14-45-24)


## தேவை

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் பல்பொருள் வாணிபம்**

எமது வர்த்தக நிறுவனத்திற்குப் பில் கிளாக் வேலையும் கணக்கு வேலையும் கணக்குப்பதிவு செய்யும் வேலையும் செய்யக்கூடியவர்கள் தேவை. இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

★ 24-05-2005 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நேரில் வரவும்.

தொடர்பு: ஸ்ரீ முத்துமாரி அம்மன் பல்பொருள் வாணிபம்
338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(45685) (24-14-45)

## 45ஆம் நாள் நினைவு அஞ்சலியும்
### அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 12 - 1956 | 09 - 04 - 2005 |

**அமரர் வேலுப்பிள்ளை ஜெயச்சந்திரன்**


எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23-05-2005) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
மனைவி - ஜெ.சரோஜினிதேவி,
மகன் - ஜெ.ஜெயபாஸ்கரன்.

அச்சுவேலி, தோப்பு. (45684) (24-14-45)

# வேலணை மேற்கு பெரியபுலம்
# மஹா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயம்
## பார்த்திப வருட தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் - 22.05.2005







### தேர்த் திருவிழா நிகழ்ச்சி விவரம்

காலைப் பூசை - 7.00 மணி
வசந்த மண்டப பூசை - 8.00 மணி
சுவாமி உள்வீதி வலம் வந்து தேரில் ஆரோகணிக்கும் காட்சி - 10.30 மணி

வேலணை மேற்கு, பெரியபுலம் என்னும் திவ்விய ஷேத்திரத்தில் கோயில்கொண்டு எழுந்தருளி அடியவர்களுக்கு எளியவராகி அருளாட்சி புரியும் மகா கணபதிப்பிள்ளையாருக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் 15 வருடங்களின் பின்னர் கடந்த 30.03.2005 இல் மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று இன்று 22.05.2005 இல் தேர்த் திருவிழா வெகுசிறப்பாக நடைபெறுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

கடந்த மூன்று நூற்றாண்டு கால வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயம் முற்றிலும் கருங்கல்லால் கட்டப்பெற்றது. கருங்கல்லினாலான பஞ்சதள இராஜகோபுரத் திருப்பணி வேலைகள் நிறைவுற்று கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த ஆலயத்தின் சூழல் நீண்ட நெடுங்காலமான சைவப் பாரம்பரியத்துடன் கூடிய பண்பாட்டுச் சூழலைக் கொண்டது. தீவக மக்கள் 1991ஆம் ஆண்டு புலம்பெயர்ந்த காலத்திலும் இந்தஆலயத்தில் ஆலயக் குருக்கள் தங்கி இருந்து பூசைகளை நிறைவேற்றி வந்த பெருமை இவ்வாலயத்திற்கு உண்டு.

இவ்வாலயத்தின் ஆரம்பகால கருங்கல் திருப்பணிக்கு காலி நகரத்தில் இருந்து கருங் கற்கள் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டு ஊர் காவற்றுறை துறைமுகத்தில் இறக்கப்பட்டு வடக்கன் மாட்டு வண்டில்கள் மூலம் ஆலயத்திற்கு எடுத்துவரப்பட்டு கட்டடம் அமைக்கப்பட்டது. முன்னோர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பாரிய திருப்பணி வேலைகளைச் செய்து வந்தனர்.

இன்று எம்பெருமான் அடியார்கள் பலர் உலகத்தின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் பிள்ளையாரின் மீது அளவற்ற பக்தியும் விசுவாசமும் வைத்துள்ளார்கள். இவர்களின் பெரும் உதவியினால் இக்கோயில் இராஜகோபுரத்துடன் கூடிய மணிமண்டபத்துடனே மிக அழகாகப் புதுப் பொலிவு பெற்று விளங்குகிறது.

என்றுமில்லாத வகையில் நடைபெற்று முடிந்த கும்பாபிஷேகத்துக்காக இந்தியாவில் இருந்து பெருமளவு மாலைகளும், மலர்களும் விமானம் மூலம் பெறப்பட்டு மிகக் கோலாகலமான முறையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது பலரும் அறிந்த விடயம். இதைவிட வெளிநாடுகளில் உள்ள விநாயகர் அடியார்கள் பலரும் இதில் பங்குபற்றி மகிழ்ச்சியடைந்தார்கள். கும்பாபிஷேகச் சிறப்பு மலர் ஒன்றும் 13.05.2005 இல் வெளியிடப்பட்டது.

எம்பெருமானுக்குப் புதிய சித்திரத்தேர் திருப்பணி வேலை நடைபெற்று வருகிறது. இந்த வருட மஹோற்சவத்தின் போது அத்தேர் நிறைவடைந்து விடும் என்று எதிர்பார்த்தோம். எதிர்பாராத காரணங்களால் அது நிறைவடையவில்லை. அடுத்த மஹோற்சவ காலத்தில் இத்தேர் நிறைவடைந்து எம்பெருமான் புதிய சித்திரத் தேரில் அடியார்களுக்கு அருட்காட்சி வழங்குவார் என் பரிபாலன சபையினர் நம்புகிறார்கள்.

பல்வேறு திருப்பணிகள் நடைபெற்று பக்திப் பரவசத்தோடு விளங்கிவந்த இக்கோயிலின் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று 45 நாள்கள் மண்டலாபிஷேகம் பூர்த்தியாகி அதனைத் தொடர்ந்து மஹோற்சவம் சிறப்பாக நடைபெற்று இன்று தேர்த்திருவிழா நடை பெறுகிறது என்றால் அது எம்பெருமானின் பெரும் கருணையினாலேயே ஆகும். அந்த வேழமுகத்தான் எங்கள் எல்லோருக்கும் எல்லா நலன்களையும் வழங்க வேண்டும் என அவரின் பாதாரவிந்தங்களைப் பணிந்து வணங்குகின்றோம்.

*வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழப்*
*பான்மை தரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க*
*ஞானமத ஐந்து கர மூன்று விழி நால்வாய்*
*ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம*

**பொன்னம்பலம் அருணகிரிநாதன்**
தலைவர், ஆலய பரிபாலன சபை.


தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்!

**விக்னேஸ்வரா நகைப் பூங்கா**

தரம், நாணயம், தவறாமல், நாடுமிடம்

205/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 - 459 0022

10B,34D, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. தொ.பே. 024 - 222 1857, 024 - 222 1910

457, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 6 தொ.பே. 011 - 255 9535

முடிப்பிள்ளையார் நகைப் பூங்கா இல.167, யாழ் சாலை, கிளிநொச்சி. 021-459 0022, 024-222 1857, 024-222 1910, 011-255 9535

# இருபத்தைந்து வருடகால ஈரான் - ஈராக் பகைமை முடிவுக்கு வருகிறது

ஈராக்கில் தீவிரவாதிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அருகிலுள்ள ஈரான் தான் மறைமுகமாக உதவி வருகிறது என்ற குற்றச்சாட்டுகள் அனைத்தையும் பொய்யாக்குவதாக அமைந்துள்ளது ஈரானிய வெளியுறவு அமைச்சர் கமால் காரஸியின் பக்தாத் விஜயம்.

ஈராக்கிய தீவிரவாதிகளுக்கு ஆதரவும் ஆயுத உதவிகளும் மட்டுமல்ல, மறைவிடங்களையும் கூட ஈரான் வழங்கிவருவதாக முன்பு அமெரிக்காவும் ஈராக்கியத் தலைவர்களும் கூறிவந்தார்கள்.

ஈராக்கிற்கும் ஈரானுக்குமிடையில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாகப் பகைமை நீடித்து வந்துள்ளது. அத்துடன், 1980 இல் இருந்து 1988 வரை கடும் போரும் நடைபெற்று வந்துளளது. இந்தப் போர் அத்தியாயத்துக்கு ஒரு முடிவை ஏற்படுத்துவதற்காகவே ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஈராக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். அது மட்டுமல்ல, ஈராக்கின் புதிய அரசிற்குத் தமது நாட்டில் முழு ஆதரவையும் வழங்குவதாகவும் ஈரானிய அமைச்சர் கமால் கராஸி வாக்குறுதியளித்திருக்கிறார்.

இந்த இரு அண்டை நாடுகளுக்குமிடையிலான நல்லுறவு இப்பிரதேசத்தில் புதிய சகாப்தம் ஒன்றை உருவாக்கும் என்று பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது.

தீவிரவாதிகள் ஈராக்கில் நடத்திவரும் தாக்குதல்களால பொதுவாக அங்கு ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டுப்படையினரை விட ஈராக்கிய பொதுமக்களே அதிகமான பேர் கொல்லப்பட்டு வருகிறார்கள்.

### படைகள் அகன்றால்....?

தீவிரவாதிகளின் கோரிக்கைப் படியும் சில வெளிநாடுகளின் விருப்பப்படியும் இப்போதைய நிலையில் அமெரிக்கா தலைமையிலான கூட்டாளிப் படைகள் ஈராக்கைவிட்டு வெளியேறுவது சாத்தியமில்லை; உசிதமில்லை என்று விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

கூட்டணிப்படைகள் வெளியேற நேர்ந்தால் இப்போது இருப்பதைவிட மிகமோசமான அளவில் உள்நாட்டு கலகம் வெடிக்கும் என அஞ்சப்படுகின்றது.

ஒருவேளை, ஐ.நா.பாதுகாப்புச்சபை தலையிட்டு சமரச உடன்பாடு ஒன்றுக்கு ஏற்பாடு செய்து, அதன் மேற்பார்வையில் சகல தரப்புகளும செயறபட இணங்கமுடியுமானால், அங்கு அமைதியைக் காணலாம். ஆனால், அதுவும் கூட இப்போதைய கட்டத்தில் நடைமுறை சாததியமாகத் தெரியவில்லை. பெரும் அச்சுறுத்தல்களுக்கிடையில் தேர்தல் ஒன்று நடைபெற்று புதிய அரசு ஒன்றும் நிறுவப்பட்டுள்ள நிலையில், அந்த அரசு நிலைபெறுவதையே அமெரிக்கா முதல் சகல தரப்பினரும் விரும்புகின்றார்கள். ஈராக் மீதான படையெடுப்பை ஆட்சேபித்த பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளும் கூட அங்கு ஜனநாயக முறைப்படி ஓர் அரசு உருவாகியிருப்பதை வரவேற்றுள்ளன.

இப்பொழுது இது வரை பகைமை பாராட்டி வந்த ஈரானும் சமரசத்துக்குத் தயாராகிவிட்டது. எனவே, ஈராக்கின் எதிர்காலச் சுபீட்சத்துக்காகவும் மக்கள் நலனுக்காகவும் தீவிரவாதிகள் களநிலைகளை உணர்ந்து ஜனநாயக வழிகளுக்குத் திரும்புவது வரவேற்கத் தக்கதாய் இருக்கும். ஈரானிய அமைச்சரின் ஈராக் விஜயம் அந்நாட்டின் எதிர்காலம் குறித்துப் பலதத நம்பிக்கைகளை உருவாக்கியுள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் கொஷ்யர் செபாறி கருத்துத் தெரிவிக்கையில், கமால் கராஸியின் விஜயம் இரு நாடுகளுக்குமிடையில் குறிப்பிடக்கூடிய புதிய கூட்டுறவுக்கான வழிகளைத் திறந்துவிடும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

### ஈராக் தீவிரவாத தலைவர் சார்க்காவி கடும் காயம்

ஈராககில் அமெரிக்க கூட்டணிப் படைகளுக்குப் பெரும் தலையிடியாக இருந்து வருபவரான அபு முஸாப் அல் - சார்க்காவி பலத்த காயமுற்றிருப்பதாகவும் அண்மையில் ஈராக்கிய வைத்தியசாலையொன்றில் குறுகிய காலம் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுச்சென்றுள்ளதாகவும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

சார்க்காவி வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டபோது அவர் உடலில் இருந்து கடுமையாக இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்ததாகவும் அவருக்குச் சிகிச்சையளித்த டாக்டர் கூறியிருக்கிறார்.

ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா பயஙகரவாத அமைப்புடன் நெருங்கிய தொடர்புடையவரான சார்க்காவியின் படங்களை ஏற்கனவே தொலைக்காட்சியில் பார்த்திருப்பதால் அவர் வைத்தியசாலைக்கு வந்தபோது அடையாளம் கண்டுகொண்டதாக பெயர் வெளியிட விரும்பாத அந்த டாக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

சார்க்காவிக்கு விசுவாசமான தீவிரவாத அமைபபுகள் செயறபடும் பகுதிகளில் கூட்டணிப் படைகள் கடந்த வாரம் பெரும் எடுப்பில் தாக்குதல் ஒன்றை நடத்தியதையடுத்து சார்க்காவி காயடைந்திருப்பதான செய்தி வெளியாகியுள்ளது.

சார்க்காவிக்கு உயிர் ஆபத்து ஏற்படும் அளவுக்குக் காயம் ஏற்பட்டிருக்கின்றதா என்பது தெளிவாகவில்லை. என்றாலும், இச்செய்தியை ஆதாரப் பூர்வமாக உறுதிப்படுத்திக் கொள்ள ஈராக்கிய அதிகாரிகள் முயன்று வருகிறார்கள்.

சார்க்காவியும் அவரது சகாக்களும் முடக்கப்பட்டு விட்ட ஈராக்கில் பெருமளவு தீவிரவாதத் தாக்குதல்கள் குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சார்க்காவி காயமடைந்து தம்மிடம் வந்ததாக மேற்கு நகரமான ரமாதியில் வைத்து ஒரு டாக்டர் கூறியதாகச் செய்தியாளர் ஒருவர் கூறியிருந்தார். இந்தச் செய்தி உண்மைதான் என ரமாதியில் இது பற்றிப் புலனாய்வு செய்தி ஈராக்கிய இராணுவத் தளபதியும் ஊர்ஜிதம் செய்துள்ளார். சார்க்காவிக்குச் சிகிச்சையளித்தவர் என்று கூறப்படும் டாக்டரை விசாரிப்பதற்காக அமெரிக்கப் படையினர் தடுத்துவைத்திருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

சார்க்காவியின் காயம் எப்படிப்பட்டதாய் இருந்தது என்பதை அந்த டாக்டர் வெளியிடவில்லை. ஆனால், வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும்படி தாம் கேட்டுக் கொண்டதாகவும், அவரைப்பற்றிய விவரங்களையும் பெயரையும் பதிய வேண்டியிருப்பதாக வும் கூறிய போது அவர் கலவரப்பட்டு தங்கிச் சிசிக்சை பெற மறுத்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

அவருடன் வந்தவர்கள் மூன்றுபேரும் நன்றாக உடை தரித்திருந்தார்கள். கண்ணியமாக

## புதிய பக்தாத் அரசுக்கு ஈரான் அங்கீகாரம்

உரையாடினார்கள். அவர் தங்கியிருக்க மாட்டார் என்றும், அவருக்குரிய மருந்துகளையும் மருந்துக் குறிப்புக்களையும் தரும்படி கேட்டார்கள் என்றும் டாக்டர் கூறியுள்ளார்.

சார்க்காவி காயமுற்றதாகச் செய்தி வெளியாகியிருப்பது இது முதல்தடவையில்லை.

சார்க்காவி வைத்தியசாலையொன்றுக்கு வந்து போயிருக்கிறார் என்ற செய்தி அமெரிக்கப் புலனாய்வாளர்களுக்கு அவர் எங்கிருக்கிறார் அல்லது எங்கு சென்றிருக்கிறார் என்பதைக் கண்டு பிடிக்க உதவும் என்று நம்பப்படுகின்றது.

### ரைஸ் அம்மையாரின் திடீர் ஈராக் விஜயம்

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொண்டலீஸா ரைஸ் அம்மையார் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈராக் சென்றிருந்தார்.

தீவிரவாத இயக்கங்களின் வன்செயல்களையும் இனக்குரோத போட்டிகளையும் எதிர்கொணடு திணறிக் கொண்டிருக்கும் புதிய ஈராக் அரசின் செயற்பாடுகளுக்கு அமெரிக்காவின் ஆதரவையும் ஆசீர்வாதத்தையும் நேரில் தெரிவித்து தைரிய மூட்டுவதற்காக இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. ஈராக்கில் புதிய அரசு இம்மாதம் முற்பகுதியில் பதவியில் அமர்ந்ததின் பின்னர் அங்கு விஜயம் செய்யும் முதல் அமெரிக்க ராஜதந்திரி சிரேஷ்ட அமைச்சர் என்ற முறையில் ரைஸின் விஜயம் அமைந்துள்ளது. அவரது விஜயம் இரகசியமாகவே இடம்பெற்றது. கட்டாரிலிருந்து குர்திஷ் ஆர்பில் நகரில் அவர் வந்திறங்கினார்.

ஈராக்கில் உள்ள பாதுகாப்பு நிலைமை, அரசியல் செயறபாடு, நாட்டின் உள் கட்டமைபபை முன்னேற்றுவதற்கு அரசு எடுக்கும் முயற்சிகள் போன்றவற்றை ஆராயப்போவதாகக் கொணடலீஸா நிருபர்களிடம் கூறினார். ஈராக்கிற்கான புதிய அரசமைப்பொன்றை உருவாக்க நியமிக்கப்பட்டிருக்கும் குழுவில் சன்னி முஸ்லிம்கள் தரப்பில் போதிய பிரதிநிதித்துவம் இல்லாமை குறித்து அவர் கவலை தெரிவித்தார். ஷயிட் முஸ்லிம்களே பெரும்பான்மையாகவுள்ளனர். குழுவில் உள்ள 55 உறுப்பினர்களில் இருவர் மட்டுமே சன்னி முஸ்லிம்கள்.

இந்தச் செயற்பாட்டில் போதிய அளவு பிரதிநிதித்துவம் சிறுபான்மையோருக்குக் கொடுக்கப்படவேண்டும். இந்த விடயம் பற்றி ஆராய விரும்புகிறேன் என்று ரைஸ் கூறினார். இந்த மாத ஆரம்பத்திலிருந்து 400 பேருக்குமேல் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளால் கொல்லப்பட்டிருப்பது பற்றி ரைஸ் கூறுகையில், அரசியல் செயற்பாடுகளைத் தடம்புரட்டி விடுவதற்காகவும் அவர்களுக்கெதிராகப் பெரும் எடுப்பிலான தாக்குதல் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாலும் தீவிரவாதிகள் இவ்வாறு செய்கிறார்கள். இராணுவ நடவடிக்கைகளிலும் பார்க்க ஜனநாயக மறுசீரமைப்பின் மூலமே அவர்களைத் தோற்கடித்து விடமுடியும் என்றார். ஈராக்கிய பிரச்சினைக்கு அரசியல் செயறபாடுகள்தான் பதிலாக இருக்கமுடியும் என்றார் திருமதி கொண்டலிஸா ரைஸ்.

★★★

### வடகொரியாவின் நிலைப்பாடு தளர்கிறதா?

ஆறு நாடுகள் மாநாட்டுக்கு மீண்டும் வருவதற்குத் தயக்கம் காட்டினாலும் வடகொரியா அணுஆயுத உற்பத்தி தொடர்பான தனது



தென்கொரியா உப ஒருமைப்பாட்டு அமைச்சர் நீபொங் ஜோ (வலது) வடகொரியா உப ஒருமைப்பாட்டு அமைச்சர் சிம்மான் கில் (இடது) இருவரும் சந்தித்து கை குலுக்குகிறார்கள். இரு நாடுகளுக்குமிடையில் எல்லை நகர் ஒன்றில் அச்சந்திப்பு இடம்பெற்றது.

நிலைப்பாட்டில் சற்று தளர்வு காட்டத் தொடங்கியிருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றார்கள்.

வடகொரியாவின் அணுஆயுத உற்பத்தித் தொடர்பாக சீனாவின் அனுசரணையுடன் நடைபெற்றுவந்த மாநாட்டிலிருந்து சில மாதங்களுகது முன் வெளியேறிய வடகொரியா, மீணடும் பேச்சு மேசைக்கு வரமறுத்துவந்தது. அது மட்டுமல்ல, நிறுத்திவைக்கப்பட்டிருந்த அணு உலைகளை மீண்டும் இயக்கி, யுரேனியத்தைச செறிவூட்டும் நடவடிக்கையிலும் இறங்கி விட்டதாகச் செய்திகள் வந்தன.

இதற்கிடையில், அணுகுண்டுகள் தன்னிடம் இருப்பதாகவும் அது அறிவித்து உலகத்தை அச்சுறுத்தியது.

ஆனால், இப்பொழுது தென்கொரியாவுடன் ஆறு நாடுகள் மாநாட்டில் கலந்துகொள்வது தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தத் தொடங்கியிருப்பது அதன நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருப்பதையே காட்டுவதாக அவதானிகள் நம்புகிறார்கள்.

என்றாலும், கடந்த வாரம் ஆரம்பமான வடதென்கொரியா பிரதிநிதிகளுக்கிடையிலான பேச்சுக்கள் எதிர்பார்த்த அளவு முன்னேற்றத்தைக் காண விலலையென்று செய்திகள் கூறுகின்றன.

ஆறு தரப்பு பேச்சுக்களை ஆரம்பித்து அணு ஆயுதப் பிரச் சினைகக்கு ஒரு தீர்வைக் கண்டுவிடவேண்டும் என்று தென்கொரியர்கள் வற் புறுத்தியுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இருநாடுகளுக்குமிடையில் ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்க முடியாது என்று தென்கொரியா அடித்துக் கூறிவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

## நிலைப்பாட்டில் தடுமாறும் வடகொரியா

எவ்வாறேனும் ஆறு தரப்புப் பேச்சுக்களுக்கு வடகொரிய வந்தே ஆகவேண்டும் என்கிறார்கள் நோக்கர்கள்.

### கொண்டலீசாவுக்கு வடகொரியா அழைப்பு

இதற்கிடையில், வடகொரியாவின் அணு ஆயுத மற்றும் ஏவுகணைத் திட்டம் தொடர்பாக ஒரு தீர்வினை ஆலோசிக்கும் விதத்தில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் வடகொரியாவுக்கு விஜயம் செய்ய வேண்டும் என அந்த நாடு விரும்புவதாகச் செய்திகள் கூறுகின்றன. கொண்டலிஸா ரைஸ வடகொரியாவுக்கு வருகைதருவதற்கான ஏற்பாடுகளைச் செய்துதரும்படி சீனாவை வடகொரியா கேட்டி ருப்பதாக ஜப்பானியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.



சீன வெளியுறவு அமைச்சர் லிஸாவோஸிங் இதுபற்றி அமெரிக்க இராஜாங்க அமைச்சருக்கு அறிவித்திருப்பதாகவும் அச்செய்தி தெரிவித்திருக்கிறது.

ஆனால், அமெரிக்கத் தரப்பிலான பிரதிபலிப்பு எதுவும் இன்னும் வெளிவரவில்லை.

★★★

### குழந்தைகளை நேசிக்கின்றேன்

குழந்தைகள் மீதான எனது அன்பு பரிசுத்தமானது என்று பாடகர் மைக்கல் ஜாக்ஸன் கூறி யுள்ளார்.

மகாத்மாகாந்தி, அன்னை தெரேசா, மார்ட்டின் லுதர்சிங், வேல்ஸ் இளவரசி டயானா போன்றவர்கள் சிறுவர்கள் மீது செலுத்திய அன்புக்கு இணையானது தனது அன்பு என்று ஜாக் ஸன் தெரிவித்துள்ளார்.

13 வயதுச் சிறுவனைப் பாலியல் துன்புறுத் தலுக்குட் படுத்தினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஜக்ஸனின் பேட்டிகள் அடங்கிய இரு ஒலி-ஒளி நாடாக்கள் நீதிமன்றத்தில் நடுவர்களுக்கு (ஜுரர்கள்) போட்டுக் காட்டப்பட்டது. இந்தப் போட்டியில் சிறுவயதில் தனக்கு ஏற்பட்ட துன்பங்களையும் தன்தந்தையிடம் தனக் கிருந்த பயத்தையும் தான் ஜெயிக்கும் அறைககுச் செல்லும்போது தனக்கு மயக்கம் ஏற்பட்ட சம் பவங்களையும் அவர் தெரிவித்துள்ளார். மூன்று மணிநேரம் நீடித்த இந்தப் பேட்டி நிகழ்ச்சியில் தாம் நிரபராதி என்று வாதிட்டார். குழந்தைகளில் தெய்வத்தைத் தான் காண்பதாகவும் ஒருபோதும் சிறுவர்களைத் துன்புறுதத விரும்பியதில்லையென்றும் தெரிவித்தார்.

குழந்தைகள் என்னை ஏமாற்றியதில்லை; காட்டிக்கொடுத்ததும் இல்லை; வளர்த்தவர்கள் தான் என்னை மோசம் செய்துவிட்டார்கள் - என்றார். நான் யேசுகிறிஸ்துவென்று சொல்லிக் கொள்ளவில்லை, நாம் சிறுவர்களுக்கு இன்னும் சற்று அதிகமாக அன்பையும் கவனத்தையும் செலுத்தவேண்டும் என்கின்றேன் - என்றார். பொப் இசை மன்னன் மைக்கல் ஜாக்ஸன



ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் ஹோஷ்யார் செபரி (இடது) இரானிய வெளியுறவு அமைச்சர் கமால் கராஸியுடன் கைகுலுக்குகிறார். பக்தாத்தில் கடந்த வாரம் இருவரும் சந்தித்தனர்.

மீதான பாலியல் துன்புறுத்தல் வழக்கு அமெரிக்காவில் கலிபோர்னியா நகரில் சாந்தாமரியா நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வழக்கில் புற்றுநோயிலிருந்து குணமாகிவரும் தனது 13 வயது மகனை ஜாக்ஸன் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக ஒரு பெண்மணி வழக்குத் தொடுத்திருக்கிறார். இந்தவழக்கில் 10 குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படுமானால் ஜாக்ஸனுக்கு 20 வருட கடுங்காவல் தண்டனை வழங்கப்படலாம்.

இந்த வழக்கில் கடந்தவாரம் சாட்சியமளித்த ஜாக்ஸனின் உறவினரான 16 வயது இளம் பெண் சிமோன் ஜாக்ஸன் என்பவர், நெதர்லாநதிலுள்ள ஜாக்ஸனின பண்ணையில் ஒருதினம் இரவு தான் தொலைககாட்சி பார்த்துக்கொண்டிருந்தபோது ஜாக்ஸன் மீது வழக்குத் தொடர்ந்திருக்கும் பையன்கள் குசினியிலிருந்து வைன போத்தல்களைத் திருடுவதைக் கண்டதாகக் கூறினார். இந்தப் பையன்களுக்கு மது குடிக்க ஜாக்ஸன் பழக்கினார் என்பதும் ஒரு குற்றச்சாட்டு. இந்தச் சாட்சியத்தின்படி அப்பையனகள் தாமாகவே அருந்தும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள் என்பது எடுத்துக்காட்டப்பட்டது. தாம் இருப்பதை அப்பையன்கள் காணவில்லையெனறும் பின்னர் தன்னைக்கண்டதும் அதிர்ச்சிக்குள்ளாகி யாரிடமும் கூறவேண்டாம் என்று கேட்டார்கள் என்றும் சாட்சிகூறினார். ★



# அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழாச் சிறப்பு மலர்

## 22-05-2005





ஆலய வீதியில் மூன்று தேர்கள் வலம் வரும் காட்சி

## பிரதம சிவாச்சாரியாரின் ஆசியுரை



ஆலய மஹோற்சவங்களில் ஒவ்வொரு நாளும் நடைபெறும் ஒவ்வொரு திருவிழாக்களும் ஒவ்வொரு தத்துவத்தை விளக்குகின்றன. ஒவ்வொரு வாகனங்களிலே இறைவன் ஆரோகணித்துவரும் காட்சியை கண்டு தரிசித்தால் வெவ்வேறு விதமான பலா பலன்கள் நமக்குக் கிடைக்கின்றன. மஹோற்சவங்கள் முழுவதுமாக இறைவனுடைய ஐந்தொழில்களை உணர்த்துகின்றன. அந்தவகையில் தேர்த்திருவிழா அழித்தலைக் காட்டுகின்றது. இறைவன் ரதத்தில் வரும் காட்சியை மனதில் நினைத்துப் பார்த்தால் ஹோம குண்டத்தில் அக்கினிச் சுவாலை தெரிவது போல் இருக்கும். அந்த வகையான அக்கினி மக்கள் மனதில் உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களோடு கூடிய சகல தீய பழக்கவழக்கங்களை இறைவன் அழித்து இரட்சிப்பான். இன்றைய தினம் அருள்மிகு கும்பழாவளை ஐங்கரன் ரதமேறி திருவீதியுலா வருகின்ற திருக்காட்சியை நேரில் கண்டு தரிசிக்கின்றவர்களுக்கும் வெளிநாடுகளிலே இருந்து விரதமிருந்து மனதிலே நினைத்து வணங்குபவர்களுக்கும் கும்பழாவளைப்பிள்ளையாரின் திருவருள் கடாட்சமும் சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கப்பெற்று வாழ்வாங்கு வாழவேண்டுமென்று பிள்ளையாரை வேண்டி வணங்கி நல்லாசி கூறி வாழ்த்துகிறேன்.

பிரதம சிவாச்சாரியார்.
**இராம. விஸ்வேஸ்வரக் குருக்கள்** (சந்திரன் ஐயர்)

## அருள் மழை சொரிவான் தேரில் அவனடி தொழுவோம்



நீரோடு நிலவளங்கள் நிறைந்த சீர் அளவையூரில்
சீரேறு கோபுரம் நற் சிங்கார வனப்பு மிக்க
தாரேறு கும்பழாவளைத் தண் தலத்துறை கணேசமூர்த்தி
தேரேறித் தொண்டர்க்கின்பம் திகழ் காட்சி காட்டுகின்றார்.

வருபரி முகத்தளான மாருத வல்லி வேண்ட
கருணைசேர் அழகு பூத்த கமலமார் முகங்கொடுத்த
பிரணவப்பெருமான் வந்தார் பிணியெலாம் தீர்க்கும் செல்வன்
அருள் மழை சொரிவான் தேரில் அவனடி தொழுவோம் வாரீர்

தான் தோன்றி மூர்த்தியாகத் தரிசனம் கொடுத்தான், நித்தம்
வான் தோன்றும் தேவகோடி வந்தனை செய்து செல்வார்.
மான் தோன்று கரத்தனோடு வடிவேலன் இருதேர்மேவ
தேன் தோன்று வரம் கொடுக்கும் செல்வனைத் தேரில் பாரீர்.

குலவிடும் அடியாருக்குக் கும்பழா வளைக்கணேசன்
நலமெலாம் தீர்த்துக்காப்பான் நற்கலை நிதிகொடுப்பான்
உலகெலாம் நிறைந்தான் தன்னை உயர் நெடுந் தேரிற் கண்டால்
மலமெலாம் நீங்கும், பொங்கும் மனநிறைவின்பம்தானே

அருட்கவி சீ. விநாசித்தம்பி.



ஆலயத்தின் முன்னைய தோற்றம்

**கும்பழாவளையானை கும்பிட்டவர் வாழ்வில் நம்பிக்கை கூடி வரும் நலங்கள் பெருகி வரும்**

*பல்லவி*

**கும்பழாவளை உறையும் தும்பிக்கையான் பாதம்**
**நம்பி கை தொழுதால் நலங்கள் கூடும்**

*அனுபல்லவி*

**மாருதப் புரவீக வல்லியின் மனக்குறையும்**
**சீரளவைப் பதியில் தீர்த்த விநாயகனே**

*சரணம்*

**மங்கலநாதமும் மணியொலி கீதமும்**
**பொங்கும் பண்மறையும் தீப வொளி பலவும்**
**தங்கு தடையின்றி போற்றும் தலைவனை**
**எங்கெங்கு சென்றாலும ஏத்தி பணிவோமே.**

(கும்பாபிஷேக சிறப்பு மலர்)

## தர்மகர்த்தாசபைத் தலைவரின் ஆசியுரை



அளவெட்டி. கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று சிறப்புடன் நடைபெற ஆசி வழங்குவதில் தர்மகர்த்தாசபையினர் ஆகிய நாம் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வாலயத்தில் பெரும் பணியாற்றி வரும் தொண்டர்சபை அங்கத்தவர்களையும் எம்பெருமானின் அருள்பெற வந்திருக்கும் அடியார்கள் அனைவரையும் வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**செ.செல்வநேசன்**
தலைவர், தர்மகர்த்தாசபை

## கும்பழாவளை விநாயகன் தல வரலாறு

கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம் மிகப் பழைமையானது. இதன் ஸ்தாபித காலம், நடைபெற்ற விழாக்கள், நிகழ்ந்த அற்புதங்கள், திருப்பணிகள், கும்பாபிஷேகங்கள், நடைபெற்ற ஆண்டுகள், திருப்பணிகளை அவ்வப்போது முன்னின்று செய்தவர் பெயர் விவரங்கள் போன்றவற்றை ஆதாரபூர்வமாக பூரணமாக அறியமுடியாதுள்ளது.

ஆயிரத்து தொளாயிரத்து நாற்பத்தொன்பதாம் ஆண்டு தொடக்கம் இவ்வாலயம் நீதிமன்றத் தீர்ப்பின் வழி, உபயகாரர்கள் மத்தியில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஏழு பேரைக் கொண்ட தர்மகர்த்தாக்கள் சபையால் நிர்வகித்து நடத்தப்பட்டு வருகிறது. நீதிமன்றத் தீர்ப்பின் விரிவான விதிகளுக்கமைய அன்றுதொட்டு இன்று வரை ஆலயம் சிறப்பாக நிர்வகித்து வரப்படுகின்றது. நைமித்திய பூசைகள், அபிஷேகங்கள், திருவிழாக்கள், நவராத்திரி, சிவராத்திரி, கந்தஷஷ்டி, பிள்ளையார் கதை, திருவெம்பாவை, விசேட சமயவிழாக்கள் ஆகிய உபயங்கள் இவ்வாலயத்தில் பக்திபூர்வமாக முன்னோராலும், அவர்கள் வழிவந்த பின்னோராலும் பேணப்பட்டு வருகின்றன. உபயகாரர் பட்டியல் ஆலய சொத்துகளின் பட்டியல், வரவு - செலவு அறிக்கைகள், ஆவணப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகின்றன. நிர்வாகத்தின் பார்வைக்கு அகப்படாத ஆலயச் சொத்துகள் மேலும் உள்ளதாக அறியப்படுகின்றன. அவை தேடப்பட்டு வருகின்றன.

அற்புதம் நிறைந்த இவ்வாலயத்தின் கட்டடப் பழைமை காரணமாக அதனைப் புனருத்தாரணம் செய்யவேண்டிய அவசியம் நிர்வாக சபையாலும் வழிபடுவோராலும் உணரப்பட்டு அதற்கான முயற்சிகள் இரண்டாயிரமாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. புனருத்தாரண வேலைகளுக்குப் பொறுப்பாக தர்மகர்த்தா சபையை உள்ளடக்கிய வழிபடுவோர் மத்தியில் இருந்து திருப்பணிச் சபை தெரிவுசெய்யப்பட்டது. இச்சபையின் முயற்சியினாலும் அவ்வூர் வாழ்மக்களினதும் வெளிநாடுகளான கனடா, லண்டன், சுவிஸ், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இவ்வூர் மக்களினதும் வேறு ஸ்தாபனங்களினதும் பேராதரவான நிதியுதவியினால் அழகான, சிறப்பான, கவர்ச்சியான தோற்றமுடைய கட்டடம் புதிதாக எம்பெருமானுக்கு அமைக்கப்பட்டு 01.02.2002 இல் மஹா கும்பாபிஷேகமும் இனிது நிறைவேற்றப்பட்டது. இப்பாரம்பரிய புனருத்தாரண கட்டடத் திருப்பணியும் மஹா கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நிறைவேற்றி வைக்கப் பணமாகவும், பொருளாகவும் பேருதவி புரிந்த உள்ளூர் அன்பர்கள், இலங்கைவாழ் அன்பர்கள், வெளிநாடுகளில் வாழும் அன்பர்கள் குறிப்பாக, கனடா வாழ் அன்பர்கள் கட்டடத்தை உரிய காலத்தில் சிறப்பாகச் செய்துமுடித்து உதவிய ரூலின்ஸ் (RUHLINS) ஸ்தாபனத்தார், மஹா கும்பாபிஷேகத்தை ஆகமவிதிப்படி பக்தி பூர்வமாக சிறப்பாக நிறைவேற்றி வைத்த அந்தணப் பெருமக்களை நினைவுகூருகின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் கடந்த காலத்தில் இவ்வாலயத்தைச் சிறந்த முறையில் பரிபாலித்து கையளித்த தர்மகர்த்தாசபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் யாவரையும் நன்றியுடன் பாராட்டுகிறோம். ஆலயத் திருப்பணியில் தம்மை ஈடுபடுத்திய எல்லோருக்கும் எம்பெருமானின் அருள்கிடைப்பதாக.

(நன்றி... கும்பாபிஷேக சிறப்பு மலர் - 2002)

(C\42894)(50-16-14)

**விழாச் சிறப்புற வாழ்த்துவோர்**

சகலவிதமான துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்களுக்கும்
**சிவதயா ரேடர்ஸ்**
அளவெட்டி தெற்கு. அளவெட்டி.

**டினேஸ் ரெயிலறிங்**
உரிமையாளர்: டினேஸ்
சங்கானை வீதி, அளவெட்டி, அலுக்கை.

சகல பத்திரிகைகளிற்கும் இணுவிலில்
**பத்திரிகை முகவர்**
கே.கே.எஸ். றோட், இணுவில்.

குறித்த தவணையில் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள
**சிவராம் நகையகம்**
நவீன சந்தை அருகில், சிறிபில்டிங் உரிமையாளர்: நா.சிவராசா (ராசன்) காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.

**விநாயகர் சைவ உணவகம்**
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

**சக்தி பல்பொருள் வாணிபம்**
உரிமையாளர்: சக்திவேல்
கணேஸ்வரம். அளவெட்டி.

**நிருஸ் குளிரகம்**
உரிமையாளர்: நிருபாகரன்
விளான் வீதி. அளவெட்டி வடக்கு.

சகலவிதமான கணனி அச்சு வேலைகளுக்கும்
**கிருஷ்ணா பிறின்ரேர்ஸ்**
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

உங்கள் தேவைகளிற்கு ஏற்ற அனைத்து அத்தியாவசிய பல்பொருள்களையும் நியாயவிலையில் கொள்வனவுசெய்ய
**விஷ்ணு ஸ்ரோஸ்**
உரிமையாளர்: V.டெனிசன்
அளவெட்டி கிழக்கு. அலுக்கை.

**ஐங்கரன் வீடியோ அன் ஓடியோ சென்ரர்**
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.
வீடியோ கசெட்டையும் C.D.பிரதிகளையும் வாடகைக்கும் பழைய, புதிய பாடல்களை C.Dயிலும்.Audio கசெட்டிலும் பதிவு செய்து கொள்ளவும்.

சகலவித உட்புற, வெளிப்புறப் படப்பிடிப்புகளுக்கும் கறுப்பு, வெள்ளை அடையாள அட்டை, பாஸ்போட் படங்களிற்கும்
**விமல் போட்டோ அன் வீடியோ**
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.
தொ.பே: 077 6018803

அன்பளிப்பு, அழகுசாதன மற்றும் பாமஸி, மருந்துவகை அனைத்துப் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் மலிவாகப் பெற்றுக்கொள்ள
**ரூபன் பல்பொருள் அன் பான்சி ஹவுஸ் & பார்மசி**
பிரதான வீதி. அளவெட்டி.

உங்களுக்கு ஏற்ற அழகுசாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் மற்றும் ஆடம்பரப்பொருள்களிற்கு
**பரணிகா மஸ்ரி சென்ரர்**
கே.கே.எஸ் றோட். மல்லாகம்.

அளவையில் இன்ரநெற் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகளுடன் பல்பொருள் வியாபாரங்களிற்கு
**விநாயகர் களஞ்சியம் & தொலைத்தொடர்பகம்**
கூட்டுறவாளர் வீதி. அளவெட்டி.

நவீன கருவிகளுடன் நவீன டிசைன்களில் உங்கள் முடிகளை அழகுபடுத்த
**நியூ சாந்தி சலூன்**
உரிமையாளர்: க.சுதேஸ்வரன்
பிரதான வீதி. அளவெட்டி மேற்கு.

அழகுசாதன அன்பளிப்புப் பொருள்களுக்கு
**லஷ்சன பன்சி ஹவுஸ்**
உரிமையாளர்: S.ஜெயக்குமார்
கூட்டுறவாளர் வீதி. அளவெட்டி மத்தி.

புதிய பழைய திரைப்படப் பாடல்களையும், படங்களையும் ஒலிப்பதிவு செய்தும் வாடகைக்கும் பெற்றுக்கொள்ள
**சார்தினி திரைக்கலையகம்**
உரிமையாளர்: சுரேஸ்
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

# கார்த்திகை விளக்கீட்டைப் பிழையான நாளில் அனுஷ்டிப்பது நாட்டுக்கும் அரசனுக்கும் பெரும் கெடுதலை உருவாக்கும்

**இலங்கையில் வெளியிடப்படும் - இந்து மக்களுக்குரிய விரத தினங்களை அறிந்துகொள்ளக்கூடிய - வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் ஆகிய இரண்டிலும் இவ்வாண்டுக்குரிய விரத தினங்கள் சில அமையும் தினங்களில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது. இந்து அமைப்புகள்மூலம் இதுபற்றி இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.**

**குறிப்பாக 2005 - 2006ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்டுள்ள இவ்விரு பஞ்சாங்கங்களிலும் திருக்கார்த்திகை விரதம், விநாயகர் விரதம், திருவெம்பாவை போன்ற முக்கிய விரத தினங்களில் ஏறத்தாழ ஒரு மாதகால வேறுபாடு காணப்படுகிறது. இதனால், இந்து மக்கள் இவ்விரத தினங்களைத் தீர்மானித்துக் கொள்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

**கடந்த ஞாயிறன்று 'உதயன்' இதுதொடர்பான கட்டுரையொன்றைப் பிரசுரித்திருந்தான். அக்கட்டுரையின் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது. (ஆ-ர்)**

இலங்கையிலும் தமிழகத்திலும் வெளிவரும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் தவிர்ந்த ஏனையவற்றில் ஆடிப்பூரம், கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை போன்ற முக்கிய விரத நாள்கள் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கார்த்திகை விளக்கீட்டைப் பிழையான நாளில் அனுஷ்டிப்பது நாட்டுக்கும் அரசனுக்கும் பெரும் கெடுதலை உருவாக்கும் என்று காலப் பிரகாசிகையில் கூறப்பட்டிருப்பதால், தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பிழையைத் திருத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். சகல பிழைகளையும் திருத்தி, 2005-2006 இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தை மீள்பதிப்பு செய்வது சமயோசிதமானது - இவ்வாறு 15-05-2005 'உதயனில்' குறிப்பிட்டிருந்தேன்.

ஏனைய பஞ்சாங்கங்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்திலே உள்ளதே சரியென்று அதன் கணிதர் வெங்கடேச ஐயர் அடம் பிடித்தால், அவரைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும். ஏனைய பஞ்சாங்க கணிப்புக்களை அவர் நிராகரித்தாலும், அடுத்துவரும் இரு ஆதாரங்களையும் பிழையென்று சொல்லமுடியாது. ஏனெனில் அவர்தான் அவற்றிக்கு முகவுரை எழுதி, பதிப்பித்து, விற்பனைக்கு உண்டு என்று விளம்பரப்படுத்துகிறார்.

### ஆதாரம் 5 - சரசோதிமாலை

கிருத்திகாதீபம்

*தேளாதவனிற்றிகழ்பூரணையி, ஞளாரலிலேநலமாமதிதா*
*னீளேறுறவேநெறியேசுடர்தான், கேளேற்றிடவேகிளருந்நலமே.*

இது, சரசோதிமாலையின் தெய்வவிரதப் படலத்தின் 18ஆம் பாடல். இதில், "தேளாதவனிற்றிகழ்பூரணை" என்ற ஆரம்பத்தில், தேள், ஆதவன், திகழும், பூரணை என்ற சொற்கள் பாடலாக ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. தேளை அடையாளமாகவுள்ள விருச்சிக இராசியில் ஆதவன் திகழ்கின்ற மாதமாகிய கார்த்திகையில் வரும் பூரணை என்பதே இதன் அர்த்தம். கார்த்திகை மாதத்திலே, கார்த்திகை விளக்கீட்டுக்குத் தீபம் ஏற்றவேண்டும் என்றே இப்பாடல் கூறுகிறது. இதன்படி, கார்த்திகை விளக்கீடு ஐப்பசி 29 என்று இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் குறித்திருப்பது பிழை. அப்பஞ்சாங்கப்படி, கார்த்திகை 30 (டிசெம்பர் 15) சூரிய அஸ்தமனத்தின் பின்னர் 09 மணி 59 நிமிடம்வரை பூரணை திதி நிற்கிறது. எனவே, அன்றுதான் கார்த்திகை விளக்கீடு.

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் மேலுள்ள பாடலின்படி சரியாகச் சர்வாலய தீபம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று விளம்பரம் வந்திருந்தது. கனடாவிலுள்ள ரிச்மன்ஹில் இந்து ஆலயத்தினருக்கு எழுதிய பதிலிலும் சர்வாலய தீபம் சரியென்பதற்கு மேலேயுள்ள பாடலையே குறிப்பிட்டிருந்தார். அவ்வாலயத்தினர் அதனை ஏற்கமறுத்த பின்னர், இப் பிழைகள் திருத்தப்படாததால், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் நிராகரிக்கப்பட்டது. இதனால், கனடாவில் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றும் ஒருசில ஆலயங்களும் அதனை நிராகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளன.

### ஆதாரம் 6 - விதானமாலை

கிருத்திகா தீபம்.

*கார்த்திகைக் கார்த்திகையிற் கடைக்காலினிடை யுவாவிற்*
*சேர்த்தேறெழத் தீபமேற்றுக*

*இ-ள்: கார்த்திகைமாதத்துக் கார்த்திகை சாலாங்காலிலே யாதல் ரோகிணியிலாதல் பூரணையிற் பிரதானமாக இடபலக்கினத்துத் திருக்கார்த்திகைத் தீபமேற்றுவது.*

இது, விதானமாலை என்ற நூலின் தேவ வழிபாட்டுப் படலத்தின் 7ஆம் பாடலும் உரையும். இதில், கார்த்திகை மாதத்திலேயே கார்த்திகை தீபம் ஏற்றவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதுவும், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் கார்த்திகை விளக்கீடு ஐப்பசி 29, நவம்பர் 15 என்று குறித்திருப்பது சுத்தப்பிழை என்று நிரூபிக்கிறது.

### ஆதாரம் 7 - உத்தர காரணாகமம்

[illegible]

[illegible]
[illegible] ௧
[illegible]
[illegible] ௨
[illegible]
[illegible] ௩
[illegible]
[illegible] ௪
[illegible]
[illegible] ௫
[illegible]

மேலே இருப்பது, உத்தர காரணாகமத்தின் ஆர்த்திரா தரிசன படலத்தின் ஒரு பகுதி. அது, சமஸ்கிருதத்தில் இருப்பதால், அதன் விளக்கத்தைக் கீழே தருகிறேன்.

சுலோகம் 2 - திருவாதிரையும் பூரணையும் சேர்ந்து வருவது விசேஷம். இவற்றுள் திருவாதிரையே மிகவும் முக்கியமானது.

சுலோகம் 3 - மார்கழியின் முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் திருவாதிரை வந்தால், பிற்பகுதியில் வருவதிலேயே ஆர்த்திரா தரிசனம்.

சுலோகம் 4 - மார்கழியின் முற்பகுதியில் வரும் திருவாதிரை, பூரணையுடன் சேர்ந்தும், பிற்பகுதியில் வருவது பூரணை சம்பந்தம் இல்லாது வந்தாலும், பிற்பகுதியில் வருவதிலேயே ஆர்த்திரா தரிசனம்.

சுலோகம் 5 - மார்கழியின் முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் திருவாதிரை வரும்போது, முற்பகுதியில் வருவதில் ஆர்த்திரா தரிசனம் செய்வது எஜமானனுக்குக் கெடுதலை உருவாக்கும்.

பார்த்திப வருடத்தின் மார்கழியில் டிசெம்பர் 17இலும், ஜனவரி 13இலும் சூரிய உதயத்தில் திருவாதிரை உள்ளது. மேலே, சொல்லியவாறு நிர்ணயித்தால், ஜனவரி 13 அன்றே ஆர்த்திரா தரிசனம். இது, இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் டிசெம்பர் 17 என்று பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய ஆர்த்திரா தரிசனம் எஜமானனுக்குக் கெடுதியை ஏற்படுத்தும்.

எஜமானுக்குக் கெடுதல் வரக்கூடிய நாளாகிய டிசெம்பர் 17இல் அந்தணர்கள் யாராவது ஆர்த்திரா தரிசனம் செய்வார்களா? யாராவது அவ்வாறு செய்யமுற்பட்டாலும், அதனை எஜமான் அனுமதிப்பாரா? இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு டிசெம்பர் 17இல் ஆர்த்திரா தரிசனம் நடைபெறுமா? அப்பஞ்சாங்க அபிமானிகள்கூட, இதற்குரிய சரியான தினமாகிய ஜனவரி 13 இலேயே இதனை அனுஷ்டிப்பர். இத்தினமே சரியானது என்று வெங்கடேச ஐயர் பிழை திருத்தம் அறிவித்தால்தான், அவரது அபிமானிகள் அவரது பஞ்சாங்கத்தைப் பின்பற்றினார்கள் என்று சொல்லலாம். இந்நிலையில், அவர் பிழை திருத்தம் அறிவிப்பதைவிட வேறு வழி உள்ளதா?

### 2005 கார்த்திகை விளக்கீடு ஐப்பசியில் வருவதற்கு வேறு ஏதாவது காரணம் உள்ளதா?

2005இல் கார்த்திகை விளக்கீடு ஐப்பசியில் வருவது பிழை என்று பல ஆதாரங்களால் நிரூபித்துள்ளேன். வாசக நீதிபதிகளே, இதற்கு மேலும் ஆதாரங்கள் வேண்டுமா? இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் கார்த்திகை விளக்கீட்டை ஐப்பசியில் குறித்தது சரி என்று விளம்பரப்படுத்திய, எழுதிய, எழுதக்கூடிய சாத்தியமுள்ள ஏனைய காரணங்களையும் பிழை என்று நிரூபிக்கவேண்டிய கடமை எனக்கு உள்ளதல்லவா?

### கார்த்திகை மாத இறுதியில் வரும் பூரணை மார்கழி மாதத்திற்குரியதா?

கலண்டர்களில் 15-12-2005ஐ பாருங்கள். இது, டிசெம்பர் 15ஆம் திகதியாக இருந்தாலும், தமிழுக்குக் கார்த்திகை மாதம் 30ஆம் திகதி என்றல்லவா குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அதனை மார்கழி மாதத்திற்குரியது என்று கூறமுடியாது.

### சங்கிராந்தி தோஷம் காரணமாக இருக்குமா?

கார்த்திகை மாதத்தில் விருச்சிக இராசியில் சஞ்சரிக்கும் சூரிய பகவான், தனுசு இராசியில் பிரவேசிக்கும் நேரம் தனுசு சங்கிராந்தி எனப்படும். இது, கார்த்திகை 30ஆம் திகதி 59 நாடி 08 விநாடியில், மறுநாள் சூரிய உதயத்திற்கு முன் 6 மணிக்கு நிகழும். இது, அர்த்தராத்திரியின் பின்னராகையால், அன்று சங்கிராந்தி தோஷம் இல்லை. சங்கிராந்தி, அன்று அர்த்தராத்திரிக்கு முன்னர் நிகழவிருந்து, இதனால் சங்கிராந்தி தோஷம் இருந்தால்கூட, அன்று அனுஷ்டிக்க வேண்டிய கார்த்திகை விளக்கீட்டை, முன்னர் வரும் ஐப்பசிப் பூரணையில் அனுஷ்டிப்பதற்கு விதிமுறைகள் எதுவும் இல்லை.

கார்த்திகை மாதப் பூரணை சிராத்த திதி இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் டிசெம்பர் 15ஆம் திகதியே குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைச் சங்கிராந்தி தோஷம் இல்லை என்ற காரணத்தால், முன் நிகழும் ஐப்பசிப் பூரணையில் குறிப்பிடாத ஒருவர், அன்று வரவேண்டிய சர்வாலய தீபத்தை, ஐப்பசிப் பூரணையில் குறிப்பிட்டதற்கு சங்கிராந்தி தோஷம் என்று காரணம் கூறவும் முடியாது.

### அர்த்தராத்திரிக்கு முன் சங்கிராந்தி நிகழ்ந்தால் தோஷம் என்று நிரூபிப்பு

1963 சித்திரையில் 31ஆம் திகதி இரவு 11 மணி 33 நிமிடத்தில் இடப சங்கிராந்தி நிகழ்ந்தது. இது, அர்த்தராத்திரிக்கு முன்னர் நிகழ்ந்ததால், அன்று சங்கிராந்தி தோஷம். இதனால், அன்று ஷஷ்டி சிராத்த திதிக்கு பதிலாக

44 பிலவங்கவருஷம் சித்திரைமாதம்

ஹிஜரி ௵ 1387, முஹறம்-ஸபர். இங்கிலிசு ௵ 1967, ஏப்றில்-மே, கொல்லம் ௵ 1142. சாலிவாகனசக ௵ 1890. கலி ௵ 5069.

| தேதி அ | தேதி இ | தேதி த | வாரம் | திதி நா-வி. வரை | திதி ம.மி. வரை | மேடம் | பகல் மானம் | சிராத்த திதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 14 | 1 | வெ | சது 10-31 | 10-17 | 4-33 | 30-31 | * | * சூனியதிதி. |
| 4 | 15 | 2 | ச | பஞ் 11-37 | 10-43 | 4-25 | 30-32 | ஷஷ் | |
| மே 2 | 13 | 30 | ச | சது 43-13 | 11-11 | 0-16 | 31-04 | சது | |
| மே 3 | 14 | 31 | ஞா | பஞ் 41-48 | 10-36 | 0-07 | 31-05 | பஞ் | |

ஞாயிற்றுக்கிழமைச் சங்கிராந்தி நா-46, விநா-16(மணி12-23)-ல் இடபரவி.

சூனிய திதி என்று குறிப்பிடப்பட்டது. அந்த மாதத்தின் முற்பகுதியில் சித்திரை 02ஆம் திகதியே ஷஷ்டி சிராத்த திதி என்று குறிப்பிடப்பட்டது. இது, அர்த்தராத்திரிக்கு முன்னர் சங்கிராந்தி நிகழ்தால், அன்று தோஷம் என்பதை நிரூபிக்கிறது. இதோ பாருங்கள்:-

1967 சித்திரையில் 31ஆம் திகதி இரவு 12 மணி 23 நிமிடத்தில் இடப சங்கிராந்தி நிகழ்ந்தது. இது, அர்த்தராத்திரிக்குப் பின்னர் நிகழ்ந்ததால், அன்று சங்கிராந்தி தோஷம் இல்லை. இதனால், அன்று சிராத்த திதி பஞ்சமி என்று குறிப்பிடப்பட்டது. அன்று, சூனிய திதி என்று குறிக்கப்படவில்லை. அந்த மாதத்தின் முற்பகுதியில் சித்திரை முதலாம் திகதியன்று சூனிய திதி என்று குறிப்பிடப்பட்டது. இது, அர்த்தராத்திரிக்குப் பின்னர் சங்கிராந்தி நிகழ்ந்தால், அதற்கு தோஷம் இல்லை என்பதை நிரூபிக்கிறது. ஆதாரம் இதோ!

44 சோபகிருதுவருஷம் சித்திரைமாதம்

ஹிஜரி ௵ 1382, ஜுல்கஃதா-ஜுல்ஹஜ் இங்கிலிசு ௵ 1963 ஏப்றில்-மே. கொல்லம் ௵ 1138. சாலிவாகன ௵ 1886. கலி ௵ 5065.

| தேதி அ | தேதி இ | தேதி த | வாரம் | திதி நா-வி. வரை | திதி ம.மி. வரை | மேடம் | பகல் மானம் | சிராத்த திதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | 14 | 1 | ஞா | பஞ் 22-39 | 3-09 | 4-33 | 30-31 | * | * சூனியதிதி. |
| 20 | 15 | 2 | தி | ஷ 24-11 | 3-44 | 4-24 | 30-32 | ஷஷ் | |
| 18 | 13 | 30 | தி | பஞ் 56-22 | 4-27 | 0-15 | 31-04 | பஞ் | |
| 19 | 14 | 31 | செ | ஷ 55-18 | 4-00 | 0-07 | 31-05 | * | |

செவ்வாய்க்கிழமைச் சங்கிராந்தி நாடி-44, விநாடி-11(மணி11-33-ல்) இடபரவி.

அர்த்தராத்திரிக்கு முன்னர் சங்கிராந்தி நிகழ்ந்தால் மட்டுமே தோஷம் என்ற விதிமுறையை இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தை முன்னர் கணித்தவர்களே பின்பற்றினார்கள் என்பதை மேலே உள்ள ஆதாரங்கள் தெட்டத்தெளிவாக நிரூபிக்கிறன. இவ்விதிமுறை ஏனைய பஞ்சாங்கங்களில் தற்போதும் பின்பற்றப்படுகிறது. 2005 இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் சித்திரை, ஆனி மாத இறுதியில் அர்த்தராத்திரிக்கு முன்னர் சங்கிராந்தி நிகழவுள்ளது. இதன் தோஷத்தால், இம்மாதங்களின் இறுதி நாளன்று சூனிய திதி என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். இவை பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. 2005 சித்திரையில், மே 14இல் சூனிய திதி என்றும், ஏப்ரல் 14இல் சித்திரை மாத பூர்வபக்க ஷஷ்டி சிராத்தம் என்றும், 2005 ஆனியில், ஜுலை 16இல் சூனிய திதி என்றும், ஜுன் 17இல் ஆனி மாத பூர்வபக்கத் தசமி சிராத்தம் என்றும் குறிப்பிடுவதே சரியானது.

### 17-10-2005 சந்திர கிரகணம் - பூரணை சிராத்த திதி

2005 புரட்டாதி 31, ஒக்ரோபர் 17 அன்று சந்திர கிரகணம் நிகழும் என்று இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பூரண கிரகணம் முடிந்த பின்னர், கிரகணத்துடன் சந்திரோதயம் நிகழும். மாலை 06 மணி 02 நிமிடத்திற்கு மோஷம். இதனால், அன்று சூனிய திதி என்றும், அன்று வரவேண்டிய பூரணை சிராத்தம் புரட்டாதி 01, செப்ரெம்பர் ஒன்றிலும் குறிப்பிடப்பட வேண்டும். இவை, இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

### வல்லிபுர ஆழ்வார் மஹோற்சவ தினம் சரியா?

வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவம் புரட்டாதி பூரணைத் தீர்த்தத்துடன் பூர்த்தியடையும். இது, ஒக்ரோபர் 17 என்று இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்று, மாலை சந்திர கிரகணம் தோற்றுவதால், இதற்குரிய சரியான தினம் செப்ரெம்பர் 17 ஆக இருக்க வாய்ப்புள்ளது. இவற்றில் எது சரியானது என்று வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தினரே முடிவுசெய்யவேண்டும்.

### பிழைகள் திருத்தப்படாவிடில் மேலும் ஆதாரங்கள் வரும்!

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தின் பிற்பகுதியில் பிரான்ஸ், ஜேர்மனி, நியூஸிலாந்து ஆகிய இடங்களில் உள்ள ஒவ்வோர் ஆலய விரத நாள்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றிலும் கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை உட்படப் பெரும் பிழைகள் உள்ளன. சகல பிழைகளையும் திருத்துவது நல்லது. பிழைகளை நிரூபிக்க மேலும் ஆதாரங்கள் உள்ளன. தேவைப்படின், பின்வரும் ஆதாரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

1. குமாரதந்திரம் என்ற ஆகமம் தற்போது சமஸ்கிருதத்திலும் தமிழிலும் வெளிவந்துள்ளது. அதன் 635ஆம் பக்கத்தில், மார்கழியின் முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் திருவாதிரை வந்தால், பிற்பகுதியில் வருவதிலேயே ஆர்த்திரா தரிசனம் என்று தமிழிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. சிதம்பரத்திலேயே ஆர்த்திரா தரிசனம் மிகவும் சிறப்பாக நடைபெறும். அங்கே ஆர்த்திரா தரிசனம் எப்போது என்று, அங்கிருந்து ஆதாரம் எடுத்து நிரூபித்தால், அதுவே சரியான தினம் என்று திருவெம்பாவையைப் பற்றித் தெரிந்த அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள்.

3. திருவண்ணாமலை தீபம் எப்போது என்று, அங்கிருந்து ஆதாரம் எடுத்து, இந்த வருடம் கார்த்திகை விளக்கீடு ஐப்பசியில் வருவது பிழை என்று நிரூபிக்கமுடியும்.

4. கார்த்திகை விளக்கீட்டை கார்த்திகை மாதத்தில் அனுஷ்டிக்க வேண்டும் என்று குமாரதந்திரம் ஆகமத்தின் 624-625ஆம் பக்கங்களில் தமிழிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

**கௌசிகர்**
**தமிழ்த்தாய் நாள்காட்டி கணிப்பாளர்**

# றோயல் தங்கப் புதையல் போட்டி



ஒன்று... இரண்டு...மூன்று ஓட்டப்போட்டியா? இல்லை றோயல் குளுக்கோஸ் தங்கப் புதையல் போட்டியில் பங்குபற்றுவோருக்கு தலா ஒரு பவுண் வீதம் தங்க நாணயங்களை முதலாவது, 2ஆவது, 3ஆவது பரிசுகளாக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்ட சாலிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான். றோயல் குளுக்கோஸ் (6) வெற்றுப்பெட்டிகளைச் சேகரியுங்கள். றோயல் குளுக்கோஸ் வாங்கும்போது பற்றுச்சீட்டினை நீங்கள் றோயல் குளுக்கோஸ் வாங்கும் வியாபாரியிடம் கேட்டு வாங்கத் தவறாதீர்கள். பின்பு 6 வெற்றுப் பெட்டிகளையும் பற்றுச்சீட்டினையும் இணைத்துப் பின் வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

**றோயல் தங்கப் புதையல் போட்டி,**
**சிவா நறுமணப் பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 222-2567

மேற்படி போட்டியில் 31.03.2005 முதல் 31.06.2005 வரை கொள்முதல் செய்யும் பற்றுச்சீட்டுக்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
றோயல் குளுக்கோஸ் புயல்வேகத்தில் உங்களுக்கு இழந்த சக்தியை மீட்டுத் தருகின்றது.

வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப் பூங்கா,**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:
222-2567




இறக்குமதி செய்து பொதி செய்வோர்
றோயல் இன்டஸ்ரீஸ்
கொழும்பு - 12
T.P:- 0777-277670, 011-4712439.

**றோயல் குளுக்கோஸ்**

**பிரபல பார்மசிகளிலும், கடைகளிலும் கிடைக்கும்.**

(C/42504) (54-15-34)


# ஆழிப்பேரலை பாதித்த மாணவருக்கு நிதியுதவி

கரவெட்டி,மே21

ஆழிப்பேரலையால் பெற்றோரை இழந்த வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 48 மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை இந்த உதவித் தொகையை வழங்கியுள்ளது.

மேற்படி உதவுதொகை வழங்கும் நிகழ்வு கடந்த 14ஆம் திகதி உடுத்துறை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அனர்த்தத்தால் பெற்றோரை இழந்த 4[illegible] மாணவர்களின் கல்வி நடவடிக்கையை மே[illegible]படுத்துவதற்காக தலா 10 ஆயிரம் ரூபா வீத[illegible] மேற்படி பேரவையால் வங்கியில் வைப்[illegible] லிடப்பட்டு பதிவுப் புத்தகங்கள் அன்றைய தினம் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன.

(எ-70-202)


# BEAUTY CULTURY

HAIR DRESSING - BRIDAL ELEGANLE

**MOON BEAUTY CARE இன்**

**அழகுக்கலைப் பயிற்சிகளும் சேவைகளும்**



கொழும்பில் கூடிய கட்டணத்துடன் பெறும் பயிற்சியை குறைந்த கட்டணத்துடன் Latest Techniques உடன் பின்வரும் பயிற்சிகள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றன. (28-05-2005 காலை 10.00 மணி)

1)Personal Grooming Class( பயிற்சிக் காலம் 4 Weeks)
(ஒவ்வொரு பெண்களும் தங்கள் சரும கேசங்களைத் தாங்களே அழகுபடுத்தல், பராமரித்தல்)
a) personal Skin and Facial :- Skin தன்மைக்கு ஏற்ற Facial
b) Hair care – Hena Treatment :- பொடுகு, தலைமுடி நுனியில் ஏற்படும் பிளவு இளநரை கட்டுப்படுத்தும் மூலிகைச் சிகிச்சைமுறை
c) Day & Party Make up
d) D.I.Y Hair Styles & Blow Dry
e) Body Beautiful, Diet & Figure :- உடலை மெலிதாக வைத்திருக்க உதவும் அழகுக்கலை சார்ந்த உடற்பயிற்சி
f) Fashion Sense & Poise Saree drapes
g) கண்கருவளையம், கழுத்தில் படரும் படர் கருமை நீக்கும் சிகிச்சைமுறை

2) Fashion Make – up(பயிற்சிக்காலம் 2 Weeks)
(Day Make up, Party Make up, Stick Make up, Dance Make up)
3) Diploma in Beauty Culture ( பயிற்சிக் காலம் 3 Months)
(Diploma சான்றிதழ் வழங்கப்படும் )





பயிற்சி வழங்குபவர் :- Directress of Moon Beauty Care
திருமதி B.அகிலா } Dip. in. Beauty Culture / Dip. in. Dance Visarath in Kathak)
இடம்: இல.92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(இந்துகுருகுலம் அருகில்,D.C.M Tution முன்)
★ நேரம் வசதிக்கேற்ப ஒழுங்குசெய்யப்படும்.Course சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கும், பதிவுகளுக்கும் 26, 27, 28 ஆம் திகதிகளில் காலை (10.00-2.00) மணிவரை நேரில் வரவும்.
மேலதிக விபரங்களுக்கு: 0777-570138

(45591)(52-11-45)



# ஏமாற வேண்டாம்




**ASTRA Sun**

போலிகளால் ஏமாறாதீர்கள்

**அஸ்ட்ரா சண் நூல்களை வாங்கும் போது இப்புதிய அம்சங்களை அவதானியுங்கள்**



கோட்ஸ் இலச்சினையுடன் ஹெலோகிறாம் ஸ்டிக்கர்

**வடக்கில் எமது ஏக விநியோகஸ்தர்**

ஸ்வரமாளிகை
இல. 65, கண்டி வீதி, கிளிநொச்சி,
தொலைபேசி, தொலைநகல்: 021 2285882

நியு சொப்பிங் சென்ரர்
இல. 131/g, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.

தரமான தையல் நூல்களுக்கு ASTRA Sun

கோட்ஸ் திரட் லங்கா,
163, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி : 2307358

SKYLINE CONCEPTS



# பழுது பார்த்தல்

1975 ஆம் ஆண்டில் இருந்து சுமார் 30 வருடங்களாக அநுபவமிக்க. விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும்.பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன். அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு. ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை. ஒரு வருட உத்தரவாதம்!

கெமரா பழுது பார்த்தல்



மின்சார உபகரணங்கள் பழுது பார்த்தல்



டிஜிட்டல். ஸ்டில் & வீடியோ கெமரா. லென்சஸ். ஸூம் கெமரா பிளேக்ஸ் சேர்கியுற். றீபிளேஸ்மன்ட்ஸ். ஸ்டுடியோ பிளாஷஸ். கொம்பியுடரைஸ்ட், ஃபிளாஷ் கன்ஸ்ஹை-பை எம்பிலிபையர்ஸ். சற்டலைட்ஸ்.

LD, CD, VCD, DVD கெசட்ஸ். CD இயந்திரங்களை VCD யாக மாற்றுதல் செலுலர் தொலைபேசிகள். பெக்ஸ்மெசின்கள். கோட்லெஸ். அனலொக் தொலைபேசிகள். இலக்றோனிக் டைப்ரைட்டர்கள்.மைக்றோவேவ்ஸ் ஒவன். பொலிஷர். பிளென்டர். மின்சார விசிறிகள்.குளிரூட்டி.சலவை இயந்திரங்கள். குளிர்சாதனப் பெட்டிகள். மோட்டார்கள்.

GRAYON

**DURST ELECTRONICS (PVT) LTD.**

364, காலி வீதி. கொள்ளுப்பிட்டி. கொழும்பு-3. போன்: 2575480, 2565756
P.G மாட்டினுக்கும் H.N.B வங்கிக்கு எதிரிலும். ரேனுகா ஹோட்டலுக்கு அருகிலும் (கடல் பக்கம்)



# வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கான அதிநவீன கிறபிக்ஸ் (Graphics) வெளியீடுகள்

3 வது முறையாக எமது புதிய வெளியீடுகள்

முற்றிலும் வித்தியாசமான Effects

Indian effects
Foreign effects
பத்திற்கும் மேற்பட்ட Effects & softwares

Background DVD'S
Sinthamani
Bombay
Win Media

அதிக எண்ணிக்கை Photoshop Plugins

இந்திய அரசினால் வெளியிடப்பட்ட software தொகுதி

நியாயமான விலையில் Capture Card களும் அதனை சிறந்தமுறையில் பராமரிப்புச் சேவைகளும் செய்து கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு
44/3A மணல்தறை
ஒழுங்கை, கந்தர்மடம்.
0777917610


Effects, DVD, software சம்பந்தமான முழு விளக்கமும், விளக்கம் அடங்கிய குறிப்புக்களும் தரப்படும்

ஓம் சக்தி

மானிப்பாய் – சுதுமலை

# ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான

# தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் 22.05.2005



## தேரேறி வரும் தேவியைத் தரிசித்து வேரோடு வினைதீர வேண்டி நிற்போம்



சக்தி வழிபாட்டு மரபில் அன்னை பல வடிவங்களும், ரூபங்களும், கொண்டு அவ்வப்போது சிறப்புடன் வழிபட்டுவருகின்றாள். வழிபாட்டின் சிறப்புக்களை ஆலயத்தின் கண்ணே நடத்தப்படுகின்ற உற்சவங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. மஹோற்சவம் எனச் சிறப்பிக்கப்பட்டுவரும் பிரம்மோற்சவத்தில் சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களும் உள்ளடக்கப்படுகின்றன. ஸம்ஹாரம் எனும் அழித்தலைக் குறித்து நடத்தப்படும் உயர் திருவிழா ரதோற்சவமாகும்.

இன்று எமது அம்பிகையான ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கு தேர்த்திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. ஊர்கூடி தேர் இழுக்கும் கண்கொள்ளாத அற்புதக் காட்சியை இன்று சுதுகிரியில் அம்பிகை ஆலயத்தில் வெகுசிறப்பாகக் காணலாம். ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் சிருங்காரப் பெண்ணாக, அழகுப் பெண்ணாக, புதுமைப்பெண்ணாக, அம்பிகை அடியார்களின் மனதில் நிறைந்து இன்று தேரேறி வருகின்றாள். கேட்டதற்கும் அதிகமாக கொடுக்கும் தன்மை பொருந்திய ஸர்வ மங்கள ரூபிணியான அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் இன்று தேரில் ஆரோஹணித்து வருகின்றாள். உலகின் அனைத்து ஜீவராசிகளுக்கும் குறிப்பாக மக்கள் மனங்களில் நிறைந்து விளங்கும் அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் சகல ஸர்வ மங்களங்களையும் தருவதோடு வேரோடு வினைதீர வழிபாடு செய்து இத்தேர்த்திருவிழா நன்னாளில் அம்பிகையின் அருள் அனைவருக்கும் பூரணமாகக் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம். அம்பிகையின் ரதோற்சவ தர்சனத்தால் இந்நாட்டில் மிக விரைவில் நிரந்தர சமாதானமும் சாந்தியும் கிடைக்க வேண்டுவதோடு அனைத்து மக்களுக்கும் எல்லா நன்மைகளும் அமையப்பெறவேண்டுமென அம்பிகையை வேண்டி இத்திருவிழா நன்னாளில் ஆசிகள் வழங்குகின்றோம்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி, கிரியாகலாப முக்தாமணி.
**சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்**
பிரதம குரு, ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், சுதுமலை ஆதீன குரு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம், நயினை.

## அற்புதமான அருட்காட்சி தரும் அம்பிகையின் மலரடி தொழுவோம்



புராதனமான பழைமையும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன அமையப் பெற்றதும் தங்கு சங்களை என வரலாற்று நோக்கில் சிறப்பிக்கப்பட்டு வருவதுமான எமது குலதெய்வநாயகி அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகைக்கு இன்று மிகவும் சிறப்பாக தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. அம்பிகை நன்கு அழகாக அலங்கரிக்கப்பட்டு உலகநாயகியாக சித்திரத் தேரில் பவனிவரும் அற்புதமான அருட்காட்சி எம்மையெல்லாம் மெய்மறக்கச் செய்கின்றது. இந்த அற்புதமான சிறப்புள்ள ரதோற்சவத்தைக் குறித்து வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டில்லாத மகிழ்ச்சியடைகின்றேன்.

அம்பிகையின் அருளால் பல திருப்பணி வேலைகள் ஆலயத்திலே முன்னெடுத்துச் செய்யப்படுகின்றன. இம்முறை அம்பிகையின் ஆலய மேற்கு வீதியில் பல லட்ச ரூபா செலவில் மிகக் குறுகிய காலத்தில் அன்னதான கல்யாண மண்டபம் நிறுவப்பட்டுள்ளது. பதினெட்டு நாள்களும் அன்னதானம் நடைபெற்று வருகின்றது. ஆனால், இம்மண்டபத்தை நிறைவு செய்வதற்கு மேலும் இன்னும் பல லட்ச ரூபாய் தேவையுள்ளது. அம்பிகையின் திருவருளால் ஆலயத் திருப்பணிகள் நன்கு திட்டமிட்டு செய்யப்பட்டு வருகின்றன. இவற்றை விரைவாகப் பூர்த்திசெய்யும் தேவை அனைத்து அடியார்களுக்கும் உண்டு.

கண்ணகியாக, தங்கு சங்களையாக, மனோன்மணியாக ஸ்ரீ புவனேஸ்வரியாகப் போற்றப்பட்டு வந்த எல்லாம் வல்ல அம்பிகைக்கு ஊரே திரண்டு உரிமையுடன் பயபக்தியாகப் பொங்கி மடை பரவி, தேர் வடம் பிடித்து இழுத்துத் தேர்த்திருவிழா கொண்டாடும் அழகே தனிச்சிறப்பானதாகும். அம்பிகையை வேண்டித் துதிப்போர்க்கு அனைத்து வளமும் பெருக வேண்டுமென அம்பிகையை இறைஞ்சிப் பிரார்த்தித்து வாழ்த்துச் செய்தியை நிறைவுசெய்கின்றேன்.

**கு.கணேசதாசன்** (J.P.)
*சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பரம்பரை அறங்காவலர், தர்மகர்த்தா சபைத் தலைவர், சமாதான நீதிவான், பதிவாளர், வலிகாமம் மேற்கு, மானிப்பாய்.*

## வரமருள வேண்டி வடம் பிடித்தோம் நாமே

அம்பிகையே ஈஸ்வரியே ஆதிபராசக்தியே தாயே!
அழகிய ரதமேறும் புவனேஸ்வரியே அம்மா!
நம்பி வந்தோ முன்னையே நாமும் நல்லருள்புரிவாய் நீயே!
உன்னைப் போலொரு தெய்வம் உலகிலுண்டோ அம்மா!
தும்பிமுகனும் தம்பியும் தேர்மீது வலம்வரவே
தூய அன்னையே! நீ தேரேறி வருவாயே!
வெம்பியழுதே நாங்கள் வேதனையால் துடிக்கின்றோம்
வரமருள வேண்டி வடம்பிடித்தோம் நாமே!

– சைவப்புலவர்
இராசையா ஸ்ரீதரன்

வி. எஸ். எம். ஸ்ரோர்ஸ்
V.S.M. Stors
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.
தொ. பே.: 021222 7771
(C-42960)

வே. சி. கணபதிப்பிள்ளை
V.S. Kanapathipillai
ஆலடிச் சந்தி, மானிப்பாய்
(C-42961)

நந்தா ரெக்ஸ்
யாழ். வீதி, மானிப்பாய்
(C-42962)

சுந்தர்சன்
Suntharsan
மின்சார, கட்டப்பொருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் குறைந்த விலையில் பெற்றிட
சுந்தர்சன்
யாழ். வீதி, மானிப்பாய்.
Sundharson@yahoo.co.uk.
T.P: 021-2222751, 021- 4591569
(C-42958)

அம்பாள் களஞ்சியம்
அரைக்கும் ஆலை
அம்மன் கோயிலடி, சுதுமலை, மானிப்பாய்.
(C-42959)

## இரவு மேற்பார்வையாளர்கள்

பத்திரிகை நிறுவனத்தில் இரவில் இயங்கும் பிரிவுகளின் பணிகளை மேற்பார்வை செய்வதற்கும், ஒன்றிணைத்து விரைவுபடுத்துவதற்கும் முன் அனுபவமும் கல்வித் தகுதியும் உடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள், நிறைந்த உடல் ஆரோக்கியம் உள்ளவர்களாகவும், பணியாளர்களை நிர்வகிக்கும் திறமை உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

அச்சு இயந்திரங்கள் தொடர்பான ஓரளவு அறிவும் அனுபவமும் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.

யாழ்.மாநகரசபைப் பகுதிக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

முழுமையான சுயவிவரங்களுடனும் உறவினர் அல்லாத இருவரிடம் இருந்து பெறப்பட்ட நற்சான்றிதழ்களுடனும் 31.05.2005 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

**உதயன் மனிதவள சேவை**

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-42932) (25-14-45-42)

## VACANCY

DEZA
DDC
DSC
SDC
COSUDE

### ASSISTANT TO THE DIRECTOR

SDC-Swiss Agency for Development and Cooperation is a government organization of the Swiss Ministry of Foreign Affairs. We are looking for a person with a wide social and professional network to work as an assistant to the Head of SDC Field Office, Jaffna.

- University Degree (Social science, Economics, Civil Eng, Architecture, etc)
- Computer literacy
- High level proficiency in written and spoken English & Tamil
- Ability to communicate and liaise at all levels with a high degree
- Excellency in report writing, planning, problem solving & analyzing
- Ability to work in a team
- Willingness to travel frequently

Age- Above 35 Years
Duty station- Jaffna District
Duration- Initial appointment will be for one year with a possibility of extension.
Remuneration-Negotiable

**Women are encouraged to apply**

Please send the letter of application with a complete CV to **SDC Field Office, 521/11, Point Pedro Road, Nallur, Jaffna** on or before the 31st of May 2005.

(45617) (24-

## இங்கிலாந்தில் உயர்கல்வியைத் தொடர ஓர் அரிய சந்தர்ப்பம்.

### Foundation Degree Programme

GCE O/L தகைமையுடன் இங்கிலாந்தில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் அதற்கான பல்கலைக்கழக அனுமதியினையும், Student Visa வினையும் இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு Foundation Degree Programme துணை புரிகின்றது.

GCE O/L ➡ Foundation Degree Programme ➡ UK Degree



**COURSE LENGTH** 3 Months (Full Time)

**COURSE STRUCTURE**

- Computing
  Introduction to IT, Windows XP - OS, MS-Office XP, Internet & E-mail Applications, Website development, Programming Languages, Graphic Designing, Hardware & Networking
- English Reading, Writing, Listening and Speaking.
- Personality Development

விபரங்களுக்கு:

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION

25A, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@slrnet.lk

## வாடிக்கையாளர்களே...

உங்கள் இல்லங்களில் நிகழ்கின்ற பிறந்தநாள், திருமணம், ருதுசாந்தி போன்ற **மங்களகரமான நிகழ்ச்சிகளை –** உங்கள் எண்ணம்போல் வண்ணமாக வடிவமைத்து DIGITAL VIDEO PHOTO மூலம் அழகாகப் படம்பிடித்துக்கொள்ள இன்றே நாடுங்கள்:



**மூர்த்தி ஸ்ரூடியோ அன் டிஜிரல் கலர் லாப்**



62/16, ஸ்ரான்லி வீதி, (பழைய தபாலகத்துக்கு அருகாமையில்), யாழ்ப்பாணம். 0714-168475

யாழ். வீதி, மானிப்பாய். 021-222 2884

## சிறு வியாபாரிகளுக்குக் கடனுதவி

குருநகர்,மே22

குருநகரில் உள்ள சிறுவியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் குருநகர் வர்த்தகர் சங்கம் தனது சங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ள சிறு வியாபாரிகளுக்கு 10 ஆயிரம் ரூபாவைக் கடனாக வழங்கவுள்ளது. இக்கடன் தொகை வட்டியுடன் 10 மாதங்களில் உரியவர்களிடம் இருந்து அறவிடப்படும் எனவும் சங்க நிர்வாகம் தெரிவித்தது. (8-51)

## வைப்பகக் கிளை பெயர்மாற்றம்

இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பில் இயங்கிவரும் தமிழீழ வைப்பக முல்லைத் தீவுக்கிளை நாளை திங்கட்கிழமை தொடக்கம் 'தமிழீழ வைப்பகம் புதுக்குடியிருப்புக் கிளை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ வைப்பக மேலாண்மைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8-202)

## விபத்தில் இளைஞர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,மே22

உடுவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஓட்டோ - சைக்கிள் விபத்தில் சைக்கிளைச் செலுத்திவந்த இளைஞர் படுகாயமடைந்தார்.

கடந்த 20ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உடுவில், ஆலடியைச் சேர்ந்த மகாலிங்கம் அனுராஜ் (வயது-21) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் உடனடியாகச் சம்பவத்துடன் தொடர்புடைய ஓட்டோவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். (8-12)

## தெல்லிப்பழையில் பண்ணையாளர் தெரிவுக்கு விண்ணப்பங்கள் கோரல்

வலி.தெற்கு,மே22

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் பிரிவில் இவ்வாண்டுக்கான சிறந்த கால்நடைப் பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்றும்-

அதற்கான விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் பொ.மகாதேவன் அறிவித்துள்ளார்.

ஆடு, மாடு, கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள சிறந்த பண்ணையாளர் தெரிவுகள் தனித் தனியாக இடம்பெறவுள்ளன. இவற்றில் முதல் மூன்று இடங்களைப்பெறும் சிறந்த பண்ணையாளருக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்பும் பண்ணையாளர்கள் வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை கால்நடை வைத்தியருக்குத் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

## வடமராட்சி வலயத்தில் தமிழ்த் தினப்போட்டி

வடமராட்சி,மே22

வடமராட்சி கல்வி வலயத் தமிழ்த்தினப் போட்டி நேற்று சனிக்கிழமை ஆரம்பமானது. இந்தப்போட்டி நாளை திங்கட்கிழமை வரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா தலைமையில் நடைபெற உள்ளது.

கோட்டமட்டப் போட்டிகளில் இருந்து வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்வார்கள். (ஒ-173)

## தேவை

### CANCER AID FOR NORTH/EAST (CANE - UK)

மருதனார்மடத்தில் இயங்கவிருக்கும் புற்றுநோயாளர் காப்பகத்திற்கு சேவைமனப்பான்மை நிறைந்த தாதியர் தேவைப்படுகிறார்கள். பயிற்சி முடிந்த மற்றும் ஓய்வுபெற்ற தாதியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். சுயவிவரக் கோவையுடனும் தாதியர் பயிற்சி பற்றிய போட்டோப் பிரதிகளுடனும் 15-06-2005 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

இணைப்பாளர்,
**வடக்கு/கிழக்கு புற்றுநோயாளர் உதவி மையம்,**
69, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(45689) (26-14-45-24)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி இராசேஸ்வரி வல்லிபுரம்

(மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர்
கிராம அபிவிருத்தித் திணைக்களம்)

22-04-2005 அன்று இறைபதமடைந்த எமது சக உத்தியோகத்தர் செல்வி இராசேஸ்வரி வல்லிபுரம் அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்,**
**நலன்புரிச் சங்கம்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(45702)(26-14-45-24)

## கண்ணீர் அஞ்சலி



எமது சபையின் முன்னாள் பொருளாளரும் சபையின் மூத்த உறுப்பினருமான

### செல்லர் இராஜலிங்கம்

அவர்கள் 17-05-2005 அன்று காலமானதையிட்டு வருந்துகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். அன்னாரின் ஆத்மா அம்பாளின் திருப்பாதங்களில் சாந்திபெற அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

**ஆலய பரிபாலன சபையினர்,**
**கொக்குவில் நந்தாவில் கற்புலத்து**
**மனோன்மணி அம்பாள் ஆலயம்.**

(45691)(26-14-45-24)

## Vacancies

### MEDIA RESOURCES AND TRAINING CENTRE

University of Jaffna, Sri Lanka.

Media Resources and Training Centre is training the journalists in various aspects of journalism. It strives to uplift the capacity of the working journalists in Jaffna. It is planning to have a full time Diploma Course and we need energetic and devoted persons as Training Coordinator and Trainer. Therefore, the Media Resources and Training Centre will entertain applications from suitably qualified persons up to 15.06.2005 for the following posts (on contract).

**1. Training Co-ordinator**

Salary: Negotiable

Qualification :

- ❑ Experience in Training with an experience in a Media for a considerable time.
- ❑ Desirable to those who have a good knowledge of Tamil and English Language and communicative skills and knowledge of Information and Communication Technology.
- ❑ With drive and passion for journalism. Ready to work outside ordinary working hours.

Submit a written note not exceeding 5 pages outlining your ideas and visions for media and training in Jaffna.

**2. Trainers**

Salary : Negotiable

Qualification :

- ❑ Preference will be given to those who have experience in editing a Tamil news paper or work experience in a Media for a considerable period of time.
- ❑ Desirable to those who have a good knowledge of Tamil and English Language and communicative skills and knowledge of Information and Communication Technology.

Application forms and other details may be obtained from the office of the Media Resources and Training Centre at 84, Jumma Mosque Lane, Jaffna **OR** You could download application form from the Home Page of University of Jaffna. Web Address: www.jfn.ac.lk A copy of the application should be submitted through E-mail also. E-mail address: sanmuga2003 c @yahoo.com. Those who are selected by the Search Committee will be notified on 15.07.2005. The selected candidates will commence their work on 1st September 2005. Applications received after the closing date will be rejected without intimation.

Prof.A.Sanmugadas
DIRECTOR
MRTC, UNIVERSITY OF JAFFNA

**Director**
**Media Resources and Training Centre**
University of Jaffna,
Sri Lanka.
16.05.2005.

(C/42907)(42-14-45)

# வீதிக் குறியீடுகள் வேகக் கட்டுப்பாடு விபத்துக்களைத் தடுக்க அவசியம்

கடந்த காலங்களில் எம்மை ஆக்கிரமித்த போரினால் எம்மைச் சூழ்ந்திருந்த அழிவுகள் தற்காலிகமாக விடை பெற்றிருந்தபோதிலும். இன்று வீதி விபத்து என்ற பெயரில் நாளுக்கு நாள் உயிர்ப்பாதிப்புக்கள் நடந்துகொண்டேயிருக்கின்றன.

யாழ்.வைத்தியசாலையில் வீதி விபத்துக்களில் சிக்கிப் படுகாயமடைவோர் நாளொன்றுக்குக் குறைந்தது ஏழு பேராவது அனுமதிக்கப்படுவதாகப் பதிவேடுகளில் இருந்து அறியப்படுகிறது.


மாதமொன்றில் குறைந்தது இரண்டுபேர் வரையாவது விபத்துக்களால் உயிர் இழக்கிறார்கள்.

வீட்டிலிருந்து புறப்படும் ஒருவர் வீடுபோய்ச் சேர்வாரா? என்ற பயம் முன்பு போர்க்காலத்தில் இருந்தது. இன்றும் கூட அந்த நிலையே உருவாகியுள்ளது. அதற்குக் காரணம் வீதியில் இறங்கினால் பத்திரமாய் திரும்புவதற்கான சாத்தியங்கள் அருகி வருகின்றன.

இந்த விபத்துக்களுக்கெல்லாம் காரணம் என்ன என்று பலதரப்பினரிடமும் கேட்டால் சமாதான காலத்தில் வாகனங்களின் பாவனை அதிகரித்துவிட்டது. முறையான வீதிப் போக்குவரத்துக்கள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. வீதிகள் அகலமாக்கப்படாமை என்று அடுக்கடுக்காகக் காரணங்களைச் சொல்லிக்கொள்கிறார்கள். இது உண்மையில் பழைய பல்லவிதான்.

காரணங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதால் எதுவும் நடக்கப் போவதில்லை. விபத்துக்களைத் தடுக்க அனைவரும் காரியங்களில் இறங்க வேண்டும். விபத்துக்களைத் தடுக்கவென குடாநாட்டில் பல்வேறு தரப்பினர் பலதடவைகளில் ஆலோசனை மாநாடுகளை நடத்திவருகின்றனர்.

கடந்த 4ஆம் திகதி யாழ்.செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெற்றது.





இதில் அரச அதிபர் கே.கணேஷ் பல்வேறுபட்ட துறைசார் உயர் அதிகாரிகளையும் அழைத்திருந்தார். அந்தந்தத் துறைசார் அதிகாரிகளிடமிருந்து பல்வேறு கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் விபத்துக்களைத் தடுப்பதில் காணப்படும் குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

அப்போது யாழ். பொலீஸார் மிக முக்கியமான குற்றச்சாட்டு ஒன்றினை மிகத் தெளிவாக முன்வைத்திருந்தனர்.

அதாவது. இன்று குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்குப் பாடசாலை மாணவர்கள் ஒழுங்கான முறையில் வீதிப் போக்குவரத்து நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமையே காரணம் என்று பொலீஸார் எடுத்துக் கூறினர்.

இது தொடர்பாக பாடசாலை அதிபர்களிடம் தாம் அறிவித்திருக்கின்றோம் அவர்கள் பாடசாலை நேரங்களில் வீதியில் மாணவர்கள் எப்படிப் போகவேண்டும் என்கின்ற விதிமுறைகளைச் சொல்லிக்கொடுக்கத் தவறி விடுகிறார்கள்.

உண்மையில் மாணவர்கள் இந்த விடயத்தில் பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொள்வது ஏற்றுக்கொள்ளத்தக்கது. பாடசாலை முடிவடைந்து மாணவர்கள் சைக்கிள்களில் வீடு செல்கின்றபோது வீதி முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது போன்றுதான் சமாந்தரமாகச் செல்வார்கள்.

குறிப்பாக நகரப் பாடசாலைகளில் இந்த நிலை அதிகம் காணப்படுகிறது. இது மிகவும் கவலைக்குரியது.

படித்த சமூகம் இவ்வாறு பொறுப்பற்ற முறையில் எதையும் உணராது நடந்துகொண்டால் மற்றவர்கள் எந்தவகையில் உணர்வது?

இத்தகைய நிலையினை மாற்ற பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அதீத அக்கறை கொள்ளவேண்டும். தினமும் காலைப் பிரார்த்தனை முடிந்ததும் சில நிமிடங்களாவது மாணவர்களுக்கு வீதியில் செல்லும்போது எவ்வாறு செல்லவேண்டும் என்கின்ற விடயத்தை விளக்கிச்சொல்ல வேண்டும்.

ஒரு பாடசாலையில் மாணவர்கள் காலைப் பிரார்த்தனைக்கு கூடுமிடத்திற்கு தமது வகுப்பிலிருந்து எவ்வாறு வரிசையாக வரவேண்டும் என்று அதிபர், ஆசிரியர்கள் நினைத்துக் கொள்கிறார்களோ அதுபோல. பாடசாலை முடிந்து வீடுபோகும் போதும் அவர்கள் வீதியில் ஒழுங்காகச் செல்லவேண்டும் என்ற நினைப்பு அவர்களிடத்தில் உருவாக வேண்டும். உருவாகுமா?

-இவ்வாறு பொலீஸ் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

அடுத்து இந்த மினிபஸ் ஓட்டுநர்களின் அசமந்தப்போக்கும் அதிகலாபம் தேடிக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையும் விபத்துக்களுக்கு முக்கிய காரணமாகின்றன.

இக்கூட்டத்தில் தனியார் பஸ்சேவை சங்க நிர்வாகத்தினரும் தமது கருத்துக்களை முன்வைக்கத்தவறவில்லை.

பொலீஸார், வீதிகளில் நின்று வாகனத்தின் ஆவணங்களையும், சாரதி அனுமதிப் பத்திரங்களையும் சரிபார்த்து தண்டம் விதிப்பதனால் மட்டும் விபத்துக்களைத் தடுக்க முடியாது. வீதியில் செல்லும் வாகனங்களின் வேகக் கட்டுப்பாட்டையும் அவதானித்துக்கொள்ள வேண்டும்.

வேகக் கட்டுப்பாட்டை அளக்கும் கருவி யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒன்றுதான் உள்ளது. அது கூட பழுதடைந்துவிட்டது. இது பொலீஸாரின் பதிலாக அமைந்தது.

இதிலிருந்து யாழ்.மாவட்டத்தில் வீதிப் போக்குவரத்துப் பொலீஸாரின் சேவை எந்தளவிற்கு உள்ளதென்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

மினிபஸ்கள் விபத்துக்களில் சிக்கும்போது பத்திரிகைகள் கண்மூடித்தனமாக எழுதிக் கொள்வதாக தனியார் பஸ்சேவை சங்கத்தின் செயலாளர் பத்திரிகையாளர்கள் மீது பாய்ந்தார்.

அவருடைய அந்த பாய்ச்சலில் நியாயம் உள்ளது. அடிக்கடி மினிபஸ்கள் விபத்துக்குள்ளாகி உயிர்களைப் பலியெடுக்கின்றன என்ற உண்மை அது.

இப்படியான செய்திகள் அடிக்கடி பத்திரிகைகளில் வெளிவந்தால் மக்கள் மத்தியில் தமது சேவைக்கும் சங்கத்திற்கும் களங்கம் வந்துவிடுமோ என்ற ஆதங்கம் அவர்களிடத்தில் உள்ளது.

இதேபோன்று ஆதங்கம் அவர்களுடைய சங்கத்தின் கீழ் சேவையில் ஈடுபடும் மினிபஸ் சாரதிகளுக்கும் இருக்குமானால் வரவேற்கத்தக்கது.

ஆனால், அந்த ஆதங்கமும் அக்கறையும் அவர்களிடத்தில் இல்லையே.

வீதிகளில் மினிபஸ்கள் நான் முந்தி நீ முந்தி என்று போட்டா போட்டி போட்டு ஓடுவது. அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்வது என்பனவற்றால் வீதி விபத்துக்கள் அதிகரித்துச் செல்கின்றன.

வீதி விபத்துக்களைத் தடுப்பதில் மினிபஸ் சாரதிகள் மிக அவதானத்துடன் - சமூகப்பொறுப்

**ஒரு பார்வை**

புடன் ஒவ்வொரு உயிரும் பெறுமதியானது என்பதை மனதிற்கொண்டு செயற்பட்டால் ஆரோக்கியமானதாக அமையும்.

### வீதிக் குறியீடுகள்

வீதிகளில் முறையான குறியீடுகள் தெளிவற்று இருப்பதுவும் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளமைக்கான ஒரு காரணமென்ற குற்றச்சாட்டும் அங்கு முன்வைக்கப்பட்டது.

அதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் அரச அதிபர் கே.கணேஷ் கேட்டபொழுது வீதிகளில் குறியீடுகளை அமைப்பதற்கு தரமான 'பெயின்ற்' (வர்ணப்பூச்சு) இங்கு தரப்படுவதில்லை. சாதாரணமான பெயின்ரினையே இங்கு பயன்படுத்துகிறோம். ஆதலால், வீதிகளில் குறியீடு கள் அமைக்கப்பட்டு சில நாள்களில் அழிந்து போகிறது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் பதிலளித்தார்.

உண்மையிலே இன்று யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் வீதிக்குறியீடுகள் மிக மிக அவசியமானவை. ஏனெனில், இன்றைக்கு சமாதான காலத்தில் யாழ்.நகருக்கு வெளி மாவட்டங்களிலிருந்தெல்லாம் பயணிகள் வருகிறார்கள். அவர்கள் இந்தக் குறியீடுகள் மூலம்தான் எமது வீதிகளில்போக்குவரத்து முறைகளை அவதானிக்க முடியும்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் அதீத அக்கறை எடுத்து நீண்ட காலமாக நின்று நிலைக்கக் கூடிய பூச்சுக்களின் மூலம் வீதிக் குறியீடுகளை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டிய கடப்பாடு உள்ளது. காலம் தாழ்த்தாமல் இதனைச் செய்யவேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

### மோட்டார் சைக்கிள்கள் அதிகரிப்பு.

இது ஒரு புறமிருக்க வீதிகளில் மோட்டார் சைக்கிள்களின் பாவனை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

குறிப்பாக இளைஞர்களுடைய கைகளில் அது அதிகம் உள்ளது. அத்துடன் கைத்தொலைபேசியும் கூட. கண்மூடித்தனமாக மோட்டார் சைக்கிளை ஓட்டுதல். கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டே ஓட்டுதல் இவ்வாறான பொறுப்பற்ற தன்மைகளாலும் வீதி விபத்துக்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

இந்த நிலைகள் மாறவேண்டும். வீதியில் பயணிக்கும் ஒவ்வொரு உயிர்களும் பெறுமதியானவை என்ற நிலைப்பாட்டுடன் நாம் வாகனங்களை ஓட்டுதல்வேண்டும்.

வீதி அகலமின்மையால்தான் இவ்வாறான விபத்துக்கள் அதிகரிக்கின்றன. அசண்டையீனமாக நாம் இருந்துவிட முடியாது. வீதி விஸ்தரிப்புத் திட்டமென்பது நீண்டகாலத் திட்டமாக உள்ளது. அந்தத் திட்டம் நிறைவேற நீண்ட காலம் பிடிக்கும். அதுவரை காத்திராமல் இப்போதே நாம் நிதானமாக, பொறுப்புடன் வீதியில் பயணித்தால் வீண் உயிரிழப்புக்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

உயர் அதிகாரிகள் வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பாக ஆலோசனைக் கூட்டங்களை நடத்துவதோடு மட்டும் நின்றுவிடாமல் அதில் எடுக்கப்படும் தீர்மானங்களை உடன் நிறைவேற்றக் கூடிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். ★

-கவிதரன்


அபூர்வமான மூலிகைகளின் ஒன்றிணைப்பு
பரிபூர்ணமான நோய் நிவாரணத்திற்கான வழி.

பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது

Baraka
பரகா

தற்பொழுது உங்கள் யாழ் நகரிலும்!

ஆயுர்வேத திணைகளத்தின் அனுமதி இலக்கம் 3/1/5/4/94/30

DIABsol
(Black Seed Oil)
இயற்கையாக நீரழிவு நோயிலிருந்து நிவாரணம் பெற வேண்டுமா?
Baraka கருஞ்சீரகத்தினால் தயாரிக்கப்பட்ட வில்லைகள் மருத்துவ ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட 100% இயற்கையான கருஞ்சீரக எண்ணெய்யினால் தயாரிககப்பட்டு நீரிழிவு நோயிலிருந்து நிவாரணத்தை தருவதோடு உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது.
ஏனைய ஆங்கில மருந்துகளுடன் உபயோகிக்கலாம்.

GarliCHOL
(Garlic)
இயற்கையாக கொலஸ்ட்ரோலின் அளவை கட்டுப்படுத்த வேண்டுமா?
Baraka வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக எண்ணெய் வில்லைகள் 100% இயற்கையாக வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்டு உடலிலுள்ள மேலதிக கொலஸ்ரோல் அளவை கட்டுப்படுத்துகின்றது.

CODseas
(Cod Liver Oil)
உடலை ஆரோக்கிய நிலையில் பேண வேண்டுமா?
கருஞ்சீரகத்துடன் கூடிய மீன் எண்ணெய் (Cod Liver Oil) வில்லைகள் உடலுக்கு தேவையான ஒமேகா-3 மூலகத்துடன், விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் மேலதிக கல்சியத்தை வழங்கி, உடலை ஆரோக்கியமாக பேண உதவும் மேலும் தடிமன், இருமல் என்பவற்றை தவிர்த்து கண்பார்வை என்பு, பல் என்பவற்றின் தொழிற்பாட்டை அதிகரிக்கும்.

BeeVIT
(Bee Honey)
இயற்கை மூலிகைகளின் மூலம் உடலுக்கு தேவையான புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை பெற வேண்டுமா?
பிரபலமான இரு மூலிகைகளான கருஞ்சீரகம் மற்றும் தேன் என்பவற்றின் கூட்டமைப்பில் தயாரான Baraka கருஞ்சீரக தேன் வில்லைகள் நாளாந்தம் உடலுக்கு தேவையான ஆரோக்கிய சக்தியை வழங்குகின்றது. மேலும் உடலுக்கு தேவையான மேலதிக புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை வழங்கி உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பாதுகாக்கின்றது.

100% இயற்கை மூலிகையினால் தயாரிக்கப்பட்டதினால் ஏனைய மருந்துகளுடன் பாவிக்க முடியும்.
HFAC SRI LANKA
அனைத்து பரகா உற்பத்திகளையும் ஏகவிநியோகஸ்தர்களான WESCO PHARMACY JAFFNA இடம் பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 021 2223188

EXPO LANKA
EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
11A, Mile Post Avenue, Colombo - 03 Tel :- 0112 676398/9
email. expopharma@expo.sit.lk, www.barakaoil.com
Baraka Your health partner in life

## துயர் பகிர்கின்றோம்



எமது சனசமூக நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினரும் முன்னாள் தலைவருமாகிய

**செல்லர் இராசலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத் துயரில் நாமும் பகிர்ந்துகொள்வதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாகத்தினர், மனோன்மணி சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும், கொக்குவில்.**

(45690)(26-14)

## தூரிகையில்........

வைபவ சேவைகள்!

- **Facial** (தோலின் தன்மைக்கேற்ப/பேசியல்கள்)
- **Eye brow Shapping**
- **Bridal Make - Up**

திருமண, பதிவுத் திருமண நீராட்டுவிழா ஒப்பனைகள் என்பவற்றுடன்,

- **Cake decoration** (திருமண, பிறந்தநாள் ஐசிங் கேக்குகள்)

ஓடர்கள் ஏற்கப்படுகின்றன.

T.P.: 0779143171.

**தூரிகை**

ம.ம.வி.வீதி, நெல்லியடி. செங்குந்தா வீதி, கல்வியங்காடு.

(சி-42970)(26-14)

## அறிவித்தல்

### தமிழீழ வைப்பகம்

1996.05.14 ஆம் நாள் முதல் இரணைப்பாலை வீதி,புதுக்குடியிருப்பில் இயங்கிவரும் **தமிழீழ வைப்பக முல்லைத்தீவுக்கிளை** 2005.05.23 ஆம் நாள் தொடக்கம் **தமிழீழ வைப்பகம் புதுக்குடியிருப்புக் கிளை** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வழமையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**மேலாண்மைப் பணிப்பாளர், தமிழீழ வைப்பகம்.**

(சி.42963) (39-14-26)

## முகவர் உடனடியாகத் தேவை




இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் உயர் புரதச்சத்து / ஊட்டச்சத்து மிக்க பக்க விளைவுகள் அற்ற மா உணவிற்கு வன்னி மற்றும் யாழ் மாவட்டங்களுக்கு ஏக விநியோகஸ்தர்கள் உடனடியாகத் தேவை.

மேலதிக விபரங்களுக்கு : 0777-700716

(சி-42969)

***Stamin** range of nutritional supplements for all, Specially Body Builders & Athletes*







(C/42928)(52-15-17)

## ஆங்கில வகுப்பும் பியானோ வகுப்பும்

மூன்று மாதங்களில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்கக் கற்றுக்கொடுக்கப்படும். வகுப்பு ஒன்றிற்கு ரூபா 20/- மட்டும் சிறுவர்களிற்கு சனி, ஞாயிறு வகுப்புகள் உண்டு. பியானோ வகுப்புகளும் உண்டு.

தொடர்பு: 9/1, பிளைச்சர் ஒழுங்கை, (மகளிர் கல்லூரி அருகில்), சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(45628)

## 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கர்த்தருக்குள் நித்திரை 22-05-1975

**டாக்டர் வில்லியம் சோமசுந்தரம்**

(ஸ்தாபகர் தேசிய ஹோமியோபதி கல்லூரி, ஹானமன் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)

முப்பது ஆண்டுகள் இமைப்பொழுதாய்
மறைந்தாலும் அப்பா!
கண்கண்ட தெய்வமே!
உங்கள் ஆத்துமாவின் துணையும்
ஆசீர்வாதங்களும் எம்மை என்றும்
சிறப்புடன் வாழ வைக்கின்றது.

"யேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களை தேவன் அவரோடே கூடக்கொண்டு வருவார்" (1 தெசலோனிக்கேயர் 4:14)

*நீங்காத நினைவுகளுடன்:*

மனைவி - **மங்களம்**, மகன்மார்கள் - டாக்டர் **சுறாஜ்., சிறீ, சுபா,** மகள் **டக்ஷா,** மருமகள்மார் **வனோ, மீரா,** மருமகன் - **விக்கி** பேரன்கள் - **விலிஷான், டிலிஷ், விக்காஷ், சங்கு.**

(சி-42920) (26-14)

## இசை நிகழ்வு

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகமும் கோண்டாவில் இளைஞர் முன்னேற்றக் கழகமும் இணைந்து வழங்கும் ஸ்ரார் இசைக் குழுவின் 'இராஜ இராகங்கள்' இன்னிசை நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (8-202)

## மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு

கண்டி றோட்டரிக் கழகம் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

கடந்த 17ஆம் திகதி சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி ச.அம்பிகைபாகனிடம் இவை கையளிக்கப்பட்டன.

இக்குழுவினர் நோயாளர்களைக் காவிச் செலலும் சக்கர நாற்காலி, 100 அடி நீளமான விரிப்பு, சத்திரசிகிச்சை உபகரணங்கள், மருந்து வகை என்பவற்றையும் அன்பளிப்பாக வழங்கினார்கள்.(8-31)

## நல்லின கால்நடைகளை இறைச்சிக்கு வெட்டுவதைத் தடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசங்களில் நல்லினக் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டு வருகின்றன. இதனால், நல்லின கால்நடைகள் அருகிவருகின்றன. இதனை விரைந்து தடுக்க வேண்டுமென கால்நடை வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.துரைமணி கேட்டுள்ளார். அத்தோடு, யாழ்.மாவட்டத்திலே கால்நடை விற்பனைக்குரிய அங்காடிக்கான இடம் ஒதுக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். (8-49)

## வட்டுக்கோட்டையில் கால்நடைகள் வளர்ப்போருக்கு உதவி

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் பகுதியில் கால்நடை வளர்ப்போரின் நன்மை கருதி கால்நடைகளுக்கான தீவனம், பயனாளிகளுக்கான சுழற்சி முறைக்கடன் என்பன கடந்த 9ஆம் திகதி வழங்கப்பட்டன.

சுழற்சி முறைக் கடனாக பத்துப் பயனாளிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், கால்நடை உற்பத்தி சுகாதார நிலையம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் என்பன இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - கால்நடை வளர்ப்போரின் தேவையை விருத்தி செய்யும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை மீள் புனரமைப்புச் செய்து மாவட்ட மட்டத்தில் சமாசங்களை உருவாக்கி அதனூடாக ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. (8-49)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **சிலம்பன் சிவயோகலிங்கம் (கிளி)**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02-04-1949 | 22-04-2005 |

திதி: 22.05.2005

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் இருப்பிடமாய் வாழ்ந்த
எம் தெய்வமே!
முப்பத்தொரு நாள்கள் ஓடி
மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
மட்டும் என்றும் எங்களை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (22.05.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்துநடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி: ஊறணி ஆஸ்பத்திரி பின் வீதி. வல்வெட்டித்துறை.

நிரந்தர முகவரி: எழுதுமட்டுவாழ் தெற்கு. எழுதுமட்டுவாழ்.

- குடும்பத்தினர்.

(45648)(42-14-26)

## கேள்வி அறிவித்தல்

### வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்வி வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் 07ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப் படாத வைப்புப்பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|---|
| 01. | யா/மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க. மாடிக்கட்டட மிகுதி வேலை | 250/- | 4400/- | எம் 9 |
| 02. | யா/மானிப்பாய் மெமோறியல் ஆங். பாட. கணனி அறை திருத்தியமைத்தல் | 250/- | 1730/- | எம்9 |
| 03. | யா/இராமநாதன் கல்லூரி கணனி அறை திருத்தியமைத்தல் | 250/- | 1500/- | எம் 9 |

01. (அ) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 09உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்துகொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.
    (ஆ) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ் வேலையைச் செய்து முடிக்கமுடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி (அ)இல் குறிப்பிட்ட சட்டதிட்டமும் மீளளிக்கக்கூடிய, மீளளிக்கமுடியாத வைப்புப் பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
02. கேள்விப்பத்திரங்களில் பெறுமதிசேர் வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர் சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித் தனியாகக் குறிப்பிடல் வேண்டும்.
03. மேற்படி வேலைக்கான கேள்விப்பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 2005-05-25ஆம் திகதியிலிருந்து 2005-06-06 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு, கடித உறையின இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் 07ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
05. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளிக்கவேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. சரியாக நிரப்பப்படாத - பிழைகள் கூடிய - தெளிவற்ற - கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மருதனார்மடம்,
சுன்னாகம்.
2005-05-19.

**திரு.ப.விக்னேஸ்வரன்,**
*வலயக் கல்விப் பணிப்பாளர்,*
*வலயக் கல்வி அலுவலகம்,*
*வலிகாமம்.*

(சி-42971) (24-14-26)

# மீண்டும் ஒரு போர்த் திணிப்பா?

## சிங்கள தேசத்துக்கு எதிராகச் சீறுகிறது புலிகள் அமைப்பு

கிளிநொச்சி,மே21

"சிங்கள தேசம் மீண்டும் ஒரு போரைத் திணிக்கின்றதா?" எனக் கேள்வி எழுப்பியுள்ளது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகார பூர்வ மாத ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழி லேயே அந்த இயக்கம் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது. அந்தச் சஞ்சிகையின் சித்திரை - வைகாசி ஏட்டில் முதல் பக்கத் தலைப்புச் செய்தி இக்கேள்வியுடன் பிரசுரமாகியுள்ளது.

அச்செய்தியின் முழு விவரம் வருமாறு:-

தமிழர் தாயகத்தின் கள நிலைமை மோச மடைந்து வருகின்றது. தமிழ் மக்களின் இயல்பு வாழ்வும் சீரழிந்து வருகின்றது. இராணுவ அட்டூழியங்கள் அதிகரித்துள்ளன. தமிழர்கள் கொல்லப்படுவதும் - தொல்லைப்படுத்தப்படு வதும் - திடீரென அதிகரித்துள்ளன. மக்கள் வாழ்விடங்களில் புதிதுபுதிதாக இராணுவக் காவலரண்கள் அமைக்கப்படுகின்றன. புதிதாக பிரயாணத் தடைகளும் பொருள்களுக்கான தடைகளும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் ஒரு நிழல் யுத்தத்தை அரச படைகள் நடத்திவருகின்றன.

தினம் தினம் போராளிகளும், தேசபக்தர் களும், ஊடகவியலாளர்களும் கொல்லப்படு கின்றனர். போர்நிறுத்த ஒப்பந்தம் என்பது கேலிக்கிடமான ஒரு விடயமாக மாறிவிட்டது. படையினரும் அரசும் உடன்பாட்டை மதிக்கவே யில்லை. ஒப்பந்த மீறல்களுக்கு எதிராக எவ ரும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒப்பந்த மீறல்களை மக்கள் தட்டிக்கேட்க முற் படுகின்றனர். அமைதி வழியில் அவர்கள் காட் டும் எதிர்ப்பு நடவடிக்கைகள் படையினரால் துப்பாக்கி முனையில் நசுக்கப்படுகின்றன. இந்த மக்கள் கொலைகளுக்கு அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சாதாரண பார்வையாளர்களைப் போலவே அரசும் - கண் காணிப்புக் குழுவும் செயலாற்றுகின்றன. அண் மையில் மட்டக்களப்பு - சந்திவெளியில் கண் காணிப்புக்குழு முன்னிலையிலேயே படை யினர் மக்களைச் சுட்டனர். அங்கே நாடாளு மன்ற உறுப்பினர்களும் நின்றனர். படையி னர் எவருக்கும் அஞ்சவில்லை. மக்களைக் கொல்வதிலும் காயப்படுத்துவதிலும் படையி னர் ஒரு வெறித்தனத்தைக் காட்டிவருகின்ற னர். தமிழர் தாயகம் எங்குமே இதே நிலை தான் காணப்படுகின்றது.

போர்நிறுத்த ஒப்பந்தம் தங்களுக்கு விமோ சனத்தைப் பெற்றுத்தரும் என்று ஆரம்பத்தில் தமிழ்மக்கள் எண்ணினர். ஒப்பந்தத்தைச் சரி வர நடைமுறைப்படுத்தவும் ஒப்பந்த மீறல் களைத் திருத்தவும் முனைவது தங்களின் அரசியல் கடமை என்று மக்கள் நினைத்தனர். அதனால் ஒப்பந்த மீறல்களுக்கு எதிராக அவர் கள் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினர். ஆனால், மக்கள் போராட்டத்தை சிங்களப் படைகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து போராட்டங்களை ஒடுக்க முயற்சிக்கின்றனர். இதனால் மக்கள் போராட்டங்களும் தீவிர வடி வம் பெற்று வருகின்றன.

இதேவேளை, மக்கள் போர்நிறுத்த ஒப் பந்தத்திலும் நம்பிக்கையிழந்து வருகின்ற னர். சிங்கள அரசும் - சிங்களப் படையினரும் உடன்பாட்டை மதிக்காது நடந்துவருவதால் போர் நிறுத்த ஒப்பந்தமும் இப்போது கேள்விக் குறியாகியுள்ளது. செய்யப்பட்ட உடன்பாடு வெறுமனே செயலற்றுக் கிடக்கின்றது என்பது பற்றிச் சிங்கள அரசும் அலட்டிக்கொள்ளவில்லை. மாறாகத் தனது படை வலுவைப் பெருக்குவதி லேயே அது சிரத்தை காட்டுகின்றது.

இந்தச் சமாதான காலத்திலேயே பெரும எவு நிதியை ஆயுதக் கொள்வனவுக்கு ஒதுக்கி வருகின்றது. சிங்களத்தின் அபிவிருத்தி பற்றி யும் அரசுக்கு கவலையில்லை. படைப்பல பெருக்கத்திலேயே நேரத்தையும் - பணத்தை யும் செலவிட்டு ஒரு போருக்கான மனநிலையை அது வளர்த்து வருகின்றது.

சிங்கள அரசின் இந்த சமாதான விரோதச் செயற்பாடுகளைச் சர்வதேச சமூகமும் அவதா னித்தபடி உள்ளது. சர்வதேச சமூகத்தின் வேண்டுகோள்களையும் சிங்கள அரசு செவி மடுக்கவில்லை. இலங்கைத் தீவில் இனவாத அரசியல்தளம் மேலும் பலமடைவதையே சர்வ தேச இராஜதந்திரிகள் காண்கின்றனர்.

சமாதான வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஓர் அரிய வாய்ப்பை சிங்கள அரசு இழந்து வருகின்றது. சிங்கள அரசின் செயற்பாடுகளும் - இராணுவத்தின் அடாவடித் தனங்களும் தமிழ் மக்களை விரக்திக்குள் ளாக்கி வருகின்றன.

இதேசமயம், மீண்டும் ஒரு போரைச் சிங் கள தேசம் தமிழ்மக்கள் மீது திணித்துவருகின் றது என்ற ஐயப்பாடு தமிழ்மக்களிடம் பலமா கத் தோன்றியுள்ளது. பயனற்ற சமாதானத்தை விடத் தன்மானம் காக்கப் போரிடுவது சிறந்தது என்ற மன நிலைக்கு மக்கள் உள்ளாகி வரு கின்றனர். - என்று உள்ளது.

## இடம்பெயர்வு தொடர்பான நூலுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம்,மே 22

'நிகழ்வுகளின் நிஜங்கள் - இடம்பெயர்வு - 95' என்னும் நூலுக்கு உலகத் தமிழர் பெண்கள் அமைப்பு, படைப்பாளர்களிடமிருந்து ஆக்கங் களை எதிர்பார்க்கின்றது.

1995 ஆம்ஆண்டு இடம்பெயர்வின் 10 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இந்நூல் வெளியிடப்படவுள்ளது.

இடம்பெயர்வின் காரணமாக ஏற்பட்ட வாழ் வியல் மாற்றங்கள், மறக்கமுடியாத துன்பியல் நிகழ்வுகள், இழப்புக்கள் என்பவற்றைப் பிரதி பலிக்கும் ஆக்கங்களாக எந்த வயதினரும், எந்த வகையான, எத்தனை ஆக்கத்தையேனும் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஆக்கங்களை அடுத்தமாதம் 22 ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்பதாக 'The Editor, Exodus - 2005, Lanka Book Depit, F.L.I.14, Dias Place, Colombo - 12' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட் டுள்ளது. (8-202)

## குடாநாட்டில் 3 ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துப் பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,மே22

நீதி சமாதான மனித அபிவிருத்திக்கான மனித உரிமைகள் ஆணைக்குழு (J.P.H.D.H.R) யாழ்.போதனாவைத்தியசாலை உள்ளிட்ட 3 வைத்தியசாலைகளுக்கு மருந்துப்பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இவற்றில் ஒரு தொகுதி மருத்துப் பொருள் கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கடந்த வாரம் வழங்கப்பட்டன.

ஏனைய மருந்துப்பொருள்கள் வல்வெட்டித் துறை ஆதாரவைத்தியசாலை, சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை போன்றவற்றுக்கும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக் கும் நேரடியாக வழங்கப்பட்டன.

இந்தப் பொருள்களை நீதி, சமாதான மனித அபிவிருத்திக்கான மனித உரிமைகள் ஆணைக் குழுவின் நிர்வாக முகாமையாளர் என்.சீ. கிறகிறி தலைமையிலான குழுவினர் இங்கு எடுத்துவந்து வழங்கியுள்ளனர். இப்பணியில் யாழ்.போதனா வைத்தியசாலையின் தொழில் நுட்பவியலாளர் லோ.துஷிகரனும் இணைந்து செயலாற்றியுள்ளார்.

இந்த மருத்துவப் பொருள்களில் சக்கர நாற்காலிகள், நகரும் கட்டில்கள், கூடாரங்கள் உட்படப் பெறுமதிவாய்ந்த வைத்திய உபகரணங் கள், மருந்துப்பொருள்கள் என்பவை அடங்கும்.

யாழ்.போதனாவைத்தியசாலைக்குரிய பொருள்கள் வைத்திசாலை நிர்வாக உத்தி யோகத்தர் எஸ்.பத்மநாதனிடமும் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலைக்குரிய பொருள்கள் டாக்டர் அம்பிகைபாகனிடமும் வல்வெட்டித்துறை ஆதாரவைத்தியசாலைக்குரிய பொருள்கள் டாக்டர் மயிலேறும் பெருமாளிடமும் கையளிக் கப்பட்டன. (எ-12-149)

## திருக்கணித பஞ்சாங்கக் கணிதருக்கு தென்மராட்சியில் இன்று பாராட்டுவிழா

யாழ்ப்பாணம்,மே22

கலாபூஷணம் விருது பெற்ற திருக்கணித பஞ்சாங்கக் கணிதர் வேதாகம ஜோதிடபூச ணம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்களுக்கு தென்மராட்சி மக்கள் இணைந்து இன்று கௌர விப்பு விழா ஒன்றை நடத்தவுள்ளனர். சிறப்பு மலர் ஒன்றும் இன்று வெளியிட்டு வைக்கப் படும்.

இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெறும்.

தென்மராட்சி நலச்சேவைகள் சங்கத் தலை வர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் விழா நாயகர் மங்கள வாத்தியம் சகிதம் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவார்.

நிகழ்வில் வரவேற்புரையினை கொடிகாமம் அ.த.க.பாடசாலை ஆசிரியர் வை.விஜயகுமார னும் அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகளும் ஆசியுரைகளை மாவை ஆதீனம் மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள், சர்வதேச இந்து மத குருபீடாதிபதி பிரம்மஸ்ரீ ஜ.மகேஸ்வரக் குருக்கள் ஆகியோரும் வாழ்த்துரைகளை சிவஸ்ரீ க.கிருபானந்தக்குருக்கள், துர்க்காதுரந் தரி சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் அ.சண்முகதாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், கலாசார உத்தியோகத்தர் திருமதி பத்மராணி சிவ ஞானராசா, தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப் பாளர் பொ.ஈஸ்வரன், சைவப்புலவர் சி.க. கம லநாதன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

கௌரவிப்புவிழாவைத் தொடர்ந்து 'சோதி டம் கற்போம்' என்ற நூல் வெளியீடு இடம் பெறும்.

நூலின் அறிமுகவுரையை பிரம்மஸ்ரீ ப.சிவா னந்த சர்மாவும், வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயரும் ஆய்வு ரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.வே தநாயகனும் நிகழ்த்துவர். (எ)

## பாரம்பரிய கிரியைகளுடன்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு வெள்ளைத்துணியிட்டு விளக்கு ஏற்றப்படும். பின்பு சிலம்பு, பிரம்புடன் பூசகர் காட்டுவிநாயகர் ஆலயத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு புறப்பட, கோயில் கடமைகளைச் செய்யும் குறிப்பிட்ட குலத்தவர் களால் ஏற்றப்பட்ட விளக்கு மடப்பண்டங்களுடன் புறப்படும். அப்போது மேளத்துடன் அவர்களை வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயிலுக்கு அழைத்துச் செல்வர். அங்கு சென்று பூசகர் தமது கடமைகளைத் தொடங்கியதும் சிலம்பு கூறல் படலம் ஆரம்பமாகும்.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் தினத் தன்று நடக்கும் சிறப்பு நிகழ்ச்சி சிலம்புப் படலம் வாசித்தலாகும். இது திங்கட்கிழமை இரவு நிறைவு செய்யப்படும்.

இவ்வழிபாட்டிலே சிலம்பு, பிரம்பு, அம்மானை உடுக்கு முதலிய புனித சின்னங்களும் 'முக படாம்' எனப்படும் வெள்ளியாலமைந்த முக அமைப்பும் சித்திரச் சேலைகளும் பயன்படுத் தப்படும்.

கிரியைகளான கும்பம் வைத்தல், கச்சுநேரல், மடைபரவுதல், நேர்த்திக்கடன் நிறைவேற்று தல், நூல் சுற்றுதல், கட்டுச்சொல்லல், வளர்ந்து நேரல், பட்டுநேரல், தூளிபிடிதல், திருக்குளிர்த்தி பாடுதல், அம்மானைப்பாடலும் ஆடலும், பிரசாதம் வழங்குதல் என்பன முறையே பொங்கல் நாளில இடம்பெறுவது வழக்கம்.

### விக்கிரகம் அமைத்து ஆலயம் அமைத்தல்

நான்காவது கட்டம் ஆகம முறைப்படி அம்மனை விக்கிரக வடிவில் அமைத்த நிகழ்ச் சியாகும். சுமார் நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பழமையாயிருந்த ஆலயம் இடிக்கப்பட்டுப் புதிய ஆலயம் தூபியுடன் அமைக்கப்பட்டது. இராணுவ நடவடிக்கையின்போது சேதம் ஏற் பட்டதைத் தொடர்ந்து புதிய நிர்வாகம் ஆலயத் தைப் புனருத்தாரணம் செய்து, இன்று புதுப் பொலிவுடன் ஆலயம் விளங்க வழிசமைத்தது.

### அம்மனின் அற்புதங்கள்

*மண்டு பாலர்க்குக் காட்சி கொடுத்ததும்*
*பழைய வேம்பம் படவாள் தளிர்த்ததும்*
*வண்டு மேவுப விச்சைய தாடலும்*
*வன் பறங் கியைக் காயாலெறிந்ததும்*
*மொண்ட நீரில் விளக்கை யெரித்ததும்*
*மோது குட்டரோ கந்தனைத் தீர்த்ததும்*
*கண்டு பற்றக்கள் என் கண் கவர்ந்ததும்*
*கருது சிற்பனுக் கேகண்க ளீய்ந்ததும்*
*அண்டர் போற்றுமுன்னாயிரங் கண்களை*
*அன்று பிள்ளைகள் காணக் காண் பித்ததும்*
*விண் டெழுந்திடு வேம்பம ரத்தினால்*
*மேவு பேய்பிணி யோய் வுறத் தீர்த்ததும்*
*மண்டு மாமழை தன்னிலனைந்து – நீ*
*மடங்க போன்ற வரமளித் திட்டதும்*
*கொண்டு நந்திக் கடற்கரை கோயிலாய்*
*குலவு கண்ணகை யற்புதங் கோடியே*

வற்றாப்பளை கண்ணகை அம்மன் எவ்வாறு வற்றாப்பளைக்கு திருவாய் மலர்ந்தருளினார் என்றும் உப்பு, தண்ணீர் விளக்காக எரிந்த வரலாற்றையும் ஏற்கனவே கூறியிருந்தேன். அவ் வாறு திருவாய்மலர்ந்தருளிய கண்ணகை அம் மன் அவ்விடத்தில் அம்மையார் இருக்கும் பொருட்டுக் கொடுத்த பழைய வேப்பம்படவாள் (வேப்பங்குற்றி) முளைத்துத்தளிர்த்து மரமாகி நிழல் பரப்பி நின்ற அற்புதத்தால் அவ்விடத்தி லேயே அம்பாளுக்குப் பொங்கல் மடைசெய்து, பூசை புரிந்து வழிபட்டு வருகின்றனர்.

அடங்காப்பற்றை பண்டாரவன்னியன் ஆட்சி செய்த காலத்தில் முல்லைத்தீவு நிர்வாகத் துக்குப் பொறுப்பாக இருந்து ஆட்சி செய்து கொண்டிருந்த நெவில் என்ற வெள்ளையன் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயிலை அழிப்பதற்குச் சென்றான். அப்போது அங்கிருந்த பூசகருக்கும் வேற்று மதத்தவனான நெவில் என்ற வெள்ளையனுக்கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. அப்போது நெவில் குறிப் பிட்டதினத்தில் வருவதாகவும் அத்தினத்தில் கண்ணகை அம்மன் புதுமை செய்யாவிட்டால் ஆலயத்தை அழித்துவிடுவதாகவும் கூறிச்சென் றான். மீண்டும் வெள்ளையனான நெவில் வந்த பொழுது நிறையக்காய்களுடன் இருந்த பனிச்ச மரம் ஆடத்தொடங்கி, அதில் உள்ள காய்கள் எல்லாம் வெள்ளையர்மேல் குண்டுகளாக விழுந்தன. வெள்ளையர்கள் நந்திக்கடல் ஊடாக முல்லைத்தீவை நோக்கித் தப்பி ஓடினார்கள். கோடைகாலத்தில் குதிரை பாய்ந்த இறக்கம் என அழைக்கப்படுவது வெள்ளையர், குதிரையில் பாய்ந்த பள்ளத்தினை ஆகும். இப்போதும் நாம் காணலாம். அந்த பனிச்சமரமும் அதன்பின் காய்ப் பதில்லை. இதைப் 'பனிச்சை ஆடியசிந்து' என னும் கர்ண பரம்பரையாக வந்த பாடல்கள் மூலம் அறியமுடிகின்றது. கடந்த சில ஆண்டு களுக்குள் திருடன் ஒருவன் அம்பாளின் களஞ் சியத்திற் புகுந்து அம்பாளின் ஆபரணங்களை யும் அங்கிருந்த சிறுதொகைப் பணத்தையும் திரு டினான். அவனால் அங்கிருந்து புறப்பட்டுச் செல்ல முடியவில்லை. அம்பாளின் அற்புதத் தால் அவனுடைய கண்கள் பார்வை இழந்தன. கள்வனும் பிடிபட்டான். பொருள்களும் கிடைக் கப்பெற்றன. பொருள்கள் கிட்டியதும் கள்வனின கண்கள் வெளித்தன.

### பொங்கலும், பக்தி வெளிப்பாடும்

நவீன வசதிகள் அற்று வாழும் வன்னி மக்கள் அம்பாளின் கருணையை நம்பி நம்பிக் கையுடன் வாழ்ந்து வருகின்றார்கள். நோய், பிணிக்கு அவரிடமே நேர்த்தி செய்து குணம் பெற்று வருகிறார்கள். அதனால் ஆயிரங்கண் ணுடைய கண்ணகை அம்பாளுக்கு ஆயிரங் கண் பானை அதனுள்ளே கற்பூரம், சோதி சுடரொளி உப்புத்தண்ணீரில் விளக்கெரிகிறது. ஆலயத்தில் என்ன அற்புதம்! பவளம் போன்ற நெருப்புத் தணலில் தீக்குளிககிறார்கள். பாற் செம்பு, கரகம், அங்கப்பிரதிஷ்டை, பாற்காவடி வண்ணவேலன், கதிரைக்குமரன், நாமஞ் சொல்லி காவடி ஆட்டம், ஆரார்காவடி, அம்மன் காவடி, தாளத்திற்கிசைந்து சாய்தல், சரிந்துகோலமயில கூட்டம்போல் ஆலயத்தை வலம் வந்து கொண்டி ருக்கும் காட்சிகள் உணர்வுகளைத் தூண்டு வதுடன், மனதையும் அம்பாளிடம் கொடுக்கும் பக்தி நிகழ்வுகள் ஒருபக்கம். அழுகையர், தொழுகையர், துவள்கையர் ஒருபால், சென்னி யில் அஞ்சலி கூப்பினர் ஒருபால், ஆடுவர், பாடுவர் எனப்பல பேர் பக்குவமான பொங்கலை அருந்திடும் தாயின் உள்ளக் கருணையை நினைந்து குளிர்த்துபாடும் ஒரு கூட்டம் மறுபக் கம். நேர்த்தி செய்து நோய், பிணி தீர்ந்தவர்கள, நேர்த்திக்கடனைச் செலுத்துபவர்கள் என்றெல் லாம் பல்வேறு பக்திப்பரவசமான காட்சிகளை அப் பரந்த வெளியில் பொங்கல்நாளில் காண முடியும்.

### பண்பாட்டுப் பரிமாற்றங்கள்

வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் பொங்கல் தொடங்குவதற்கு முன்பே இப் பகுதி மக்களிடம் ஒரு குதூகலத்தைக் காணக் கூடியதாக இருக்கும். பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களையும், பொங்கல் கிரியைகளையும், ஆலயத்தை முறையாகத் தரிசித்த பிறகு பல பண்பாட்டுப் பரிமாற்றங்கள் செய்வதில் ஈடுபடு வார்கள். உறவினர்களைச் சந்தித்து உறவாடும இடமாகவும் -

மாப்பிள்ளை, பெண்பிள்ளையைப் பார்த்துத் தெரிவுசெய்யுமிடமாகவும் -

ஒப்பனைகள் மூலம் தம் அழகை வெளிப் படுத்துமிடமாகவும், வண்டில்மாடுகள் தெரிநது வாங்குமிடமாகவும் -

தமது வீட்டுக்கு வேண்டிய பொருள்களைக் கொள்வனவு செய்யும் இடமாகவும்-

கிராமங்களுக்கான உறவை வலுப்படுத்தும சந்தர்ப்பமாகவும் மிகவும் பிரயோசனப்படுத்தக் கூடிய ஒன்றுகூடலாகவும் ஆலயத்தைத் தரி சிக்க வந்தவர்களுக்கு அம்பாளின் பொங்கல் இடம்பெறுகின்றது என்பதும் மிகமுக்கியமான ஓர் அம்சமாகும்.

**அந்திப் பொழுதினிலே நந்திக்கடற்கரையில்**
**ஆலயந்தனிலே பொங்கல் மடை செய்வோம்**
**பொங்கல் மடை செய்தே திருவிளக்கேற்றிடப்**
**பொன்னின் குடக்கும் மீதினுறைந்தாள்.**

(வாய்மொழிப்பாடல்)

★

# பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருத்துநர் - Fitters
ஒட்டுநர் - Welders
மேற்பார்வையாளர் - Supervisor

மேறபடி பதவிகளுக்கு அனுபவமுடையோர், தொழில் பயில விரும்புபவர்கள் தமது சுயவிவரக் கோவையுடன் (Bio - Data) 24-05-2005 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

நிர்வாக இயக்குநர்,
ஸ்டார் இன்டஸ்ரியல்ஸ் சேர்விஸஸ்
பிரைவேட் லிமிடெட்,
15/1, பிள்ளையார் கோயில் வீதி,
நாயன்மார்காடு, யாழ்ப்பாணம். (45716) (24-14)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
02 - 08 - 1943



மறைவு
28 - 05 - 1999

இணுவில் மேற்கு
## அமரர் ஆறுமுகம் சிவநேசமணி அவர்கள்

நொந்து சுமந்து பெற்று
நூறு கோவிற் படிவீழ்ந்து
மைந்தர் எம் உயர்ச்சிக் காய்
வாழ்வெல்லாம் உழைத்த அம்மா!
வெந்தழுது ஆறாண்டை
நூறாண்டாய்க் கழித்துள்ளோம்!
வந்தெம்மைத் தேற்றீரோ
மாண்புடைய அம்மாவே?

இணுவில் மேற்கு,
இணுவில். (45715) (24-14) - குடும்பத்தினர்.

நிபுணத்துவ முறையில் சகல விதமான
## போட்டோ கொப்பியர்கள், பெக்ஸ் மெஷின்கள்
## பழுதுபார்த்தல், சேர்விஸ் செய்தல்.
**SHARP•CANON•TOSHIBA•GESTETNER**
மிகவும் நம்பிக்கையான சேர்விஸ் சென்டர்.



• உத்தேச செலவு தொகை விபரம் இலவசமாக வழங்கப்படும்.
• அதி நவீன முறையை கையாண்டு, உத்தரவாதத்துடன் பழுதுப்பார்க்கப்படும்.

சகல போட்டோ கொப்பி இயந்திரங்களுக்கு தேவையான உதிரிப்பாகங்களும், டோனர்களும் எம்மிடம் உண்டு.
Canon 1215 Toner Cartridge Rs.400
Sharp 1118 - SF 126 Rs.1850 (Genuine)
TALENT
## ஸ்டார்லைட் இலக்ரோனிக்ஸ்
763, 2nd Division, Maradana Rd, Colombo - 10
Tel: 2693655, 2681711, Fax: 2681712.

## வெங்காயப் பயிரில் அந்திராய் நோயின் தாக்கம்

கோண்டாவில்,மே22

குடாநாட்டில் தற்பொழுது வெங்காயப் பயிர்களில் 'அந்திராய்' எனப்படும் புதிய வகையான நோய் தொற்றிவருவதாகக் கூறப்படுகிறது.

அதிகளவிலான வெப்பம், கூடிய ஈரப்பதன் என்பவையே இந்த நோய் பரவுவதற்கான காரணம் என்றும் - கூறப்பட்டது.

இதற்கிடையில், இந்நோயைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து கிராமந்தோறும் தற்போது நடைபெற்றுவரும் விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புகளில் எடுத்துக்கூறப்பட்டது.

இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு விவசாயிகள் உரிய பயனைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. (எ-49)

## சிரமதானம்

குருநகர்,மே22

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் அருகில் அமைநதுள்ள வளவில் வளர்ந்திருந்த பற்றைகள் அந்த அலுவலக ஊழியர்களால் கடந்த வியாழனன்று சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இந்தச் சிரமதானம் நடைபெற்றது.(எ-51)

## கடை தீப்பற்றியது

கைதடி,மே22

கைதடிச் சந்தியில் உள்ள எலக்ரோனிக் உதிரிப்பாகக் கடையொன்று கடந்த 15ஆம் திகதி இரவு திடீரெனத் தீப்பற்றியது. இத் தீவிபத்தால் அந்த விற்பனை நிலையத்திலிருந்த விற்பனைக்கான உதிரிப்பாகங்கள் பல எரிந்து சேதமாகின எனத் தெரிவிக்கப்பட்டது. (8-75-31)

## CHUNDIKULI GIRLS' COLLEGE OLD GIRLS' ASSOCIATION, JAFFNA
## THE ANNUAL GENERAL MEETING AND FELLOWSHIP LUNCH

Date - Saturday 4th June 2005
Venue - College Hall

**AGENDA**

9.30 a.m. - Holy Communion & Worship Service at St.John the Baptist's Church, Chundikuli.
11.30 a.m. - **A.G.M.**
1.00 p.m. - **Lunch and Games**
3.30 p.m. - **Principal's Tea**

**Lunch Tickets - Rs. 150/-**

*All old Girls are cordially invited*

(45710) (42 **- Secretary**

நீங்காத நினைவில்
# 15ஆம் ஆண்டு

வையத்துள் அறிமுகம்
26 - 03 - 1964



தெய்வத்துள் சங்கமம்
07 - 06 - 1990

## செல்வி நர்மதா கனகரட்ணராஜா

(நடன ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாட்சாலை)
திதி: 22-05-2005

எங்கள் அன்பின் திருவுருவே! பாச தீபமே!
ஆசையின் மணிவிளக்கே! பாசத்தின் பிறப்பிடமே!
குடும்பத்தின் ஒளிவிளக்கே எம்மை எல்லாம்
ஆறாத் துயரில் விட்டுவிட்டு மீளாத் துயில்
கொண்ட எங்கள் அன்புச் செல்வமே!
எத்தனையோ உறவுகள் இருந்தாலும் 'அம்மா'
என்று சொல்ல உன் உயிர் இல்லையம்மா!
ஆண்டுகள் பதினைந்து சென்றாலும் உன்
நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலாதம்மா!

உங்கள் பிரிவால் துயருறும்:
அம்மா, மாமன்மார், மாமிமார், சித்தப்பா, சித்திமார், தம்பிமார், தங்கைமார்.

சந்தையடி.
மானிப்பாய். (சி-42950)(26-14-24)

# இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு
## Muthayamal Educational Institutions
RASIPURAM - 637 408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரீக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Infornation Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms
**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com

# கரம்பொன் ஊர் அன்னை வேளாங்கன்னி
## ஆலயப் பெருவிழா



### அன்னையின் பக்த கோடிகளே !

அன்னையின் 2005 ஆம் வருட திருவிழா 22.05.2005 மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் செபமாலையும் திருப்பலியும் இடம் பெறும் 28 ஆம் திகதி மாலை திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் 29 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். வேளாங்கன்னித் தாயின் பக்தர்களே கொடூர இடம் பெயர்வுகளால் சிதறுண்டு இருக்கும் எங்களுக்கு அன்னையின் பருந்துரை குறைவின்றிக் கிடைக்கும்படியாகத் திருவிழா நிகழ்வுகளில் கலந்து செபிக்க அன்போடு அழைக்கின்றோம். தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். பூரண பாதுகாப்பு உண்டு. உதவிகள் செய்ய விரும்புவோர் பங்குத்தந்தையுடன் தொடர்பு கொள்ளவும்.

**பங்குத்தந்தையும், பங்கு மக்களும்.**

விளம்பர அனுசரணை:
**ACD Jaffna**

(C-42980)(11-51)

அர்ச்.செபஸ்ரியார் ஆலயம்,
கரம்பொன்,
ஊர்காவற்றுறை.

# எமது பிரதேசத்தின் தனித்துவமான விளையாட்டாக விளங்கிய மாட்டு வண்டிச்சவாரி மீண்டும் புத்துயிர் பெறுகிறது

**நமது** பண்டைய வாழ்க்கை முறையும் அதனோடு இணைந்த சமய, கலாசாரச் செயற்பாடுகளும் பருவகாலங்களை ஒட்டியே, இயற்கையோடு ஒத்திசைந்தே காணப்பட்டன. திருவிழாககள், பாரம்பரிய விளையாட்டுக்கள் எல்லாமே அந்தப் பிரதேசத்தின் பருவகாலங்களைக் கணித்தே திட்டமிடப்பட்டன. வயல் அறுவடை முடிந்த பின்னர் மக்கள் ஓய்வாக இருக்கும் காலங்களில் மகிழ்ச்சியோடு, மனநிறைவோடு வாழ்வதற்கு கலைகளும் விளையாட்டுக்களும் சமய அனுஷ்டானங்களும் பயன்பட்டன; பெரிதும உதவின.

அந்த வகையில் நமது பிரதேசத்துக்கேயுரித்தான தனித்துவமான விளையாட்டாக, கண்ணைக் கவரும் போட்டி நிகழ்ச்சியாக மாட்டு வண்டிச்சவாரி விளங்குகிறது. யாழ். குடா நாடு மட்டுமல்லாது வன்னி, மன்னார், முல்லைத்தீவுப் பிரதேசங்களும் மாட்டுவண்டிச் சவாரியில் பெயா பெற்று விளங்கின.

## ரசிகர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தவர் சவாரிக்காரர் இளையதம்பி



குளப்படுக்கைகளும் வயற்தரவைகளும் சவாரித் திடல்களாகப் பயன்பட்டன. பொன்னாலை, அராலி, கொடைக்காடு, அளவெட்டிப பினாக்கை, கந்தரோடை, மருதனார்மடம் நீர்வேலி, ஆவரங்கால், மட்டுவில், கரவெட்டி, அரியாலை, கீரிமலை போன்றன பெயர்பெற்ற சவாரித் திடல்கள் கொண்ட இடங்களாக விளங்கின. இவற்றில் சில இடங்கள் இப்போது பாதுகாப்பு வலயங்களுக்குள் அகப்பட்டுள்ளன. மேலும் சில வழக்கற்றுப் போய்விட்டன.

பல விளையாட்டுக்கள் வழக்கற்றுப்போன பின்பும் இன்னும் 'மவுசு' குறையாமல், பெருமளவு ரசிகர்களைத் தன்னகத்தே கொண்ட விளையாட்டாகச் சவாரிப் போட்டிகள் நடைபெறுகின்றன.

சவாரிப் போட்டிகளில் சாதனையாளர்களாகத் திகழ்ந்தவர்கள் பலர். அவர்களுள் முதலிடத்தில் வைத்தெண்ணப்படுவர் கரவெட்டியைச் சேர்ந்த செல்லையா இளையதம்பி. 17-04-1933 இல் பிறந்த இவர், சிறுவயதிலேயே தந்தையை இழந்தவர். 10 வயதிலிருந்தே மாடுகள் வளர்ப்பதிலும் வண்டில் வைத்திருப்பதிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். ஒரு விவசாயியாகவும் அதேநேரம் மாடுகள், வண்டில்கள், வாகனங்கள் வாங்கி விற்கும் வியாபாரியாகவும இருந்தார்.

### சவாரியில் வலு விண்ணன்

"மாடு என்றால் இளையதம்பி அண்ணைக்கு உயிர். திறம் மாடுகள் என்று இனங்கண்டால் எப்பாடுபட்டாவது அந்த மாடுகளை வாங்கி விடுவார். சிங்களப் பிரதேசங்களுக்குப் போய்க் கூட மாடுகளைப் புகையிரதத்தில் ஏற்றி வருவார்" என்று நினைவு கூறுகிறார். அவரது சகபாடியும் சவாரி விற்பன்னருமான புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த சிவானந்தம் (பணங்கட்டியண்ணை).

"ஆள், சவாரியில் வலு விண்ணன். தானே கொடிபிடித்துச் சவாரி செய்வார். போட்டிகளில் முதற்பரிசு பெறுவதற்காக அவர் அதிகம் பாடுபடுவார்" என்று நினைவு கூருகிறார் இன்னொரு விற்பன்னரான சுன்னாகம் வல்லிபுரம்.

தானே வண்டியோட்டி ஜெயிக்கும் திறன் வாய்ந்த இளையதம்பி 1965ஆம் ஆண்டு முதல் 1991இல் இறக்கும் வரை சவாரிக் கலையிலேயே தனது புலனைச் செலுத்தி வெற்றிகளைக் குவித்தார்.

மிக அதிக எண்ணிக்கையில் முதற்பரிசுகளைத் தட்டிச் சென்ற சாதனையாளன் அவர். அரியாலை, நீர்வேலித் திடல்களில் நடைபெற்ற போட்டிகளில் A, B, C ஆகிய மூன்று பிரி

**இயல்வாணன்**

வுகளிலும் மூன்று சோடி மாடுகளை ஓடவிட்டு மூன்றும் முதற் பரிசைத் தட்டிக்கொண்டமை இவரது சிறப்பான சாதனையாகும்.

இளையதம்பியின் மாடுகள் வருகிறதென்றால், அதைப் பார்ப்பதற்கென்று சிறப்பான ரசிகர் கூட்டமொன்று இருந்தது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல பூநகரி, வட்டக்கச்சி, புளியம்பொக்கணை, வவுனியா போன்ற வன்னிப் பிரதேசத்திலும் இவர் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றியீட்டினார்.

80களின் நடுக்கூற்றில் மாவிட்டபுரம் தம்பையா சுப்பிரமணியமும் இவரும் ஆயிரம் ரூபா பந்தயம் கட்டி நடத்திய போட்டி சுவாரஸ்யமானது. இருவரது மாடுகளும் மட்டுமே பங்குபற்றிய இப்போட்டியிலும் இளையதம்பியே வெற்றி பெற்றிருந்தார். இப்போட்டி இப்போது உயர் பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் கீரிமலை சீராவலைத் திடலில் நடைபெற்றது.

'தினகரன்' பத்திரிகை வருடாந்தம் நடத்திய சவாரிப் போட்டிகளிலும் இவர் பதக்கம் வென்றுள்ளார்.

### வனஜாவும் கிரிஜாவும்

அதைவிட, பசுமாடு களை 'நாணயம்' குத்தி, பழக்கி சவாரியில் ஓடவிட்டு இரண்டாம் இடத்தைப் பெற்றார். வனஜா - கிரிஜா என்ற பெயரில் அந்தப் பசு மாடுகள் அவரால் செல்லமாக அழைக்கப்பட்டன. பெரிய வடக்கன், சுட்டியன், கூரன்கிடாயன், குருவி, சின்ன வடக்கன், கழுகன், வெள்ளைக்கண்டு, மலடிகண்டு முதலியன அவரது பெயர் பெற்ற காளை



மாடுகளாகும்.

"மன்னாரில் ஒரு பசுமாடு சினைப்படாமல் இருந்து இறைச்சிக்காக விற்கப்பட்டது. அதை அழகையா என்பவர் விலைக்கு வாங்கி, நாணயம் குத்தி, சவாரிக்குப் பயன்படுத்தினார். பின்னர் அந்த மாடு சினைப்பட்டது. அதற்குப் பிறந்த நாம்பன் கன்றே 'மலடி கண்டு' என அழைக்கப்படுகிறது. அதை இவர் விலைக்கு வாங்கினார். அந்த அழகையாவும் அவரது மகனும் போராளிகளுக்கு உதவினார்களென்று வீட்டு வாசலில் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்" என்கிறார் சிவானந்தம்.

### மாடுகளில் அன்பும் கரிசனையும் கொண்டவர்

கழுகன் - வெள்ளைக்கண்டு சோடி மாடுகளின் காலம் அவரது வாழ்வில் பொற்காலம் ஒருமுறை மட்டுவிலில் வண்டில் சேற்றுள் புதைந்ததால் இரண்டாமிடம் பெற நேர்ந்ததைத தவிர, எல்லாவற்றிலும் முதலிடந்தான்.

"மாமா மாடுகளில் அன்பும் கரிசனையும் உள்ளவர். அவற்றைத் தம்பிள்ளையை விட அன்போடு பராமரிப்பார். வியாபார விசயமாகக்

**ஒரு குறிப்பு**

கண்டி கொழும்பென்று போனாலும் நாங்கள் இங்கே மாடுகளைச் சரியாகக் கவனிக்க வேணும். இல்லையென்றால் அவரது கோபத்துக்கு ஆளாகி அடி வாங்கவேணும். எங்களுக்கு அவரிலை பயமும் மதிப்பும்" என்கிறார் அவரது மருமகன் தருமலிங்கம். பிரபல சவாரிக்காரராக கொடிகட்டிப் பறந்த இளையதம்பி, சவாரி ரசிகர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கினார். அவர் இறந்து 14 வருடங்கள் கடந்த பின்னும் அவர் நினைக்கப்படுகிறார் என்றால், அது அவரது சாதனையின் திறந்தான்.

அவரது நினைவாக இன்று பிற்பகல் கரவெட்டி சோனப்பு மயானத்தில் நடைபெறும் சவாரிப் போட்டி சவாரி ரசிகர்களுக்கு இனிப்பான சங்கதியெனலாம். ▲


உ

## திருமண அழைப்பு

பேரன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் வைகாசி மாதம் 8ஆம் நாள் இன்று (22.05.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் 11.52 மணிவரையுள்ள சுவாதி நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் ஸ்ரீதரன் அவர்களுக்கும்



எமது ஏக புத்திரி திருநிறை செல்வி யாழினி அவர்களுக்கும்

இறைவன் துணைகொண்டு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய துர்க்கை அம்பாள் திருவருள்பாலித்துள்ளதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும், குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:*

திருமதி குகச்செல்வி கணேசபிள்ளை
திரு.தனசுதன்
224, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி கணபதிப்பிள்ளை,
திரு.சசிகுமார், திரு.தபேஸ்குமார்,
கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

(45731)(33-45)

*இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*



## Interact Club Jaffna Hindu College

### வருடாந்த மாபெரும் பொது அறிவு வினாடி வினாப்போட்டி

எமது கழகத்தால் வருடாந்தம் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் பொதுஅறிவு வினாடிவினாப் போட்டி இம்முறையும் 25.05.2005 புதன்கிழமை காலை 9.30 மணியளவில் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலைகளின் இன்ரறக்ட் கழகங்களின் 6 போட்டியாளர்களை பொறுப்பாசிரியருடன் போட்டியன்று போட்டி நடைபெறும் இடத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

போட்டிப்பதிவுகள், போட்டியன்று காலையில் இடம்பெறும்.

விளம்பர அனுசரணை: E.S. பேரம்பலம் சக நிறுவனம்
கஜமுகன் ஹாட்வெயர்
(50, 52, 54, கஸ்தூரியார் வீதி). T.P.: 222 2988


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே22

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய பெரும் திருவிழா கடந்த 14ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

திருவிழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம் பெற்று, 8.30 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளுவார்.

நாளை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (3-203)

★ ★ ★

காரைநகர், மே.22

காரைநகர் பாலாவோடை முத்துமாரி அம்மன் ஆலய பெருந்திருவிழா கடந்த 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

(3-73-203)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே22

மாதகல் துறைமுக விநாயகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் கூட்டம் நாளை 23ஆம் திகதி காலை 11 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும். (எ-7)

## கூட்டுறவு சங்க அறிவிப்பு

கொழும்புத்துறை, மே22

யாழ். பல நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளும் எதிர்வரும் வெசாக் தினமான 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திறந்திக்கும் என சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(எ-30)


## நல்லூர் சங்கிலியன் மன்றம் சனசமூக நிலையம் வைரவிழா - 2005

மேற்படி மன்றத்தின் வைரவிழாவை முன்னிட்டு கீழ்க் குறிப்பிடப்பட்ட போட்டிகள் வெகுவிரைவில் நடத்தப்படவுள்ளன.

1) 50 மைல் சைக்கிள் ஓட்டம்
2) 6 பேர், 5 ஓவர் கிரிக்கெற் சுற்றுப்போட்டி
3) பாட்டுக்குப் பாட்டு
4) 5 மைல் மரதன் ஓட்டப் போட்டி
5) இசை நடனப்போட்டி

இதுதவிர வழுக்கு மரம் ஏறுதல், தலையணைச்சமர், கயிறு இழுத்தல், பொதுஅறிவுப் போட்டி, மெதுவான சைக்கிள் ஓட்டம் போன்ற பல்வேறுபட்ட போட்டிகள் நடைபெறவுள்ளன. இவைகளில் பங்குபற்ற விண்ணப்ப முடிவுதினம் 05.06.2005 ஆகும். மேலதிக விவரங்களுக்கு வைரவிழாச் சபையுடனோ நிர்வாகத்தினரிடமோ தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்பப்படிவம் கிடைக்கும் இடங்கள்:

**கேதீஸ் களஞ்சியம்** பருத்தித்துறைவீதி, கல்வியங்காடு.
**சண்நெற்கொம்** பருத்தித்துறைவீதி, கல்வியங்காடு.
**லக்சுமி கொமினிசேசன்** சட்டநாதர் கோயிலடி, நல்லூர்.

வைரவிழாச் சபையும் நிர்வாகத்தினரும்.

(C/42991)(33-21-45)

# சேதுசமுத்திரத் திட்ட வேலைகள் 4 வாரங்களில் ஆரம்பம்; வடக்கு - கிழக்கு சுயாட்சி ஏற்படுமாயின் வாய்ப்புகள் அதிகம்

## இல்லையேல் மோசமான பாதிப்புகளையே தரும்

### வரலாற்றுப் பின்னணி

- 1860 இல் ஆங்கிலேய கடற்படைத் தளபதி ரெய்லர் இத்திட்டத்தை முதலில் முன்மொழிதல்.
- 1861 - 1903 டவுன்ஸ்ரன், ஜான்கூடே.
- 1922 சேர் றொபேட் பிறிஸ்டோ.
- 1955 டாக்டர் ஏ.ராமசாமி முதலியார் தலைமையில் ஒரு குழு.
- 1965 வி.சி.வெங்கடேசன் குழு
- 1981 எச்.ஆர்.லெட்சுமி நாராயணன் தலைமையிலான குழு
- 2000 ஆண்டு காலப்பகுதியின் பின் இது செயல்வடிவம் பெறும்.

### திட்டத்தின் பயன்பாடு

- குறுகிய நேரத்தில் இந்தியாவின் மேற்கிலிருந்து கிழக்கே உள்ள சென்னை, விசாகபட்டினம், கொல்கத்தா, சிட்டாகொங் ஆகிய துறைமுகங்களுக்குப் பயணித்தல்
- 254 - 424 கடல் மைல்கள் 21 - 36 மணித்தியாலங்களை மீதப்படுத்தல்.
- கரையோர துறைமுகங்கள் விருத்தி,

**நோக்குபவர்:**
**கலாநிதி சூசை ஆனந்தன்**
**(யாழ். பல்கலைக்கழகம்)**

பின்னணி நகரங்களின் வளர்ச்சி - இதனால் கைத்தொழிலும் வேலைவாய்ப்பும் பெருகுதல்.

- தமிழ்நாட்டில் பாண்டிச்சேரி, கூடலூர், நாகபட்டினம், ராமநாதபுரம் ஆகிய சிறிய துறைமுகங்களின் விருத்திக்கான வாய்ப்புகள்.
- மீன்பிடித்துறைமுகங்களின் வளர்ச்சி.
- தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தல்.

### கால்வாயின் அமைப்பு

- கால்வாயின் அகலம் 300 மீற்றர்.
- கால்வாயின் ஆழம் 10 மீற்றர், 12 மீற்றர், 14 மீற்றர்.
- கால்வாயின் நீளம் 151.2 கிலோ மீற்றர்
- ஆதாம்பாலத்தில் 20 கிலோ மீற்றர் நீளத்திற்குத் தோண்டப்படும் கால்வாயின் கனவளவு 325 மில்லியன் m3.
- பாக்குநீரிணையில் 36 கிலோ மீற்றர் நீளத்திற்குத் தோண்டப்படும் கால்வாயின் கன வளவு 51.0 மில்லியன் m3.
- கால்வாயின் அமைவிடமானது தனுஷ் கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையி லுள்ள ஆதாம்பாலத்தில் இலங்கை - இந்திய கடலோர எல்லையோரமாக (Indo - Sri Lankan Maritinme Boundary) இந்திய எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ளது.

### சமுத்திர உயிர்ச்சூழல்

- இப்பரப்பில் - மொத்த அடிப்படை உற்பத்தி அளவு (Cross Primary productivity value) ஒரு நாளுக்கு 142 முதல் 472 மில்லிகிராம் / கனசென்ரிமீற்றர் என NEERI மதிப்பிடப்பட்டுள்ளது.
- (Global Environment Facility) GEF - அறிக்கையின்படி இந்திய கடற்பரப்பில் உள்ள 2200 மீன் வகைகளில் 450 வகையான மீன் (20%) இக்கடற்பரப்பில் உள்ளது எனவும், தவிர முத்துச்சிற்பி, கடற்பஞ்சு, கடல் ஆமை, அலங்கார மீன்வகை, சங்கு, கடலட்டை, கடற்பசு, டொல்பின், பவளப்பாறை போன்ற வையும் பரம்பியுள்ளன.
- நீரில் கொட்டப்படும் மண் நீரோட்டம் காரணமாக அடித்துச் செல்லப்படும்போது - குறுக்கிடம் பவளப்பாறைகள், கண்டற் தாவ ரங்களைப் பாதிக்கும்.

மன்னார்க்குடாவில் 560 ச.கி. பரப்பில் அமைந்துள்ள 21 தீவுகள் அமைந்துள்ள 'தேசிய கடற்பூங்கா' (National Marine Park) இத்திட்டத்தின் மூலம் பாதிப்படையும்.

- Lanka Hydroulic Institute, Director Malith Mendis இவரது கருத்துப்படி - 85 மில்லியன் m3 மண் அகழப்படலாம் எனவும் சமுத்திரச் சூழல், நீரின்தரம், கரை யோர நிலவுருவவியல் என்பன தாக்கத்துக்கு உள்ளாகும் எனவும் வடமேற்குக் கரையோரம் அரிப்புக்குள்ளாகும் எனவும் குறிப்பிட்டார்.
- இலங்கை சூழலியல் மன்ற நிறுவனம் (Environmental Foundation Ltd.) வினோத்முனசிங்கா கருத்துப்படி யாழ்.குடா நாட்டுக் கரையோரம் அரிப்புக்குள்ளாகும் என வும் யாழ்.குடாநாட்டின் நிலத்தடி நீர் உவர்த் தன்மையாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### இத்திட்டம் இலங்கையில் ஏற்படுத்தும் தாக்கம்

- சமுத்திரச் சூழலில் ஏற்படும் தாக்கம்.
- பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கம்.

## ஒரே பார்வையில்

- பாதுகாப்பு - அரசியல் நெருக்கடிகள்.

### சமுத்திரச்சூழல்

- இலங்கை - இந்திய கடல் எல்லை யோரமாக கால்வாய் வெட்டப்படுவதனால் தோண்டி எடுக்கப்படும் அடித்தளமண் இலங்கை எல்லைப் பகுதிகளில் கொட்டப்படும்.
- கொட்டப்படும் மண் நீரோட்டத்தினால் கொண்டு செல்லப்பட்டு படியவிடப்படும்
- கடற்படுக்கை அறிதல்.
- களிமண் கரைந்து கலங்கல் தன்மை ஏற்படாலம்.
- அலைகள், வற்றுப்பெருக்கு, நீரோட்டம் காரணமாக இச்சமுத்திரசூழல் முழுவதும் கலங்கல்தன்மை பரவலடையும்.
- கலங்கல் நீர்ப்படை சூரியஒளி ஊடுரு வலைத் தடுத்து (நுண்ணுயிர்) பிளாந்தன் வளர்ச்சியை பாதிக்கும் என NEERI - National Environmental Engineering Institute சமர்பித்த Environmental Impact Assessment அறிக்கையில் கூறியுள்ளது.
- வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சி ஏற்படுமாயின் வடபகுதித் துறைமுகங்கள் வளர்ச்சியடையும்.
- தமிழ் நாட்டுக்கும் வடபகுதிக்குமிடை யிலான வர்த்தக மற்றும் போக்குவரத்துத் தொடர்புகள் விரிவடையும்.
- வடபகுதியில் கைத்தொழிலுக்கான வாய்ப்புப் பெருகும்.
- தமிழ் நாட்டுக்கும் வடக்கு - கிழக்குக்கு மிடையிலான நல்லுறவு மேலும் இறுக்க மடையும்.
- புரிந்துணர்வு அடிப்படையில் மீன்வளங் களைப் பகிரலாம்.
- அரசியல் தீர்வு சாத்தியப்படவில்லை யாயின் - இத்திட்டம் எமக்கு மிக மோசமான பாதிப்பையே ஏற்படுத்தும்.

### மீன்பிடி

- வடபகுதி - யாழ்ப்பாணம், மன்னார், 135 மீன்பிடிக் கிராமங்களில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர்வரையில் இத்துறையில் தங்கிவருதல்.
- கடந்த 20 வருடகால யுத்தம் - மீன்பிடி பாதிப்பு.
- இந்திய மீனவர் அத்துமீறல்.
- சேது - கால்வாய்த்திட்டம் - மேலும் இத்துறையில் மோசமாகப் பாதிக்கும்.
- இந்திய எல்லைப்பகுதிக்குள் வெட்டப் பட்டபோதும் அதன் தாக்கம் இலங்கைக் கடற் பரப்பிலும் இருக்கச்செய்யும்.
- மணற்படிவுகள், மண்டி, கலங்கல்தனமை, எண்ணெய்க்கசிவு காரணமாக உயிர்ச் சூழலுக்கு அச்சுறுத்தல்.
- உற்பத்தியில் பாதிப்பு ஏற்படலாம்.


| | 1983 | 2003 |
|---|---|---|
| Jaffna | 48,000mt | 21,000mt |
| Mannar | 8,000mt | 6,000mt |

### இராணுவ ரீதியிலான அச்சுறுத்தல்

- இந்திய கடலோர காவல்படை - பாது காப்பில் ஈடுபடும்.
- இலங்கைக் கடற்படையினரின் ரோந்துப் பணி - தீவிரமடையும் வாய்ப்பு.
- இதனால் மீன்பிடி, மீள்குடியேற்றம் தடைப்படல்.
- இப்போதுள்ள உயர்பாதுகாப்பு வலயம் விரிவுபடுத்தப்படலாம்.
- குடாநாடு, மன்னார்ப்பகுதி - இராணுவ அச்சுறுத்தல். *

# இந்தியாவின் பாதுகாப்பு அம்சங்கள் தொடர்பாக கவனமாக ஆராயப்பட்ட பின்னரே முடிவுசெய்யப்பட்டது

## அமைச்சர் டி.ஆர்.பாலு சொல்கிறார்




சென்னை,மே22

சேது சமுத்திரத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் விழா அடுத்த மாதம் மூன்றாவது வாரத்தில் நடைபெறும் என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு அறிவித்திருக்கிறார்.

சென்னைத் துறைமுகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் மகாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அமைச்சர் பாலு அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சேது சமுத்திரத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை வியாழக்கிழமை ஒப்புதல் அளித்தது. இதன்மூலம் 145 ஆண்டுகால கனவு நனவாகிறது.

2427.4 கோடி மதிப்பிலான இத்திட்ட அடிக்கல் நடும்விழாவில் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

சேது சமுத்திரத் திட்டப் பணிகள் 3 ஆண்டுகளில் நிறைவேறும். அடிக்கல் நடும் விழாவுக்கு அடுத்த நாளிலிருந்தே பணிகள் தொடங்கும். இப்பணிகள் மூலம் எட்டுக்கோடி மனித நாள் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும். 10 ஆயிரம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

**சோதனைகள் செய்யப்பட்டன**

தமிழகத்தில் நிறைவேற்றப்படும் இத்திட்டப் பணிகளை மேற்கொள்ளும் முன்பு அனைத்துப் பாதுகாப்பு அம்சங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. அனைத்து வகையான சோதனைகளும் செய்யப்பட்டன. 30 இற்கும் மேற்பட்ட பரிசோதனைகள் ரூபா 3 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் பாதுகாப்பு அம்சங்களும் இதில் அடங்கும்.

சேது சமுத்திரத்திட்டம் தொடர்பாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எழுப்பியுள்ள அனைத்து சந்தேகங்களுக்கும் விடை காணப்பட்டுள்ளது.

பாக்கு நீரிணையில் கால்வாய் அமைப்பதற்காகக் கடல் ஆழப்படுத்தப்படும். இதற்காக மணல் எடுப்பதற்கு டிரெட்ஜிங் கார்ப்பரேன் ஆஃப் இந்தியாவின் கப்பல் பயன்படுத்தப்படும். இப்பகுதியிலிருந்து எடுக்கப்படும் மணல் 30 மீற்றர் தூரத்தில் 25 மீற்றர் ஆழப்பகுதியில் கொட்டப்படும். சர்வதேச அளவில் இத்தகைய நடைமுறைதான் பின்பற்றப்படுகிறது.

சேது சமுத்திர கார்ப்பரேன் அடுத்த 15 ஆண்டுகளில் லாபம் ஈட்டத் தொடங்கும்.

முதலாண்டில் சேது சமுத்திர வழித் தடத்தை 3,050 கப்பல்கள் பயன்படுத்தும் என்றார் பாலு.

இத்திட்டத்தை நிறைவேற்றும் சேது சமுத்திர கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவராகத் தூத்துக்குடி துறைமுகத் தலைவர் என்.கே. ரகுபதி பணியாற்றுவார். அடிக்கல் நடும்விழாவில் பங்கேற்பதற்கான அழைப்பிதழ் அனைவருக்கும் இவரே அனுப்புவார். அதன்படி தமிழக முதல்வருக்கு நிச்சயம் அழைப்பிதழ் அனுப்பப்படும்.

(அ)

# மத்திய அரசுக்கு வீரமணி பாராட்டு

சென்னை,மே22

சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இத்திட்டம் நிறைவேறினால் கப்பல் வாடகை சேமிப்பு, எரிபொருள் மிச்சம், அந்நியச் செலாவணி சேமிப்பு ஆகிய பயன்கள் கிடைக்கும்.

தூத்துக்குடி துறைமுகம் மேலும் வளர்ச்சி அடைந்து சரக்குப் பெட்டகப் போக்குவரத்துக்கென ஒருங்கிணைப்பு துறைமுகமாக அது மேம்படுத்தப்படும்.

இராமேஸ்வரத்தில் மீன்பிடித் துறைமுகம் அனைத்து வசதிகளுடனும் மேம்படுத்தப்படும். நாட்டின் பாதுகாப்புக்கும் இத்திட்டம் பயன்படும். கடற்படை மற்றும் கடலோரப் படைக்கப்பல்கள் கிழக்குப் பகுதியில் இருந்து மேற்குப் பகுதிக்கு விரைந்து செல்ல வாய்ப்பு ஏற்படும்.

தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி, வேலைவாய்ப்பு அதிகரிக்கும்.

இத்திட்டம் நிறைவேற நடவடிக்கை எடுத்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங், தமிழகத்தில் தேசிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் கருணாநிதி, கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு ஆகியோர் பாராட்டுக்கு உரியவர்கள்.

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்




நெடுந்தீவு. 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குகன்-சகஜா தம்பதிகளின் செல்வப் புதல்வி தமிழினி தனது முதலாவது பிறந்ததினத்தை 13.05.2005 அன்று கனடாவில் கொண்டாடினார். இவரையும் [illegible] - கீதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் கபித்தனன் இன்று 22.05.2005 தனது 2ஆவது பிறந்த தினத்தை நெடுந்தீவிலுள்ள இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவர்களை அப்பா, அம்மா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, மாமி, அம்மம்மா, தாத்தா, அத்தை ஆகியோர் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்க வென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அத்தை
11ஆம் வட்டாரம், நெடுந்தீவு.




# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே22

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

★ காலை 8.30 மணி - கிறாஸ்கொப்பர்ஸ் வி.க. எதிர் யாழ். சென்றல்.

★ பிற்பகல் ஒரு மணி - கொக்குவில் ஸி.ஸி.ஸி. வி.க. எதிர் பற்றீஸியன்ஸ் வி.க. (3)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே22

மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகத்தினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இறுதியாட்டம் இன்று காலை 9.30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வாட்டத்தில் ஸ்ரான்லி வி.கவை எதிர்த்து சென்றலைட்ஸ் வி.க. மோதவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.சிவநேசவரன் கலந்துகொள்ளவுள்ளார். (3-190)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் அண்ணப்பிளவு சத்திரசிகிச்சை

யாழ்ப்பாணம்,மே22

அண்ணப்பிளவு உதட்டுப்பிளவு நோயாளர்களுக்குச் சத்திரசிகிசசைகளை மேற்கொளவதற்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ள தென்னிலங்கையைச்சேர்ந்த வைத்தியர் குழு நேற்று சிகிச்சைகளை ஆரம்பித்தது.

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்தக்குழு இங்கு வருகை தந்துள்ளது.

இந்த வைத்தியர் குழு அண்மையில் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து பாதிப்புற்ற நோயாளர்களைப் பார்வையிட்டு 23 பேரைத் தெரிவு செய்திருந்தது.

அவர்களுக்கான சிகிச்சைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. இன்றும் சிகிச்சைகள் தொடர்ந்து நடைபெறும்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான சிகிச்சைகள் முடிவடைந்ததும், புதியவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கும் சிகிச்சையளிக்கப்படவுள்ளது.

இந்த சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான நிதி உதவியை சீடா நிறுவனம் வழங்கியுள்ளது.

(எ-203-149)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் இராஜகோபால்
### (செம்பியன் செல்வன்)



ஈழத்தின் மூத்த எழுத்தாளராகிய ஆறுமுகம் இராஜகோபால் நேற்றுமுன்தினம் (20.05.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தமர் தாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சத்தியாப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கணேசப்பிள்ளை அவர்களின் தம்பியும் புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும் இராகுலனின் (தரம் 9, பரியோவான் கல்லூரி) அன்புத் தந்தையும் கௌரி, அபி, காயா, ஆனந்தன் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நாளை (23.05.2005) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*10, புதுவீதி,*
*அத்தியடி, யாழ்ப்பாணம்.* (45739) (18-30-12-15)

தகவல்:
இ.புவனேஸ்வரி (மனைவி).

## வைத்திலிங்கம் கதிரேசு
### (ஸ்ரீ பாலஞானவைரவ தேவஸ்தான தர்மகர்த்தா)



நாயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கதிரேசு அவர்கள் 20.05.2005 வெள்ளிக்கிழமை இரவு இருபாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - பார்வதியம்மா தம்பதியினரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற நாகநாதர் - நாகமுத்துவின் மருகனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தசாமி (திருநாவுக்கரசு), சறோஜினி தேவி, சாம்பசிவம் (பிரபலசோதிடர், கொட்டடி), சிவபூரணி (ஜேர்மனி), லிங்காதேவி (இந்தியா), சிதம்பரநடராஜா (ஈஸ்வரா லொட்ச், சுமங்கலி லொட்ச் பங்காளர்), இராஜயோகபூபதி (வர்த்தகர், கொக்குவில்), வருணநாதன் (சிரேஷ்ட சுகாதார வைத்தியப் பொறுப்பதிகாரி, மானிப்பாய்), நவபுஸ்பராணி (ஹொலண்ட்), முருகபத்மராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் கந்தையா, சறோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான இராசையா, ஞானசுந்தரம் (துரைராஜா) மற்றும் யோகம்மா, மகாலெட்சுமி, வரதாம்பிகை, பாலசிங்கம் (ஹொலண்ட்), சந்திரவதனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சுப்பையா (C.W.E) மாணிக்கம், சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மாரிமுத்து (லண்டன்), காலஞ்சென்றவர்களான பழனிவேல், பொன்னையா, முத்துவேலு, இராமலிங்கம், மாணிக்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2005) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4 மணியளவில் அவரின் இருபாலை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இருபாலை, நொச்சிக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பகப் பிள்ளையார் கோயிலடி,*
*கோப்பாய் தெற்கு,*
*இருபாலை.* (T.P.: 021 2226798) (45738) (18-30-12-15)

தகவல்:
க.வருணநாதன் (மகன்).
(S.P.H.I.)

## திருச்செல்வம் கனகசுந்தரம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் கரம்பொன், ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் கனகசுந்தரம் (தங்கச்சி) அவர்கள் 20.05.2005 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் திருச்செல்வத்தின் மனைவியும் சி.கணேசு, கனகரத்தினம், பரஞ்சோதி ஆகியோரின் சகோதரியும் சந்திரசேகரம் (சுப்பிரமணியம், சீனோர் நிறுவனத்தின் முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்), விக்கினேஸ்வரி (பூநகரி), விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), தருமபூபதி (லண்டன்), யோகராணி (பிரான்ஸ்), விக்கினராஜா (பிரான்ஸ்), குணசேகரம் (நோர்வே), சர்வேஸ்வரி (இந்தியா), குணபாலன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், வத்ஜலா, விஜயலட்சுமி (பிரான்ஸ்), சிவலிங்கம் (G.S. - பூநகரி), தேன்மொழி (லண்டன்), சௌந்தரராஜன் (பிரான்ஸ்), தவராணி (பிரான்ஸ்), சிவராணி (நோர்வே), காலஞ்சென்ற சண்முகநாதன், நிலாந்தி, சோபனா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுஷன், கோபிகா, இனிஷ்ரன் (நோர்வே), கிரிஷாந், சங்கரதாஸன், டினோஸ் (பிரான்ஸ்), சந்தரன் (பிரான்ஸ்), கிஷோக்குமார் (பிரான்ஸ்), பவித்ரா, மயூரி, மாதுரி (லண்டன்), அபிராமி, ஆபிரகான், அர்ச்சுனா, அர்ச்சுதன், அர்ச்சுனன், விஷ்மிகா, லேகாசரண், பிரியங்கா, சுபர்ணா, டியோன்சன் (இந்தியா), நீசிகா, ரகுராஜ் (நோர்வே), றொக்ஸ்சனா, அனுஷா (நோர்வே) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2005) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2 மணியளவில் ஒழிவில் வீதி, கரம்பொன் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பருத்தியடைப்பு ஊருண்டி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரம்பொன்,*
*ஊர்காவற்றுறை.*
(45790) ((18-30-12-15))

தகவல்:
சி.சந்திரசேகரம் (சுப்பிரமணியம் - மகன்),
சி.விக்கினேஸ்வரி (மகள்).


**மாபெரும் கருத்தரங்கு ஆரம்பமாகிவிட்டது**

சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள
நாடகம், நாடகபாட ஆற்றுகை புறெஜெக்ரர் மூலமானது.
A/L - 2006,2005 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.
9 a.m. By: சந்திரன்
அரசியல் : பொன்சந்துரு
புவியியல் : கிரிதரன்
தமிழ் : பாலமுரளி
கிறிஸ்தவம் : ரங்கன் (சி 42997) (30)
D.C.C.A.மக்கள் வங்கி
அருகில் ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**நல்லூரில் தொடர்மாடி வீடுகள்**

நல்லூர்ப் பகுதிகளில் அமையவிருக்கும் மேற்படி வீடுகள் தொடர்பாக முன்னர் விண்ணப்பித்தவர்களும், புதிதாக விண்ணப்பிப்பவர்களும் 24.05.2005 செவ்வாய் காலை 11 மணிக்குக் கீழ் குறிப்பிட்டுள்ள முகவரியில் சந்திக்கவும். கடன்வசதி தேவைப்படும் அரச உத்தியோகத்தர்கள் சம்பளப்பட்டியலுடன் வரவும்.

**தயா ஏஜென்சி**
இல.3, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். (C/42895)

**திருமணக்கார்**
குளிரூட்டப்பட்ட நிசான் சனி திருமணத் தேவைகளிற்கு வாடகைக்கு உண்டு.
T.P.: 0777 283795 (C-42899) (25-14)

**லஷ்சுமி சினிமா - இணுவில்**
ஸ்ரீகாந்த், சிநேகா, கலாபவன்மணி நடித்த
**போஸ்**
தினசரி: 11.00, 3.00, 7.00

**மனோகரா யாழ்ப்பாணம்**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த
**ஐயா**
காட்சி நேரம்: 10.30 a.m., 2.30 p.m., 6.30 p.m., 9.30 p.m.
(C/42894)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
50 ஆவது நாளை நோக்கி
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 (பு.நே.)






**ராஜா யாழ்ப்பாணம்.**
அர்ஜுன் இருவேடம், லைலா, சாயாசிங், வடிவேல் நடித்த
**ஜெய் சூர்யா** (பிலிம்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30. (பு.நே.)
26 முதல் புதிய வெளியீடு
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி.
சூர்யா ஆக்ஷன் படம்.

**நாதன்ஸ் சினிமா**
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக இன்றுமுதல்
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமீக்சா மற்றும் பலர் நடித்த
**அறிந்தும் அறியாமலும்** (பிலிம்)
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி யோகலட்சுமி சோமசுந்தரம்



நல்லூர் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகலட்சுமி சோமசுந்தரம் காலமாகிவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற யாழ். மாநகரசபையின் அத்தியட்சகர் சோமசுந்தரம் அவர்களின் துணைவியாரும் தங்கராணி, அமரர் ஜெயசுந்தரம் (யாழ். மாநகரசபை சுகாதாரப் பணிமனை மேற்பார்வையாளர்), அமரர் சோமலிங்கம் மற்றும் கோமதி, பத்மாவதி, சௌந்தரராணி, யோகமலர், உதயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற முத்துராசா மற்றும் கமலாதேவி, அருளானந்தம், இராஜ்குமார், பாலசிங்கம், செல்வரதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.9, பாரதி வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் இன்று (22.05.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நல்லூர் தெற்கு,*
*யாழ்ப்பாணம்.* (சி-42995) (18-30-12-15)

தகவல்:
பிள்ளைகள்.

## செல்வி சுபராமி பத்மசோதி

சீனப்புலம், நெல்லியடி வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி சுபராமி பத்மசோதி நேற்று (21.05.2005) சனிககிழமை காலமானார்.

அன்னார் நடராசா பத்மசோதி - அருந்தவராணியின் அன்பு மகளும் சுவர்ணாங்கியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.05.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு ஆலங்கட்டை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
ந.பத்மசோதி
(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி).
(சி-42993) (18-30-12-15)

## திருமதி தவஜோதி கெங்கேஸ்வரன்

கோப்பாய், கும்பப்பிள்ளை இருபாலையைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தவஜோதி கெங்கேஸ்வரன் அவர்கள் நேற்று (21.05.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கெங்கேஸ்வரனின் (சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்) அன்பு மனைவியும் சயந்தன், திபேந்தன், கிவிர்த்திகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற மாணிக்கம் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் தவமலர், யோகேஸ்வரன் (பெரியண்ணை, சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர்), கோடீஸ்வரன் (கனடா), நகுலேந்திரன் (கனடா), சசிகலா (கனடா), நந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் துரைசாமி, ராணிதேவி, சோமசுந்தரம் - இராஜேஸ்வரி, சரவணமுத்து - வசந்தராணி, நடராசா - இராசதுரை, நடராசா - சிவபாலன், அருமைத்துரை - வசந்தகுமாரி, கணேசலிங்கம், விமலாசனி, நளினி - சிவசோதி, இரவிச்சந்திரன் - மங்களேஸ்வரி (ஆசிரியை, கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2005) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏகாம்பரம் வீதி,*
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (சி-42996) ((18-30-12-15))

தகவல்:
ந.கெங்கேஸ்வரன்
(கணவர்).

# அனலைதீவில் சடலம் கரை ஒதுங்கியது

யாழ்ப்பாணம்,மே 22

அனலைதீவு கடற்கரையோரத்தில் சிதைவடைந்த நிலையில் கரையொதுங்கியதாக தெரிவித்து சடலம் ஒன்றை ஊர்காவற்துறைப் பொலீஸார் நேற்றிரவு 10.30 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர்.

நேற்றுக் காலை சிதைவடைந்த நிலையில் கரையொதுங்கியிருந்த இந்தச் சடலத்தை கண்ட அப்பகுதி மக்கள் ஊர்காவற்துறைப் பொலீஸாருக்குத் தெரியப்படுத்தினர் என்றும்.

ஊர்காவற்துறை நீதிமன்றத்தின் பணிப்பின் பேரில் சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (3-7)

## பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுக் கூட்டத்தில் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் அமைதிப் பேச்சுக்கள் மற்றும் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கண்டி மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரை மற்றும் அதைத் தொடர்ந்து ரூபவாஹினியில் அவர் அளித்த நேர்காணல் ஆகியவை குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்த ஜனாதிபதி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கும் தீர்மானத்தை அரசின் துணை அமைச்சர்கள் திலான் பெரேரா முன்மொழிந்தார். பின்னர் மத்திய குழு அதனை ஒருமனதாக ஏற்றுத் தீர்மானம் நிறைவேற்றியது. (3)

# வெசாக்கை ஒட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் ஒன்று திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் அசோக ஜெயவர்த்தனா, கூட்டுப்படை தளகர்த்தர் தயா சந்தகிரி, பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோரும் -

தமிழர் பேரவையின் தலைவர் எஸ்.விக்னேஸ்வரன் மற்றும் கௌரி முகுந்தன், சட்டத்தரணி க.சிவபாலன். அரசசார்பற்ற அமைப்புகளின் தலைவர் எஸ்.தவசிலிங்கம், ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர மற்றும் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதத் தலைவர்கள் ஆகியோரும் - கலந்துகொண்டனர்.

புத்தர் சிலை ஏற்படுத்தியிருக்கும் ஆபத்தான சூழ்நிலைபற்றி அங்கு ஆராயப்பட்டது. சிலையை அகற்றுவதே பதற்றத்தைத் தணிக்க ஒரே வழி என்று தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் அங்கு தெரிவித்தார்.

புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக தாம் ஜனாதிபதியுடன் கலந்துபேசி நடவடிக்கை எடுப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அசோக ஜெயவர்த்தன தெரிவித்தார்.

பௌத்தர்களின் புனித திருநாளான வெசாக் பண்டிகையை பௌத்த மதத்தவர்கள் கொண்டாடுவதற்கு வசதியாகவும் பௌத்த மத விழுமியங்களுக்கு மதிப்பளித்தும் சகல எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மூன்று தினங்களுக்கு நிறுத்துவது என்று திருமலை தமிழ் மக்கள் பேரவை பின்னர் முடிவு செய்தது.

இந்த மூன்று நாள்கள் அவகாசத்தினுள் சிலை அங்கிருந்து அகற்றப்படாவிட்டால் எதிர் வரும் 26ஆம் திகதி முதல் தொடர்ச்சியான கதவடைப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படும். இது வடக்கு - கிழக்குப் பிரதேசம் முழுவதும் முன்னெடுக்கப்படும் என்று மக்கள் பேரவை தெரிவித்துள்ளது. (ஐ-3-7-151)

## ரணிலின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் நடவடிக்கைக்குழு நேற்றுக் கூடியது.

அரசின் செயலைக் கண்டிக்கும் வகையில் ஜனாதிபதியோ, அரசின் முக்கிய தலைவர்களோ பங்குபற்றும் கூட்டங்களில் ஐ.தே.கட்சிப் பிரமுகர்கள் எவரும் பங்குபற்றுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3)

# நகரில் வெசாக் கூடு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவுள்ளது. தினமும் 7மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகமும் 51ஆவது படைப்பிரிவும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

இது தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிப்பதற்கான மாநாடொன்று நேற்று மாலை யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இங்கு முந்திய வருடங்களில் வெசாக் பண்டிகையை நாம் எமது முகாம்களுக்குள்ளேயே கொண்டாடி வந்தோம். ஆனால், இம்முறை முதற்றடவையாக யாழ்.பொது விளையாட்டரங்கில் இதனைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். தற்போது நிலவும் சமாதான சூழலை மேலும் பலப்படுத்தி அதன் மூலம் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதே இதன் நோக்கம். இதனை யாரும் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. எல்லா மதங்களையும் சமமாக மதிக்கும் பண்பு அனைவரிடமும் இருக்கவேண்டும். அந்த நல்லெண்ண அடிப்படையிலே நாம் வெசாக் பண்டிகையை ஏற்பாடு செய்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள அனைத்துப் படையணிகளும் தலா ஒவ்வொரு வெசாக் கூடுகளை அமைக்கும். இதன்படி மொத்தம் 36 வெசாக் கூடுகள் அமைக்கப்படும். இதில் மிகவும் நுட்பமாக அமைக்கப்படும் கூடுகளுக்குப் பரிசில்களும் வழங்கப்படும். இந்த வெசாக் கூட்டுக் கண்காட்சியின்போது புத்த பெருமானின் வரலாற்றைக் குறிக்கும் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். இதில் படைவீரர்கள் பாடல்களைப் பாடுவார்கள். இராணுவத்தின் இசைக்குழு இதற்கான இசையமைப்பை வழங்கும்.

அத்துடன், நாகவிகாரையிலும், கந்தரோடை விகாரையிலும் விசேட நிகழ்வுகள் நடைபெறும்.

இவை அனைத்தும் சமய நிகழ்வுகளே. எனவே, இதனை யாரும் தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கக்கூடாது - என்றார்.

51ஆவது சேனையகத்தின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் பன்னிப்பிட்டிய அங்கு கூறியதாவது:-

இராணுவத்துக்கும் பொதுமக்களுக்குமிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையிலும் நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தும் வகையுலும் இந்த வெசாக் பண்டிகையை ஏற்பாடு செய்துள்ளோம். சமாதானத்தை முன்னெடுக்கும் நல்லதோர் அறிகுறியாக இது அமையும். சமயரீதியில் மக்களை ஒன்றுபடுத்துவதற்காகவே நாம் இதனை ஒழுங்கு செய்துள்ளோம் - என்றார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் குடாநாட்டில் உள்ள இராணுவமுகாம்களின் பொறுப்பதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஐ-8-7)

## முதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டாலும் சரி பொதுக்கட்டமைப்பை முன்னெடுக்கப்போவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். பொதுக்கட்டமைப்பின் உத்தேச நகலைத் தரும்படி ஜனாதிபதியிடம் கேட்டுள்ளோம். அவர் அந்த நகலைத்தரும் பட்சத்தில் அவருடன் பேசுவோம். நகலைத் தராமல் வெறுமனே பேசிப் பயன் இல்லை. நகல் தராதபட்சத்தில் அவருடன் பேசமாட்டோம் என்று ஜே.வி.பி. பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

## அரசியல்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த தாக்குதலுக்கு விசேட அதிரடிப்படையினர்தான் பொறுப்பு என விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை குற்றம் சாட்டியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட விடுதலைப் புலிகள் மாவட்ட ஊடகத்துறை பொறுப்பாளர் செல்வன், கல்லாறு பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் சோழனின் நடமாட்டத்தை கடந்த சில தினங்களாக விசேட அதிரடிப்படையினர் அவதானித்து வந்ததாகவும் அவரை இலக்கு வைத்தே இந்த தாக்குதலை அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள் என்றும் கூறினார். (ஐ-3-7)

# சுனாமி பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுக்கட்டமைப்பை எந்த அமைச்சின் கீழ்க்கொண்டு வருவது என்பது குறித்து ஜனாதிபதியே முடிவு செய்வார்.

இந்தப் பொதுக்கட்டமைப்பில் மூன்று குழுக்கள் செயற்படும். உயர் மட்டக்குழு. பிராந்தியக்குழு. மாவட்டக்குழு ஆகியனவே அக்குழுக்களாகும். இந்தக் குழுக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து செயற்படும்.

உயர் மட்டக்குழுவில் அரசுப் பிரதிநிதிகள் மூவர் இருப்பர். அத்துடன், விடுதலைப் புலிகள், முஸ்லிங்கள் ஆகிய தரப்புக்களின் பிரதிநிதிகளும் இருப்பர்.

மாவட்டக் குழுவில் 10 உறுப்பினர்கள் செயற்படுவர். அவர்களில் ஐவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களாக இருப்பர். அடுத்த இனங்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் அதில் செய்யப்படும்.

இந்தக் குழுக்களின் கூட்டங்களில் ஒரு விடயத்தில் கருத்து ஒற்றுமை ஏற்படாவிட்டால் 14 நாள்கள் இடைவெளி வழங்கப்படும். அக்காலப் பகுதிக்குள்ளும் இணக்கம் ஏற்படாத பட்சத்தில் தற்காலிகமாகக் கூட்டங்கள் நிறுத்தப்படும்.

சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு பொதுக் கட்டமைப்பின் செயற்பாட்டில் பெறப்படும். அவர்கள் பார்வையாளர்களாகப் பங்குபற்றுவர். வாக்களிக்கும் உரிமை அவர்களுக்கு இருக்காது.

ஒன்றுக்கு ஒன்று உதவும் நாடுகள், பல்தேச உதவும் நாடுகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாக இருப்பர்.

மாவட்டக்குழுக்களில் விடுதலைப் புலிகளையோ, தமிழ்க் கூட்டமைப்பையோ சாராத பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் வாய்ப்பு உள்ளது.

ஐ.நாவின் முகவர் நிறுவனங்கள், அரசசார்பற்ற, நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இக்குழுவில் அங்கம் வகிப்பர்.

இந்தக்குழுக்களில் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளும் செயற்படுவதால், நிதி கையாளும் விடயம் வெளிப்படையாக இருக்கும்.

பொதுக்கட்டமைப்பில் பாதுகாப்புத் தொடர்பான விடயத்தைக் கையாள்வது குறித்து முப்படைத்தளபதி என்ற வகையில் ஜனாதிபதி படைத்தளபதிகளின் ஆதரவைப் பெற்றிருப்பார்.

பொதுக்கட்டமைப்பில் மனித உரிமைகள் தொடர்பான சரத்துக்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை விடுதலைப் புலிகள் ஏற்காததால் அது கைவிடப்பட்டது - இப்படி ஜயந்த தனபால தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய ஜனாதிபதியின் ஆலோசகரும் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளருமான ஹரீம் பீரிஸ் கூறியதாவது:-

முல்லைத்தீவுப் பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வருகின்றது. அங்கு உதவிகளை வழங்க வளங்களும், செயற்பாட்டு முறைகளும் இல்லை. இதனால் அந்தப் பிரதேச மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு புலிகளினால் பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது - என்றார். (ஐ-3)


WESTERN UNION

விரைவானது | நம்பகமானது

வெஸ்டன்யூனியன் மூலம் வெளிநாட்டிலிருந்து உங்களுக்கு பணம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் விடுமுறைநாளில் எங்கெடுப்பது ?

கவலையை விடுங்கள் 10 இரகசிய இலக்கத்துடன் விடுமுறை நாள்களிலும் நாடுங்கள்.

குமார் முகவர் தபால் நிலையம்

133/3, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.(பஸ்நிலையம் அருகில்)
T.P.222 3453

குறிப்பு: துரித பார்சல், கடிதசேவையை உடனுக்குடன் உலகெங்கும் வழங்குகின்றோம்

பாதுகாப்பானது

(45704)(30-12-15)




## அதிரடி விலைக் கழிவில்


10,500/= 13,500 /=

மொபிறெல், டயலொக் மேசைத்தொலைபேசிகள் இணைப்புடன் எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.

- ❏ உத்தரவாதம் உண்டு.
- ❏ உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.

தொடர்புகளுக்கு : பவர் செலூலர் டிரேடிங்கம்பனி.

| | |
|---|---|
| office | : 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி. |
| Shop | :205/01 கஸ்தூரியார் வீதி, யாழ். |
| Tel/Fax | :021 - 222 7070 |
| Mobile | :0712 - 399220 |
| | 0714 - 182500 |
| | 0714 - 182501 |

[★ இச் சலுகை கையிருப்பு முடியும் வரை மட்டுமே]



மாபெரும் கருத்தரங்கு

Logic

நாளை 23-05-2005
9.00 a.m.

Dcm. யாழ்.நகர்

By: S.R.J.சுதன்,
றொபின்

★ வினாகுறிப்புகள் வழங்கப்படும் .



Paper Class

A/L 2006

கணக்கீடு
திரு.பாலவாசன்

Sat, Sun:3.00-4.00
Start : 22/05 - Sun

நிரு
கொமர்ஸ் டாவர்ஸ்



அனைத்து வகையான...

VCD,ACD,MP3 பாடல்களும் 60/=

VCD Film - 120/=

Moorthy Studio & Digitel Colour Lab

62/16, ஸ்ரான்லி வீதி,
(பழையதபால் கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
T.P.0714 168476

யாழ். வீதி,
மானிப்பாய்.
021 222 2884



## சங்கத்தானை வைரவசுவாமி கந்தசுவாமி ஆலய விஷேட பொதுச்சபைக் கூட்டம்

மேற்படி விஷேட பொதுச்சபைக் கூட்டம், எதிர்வரும் 29.05.2005 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு, ஆலய மண்டபத்தில் தலைவர் .

திரு செ.சபாரத்தினம் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சாவகச்சேரி நகர மற்றும் சாவகச்சேரி வடக்கு கிராம உத்தியோகத்தர்கள் திரு வை. இராசரத்தினம், திரு கே. வேலாயுதபிள்ளை ஆகியோர் உத்தியோக பூர்வமாக அழைக்கப்பட்டுள்ளனர். இக்கூட்டத்தில் சங்கத்தானை வைரவ சுவாமி கந்தசுவாமி ஆலய பரிபாலனம் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்பட உள்ளன.

இவ்விடயம் தொடர்பான பிரேரணைகள் ஏதும் இருப்பின் அவற்றை எழுத்து மூலம், பதிவுத்தபாலில் செயலாளர், சங்கத்தானை வைரவசுவாமி கந்தசுவாமி ஆலய பரிபாலன சபை, சாவகச்சேரி என்ற முகவரிக்கு 27.05.2005 இற்க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சகல அங்கத்தவர்களும், உபயகாரர்களும்
தவறாது கலந்துகொள்ளும்படி
கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


ஆலய பரிபாலன சபை.

(45741)(54-30-12-15)



EXPOAIR எக்ஸ்போ ஏயார்

your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...



தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

22.05.2005


# கண்கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம்?

**யா**ழ்ப்பாணத்தில் இளைஞர்களின் செயற்பாடுகள் அளவுக்கு மீறி அருவருக்கத்தக்கதாகப் போய்க் கொண்டிருக்கின்றன என்ற விடயம் பற்றி பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக செய்திகளும் கட்டுரைகளும் வெளியாகிவிட்டன - வெளிவந்து கொண்டிருக்கின்றன.

நிலைமை கட்டுப்படுவதாய் - கட்டுங்கடங்குவதாய் -இல்லை. இதைப் பற்றி எழுதிஎழுதிக் கட்டுரையாளர்களும் களைத்து விட்டார்கள். மேடைகளில் பேசிப் பேசி பெரியவர்களும் சலித்து விட்டார்கள். குடாநாட்டின் நிலைமைகளைப் பற்றி பத்திரிகைகளில் கட்டுரைகளை - பத்திகளை - எழுதி ஊதியம் வாங்குகின்றவர்களுக்கு இங்குள்ள இளைஞர்களின் பிரச்சினைகளே போதும்... அவர்கள் அதனை எழுதி எழுதியே பிழைப்பு நடத்தி விடலாம்.

அந்தளவுக்கு நிலைமை சுத்த மோசம். இளைஞர்களும் தங்களைப்பற்றிப் பத்திரிகைகளில் செய்திகள் வரவர தங்களுடைய இயல்பை மேலும் மோசமாக்குகின்றார்களே ஒழிய கொஞ்சமாவது திருந்திக் கொள்வோம் - செய்த பிழைகளுக்காக மனம் வருந்திக் கொள்வோம் - என்ற சிந்தனை அவர்களிடம் 'துளியும்' ஏற்படுவதாகத் தெரியவில்லை.

அன்பான அண்ணன்மாரே! தம்பியரே....! பெரிய பெரிய எழுத்தாளர்களும் - அறிஞர்களும் எழுதி -சொல்லி - திருந்தாத நீங்கள் என்னுடைய கட்டுரையைப் படித்து திருந்துவீர்கள், உங்களுடைய பாதையை மாற்றிக் கொள்வீர்கள் என்று நான் நினைத்தால் அது என்னுடைய முட்டாள் தனம். (கெடுகுடி சொற்கோளாது என்பது எனக்கும் தெரியும்.)



கச்சாயில் மோதலில் ஈடுபட்ட குழுவினரிடம் மீட்கப்பட்ட ஆயுதங்கள்....

அப்படியென்றால் நீ எதற்காக மினக்கெட்டு இதனை எழுதுகின்றாய் என்று நீங்கள் என்னிடம் கேட்கலாம்...!

என்ன செய்வது ....! மற்றவர்களைப் போல எனக்கும் ஓர் ஆதங்கம், நப்பாசை.....! நாளுக்கு நாள் உங்களின் அட்டூழியங்கள் - அத்துமீறல்கள் - அதிகரித்துச் செல்வதைப் பார்த்து மனம் வருந்துகின்ற - கவலை கொள்ளுகின்ற - பொதுமக்களில் நானும் ஒருவன்.

அதற்காக உங்களுக்கு முன்னால் வந்து உங்களைத் திட்டவோ உங்களுக்கு அறிவுரை சொல்லவோ என்னால் முடியாதப்பா.....!

ஏனென்றால் நீங்கள் பொல்லாதவர்கள்.... ஆள்வைத்து அடிப்பீர்கள்.... ஒழித்து நின்று வெட்டுவீர்களா.... கண்மூடித்தனமாகக் கொத்துவீர்கள்.... ஏன் கைக்குண்டு கூட எறிவீர்கள் (இது என்னுடைய கருத்தல்ல.... உங்கள் மீதான சமூகத்தின் கணிப்பு)

அதற்கெல்லாம் பயந்துதான் இப்படி ஒரு யுக்தி....

சரி விடயத்துக்கு வருகிறேன்.

அதற்கு முன்னர் இன்னொரு விடயம்... எல்லா இளைஞர்களும் மோசமான போக்குடையவர்கள் - காட்டுமிராண்டித்தனமான இயல்புடையவர்கள் என்று நான் சொல்லவரவில்லை.

யதார்த்தப் புறநிலைகளைப் புரிந்து கொண்டு - நாட்டு நிலைமைகளைத் தெரிந்து கொண்டு - தனது குடும்பத்தின் - சமூகத்தின் - பாரங்களைத் தாங்கி நல்ல மனிதர்களாக வாழத் துடிக்கின்ற இளைஞர்களும் நம்மிடையே மிகப் பெரும் எண்ணிக்கையில் இருக்கின்றார்கள். (என்னைப் போல...! நீங்கள் நம்பினாலும் நம்பாமல் விட்டாலும் சரி ... சத்தியமாக நான் அப்படிப்பட்டவன்தான்....!)

சரி, முதலில் சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் எபபடியிருந்தது. இங்குள்ள இளைஞர்களின் நிலை எவ்வாறு இருந்ததென்று கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

ஷெல் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுக்களுக்கு மத்தியில், நாளாந்தம் அழிவுகள், அநியாய இழப்புக்களுடன் ஓடிக்கொண்டிருந்தது எங்களின் வாழ்க்கை. அப்போது இளைஞர்களின் சிந்தனை ஓட்டங்கள் வேறு திசையில் குவிந்திருந்தன.

இன விடுதலைப் போருக்கான பங்களிப்பு, குடும்ப வறுமையை நீக்குவதற்கான கடின உழைப்பு என்ற பக்கங்களில் இளைஞர்கள் தங்களது செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. ஊருக்கு ஊர் கோஷ்டி மோதல்களும், வெட்டுச் கொத்துச் சம்பவங்களும் வெகுவாக அதிகரித்திருக்கின்றன.

1996 ஆம் அண்டு யாழ்ப்பாணக் குடாநாடு அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பிறகு இந்தக் கேவலங்கள் ஒவ்வொன்றாகத் தலையெடுக்கத் தொடங்கின.

அப்போது கூட நிலைமை இன்னும் சில வருடங்களில் இவ்வளவு மோசமடையும் என்று எவருமே நினைத்திருக்கமாட்டார்கள்.

வாள்கள், கத்திகள் கொண்டு - கண்ணை மூடிக்கொண்டு - வெட்டித் தள்ளுகின்ற சம்பவங்கள் தாராளமாகிவிட்டன.

குடாநாட்டில் தினமும் குறைந்தது ஓரிடத்திலாவது வெட்டுப்பாடு நடந்துகொண்டுதான் இருக்கிறது. அண்மையில் கூட நல்லூர் மருதடி வீததியில் இளைஞர் ஒருவன் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறான்.

வெட்டு என்றால் சதாரண வெட்டு அல்ல... தலையின் அரைவாசிப் பகுதி பிளவுண்டு



அண்மையில் நல்லூர் மருதடிப் பகுதியில் வாளால் வெட்டிக் கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் ...

அந்த இடத்திலேயே உயிர்போகும் அளவுக்கு பலமான வெட்டு.

இதேபோல சமீபத்தில் கச்சாய் பகுதியில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தைப்பற்றியும் அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

இரண்டு பகுதியினருக்கு இடையில் ஏற்பட்டவாக்கு வாதம் கோஷ்டி மோதலாக வெடித்து, சுமார் 15 நாள்களாகத் தொடர்ந்தது. பெண்கள், சிறுவர்கள் முதியோர்கள் என்று கூடப் பாராமல் ஏராளமானவர்கள் வெட்டிப் படுகாயப்படுத்தப்பட்டார்கள்.

இதிலே வேடிக்கை என்ன தெரியுமா...?

மோதலின் ஒரு கட்டத்தில் ஓர் அணியின் வீரர்கள் (?) மற்றைய பகுதியினர் மீது -அவர்களின் வீடுகள் மீது - கைக்குண்டு வீசித் தாக்கியிருக்கின்றார்கள்.

அந்தத் தாக்குதலுக்குப் பயந்து அப்பகுதி மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் தஞ்சமடைந்தார்கள்.

இந்த இடத்தில் இன்னுமொருவிடயத்தை ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது.

சுமார் ஒரு 10வருடங்கள் பின்னோக்கி உங்களுடைய சிந்தனையை ஓடவிடுங்கள்...

பலாலியில் இருந்து திடீர் திடீரென ஷெல் வந்து விழும். புக்காராவும் கிபிரும் போட்டிபோட்டுக்கொண்டு வந்து எங்கள் ஊர்களுக்குள் - அப்பாவிப் பொதுமக்களின் குடிமனைகள் மீது - குண்டுகளை வீசும்.

அப்போது கையில் அகப்பட்ட பெட்டி படுக்கைகளுடன் போக்கிடம் தெரியாது, கால்போன திசையில் ஓடிச்சென்று நாங்களெல்லாம் கோயில்களிலும் மரநிழல்களிலும் சில நாள்கள் இருந்துவிட்டு மீண்டும் வீடு திரும்புவோம்.

அப்படி இடம்பெயர்ந்து ஓடுகின்ற நேரங்களில் அந்த இடப்பெயர்வுக்கு காரணமான ஆமிக்காரர்களை உங்களுடைய வாயால் எத்தனை தடவை தூற்றியிருப்பீர்கள் -வசை பாடியிருப்பீர்கள்.

இன்றைக்கு ஆமிக்காரன் ஷெல் அடிக்கவும் இல்லை.விமானங்கள் குண்டு வீசவும் இல்லை. ஆனால், இப்போதும் குண்டுத்தாக்குதல்... இடம்பெயர்வு .... எங்களின் எதிரி எங்களுக்குச் செய்ததை நாங்களே எங்களுக்குச் செய்கிறோம்... அவ்வளவுதான்....!

### சினிமாவின் தாக்கமா?

குடாநாட்டில் இடம்பெறுகின்ற கோஷ்டி மோதல்கள், கொலைச் சம்பவங்களுக்கான கரு - மூலம் - இப்போது புதிது புதிதாக வெளிவந்து கொண்டிருக்கின்ற சினிமாவில் இருந்துதான் பிறக்கிறது என்று ஒரு பொதுவான கருத்து இருக்கிறது.

இப்போது வருகின்ற பெரும்பாலான படங்கள் இளைஞர் சமுதாயத்திடம் வன்முறைப் போக்கை - வக்கிரத் தன்மையை வளர்த்து விடுவதாக அமைக்கின்றதென்னமோ உண்மைதான்.

ஆனால், முற்று முழுதாக லாபநோக்கம் கருதி - பார்ப்பவர்களின் தலையில் மிளகாய் அரைக்கின்ற நோக்கில் - வெளிவருகின்ற திரைப்படங்களைப் பார்த்து நாம் வக்கிரர்களாக மாறுகின்றோ மென்றால் -அதுவும் இந்த நூற்றாண்டில் - நாம் எங்கு நிற்கின்றோம் என்பதை கொஞ்சம் ஆழமாகச் சிந்திக்க வேண்டி இருக்கிறது.



கச்சாய் மோதலில் வீசப்பட்ட கைக்குண்டுகளில் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டவை .

### கைக்குண்டுகளை உங்களுக்கு யார் தந்தார்கள்....?

பொல்லுகள் கத்திகள் கொண்டு சண்டை செய்து கொண்டிருந்த எமது வீரர்கள் (....?) இப்போது கைக்குண்டுகளைக் கூட வீசத்தொடங்கிவிட்டார்கள்.

யாழ்ப்பாணத்திலே இளைஞர்களுக்கு கைக்குண்டுகள் எப்படிக் கிடைத்திருக்கும்...?

அது வேறொன்றுமல்ல... எங்கள் இனத்தை வேரோடு அழிப்பதற்காக எங்கள் மீது சில வருடங்களுக்கு முன்ன குண்டு மழைகள் பொழிந்தன அல்லவா...?

அந்த மழை பொழிந்த வானம் இப்போது அமைதியாகக் கிடக்கிறது; கிடக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது! இப்போது அமைதியாக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு...!

அமைதி நிலைமை நீடிக்கக் கூடாது. முந்திய சாவுகள் இந்த மண்ணில் மீண்டும் நிகழ வேண்டும் என்பதில் பல தரப்புகளுக்கும் அதிக விருப்பம்.

அதனால் எம்மவர்களிடமே அதனைக் கொடுத்து - எம்மவர்களையே அழிக்க பல பின்னணிக் சக்திகளைச் சேர்ந்தவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள் போலும்!

இல்லையென்றால் அரச படைகளின் முழுக்கட்டுப்பாட்டில்

**சந்திரமதனா**

இருக்கின்ற பகுதிகளில் இளைஞர் குழுக்களுக்கு எங்கிருந்து வந்தது கைக்குண்டு....?

இந்த விடயத்தில் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும், மக்கள் பிரதிநிதிகளும் விழித்துக் கொள்ளவேண்டிய அவசியமும் அவசரமும் இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டித்தான் ஆகவேண்டும்.

### புலிகள் கவனத்துக்கு !

குடாநாட்டில் இளைஞர்களின் கட்டுமீறிய செயற்பாடுகளை தமிழீழ விடுதலைப் புலிகள் கூட கண்டும் காணாமல் விட்டிருக்கிறார்கள் என்றொரு கருத்து இருக்கிறது.புலிகள் நினைத்தால் இந்த இளைஞர்களின் கொட்டத்தை அடக்குவது மிகவும் சாதாரண விடயம் என்பது பொதுமக்களுக்கு மட்டுமல்ல படையினர் பொலீஸாருக்குக் கூட நன்றாகத் தெரியும். நிலைமை அப்படியிருக்க, இப்போதைக்கு

(VII பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு மூலம் புலிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் இக்கட்டில் சந்திரிகா

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உடன்பாட்டில் விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து கைச்சாத்திட வேண்டிய இக்கட்டு நிலை ஜனாதிபதி தலைமையிலான அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைமையின் ராஜதந்திர காய் நகர்த்தலில் சிக்குண்டு பொதுக்கட்டமைப்பை உருவாக்கவேண்டிய கட்டாய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்று சர்வதேச சமுகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு காரணம், விடுதலைப் புலிகளின் சர்வதேச மயப்படுத்தப்பட்ட பிரசாரமேயாகும். அவர்களின் சர்வதேச மட்டத்திலான செயற்பாடும் காரணம் என்றும் கூறலாம்.

அரசுக்கும் – விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட பின்னர், தலைமையின் ஆலோசனைப்படி விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல்குழு மூன்று தடவைகள் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று திரும்பியுள்ளது.

கடந்த காலங்களில் தமிழர் தரப்புக்குத் தலைமை வகித்த தலைவர்கள் எல்லாம் சர்வதேச நாடுகளுக்குச் சென்று, தமிழர் தரப்பு நியாயப்பாட்டை விளக்கி வந்தது உண்மையோ ஆயினும் அவர்களின் பிரசாரக் குரலை நசுக்கக் கூடிய அளவு, தென்னிலங்கையின் பிரசாரம் தீவிரமாக இருந்தது.

தமிழர்களைப் பயங்கரவாதிகளாகவும், கொலை வெறியர்களாகவும், யுத்த வெறியர்களாகவும் சர்வதேசம் பார்த்தது. அந்தளவுக்கு சிங்களத்தின் பிரசாரங்கள் அமைந்திருந்தன.

அந்தப் பிரசாரங்களை முறியடிக்கும் ராஜதந்திரம் எமது தமிழ்த் தலைவர்களிடம் இருக்கவில்லை. அத்துடன் தமிழரின் நியாயப்பாட்டை உரிய தலைமைகள் உணரத்தக்க வகையில் அவர்களின் குரல் ஓங்கி ஒலிக்கவும் இல்லை.

இலங்கையில் தமிழர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அவர்களின் விடுதலையை – அபிலாஷைகளை – எட்டவே இந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள் என்ற ஒரு செய்தியை மட்டுமே எமது முந்திய தலைவர்களால் சர்வதேச சமுகத் துக்கு கூறமுடிந்தது. அத்தோடு வெளிநாடு களுக்குச் செல்லும் தமிழ்த் தலைவர்கள் தமது அரசியல் வியாபாரத்தையும் தமது உரித்துக்களின் நலன்களையும் மேம்படுத்துவதற்குத் தமது வெளிநாட்டுப் பயணங்களைப் பயன்படுத்தினர். இதனால் தமிழர்தரப்பு நியாயம் உரிய முறையில் உரிய தலைமைகளைச் சென்றடையவில்லை.

போராளிகளின் தியாகத்தால், பொதுமக்களின் அர்ப்பணிப்புக்களால் உருவான போராட்டத்தின் கர்த்தாக்களாகவும் தமிழர் தரப்பின் ஏகப் பிரதிநிதிகளாகவும் விளங்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவின் சர்வதேசப் பிரசாரம், தமிழர் தரப்பின் நியாயப்பாட்டையும் சிங்களத்தின் புறக்கணிப்பையும் சர்வதேசத்துக்குச் சரியாக உணரவைத்தது.

அதன் விளைவு –

கரையோரப் பிரதேச மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் காண நிதியை சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப் பொதுக்கட்டமைப்பு அவசியம் என்பதை சர்வதேச சமுகம் உணர்ந்துள்ளது. அண்மைக் காலங்களில் சர்வதேச சமுகம் தெரிவித்துவரும் கருத்துக்கள் இதை உறுதிப்படுத்துகின்றன.

### கண்டி மாநாடு

கண்டியில் நடந்து முடிந்த மாநாடு கூட பொதுக்கட்டமைப்பின் அவசியத்தை உணர்த்தி உள்ளது. சர்வதேசத்தின் மனதில் பொதுக் கட்டமைப்பின் அவசியம் பதியப்பட்டிருப்பதால், அங்கு உரையாற்றிய ஜனாதிபதியும் நிதியமைச்சரும் பொதுக்கட்டமைப்பை விரைவில் உருவாக்குவோம் என உறுதிமொழி வழங்கியுள்ளனர். இது விடுதலைப் புலிகளின் காய் நகர்த்தலுக்குக் கிடைத்த ராஜதந்திர வெற்றியாகும். கண்டி மாநாடு நிதியை வாரி வழங்கினாலும் அது நிபந்தனை களுடன் கூடிய நிதியாகவே வந்துள்ளது.

உயிராபத்து வந்தாலும் விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை விரைவில் உருவாக்குவேன் என்ற உறுதிமொழியை – உத்தரவாதத்தை – ஜனாதிபதி சர்வதேச சமுகத்துக்கு வழங்கியுள்ளார்.

இந்த உத்தரவாதப்படி ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பை உருவாக்கினால் விடுதலைப் புலிகளுக்கு அதன் மூலம் அங்கீகாரம் கிடைத்துவிடும்.

1994ஆம் ஆண்டு தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமரானார். விடுதலைப் புலிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என சிங்கள மக்களிடம் ஆணையைப் பெற்ற அவர், பதவியேற்றவுடன் விடுதலைப் புலிகளின் தலைமையுடன் தொடர்புகளை ஏற்படுத்தினார். பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அத்திபாரத்தைப் போட்டு, அடுத்துவந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியானார்.

சிங்கள மக்கள் அளித்த ஆணையின்படி – முதல் தடவையாக – ஆயுதக் குழுவான விடுதலைப் புலிகளுடன் துணிச்சலுடன் பேச்சுக்களை 1995ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பித்தார். தமது செயலாரும், நம்பிக்கைக்கு உரியவருமான பாலபட்ட பெண்டி தலைமையிலான குழுவை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி விடுலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்தார்.

ஆனால் – விடுதலைப்புலிகள் முன்வைத்த – மக்களின் இயல்பு நிலையைக் கொண்டு வருவதற்கான திட்டங்களை – அவர் நடைமுறைப்ப டுத்தப் பின்னடித்ததால் பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன. யுத்தம் வெடித்தது.

## கண்டி மாநாட்டு வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றப் போகின்றார்?

### சமாதானத்துக்கான யுத்தம்

தமிழ்மக்களுக்கு எதிராக 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற பெயரில் பாரிய யுத்தம் ஒன்றை தமிழ் மக்கள் மீது அவர் திணித்தார். அன்று ஜனாதிபதி ஆரம்பித்து வைத்த யுத்தம் இறுதியில் அரசுப் படைகளும் –விடுதலைப் புலிகளும் இராணுவ சமநிலையில் உள்ளனர் என்ற செய்தி சர்வதேசத்துக்குச் சென்றது. இதன் மூலம் விடுதலைப் புலிகளுக்கும், தமிழர்தரப்புக்கும் ராஜதந்திர வெற்றி கிட்டியது.

தெற்கில் ஆட்சிக்கு மாறிமாறி வருவது இருகட்சிகள்தான். ஒன்று ஐ.தே.கட்சி. மற்றையது சுதந்திரக்கட்சி. சிங்கள மக்களின் தலைமைகள் அவையிரண்டும்தான். இவ்விரு தலைமை களும்தான் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். ஜனநாயக ரீதியினாயிலும் சரி, யுத்தம் மூலம் ஆயினும் சரி தமிழ் தரப்பின் பிரச்சினைக்கு இவர்கள்தான் தீர்வு காண்டாக வேண்டும்.

இவ்விரு தலைமைகளிலும் ஐ.தே.கட்சியின் தலைமை, தமிழ்த்தரப்பின் ஏகப் பிரதிநிதிகளாக, உத்தியோகபூர்வமான தரப்பாக விடுதலைப் புலிகளை ஏற்றுவிட்டது. யுத்த நிறுத்த உடன்பாட்டை விடுதலைப் புலிகளுடன் செய்ததன் மூலம் – அவர்களுடன் 6 கட்டப் பேச்சுகளை நடத்தியதன் மூலம் –அந்தத் தலைமை விடுதலைப் புலிகளுக்கு தமிழர் தரப்பின் ஏகப் பிரதிநிதியாக அங்கீகாரம் வழங்கிவிட்டது.

சுதந்திக் கட்சியின் தலைமை, 1994ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளைத் தமிழர் தரப்பின் ஏகப் பிரதிநிதிகள் என ஏற்றுப்பேச்சுக்களை ஆரம்பித்தபோதும், பேச்சுக்கள் முறிவடைந்தபின் ஈ.பி.டி.பி., புளொட் போன்ற அமைப்புக்களை அரவணைத்துக்கொண்டு, விடுதலைப் புலிகள் தமிழர் தரப்பின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர் என்று கூறிவந்தது.

### இறங்கி வந்தார் சந்திரிகா

மீண்டும் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களுடன் உடன்பாடு எட்டும் அளவுக்குச் சந்திரிகாவின் தலைமை வந்துள்ளது. சர்வதேச அழுத்தங்களுக்குப் பணிந்து – பேரினவாதிகளின் எதிர்புக்களைப் புறம் தள்ளி பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை விடுதலைப்புலிகளுடன் ஜனாதிபதி செய்வதன் மூலம் விடுதலைப் புலிகளே தமிழர் தரப்பின் ஏகப்பிரதிநிதிகள் என்ற அங்கீகாரத்தை வழங்கமுடியும்.

ஐ.தே.கட்சித்தலைமை யுத்த நிறுத்த உடன்பாடு மூலம் வழங்கிய அங்கீகாரம் போன்று சுதந்திரக்கட்சித் தலைமை பொதுக்கட்டமைப்பு உடன்பாடு மூலம் அங்கீகாரம் வழங்கினால் எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுக்களை தடங்கலின்றி முன்னெடுக்க வழி ஏற்படும். இல்லையேல் இரத்த ஆறு மீண்டும் இந்த நாட்டில் ஓடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

### யுத்த மோகங்கள் கலைய...!

பொதுக்கட்டமைப்பை விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தி, தற்சமயம் சூழ்ந்துவரும் யுத்த மேகங்களைக் கலைக்க ஜனாதிபதி முன்வருவாரா? அல்லது பேரினவாதிகளின் விருப்பத்துக்கு இசைந்து நடந்து மீண்டும் ஒரு யுத்தம் மூலம் நாடு பிளவுபடுவதற்கு கால்கோள் இடப்போகின்றாரா?

சமாதானத்தை நோக்கமாகக் கொண்டு நாட்டின் தலைமைப் பதவியை ஏற்று கடந்த பத்து வருடங்களாக அதிகாரக் கதிரையை தக்கவைத்துக் கொண்டிருந்த சந்திரிகா அம்மையார் தனது இறுதிக்காலத்தில் நாட்டை யுத்த நிலையிலா? சமாதானச் சூழலிலா? அடுத்த தலைமையிடம் கையளிக்கப் போகின்றார் என்பதே இன்று சகலரின் மனங்களிலும் எழுந்துள்ள கேள்விகளாகும்.

**குகா**

---

# பெருமைக்குரிய 'பொல்காவலை வடே'

யாழ்ப்பாணம் 'கிராண்ட பஜார்' வீதியிலுள்ள 'சுப்பையா சாற் எம்போறியம்' முன்பாக அந்த 'பரீனா' கார் 'சடின் பிரே' க்குடன் நிறுத்தப்பட்டது. காரிலிருந்து கறுவாக்காட்டு நாகரிக ஜோடி போன்ற அரசரத்தினமும் அந்த அழகியும் இறங்குகிறார்கள்...

அவர்களை 'சுரையா கபே'க்காரர்கள் வரவேற்று உபசரிக்கிறார்கள். அங்கு 'ஓவல்' குடித்துவிட்டு 'பில்' பணத்தைக் கொடுக்கும்போது அரசரத்தினமும் முதலாளியும் ஆங்கிலத்தில் ஏதோ பேசிக்கொள்கிறார்கள். 'அதுக்கென்ன சேர்... ஆனால் ஓர் அரை மணித்தியாலம் சுணங்கும்... ஆயிரம் போதுமா சேர்?' என்றார். மீண்டும் வந்தவர்களும் பக்கத்துக் கடைவரைக்கும் போய்விட்டு வருவதாகச் சொல்லி வெளியேறுகிறார்கள்.

அடுத்து 'சுப்பையா சாறி எம்போறியத்திலே' அவர்களுக்குத் தடபுடலான வரவேற்பு. முதலாளி சுப்பையாவோ ஓடிச்சென்று அங்குள்ள மெற்றீறியல் முழுவதையும் எடுத்து மேசைமீது பரப்புகிறார். ஆயிரம் ரூபாவுக்கு பிஸினஸ் – பேரம் பேசாத –அலுப்பில்லாத வியாபாரம்.

'பேசை'த் திறந்து பார்த்துக்கொண்டே அரசரத்தினம் 'மணி கொஞ்சம் குறையுது போலக் கிடக்கு... பெடியனை ஒருக்கா சுரையா கபே வரைக்கும் என்னுடன் அனுப்பி விடுங்கோ எடுத்துக்கொடுத்து விடுகிறேன்' என்றார்.


சோமு பார்சலைக் காரில் வைத்துவிட்டு ஐயாவுடன் சுரையா கபேக்குப் போகிறான். அங்கு 'அது' இன்னமும் முடியவில்லை என்பதற்காக அரசரத்தினம் அவர்களைக் கடிந்து கொள்கிறார். தமக்கு நிற்கநேரமில்லை அந்த ஆயிரத்தையும் இவனிடத்திலே கொடுத்து விடுங்கள் என்கிறார். சோமுவிடம் அதை வாங்கிக்கொண்டு போகும்படி கூறுகிறார்.

கடைசியாக சுரையா கபேயிலிருந்து சோமு கொண்டு வந்த பார்சலை சாறி எம்போறியத்தார் வெட்டிப் பார்த்தால்... சூடு அகலாத சுகந்த மணம் வீசுகின்ற ஆயிரம் வடைகள்.

◆ ◆ ◆

இது அமரர் கே.வி.நடராசன் 1960 காலப்பகுதியில் எழுதிய 'கனவான்' சிறுகதையின் சுருக்கம். பின்னர் அவர் வெளியிட்ட 'யாழ்ப்பாணக் கதைகள்', 'வேலி' கதைத் தொகுதிகளிலும் அக்கதை இடம் பெற்றிருக்கிறது. அந்தக் காலத்திலே ஆயிரம் ரூபாவின் மதிப்பு... வடை ஒன்று ஐந்தோ பத்துச் சதத்துக்கு விற்ற காலம்... இப்பொழுது புரிந்திருக்குமே கனவானாக வந்தவர் செய்த மோசடி...

மேற்படி கதையினை அப்பொழுது வெளியான ஓர் உண்மைச் செய்தியைக் கருவாகக் கொண்டே ஆசிரியர் எழுதியிருக்கிறார். அப்படியானால் அந்த அரசரத்தினம் யாராக இருக்கலாம்? சுரையா கபே சுப்பையா சாறி எம்போறியம் எல்லாம் எவையாக இருக்கலாம் என்றவாறாகவெல்லாம் எண்ணத் தலைப்பட்டு




விட்டீர்களா? சும்மா போங்கள்... நான் இந்த வாரம் வடையைப் பற்றித்தான் எழுதப்போகிறேன்.

தோசை, வடை என்பன தமிழர்களுக்கேயுரிய அவர்களின் பாரம் பரிய உணவுப் பண்டங்கள். தமிழர்களுக்கு எதிராக இனவாதம் பேசும்போதும் சிங்களவர்கள் தோசை, வடையைக் குறியீடாகக் கொள்வதுண்டு. ஆனால் அவர்களே சைவக் கடைகளுக்குச் சென்று அவைகளைச் சுவைக்கவும் தவறுவதில்லை. பின்னர் அவர்களும்தாம் 'வடை' சுடப் பழகிவிட்டனர்......

ரயில் பயணங்களின் போதெல்லாம் நிலையத்துக்கு நிலையம் உணவுப் பொருள்கள், பண்டங்கள் என்றெல்லாம் விற்பனைக்கு வரும். வவுனியா என்றால் கச்சான், குருநாகல் என்றால் தென்னம் பூரான் என்பதுபோல பொல்காவலை வந்தால் வடை வரும். 'பொல்காவலை வடை' என்றால் அதற்குத் தனிச்சிறப்பு.

பொல்காவலை ரயில் நிலையத்திலே ரயில் நின்றதும் ரயில் பெட்டிகளுக்குள்ளும், பெட்டி சன்னல் ஊடாகவும் மிளகாய் பொரியலும் தலைநீட்டிய அந்த 'வடே' யாவாரம் சூடுபிடிக்கும். தமிழர்களும்தான் அதை விரும்பி வாங்குவார்கள். அதன் சுவையே தனியானதுதான். அதுதான் சொன்னேனே, சிங்களவர்களும் வடை சுடப் பழகிவிட்டார்களே, என்று...!

பொல்காவலை வடையைப் போலவே கொழும்பு கொச்சிக்கடை வடையும் இன்னொரு வகையில் சுவையும் சிறப்பும் வாய்ந்தது. அங்குள்ள புனித அந்தோனியார் வீதியிலுள்ள குறிப்பிட்ட அந்த இடத்திலே தயாராகும் நெல்லிக்காய்ப் பருமனான அந்தச் சிறிய வடைகளின் சுவையும் தனித்துவமானதே!

ஏ-9 பாதை திறந்த பின்னர் அந்த வகை வடைகள் இங்கும் அறிமுகமாகிவிட்டன. ஆரிய குளத்திலே ஆரம்பித்த இந்த வியாபாரம், இன்று மூலை முடுக்கெல்லாம் கூடச் 'சூடு' பிடித்துவிட்டது. நடமாடும் கண்ணாடிப் பெட்டி வண்டியில் வைத்து நடத்தப்படும் இந்த வியாபாரம் கொத்து ரொட்டி போல 'ஒளிவுமறை'வின்றி பகிரங்கமாகவே நடத்தப்படுகிறது. இறால் வடையையும் கூடவே காட்சிக்கு வைத்துக்கொண்டு, எல்லாவற்றையுமே ஒரே எண்ணெய்ச் சட்டிக்குள் போட்டெடுக்கிறார்கள். அதனால் அந்த 'ரேஸ்ட் வடையை' கண்டு முகம் சுழிப்பவர்களும் இருக்கிறார்கள்.

◆ ◆ ◆

ஒரு போட்டி என்று வந்தபோது ஒருவன் நூறு வடைகளைத் தின்று சாதனை படைத்து விட்டான். அதுவும் சாதாரண ரேஸ்ட வடையோ கொச்சிக் கடை வடையோ அல்ல; சுரையா கடை வடைகள்....

'எப்படியப்பா இந்தச் சாதனையை உன்னால் நிலைநாட்ட முடிந்தது?' என்று ஒரு பத்திரிகையாளர் ஆசாமியைக் கேட்டார். அதற்கு அந்த ஆசாமி சொன்ன பதில் பின்வருமாறு.

'காலையில் சுரையா கடையிலிருந்து நூறு வடைகளை வரவழைத்துச் சாப்பிட்டுப் பார்த்தேன். முடியக் கூடியதாக இருந்தது... அந்தத் துணிச்சல் தான்...'

**சண் அங்கிள்**

# செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்...-02

தோளிலிருந்த சால்வையை எடுத்து, புளியமர வேரில் படிந்திருந்த மண்ணைத் தட்டினார் செல்லையாத் தாத்தா . பின்னர் மரவேரில் அமர்ந்து கொண்டார். விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் ஓடி வந்து அவரருகே அமர்ந்து கொண்டனர். தாத்தா எல்லோரையும் ஒரு முறை பார்த்தார். வழக்கமாக அருகருகே அமர்ந்திருக்கும் இனியனும் எழிலனும் வேறு இடங்களில் அமர்ந்திருப்பதைக் கண்ணுற்றார் "என்ன, இனியன் எழிலனை விட்டுத் தள்ளியிருக்கிறாய்"? "அவன் என்னைக் கறுப்புக் காகம் என்டுறான் " என்று சொன்னான் இனியன் .

"நாங்கள் எல்லோருமே கறுப்பர் தான்!" என்று சொல்லிச் சிரித்தார் தாத்தா.

"ஏன் தாத்தா இப்பிடி ஒராள் கறுப்பாயும், மற்றாள் வெள்ளையாயும் இருக்கினை?" என்று கேட்டாள் சாந்தி.


"சதையை வெட்டினால் எல்லாரும் ஒரே நிறந்தான். எங்கடை தோல்தான் எங்களை இப்பிடிக் கறுப்பாயும் வெள்ளையாயும் ஆக்கியிருக்குது"

"ஏன் தாத்தா அப்பிடி?"

"எங்கடை உடம்பிலை இருக்கிற நிறக் கலங்கள்தான் இதுக்கெல்லாம் காரணம். எங்கடை உடம்பிலை மெலனின், கரட்டின், ஹீமோகுளோபீன் என்று மூன்று வகையான நிறக் கலங்கள் உள்ளன. இவை பழுப்பு, மஞ்சள்,சிவப்பு நிறமானவை. இதிலை இந்த மெலனின் இருக்கே இதுதான் தோலின்ரை நிற மாற்றத்துக்குக் காரணம். எங்கடை நாடு போலை வெப்பமான நாடுகளிலை வாழுகிற மக்களின்ரை தோலிலை சூரிய ஒளி பட்டு அதிகம் மெலனின் உற்பத்தியாகுது. இதாலை நாங்கள் கறுப்பாக இருக்கிறோம்"

"அப்ப ஏன் தாத்தா வெள்ளைக்காரர், மஞ்சள்காரர், கறுப்பர் எண்டு இனங்களைப் பிரிச்சுச் சொல்லினை" என்றான் எழிலன்.

"ஆதிகாலத்தில் மனிதர்கள் தோன்றிப் பரவிய போது அவர்கள் மூன்று இனங்களாகப் பார்க்கப்பட்டனர். மஞ்சள் அல்லது பழுப்பு நிறமானவர்கள் மங்கோலியர்கள் என்றும், கறுப்பு நிறமானவர்கள் நீக்ரோக்கள் என்றும், வெள்ளை நிறமானவர்கள் காக்கேசியர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இப்போது எல்லா இனத்தவர்களும் கலந்து பல்வேறு நிற வேற்றுமையான இனத்தவர்கள் காணப்படுகின்றனர். இப்போது காக்கேசியர், மொங்கோலியர், நீக்ரோக்கள், மலாயர், அமெரிக்கர் என ஐந்து வகையான இனப்பிரிவினர்களைச் சொல்கிறார்கள். ஆனால் இது சரியான வகைப்பிரிப்பு இல்லை. ஏனெண்டால் ஒரு இனத்திலேயே



பல்வேறு நிற வேறுபாடுகள் உள்ளன".

"அப்பிடியெண்டால் எங்களிலை கறுப்பு, வெள்ளையெண்டு சொல்லுறது பிழைதானே தாத்தா!"

"ஓமோம். வெள்ளைக்காரன் பார்வையிலை நாங்களெல்லாரும் கறுப்பர்தான். அதுக்காக கிறீமுகள் பூசி முகத்தை வெள்ளையாக்கினால் நாங்கள் வெள்ளைக்காரர்களாகி விடேலாது. முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமோ? எண்ட பழமொழியை நீங்கள் கேள்விப்படலையே பிள்ளையள்"

"கேள்விப்பட்டனாங்கள் தாத்தா" "எங்கடை இயல்பிலையிருந்து மாற வெளிக்கிட்டமெண்டால் நிறம் மாறின நரிபோலத்தான் கஷ்டப்படவேணும்"

"அதென்ன கதை தாத்தா?" இனியன் கேட்டான். தாத்தா கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தார். சிறுவர்கள் கதை சொல்லுமாறு நச்சரித்தனர்.

"சரி சொல்லுறன். காட்டில் வாழ்ந்த நரியொன்றுக்கு மக்கள் வாழ்கின்ற நகரமொன்றுக்குச் செல்வதற்கு விருப்பம் ஏற்பட்டது. ஒருநாள் அது யாரிடமும் சொல்லாமல் நகரத்திற்குள் நுழைந்தது. நரி வருவதைக் கண்ட ஊர் நாய்கள் ஒன்று சேர்ந்து அதைத் துரத்திச் சென்றன. நரி தப்பினோம் பிழைத்தோமென ஓடி ஒரு ஆள் நடமாட்டமில்லாத வீட்டிற்குள் நுழைந்து பதுங்கிக்கொண்டது.

அந்த வீடு ஒரு ஓவியக் கலைஞனின் தொழிற்கூடம். அவன் இடையிடையே வந்து அந்த அமைதியான இடத்தில் இருந்து ஓவியங்களை வரைவான். பின்னர் சென்று விடுவான். வெளியே நாய்களின் குரைப்பொலியைக் கேட்ட நரி மேலும் உள்ளே சென்று, வர்ணக் கலவைகள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் பதுங்க முயன்றது. அப்போது வர்ணக் கலவைகள் இருந்த வாளிகள் சரிந்து வீழ்ந்து, நரியின் உடலெங்கும் பல நிறங்களும் அப்பிக்கொண்டன.

இப்போது நரி நிறம் மாறி விட்டது. நாய்களின் சத்தம் ஓய்ந்த பிறகு நரி வெளியே வந்தது. வேகமாகக் காட்டிற்குச் சென்று விட வேண்டுமென எண்ணியது. வீதியால் நடந்து போகும் போது எதிர்ப்பட்ட நாய்களெல்லாம் பயந்து ஓடின. மனிதர்கள் கல்லால் எறிந்து கலைக்காமல் வேடிக்கையாகப் பார்த்தனர்.

நரிக்குப் புதுமையாக இருந்தது. தன்னிலே ஏதோ மாற்றம் நிகழ்ந்திருப்பதைக் கண்டு கொண்டது. காட்டிற்குள் கம்பீரமாகப் பிரவேசித்தது. ஏதோ ஒரு புதிய மிருகம் வருகிறது எனக் கருதிய விலங்குகளெல்லாம் தறி கெட்டு ஓடின நரிக்குத் தானே காட்டு ராஜா ஆக வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. மிருகங்கள் எல்லாவற்றையும் அழைத்தது. தானே ராஜா என்றது. எல்லா மிருகங்களும் பயத்தில் தலையசைத்தன.

சில நாள்களின் பின்னர் காட்டில் மழை பெய்தது. அப்போது நரியின் உடலிலிருந்த நிறமெல்லாம் கரைந்து போனது. ஏனைய மிருகங்களும் நரியை இனங்கண்டன. ஏமாற்றிய நரியை விரட்டித் துரத்தின.ஓடி ஓடிச் சோர்ந்து போன நரி, ஓரிடத்தில் வீழ்ந்து இறந்து போனது" என்று கதையைக் கூறி முடித்தார் தாத்தா.

"இப்பிடியொரு நாடகம் பாத்தனாங்கள் தாத்தா" என்றாள் சாந்தி.

"ஓஹோ...நீங்களும் 'பஞ்சவர்ண நரியார்' நாடகம் பாத்தனீங்களே! இந்தக் கதைதான் அந்த நாடகத்திலை வந்தது. குழந்தை ம.சண்முகலிங்கம் என்பவர் இந்த நாடகத்தை எழுதியிருக்கிறார்" என்றார் தாத்தா.

"சரி பிள்ளையளே! நேரமாச்சு. நான் நடக்கப் போறன்" என்று சொல்லியபடி தாத்தா எழுந்தார். பிள்ளைகளும் புறப்படத் தயாராகினர்.

*(தாத்தா மீண்டும் வருவார்)*

**– பாபு அண்ணா**

## பொன்மொழிகள் சில....

- உடலில் உறுதியுள்ளவன், உள்ளத்தில் திடமுள்ளவன், உலகத்தைத் தனக்கு வேண்டிய முறையில் அமைத்துக் கொள்கிறான்.
  *– கதே*
- செயலுக்கும் கருத்துக்குமிடையே மாறுபாடுள்ளவனிடத்தில் தன்னம்பிக்கை இருக்காது.
  *– யாரோ*
- உழைப்பு, துக்கம், மகிழ்ச்சி மூன்றும் கலந்ததுதான் வாழ்க்கை. இவை இல்லாதவை சரியான வாழ்வாகாது.
  *– ஆபிரிக்க பொன்மொழி*
- ஒருவன் ஆர்வத்துடன் தன் கடமையில் மூழ்கும் போதுதான் தன்னம்பிக்கை தளிர் விட்டுத் துளிர்க்கிறது.
  *– டேவிட் ஜே.ஸ்பார்ட்ஸ்.*
- உன் மனதைப் புண்படுத்துவது எது என்று உனக்குத் தெரிந்தால், மற்றவர்களைப் புண்படுத்துவதும் எது என்பது தெரியும்.
  *– ஆபிரிக்க பொன் மொழி.*

அமுதசுரபி




**தம்பி, தங்கைகளே!**

**'சிறுவர் பொழில்'**

பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

## சிரித்திரு....!






வரைந்தவர் : கோபிகாலினி போலிங்கம்
தரம் - 1
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

*(சென்ற வாரத் தொடர்ச்சி....)*

"ஏன், நீதான் செயல் வீரனாயிற்றே! பொதுவான ஒரு வழியைச் சொல்லேன் பார்க்கலாம்" என்று குமுறினார் ஆங்கில அதிகாரி.

"சரி! நானே சொல்கிறேன். இங்கே இரண்டு பீப்பாய்கள் இருக்கின்றன. இந்தப் பீப்பாய்கள் எதற்காக உபயோகப்படுத்தப்படுகின்றன என்பதை நீயும் அறிவாய். வெடிமருந்து போட்டு வைக்க உபயோகப்படுத்தும் பீப்பாய்கள் இவை என்பதை நீ மறந்தாலும் நான் உனக்கு நினைவூட்டுகிறேன்.

"இப்போது இந்த இரண்டு பீப்பாய்களிலும் நான் ஒரு துளையை இடுகிறேன். நீ ஒரு பீப்பாயின் மேல் அமர்ந்துகொள். நான் ஒரு பீப்பாயின் மேல் அமர்ந்துகொள்கிறேன். இந்த இரண்டு பீப்பாய்களில் எதன் மீதாவது அமரவும் உனக்கு சுதந்திரம் உண்டு. இதன் பிறகு நான் ஒரு வயரை செருகி வைப்பேன். அதன் முனையையும் பற்ற வைத்துவிடுவேன். அது மெல்ல மெல்ல கனிந்து




பீப்பாய்க்குள் போகும். இவ்வாறு பற்ற வைத்த பின்னாலும் யார் ஒருவர் நீண்ட நேரம் வரை கீழே இறங்காமலேயே அந்தப் பீப்பாயின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர். சம்மதமா? அதற்கான தைரியம் உன்னிடமிருக்கிறதா?" என்று கேட்டார் இஸ்ரேல் பொட்னாம்.

'சரி' என்று வீராவேசமாக ஒப்புக்கொண்டார் ஆங்கிலேய அதிகாரி. பொட்னாம் எழுந்தார். இரண்டு நீண்ட 'ப்யூஸ்' வயர்களை இணைத்து அதைப் பீப்பாய்க்குள் செலுத்தி விட்டு நுனியைப் பற்ற வைத்துவிட்டு அமைதியாகப் பீப்பாய் மேல் வந்து அமர்ந்தார். ஆங்கிலேய அதிகாரியும் ஒரு பீப்பாய் மேல் அமர்ந்திருந்தார்.

நெருப்பு சிறிது சிறிதாகக் கனிந்து பீப்பாயை நோக்கி வர ஆரம்பித்தது. அது பாதித் தொலைவில் வந்தவுடனேயே ஆங்கிலேய அதிகாரி நடுங்கினார்.

'இவன் நம்மைத் துண்டு துண்டாகச் சிதற வைக்கத் திட்டம் தீட்டித்தான் இம்மாதிரி ஏற்பாடு செய்திருக்கிறான்!' என்று எண்ணினார்.நெருப்பு மெல்ல மெல்ல ஊர்ந்து வந்து கொண்டிருந்தது.

'இது மிகவும் பைத்தியக்காரத்தனமான ஒன்று. இதனால் நாம் இருவருமே வெடித்துச் சிதறி இறந்து விடுவோம். இது பயத்துக்குரிய ஒன்று.'

இஸ்ரேல் பொட்னாம் பேசவில்லை. அவர் முகத்தில் எவ்விதச் சலனமும் இல்லை. பீப்பாயை விட்டு அவர் இறங்கவுமில்லை. இன்னும் நன்றாக, வசதியாக அமர்ந்துகொண்டார் அவர். திரி எரிந்து பீப்பாய்க்கு வெகு அருகில் வந்துவிட்டது.

இன்னும் முப்பது வி[illegible] தாமதித்தால் நெருப்பு பீப்பாய்க்குள் போய்விடு[illegible]படிப் போய்விட்டால்...?

நினைத்தால் கூடத் தப்பி ஓட முடியாது.

அதற்கு மேல் ஆங்கிலேய அதிகாரியால் அமைதியாக இருக்க முடியவில்லை. பீப்பாயிலிருந்து துள்ளிக்குதித்து இறங்கினார். திடுதிடுவென அந்த இடத்தைவிட்டு ஓட ஆரம்பித்தார். பாதுகாப்பான இடத்தில் நின்று திரும்பிப் பார்த்தார். பீப்பாய்க்குள் நெருப்பு நுழைய ஒரு விநாடி இருந்தது. அப்போதும் பொட்னாம் பீப்பாயை விட்டு எழவில்லை.

ஆங்கிலேய அதிகாரியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்.

"கோழை யார் என்பது புரிந்ததா?" என்று சத்தமாகக் கேட்டார்.

அவர் அவ்வாறு கேட்டு முடித்தவுடன், பீப்பாய் வெடித்துத்துண்டு துண்டாகச் சிதறி விடும் என்று ஆங்கிலேய அதிகாரி எதிர்பார்த்தார். அவ்விதமான அசம்பாவிதம் எதுவும் நடைபெறவில்லை. பீப்பாய்க்குள்ளும் நெருப்புப் போய்விட்டது.

பொட்னாம் அமைதியாகவே இருந்தார். ஐந்து நிமிடங்களுக்குப் பின் முழுதாக இறங்கி வந்தார் பொட்னாம்.

"இந்தப் பீப்பாய்க்குள் இருப்பது வெடி மருந்து என்றுதானே நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய். இல்லை,அது வெங்காயம், வெங்காயத்தைச் சமையல் அறையில் கொட்டிய பின் தான் வெடிமருந்து அதில் நிரப்பப்பட வேண்டும்" என்று அமைதியாகக் கூறினார்.

ஆங்கிலேய அதிகாரி மிகப் பெரிய அவமானத்தை அடைந்தார். அன்று இரவோடு இரவாக அந்த அதிகாரி அந்தப் பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு மாற்றல் வாங்கிக்கொண்டு சென்று விட்டார். இந்த அமெரிக்கச் சுதந்திரப் போரில் ஈடுபட்ட அந்த அதிகாரி இஸ்ரேல் பொட்னாம் பின்னாளில் அமெரிக்காவின் இராணுவத் தளபதியானார்.

'புத்தி இருந்தால் எதையும் சாதிக்கலாம்'.

*(முற்றும்)*



## அதீத வாழ்வு

அதீத வாழ்வு
விரித்திருந்த வெண்தாளாய்
வாழ்க்கைவெளி
வர்ணங்களும் தரப்பட்டிருந்தன.
நிர்ணயிக்கப்பட்ட வர்ணங்களை
நிராகரிப்பதில் பெருமையுறும் என்னிடத்தில்
நிர்ச்சலனம்....
வர்ணங்களின் இணைவிலான
புதிய வரைவுருக்களை
மாற்றி மகிழ்ந்தது மனம்.
அவற்றின் முகங்கள்
எவரது கற்பனையுள்ளும் சிக்காது.
இறந்து போன யுகத்தின்
அப்பாலும்
இனியொருநாள் வரும்.
எதிர்காலத்திலும் உலவியதில்
என் மனத் திருப்தி.
ஆனால்....
ஒரு தனித்த பாலையில்
தெளிவுற ஒளிர்ந்த
எரி நட்சத்திரத்தின் உதிர்வாய்
இளமை விலகிய முனைப்பு
என்னை நேற்றுலுக்கிப் போகையிலே
தோற்றதுணர்ந்தேன்.
என் நரைகளினூடு தெரியும்
மற்றவர் திரைகளிலே
ஏதோதோ ஓவியங்கள்
கிறுக்கப்பட்டும் ... கீறப்பட்டும்.....
என்னதோ வெறும் வெளியாய்...
வர்ணக்குழம்புகளை
விசிறியடித்துக்கொண்டாவது
வாழ்ந்து பார்த்திருக்கலாம்
ஒரு முறை....

சாரங்கா தயானந்தன்
(நன்றி : புதுவிசை)

## நீயும் நானும்

*சாம்பல் பூத்திறுகிய*
*இமைகளைத் திற*
*வெளிச்சம் பரவட்டும்*
*நூற்றாண்டுகளாய்*
*அசைக்காத கைகளை*
*உயர்த்து*
*ரத்தம் பாயட்டும்*
*வேர் விட்டுப் புதைந்துபோன*
*கால்களைப் பெயர்த்தெடு*
*இயக்கம் தொடரட்டும்*
*புழுக்கள் நெளியும்*
*அறிவைச் சுத்தம் செய்*
*சிந்தனை ஒளிரட்டும்*
*மண்ணில் மக்கிய*
*மனசை எடு*
*அன்பு பிரவகிக்கட்டும்*
*மீண்டும் மீண்டும்*
*நீயும் நானும்*
*அழிய நேரினும்*
*நேசம் வளர்க்க*
*கொஞ்சம் நீரூற்று*
*நம் குழந்தைகள் வாழட்டும்*

உதயஷங்கர்

# ....ஆதரவற்ற பிள்ளைகளை அரவணைக்கும் கருணை இல்லம்....

இன்றைய சிறார்கள் நாளைய உலகின் தலைவர்கள்; அந்த சிறார்களின் எதிர்காலம் சிறக்க, அவர்களை ஒரு நல்ல தலைவர்களாக உருவாக்கிக் கொண்டிருக்கின்றது உரும்பிராய் கருணை இல்லம்.

கருணை இல்லமானது 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. உருப்பிராயை சொந்த இடமாக கொண்டவர்களும் தற்போது லண்டனில் புலம் பெயர்ந்து வாழ்பவர்களுமாகிய பொன்.தெய்வேந்திரம் அவரது துணைவியாராகிய திருமதி தெ.வசந்தராணி ஆகிய இருவரும் இணைந்து இந்தக் கருணை இல்லத்தை ஸ்தாபித்தனர்.

'கருணை இல்லம்' முளைக்க ஆரம்பித்து தற்போது விருட்சமாக உள்ளது. இது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் தொடர்பாக ஸ்தாபகரிடம் கேட்டறிந்தோம். அவற்றை உங்களுடன் இங்கு பகிர்ந்து கொள்கின்றோம்.

**இல்லம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம்**

1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனக் கலவரத்தின்போது, வன்செயலின் போது ஆயிரக்கணக்கான குழந்தைகள் அநாதரவாக்கப்பட்டனர்.

அந்தநேரத்தில் பெரியோர்களான தங்கம்மா அப்பாக்குட்டி, மட்டக்களப்பைச்சேர்ந்த வி.ரி.குமாரசாமி,



சுவாமி ஜீவானந்தா ஆகியோர் இல்லங்களை அமைத்து அநாதரவாகிப்போன சிறுவர்களுக்கு ஆதரவு வழங்கினார்கள்.

அந்த நேரத்தில் அவர்களுக்கு பெரிய கஷ்டம் நிலவியது. ஒழுங்கான கட்டட வசதிகள், இருப்பிடவசதிகள் இன்றி பெரும் சிரமமடைந்தார்கள்.

அந்த நேரத்தில் நாம் லண்டனில் தமிழ் அநாதைகள் அறக்கட்டளை நிறுவனம் ஒன்றை அமைத்தோம். பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிதியம் அது. அந்த நிதியத்தின் ஊடாக இங்குள்ள இல்லங்களுக்கு உதவி வந்தோம்.

தங்கம்மா அப்பாக்குட்டியின் இல்லம், சுன்னாகம் வாழ்வகம், திருநெல்வேலி வைசவித்தியா விருத்தி இல்லம், மானிப்பாய் மகேஸ்வர இல்லம், திருகோணமலை ஸ்ரீசண்முகா இல்லம், சிவானந்தவாரியார் இல்லம், அன்பு இல்லம், அன்னை சாரதா இல்லம், மட்டக்களப்பில் மங்கையர்க்கரசி இல்லம், யோகர் சுவாமி இல்லம்,திருநாவுக்கரசர் இல்லம், திலகவதியார் இல்லம் போன்ற பல இல்லங்களுக்கு பண உதவியையும் வீடு, நிலம் போன்றவற்றை வாங்குவதற்கான நிதி உதவிகளையும் இந் நிதியத்தின் மூலம் வழங்கினோம்.

இந்த சூழ்நிலையில் நான் யாழ்ப்பாணத்தில் ஓர் இல்லம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் துளிர்விட்டது. அதனை ஆரம்பித்து நாங்களே தொடர்ந்து நடத்தவும் தீர்மானித்தோம். லண்டனில் இருந்த போது எமது மனதுக்குள் இந்த விடயம் குடைந்து கொண்டேயிருந்தது.


அந்த நேரத்தில்தான் எமது உறவினர் ஒருவர் உரும்பிராயில் தற்போது கருணை இல்லம் அமைந்துள்ள வீட்டையும் காணியையும் விற்க முன்வந்தார். அந்த இடத்தை வாங்கி சீரமைத்து 2002 ஆம் ஆண்டு இல்லத்தை ஆரம்பித்தோம்.

இங்கு மூதூர், மட்டக்களப்பு ,திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற பல மாவட்டங்களையும் சேர்ந்த பிள்ளைகளும் உள்ளனர். எந்தவிதமான பாகுபாடும் காட்டப்படாமல் இங்கு அவர்கள் பராமரிக்கப்படுகின்றனர்.

தமிழ்ப் பிரதேசங்களில் எங்கு இருந்து சிறுவர்கள் வந்தாலும் இங்கு சேர்ப்போம். இங்கு நாம் உள்வாங்கும் பிள்ளைகளை மூன்று வகையில் உள்வாங்குகிறோம்.

தாய், தந்தையரை இழந்த பிள்ளைகள் – தா[illegible] தந்தையர் இருந்தும் வறுமைக் கோட்டின் கீழ் [illegible] பிள்ளைகள் – தாய், தந்தையரில் எவராவது ஒரு[illegible] ஊனமுற்றிருந்தால் அவர்களின் பிள்ளைகள் .

தற்போது இங்கு 30 பிள்ளைகள் உள்ளனர். 6வயது தொடக்கம் 12 வயதுவரையான பிள்ளைகளை உடனடியாகச் சேர்ந்துக் கொள்வோம். சில பிள்ளைகள் இந்த வயதை தாண்டி எம்மிடம் வந்தாலும் அவர்களுக்கும் எமது இல்லம் இடம் கொடுக்கும்.



வடக்கு – கிழக்கு மாகாணத்தில் உள்ள எல்லா இல்லங்களிலும் தமிழ்ப் பிரதேசப் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும். எந்த வேறுபாடும் காட்டக் கூடாது. எல்லாம் எங்கள் பிள்ளைகளே. தமிழ் பிள்ளைகளை அநாதரவாக விடாது அடைக்கலம் கொடுக்க வேண்டும்.

**கல்வி முறை**

எமது இல்லத்தின் முழு நோக்கமும் பிள்ளைகளுக்கு பிரதானமாகக் கல்வியைப் போதிப்பதாகவே உள்ளது. அவர்கள் அயலில் உள்ள மூன்று பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய் இந்துக் கல்லூரி, வசாவிளான் மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கு அவர்களின் தரத்திற்கேற்ப அனுப்புகின்றோம்.

அத்துடன் , ஆங்கிலம், தமிழ், கணிதம், பண்ணிசை, நடனம் ஆகிய பாடங்களுக்கு 6 ஆசிரியர்களைத் தனியாக இங்கு வரவழைத்துக் கற்பிக்கின்றோம்.

பிள்ளைகளின் கல்விக்காலம் வரை அவர்களை நாம் எம்முடனே வைத்திருப்போம். அதன் பின்னர் அவர்களுக்கான ஓர் எதிர்கால வாழ்வைத் தேடிக்கொடுத்து தொழில் செய்யவும் வழிகாட்டிவிட்டால் அவர்கள் தமது சொந்தக்காலில் நிற்பார்கள். அதன் பின்னர் அவர்களுக்கு எவரின் துணையும் தேவையில்லை.

தற்போது அவர்கள் கல்வியில் நாட்டம் செலுத்திக்கொண்டிருக்கும் போது தொழிற்பயிற்சியை வழங்கமுடியாது. கல்விச் செயற்பாட்டின் ஊடாகத் தொழிலையும் வழங்கினால் அவர்கள் கல்வி மீதான ஆர்வத்தைக் குறைத்துவிடுவார்கள்.

**பிள்ளைகளின் மனநிலை**

இங்குள்ள பிள்ளைகள் மிகவும் சந்தோசமாகத்தான் இருக்கிறார்கள். ஆனாலும், அவர்கள் ஏதோ ஒரு விதத்தில் உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள்தான். எதனைக் கொடுத்தாலும் அவர்களது மனதில் உள்ள கஷ்டத்தை மாற்ற முடியாது. வெளிப்படையாக ஓரளவு அவர்களிடம் உள்ள[illegible] இறுக்கங்கள், துன்பங்கள், துயரங்களை குறைத்தாலும் ஆழ்மனதில் உள்ள தனிப்பட்ட கஷ்டங்களை நீக்கமுடியாது.

வறுமையைக் காரணம் காட்டி ஒரு பிள்ளையின் எதிர்கால வாழ்க்கையை முடக்கக்கூடாது. ஆதரவற்ற குழந்தைகள் அநாதைகளல்லர் .அவர்களுக்கு நாங்கள் பெற்றோர்களாக இருக்கின்றோம். அவர்களின் ஒழுக்க நடவடிக்கைகளிலும் நாம் கண்டிப்பாக இருக்கிறோம்.



**நிதி உதவி**

லண்டனில் தமிழ் அநாதைகள் அறக்கட்டளை நிதியம் ஒன்றை அமைத்துள்ளோம். ஈழத்தமிழர்கள் அதில் அங்கம் வகிக்கின்றனர். அந்த நிதியத்தின் ஊடாகப் பல நிகழ்வுகளை நடத்தி நிதி சேகரித்து வருகின்றோம்.

எங்கள் தமிழ் பிள்ளைகள் அங்கு நடனமாடி அதன் மூலம் நிதி சேர்த்து இங்குள்ள பிள்ளைகளுக்கு அனுப்புவார்கள். எமது மூத்த மகன் லண்டன் மரதன் ஓட்டப்போட்டி ஒன்றில் ஓடி 8 லட்சம் ரூபா சேகரித்து மட்டக்களப்பு மங்கையர்க்கரசியார் இல்லத்திற்கு வீடு ஒன்றைவாங்கிக் கொடுத்தார்.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் 3பேர் இங்கு வந்தார்கள். அவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள். இன்னும் எத்தனையோ சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களையும் இனங்கண்டு இல்லங்களில் சேர்ந்து நல்வழிப்படுத்த வேண்டும்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் எத்தனையோ பிள்ளைகள் துஷ்பிரயோகத்திற்குள்ளாகியுள்ளனர். இதன் காரணமாகவும், அநாதரவாக கல்வியின்றி சிறுவயதிலேயே தொழில் செய்துவரும் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளப்படுத்தவும் மாவட்டசிறுவர் இல்லம் நீதிமன்றுடன் இணைந்து நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது.

அநாதரவாக உள்ள பிள்ளைகளை இனங்கண்டு மாவட்ட சிறுவர் இல்லம் ஊடாக' பிள்ளைகளை இல்லங்களில் சேர்க்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது. இது வரவேற்கத்தக்க ஒரு விடயம்.

இவ்வாறு நீதிமன்றம்,சிறுவர் பாதுகாப்பு இல்லம் என்பன இணைந்து நடவடிக்கையை மேற்கொள்ளும் போது இல்லங்களும் பாதுகாக்கப்படுவதுடன், அங்குள்ள ஒவ்வொரு பிள்ளையும் பாதுகாக்கப்பட முடியும்.

எங்களுடன் அவர்களும் இணைந்து இவ்வாறாகச் செயற்படும்போது பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்படுகிறது. அப்போது வேலைகளை வெகு இலகுவாக்க முடியும்,

இல்லம் ஒன்றை அமைத்து நடத்துவது இலகுவான விடயம் அல்ல, [illegible]துபவர்கள் எத்தனையோ பிரச்சினைகளுக்கு மத்தியில் [illegible]கின்றனர். இல்லங்களை நடத்துபவர்கள் மிகவும் பொறுப்புடன் [illegible] வேண்டும் ஏனோதானோ என்று செயற்படக்கூடாது.

– தீபா, கங்கா

# வியட்நாம் போர்: சில நினைவுகள்.....



1975ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி இரவு பத்தே முக்கால் மணி. அந்த வேளையில் தெற்கு வியட்நாமின் தலைநகரான 'சைகோன்' நகரிலிருந்த ஜனாதிபதி மாளிகையின் வாயிற் கதவுகளை மோதித் துவம்சம் செய்தவாறு இரு இராணுவ 'டாங்கிகள்' அந்த மாளிகை வளாகத்துள் பிரவேசித்தன. சிறிது நேரம் கழித்து சிவப்பு மற்றும் நீல வர்ணப் பின்னணியில் மஞ்சள் நிற நட்சத்திரக் குறியீடு கொண்ட கொடி அந்த மாளிகையின் மேல்மாடியில் ஏற்றி வைக்கப்பட்டது. பல ஆண்டுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த வியட்நாம் விடுதலைப் போர் அச் சம்பவத்துடன் முடிவுக்கு வந்தது.

உலகில் தன்னை விடப் பலசாலியான நாடு எதுவும் கிடையாது என இறுமாந்திருந்த அமெரிக்கா, தான் ஆக்கிரமித்து அதிகாரம் செலுத்தி வந்த





உலகை உலுக்கிய புகைப்படம்: அமெரிக்க வீசிய நோபாம் குண்டிலிருந்து தப்பி ஆடை இழந்த நிலையில் அம்மணமாக ஓடி வரும் வட வியட்நாமிய சிறுமி.... அநதச் சிறுமியின் இன்றைய தோற்றம் உள் படத்தில்

தெற்கு வியட்நாமில், வட வியட்நாம் கம்யூனிஸ்ட் கெரில்லாக்களிடம் தோல்வியுற்று வெளியேற நேர்ந்தது. அவ்விதம் அமெரிக்காவைத் தோற்கடித்த நாளின் 30 ஆவது ஆண்டு நிறைவை வியட்நாமிய மக்கள் கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

1965-1975 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட பத்து ஆண்டு காலமாக இடம் பெற்ற அந்த யுத்தம் காரணமாக 58 ஆயிரத்து 200 அமெரிக்க இராணுவ வீரர்கள் உயிரிழக்க வேண்டி நேர்ந்தது. ஏறக்குறைய மூன்று மில்லியன் வரையான வியட்நாமியர்கள் இந்த யுத்தத்தில் கொல்லப்பட்டனர். தமது பணபலம் மற்றும் இராணுவ பலத்தின் மூலம் ஏனைய பல நாடுகளை பலாத்காரமாகத் தமது ஏகாதிபத்திய வாதத்துக்கு ஆதரவாகச் செயற்பட வைப்பதில் அமெரிக்கா அவ்வேளையில் கடும் அக்கறை காட்டிச் செயற்பட்டு வந்தது. அதே வேளை, இறைமையுள்ள சுதந்திர நாடாகத் தமது நாடு விளங்குவதற்கு தமது உயிரைக் கூடத் தியாகம் செய்யத் தயாராயிருந்த வட வியட்நாமிய மக்கள், இப்போரில் அமெரிக்க சார்புத் தென் வியட்நாமியப் படைகளை எதிர்த்துப் போராட வேண்டி ஏற்பட்டது.

அன்றைய வியட்நாமிய விடுதலைப் போரில் நாட்டுக்காகப் போராடிய – தற்போது தமது வாழ்க்கையின் கடைசிக்காலத்தை அமைதியாகக் கழித்து வருகின்ற –முன்னாள் வியட்நாம் கெரில்லாக்கள் இந்த வைபவத்தில் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். முன்னர் 'சைகோன்' நகரென அழைக்கப்பட்ட தற்போது 'கோசிமின்' நகரென அழைக்கப்படுகின்ற வியட்நாமின் தலைநகரில், நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்து கூடிய வியட்நாமிய முன்னாள் கெரில்லாக்கள் மத்தியில் மிகப் பிரபலமான நபரொருவரும் காணப்பட்டார். வியட்நாமிய விடுலைப் போருக்குத் தலைமைதாங்கி, வழி நடத்தி அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளை நாட்டை விட்டு விரட்டியடித்த ஜெனரல் ஹியப் என்பவரே அந்தப் பிரமுகராவார்.

**இரண்டாகப் பிரிந்தது வியட்நாம்**

ஜெனரல் ஹியப்புக்கு தற்போது தொண்ணூறு வயதாகிறது. வியட்நாம் விடுதலைப் போராட்ட வரலாறு ஏறக்குறைய 65 ஆண்டுகாலப் பழமை வாய்ந்ததாகும். 1940 ஆம் ஆண்டு முதல் பிரெஞ்சு முடியாட்சிக்கு உட்பட்டிருந்த வியட்நாம் 1954இல் வியட் நாமியர்களின் பெருமதிப்புக்குரிய தலைவரான ஹோசிமின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் போரின் காரணமாக இறுதியில் சுதந்திர நாடாக உருவெடுத்தது. ஆனால், அதுவரை ஒரே நாடாக விளங்கிய வியட்நாம், வழமையாக உலகின் ஏனைய நாடுகளில் இடம்பெறுவது போன்று சுதந்திரத்தின் பின்னர் இரு தனி இராச்சியங்களாகப் பிரிக்கப்பட்டது. விடுதலைப் போருக்கு வித்திட்ட ஹோசிமின் தலைமையிலான கம்யூனிஸ்ட் அரசு வட வியட்நாமில் பதவியில் அமர்ந்தது. அதே சமயம், தெற்கு வியட்நாமின் அதிகாரம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவாளர்களின் கைகளில் சென்றடைந்தது.

இதற்கு ஐந்து ஆண்டுகள் கழிந்து, இரண்டாகப் பிளவுபட்டிருந்த தமது தாய் நாட்டை ஒன்றிணைத்து ஒரே நாடாக ஆக்கிவிட வேண்டுமென வட வியட்நாமிய கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் முடிவு செய்தனர். அதன் படி தெற்கு வியட்நாமிய அரச படைகள் மீதான தமது கெரில்லாத் தாக்குதல்களையும் ஆரம்பித்தனர்.

அந்த யுத்தத்தில் தெற்கு வியட்நாமிய ஆட்சியாளர்களுக்கு உதவும் பொருட்டு அமெரிக்கா தனது ஆயிரக்கணக்கான துருப்பினரை அனுப்பி வைத்தது. இருபதாம் நூற்றாண்டின் மிலேச்சத்தனமான மாபெரும் மனிதப்படுகொலை அப்போதுதான் ஆரம்பித்தது. அந்த யுத்தத்தில் அமெரிக்கப் படையினரால் இராணுவ சட்டதிட்டங்களோ, நடைமுறைகளோ உரிய வகையில் கடைப்பிடிக்கப்படவில்லை. மனித உரிமைகள் எவற்றுக்கும் மதிப்பளிக்கப்படவில்லை. வட வியட்நாமிய பொதுமக்கள் மீது குரூரமான மனித உரிமை மீறல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அநேக கிராமங்களில் வாழ்ந்த பொது மக்களை அமெரிக்கப் படையினர் சுற்றி வளைத்து, ஒட்டு மொத்தமாகக் கொன்று குவித்து மனிதப் படுகொலை புரிந்தனர். வட வியட்நாமியப் பெண்களைக் கைது செய்து தமது முகாம்களுக்குக் கொண்டுசென்ற அமெரிக்கப் படையினர் அவர்களைக் கொடூரமான பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர்: எந்தவொரு யுத்தத்தின் போதும் பாவிக்கத் தடைவிதிக்கப்பட்டிருந்த 'நேபாம்' குண்டுகளைச் சர்வதேச யுத்தமுறைகளை அலட்சியம் செய்து அமெரிக்க விமானப்படையினர் வட வியட்நாமியக் கிராமங்கள் மீது கண்மூடித்தனமாக வீசினர்: இதன் காரணமாக வட வியட்நாமியக் கிராமங்கள் தீப்பற்றி எரிந்து பெரும் உயிரிழப்புக்கள் மற்றும் உடைமை இழப்புக்கள் ஏற்பட்டன. இந்த யுத்தத்தின்போதே உலகத்தில் முதன்முதலில் யுத்தமொன்றில் ஹெலி கொப்டர்களை பயன்படுத்தி எதிரிகள் மீது தாக்குதல் மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்டது. தமக்கு அவசியமான இடத்தில் திடீர் திடீரென ஹெலிகொப்டர் மூலம் தமது துருப்பினரைத் தரையிறக்கி அங்கு வாழும் சாதாரண குடிமக்களை – குழந்தைகள், முதியோர் என்ற பேதமின்றி சகலரையும் – ஒட்டு மொத்தமாகக் கொன்று குவிக்கும் நடைமுறையை அமெரிக்கா கைக்கொண்டது.

ஆனால், இத்தகைய செயற்பாடுகள் மூலம் வட வியட்நாமிய கெரில்லாக்களின் மனத் தைரியத்தையும் வீரத்தையும் சிறிதளவும் குறைத்துவிட முடியவில்லை. கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் மறைந்திருந்து திடீர் திடீரெனத் தாக்கும் தமது உத்திகளால் அமெரிக்கப் படையினருக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தி வந்தனர். அமெரிக்க இராணுவத்தின் அதி நவீன ஆயுத பலத்தின் முன்னால் வட வியட்நாமிய கெரில்லாக்கள் அதீத மன உறுதியுடனும், நம்பிக்கையுடனும் போரிட்டு படிப்படியாகத் தெற்கு வியட்நாமின் பகுதிகளைக் கைப்பற்றி முன்னேறினர்.

இச்செய்தியைத் தெரிந்துகொண்ட தெற்கு வியட்நாமிய ஜனாதிபதி குயென் வான் தியூ தமது பதவியைத் துறந்து வெளியேறினார். ஆயினும் புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட டொான்க் வான் மின் மனிதத் தன்மையற்ற குரூரம் மிக்க தமது நடவடிக்கைகளால் அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முனைந்தார்

அவ்வேளையில் அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த ஜெரோல் போர்ட் வியட்நாமில் யுத்த நடவடிக்கைகளுக்காக 722மில்லியன் டொலர் நிதியை ஒதுக்குமாறு விடுத்த கோரிக்கை அமெரிக்க காங்கிரஸால் மறுக்கப்பட்டது.

**தோல்வி நிச்சயம்**

தமது தோல்வி நிச்சயமானதென உணர்ந்த அமெரிக்க நிர்வாகம், 1975ஏப்ரல் 30ஆம் திகதி வியட்நாமின் அமெரிக்கத் தூதரகத்திலிருந்த ஊழியர்களைத் திருப்பி அழைத்துக்கொண்டது. வியட்நாமிய கெரில்லாக்களால் சுற்றி வளைக்கப்பட்ட தூதராலயத்தினுள்ளிருந்த ஊழியர்களை ஹெலிகொப்டர் மூலமே அமெரிக்காவால் மீட்டெடுக்க முடிந்தது.

அதேவேளை, தென் வியட்நாமிய ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்த யுத்தடாங்கிகளைப் பின்தொடர்ந்து பிரவேசித்த கம்யூனிஸ்ட் கெரில்லாக்களால் தென் வியட்நாமிய ஜனாதிபதி கைது செய்யப்பட்டார்.

ஜனாதிபதி கைதானமையைக் கேள்வியுற்ற தென் வியட்நாமியப் படையினர் உயிர்தப்பும் பொருட்டு காடுகளில் தஞ்சமடைந்தனர்: பலர் தற்கொலை செய்து கொண்டனர்.

அன்றைய தினமே 'சைசோன்' நகரம் 'ஹோசிமின்' நகரெனப் பெயர் சூட்டப்பட்டதோடு, வட,தென் வியட்நாம் ஆட்சிகள் ஒன்றிணைந்த கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன.

இந்த யுத்தத்தில் 58 ஆயிரத்து 200 அமெரிக்கத் துருப்பினர் உயிரிழந்ததுடன் 2இலட்சத்து 20ஆயிரம் துருப்பினர் காயமடைய நேர்ந்தது. அதே வேளை 3 மில்லியன் வரையிலான வியட்நாமியர்கள்- இவர்களில் பெரும்பாலோர் சாதாரண பொதுமக்கள்- உயிரிழக்க நேர்ந்தது.

அன்று வியட்நாமில் நடந்து கொண்ட விதத்திலேயே அமெரிக்கா இன்றும் சில நாடுகள் மீது தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் மேற்கொண்ட ஆக்கிரமிப்பையடுத்து ஈராக்கின் மீது ஆக்கிரமிப்பை மேற்கொண்டது. இன்று ஈராக்கியர்கள் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கடுமையாகப் போராடிவருகின்றனர். ஆனால் ஈராக் அமெரிக்காவுக்கு மற்றொரு வியட்நாமாக அமையுமா எனக் கூறுவதற்கு மேலும் சிறிது காலம் நாம் பொறுத்திருந்தாக வேண்டியுள்ளது.

**வசந்தாமணாளன்**





ஹெலிகளில் தரையிறங்கும் அமெரிக்க படைகள்.....



பதுங்கு குழிகளில் சிறையுண்ட அமெரிக்க துருப்புகள் ....



அடர்ந்த காடுகளில் அமெரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம்

# "...இசைக்கு உலகில் எங்கும் வரவேற்புத்தான்..."

## 'ஸக்ஸபோன்' கலைஞர் இராமநாதன் கூறுகிறார்...

கடந்தமாத இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணம் வந்து 'ஸக்ஸபோன்' இசை நிகழ்ச்சி நடத்தியவரும், மேலும் பல இசைக்கருவிகளை கையாளும் திறம்படைத்தவருமான இந்திய தமிழ்க் கலைஞர் இராமநாதனை இசை நிகழ்ச்சியின் நிறைவில் செவ்வி கண்டோம். அவர் 'சூரியகாந்தி' வாசகர்களுக்காக மனம் திறந்து பேட்டியளித்தார்.

'யாழ்ப்பாணத்துக் கலைஞர்கள் உயர்வானவர்கள். புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் பரந்து வாழ்பவர்கள் கூட இசையை விரும்பி ஆதரிக்கிறார்கள், பயில்கிறார்கள், வளர்க்கிறார்கள். இது எனக்குப் பூரண மன நிறைவைத் தருகிறது' – என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார் இராமநாதன்.

*கேள்வி:–* உங்களைப் பற்றி....

*பதில்:–* எனது பெயர் இராமநாதன். நான் இசைக் குடும்பத்தில் இருந்து வந்தவன். எனது தந்தையார் ரி.வி கோபாலகிருஷ்ணன். அவர் பிரபல சங்கீத வித்துவான். வாய்ப்பாட்டு, மிருதங்கம், கெஞ்சிரா போன்றவற்றில் வித்துவத் தன்மை பெற்றவர். அவரிடமே நான் இவற்றைக் கற்றேன். சென்னைப் பல்கலைக்கழகத்தில் இசைத்துறையில் B.A. முடித்திருக்கிறேன். வயலினை மட்டும் தனியாக அனந்தாமன் குருவிடம் படித்து விட்டு, மேலைத்தேய இசையைக் கற்று லண்டன் பரீட்சையில் சித்தியடைந்துள்ளேன்.

*கேள்வி:–* 'ஸக்ஸபோன்' இசைத் துறைக்குள் எவ்வாறு பிரவேசித்தீர்கள்?

*பதில்:–* எனக்குப் பிடித்தமான இசைக் கருவிகளில் 'ஸக்ஸபோன்' இசைக்கருவியும் ஒன்று. இது ஒரு வாய்ப்பாட்டுக்கு சமனான இசைக்கருவி. இதில் நாதம் கம்பீரமாக இருக்கும். பாடுகிற மாதிரியே வாசிக்கலாம். பாடுகிற உணர்வு இதை வாசிக்கும் போது ஏற்படுவதுண்டு. 'ஸக்ஸபோன்' இசையில் மயக்கம் கொண்டே அதன்பால் நுளைவு ஏற்பட்டது.

*கேள்வி:–* எல்லோருக்குமே சினிமாத் துறைக்குள் நுழைய வேண்டும் என்ற கனவு உண்டு. தங்களுக்கு அப்படியொரு எண்ணம் இருந்ததுண்டா?

*பதில்:–* ஆம். 'ஸக்ஸபோன்' இசைக்கருவியை வாசிக்க முன்னரே சினிமாத்துறைக்குள் நுழைந்துவிட்டேன். 1986இல் இருந்து இளையராஜா, கார்த்திக்ராஜா, தேவா, வித்தியாசாகர் போன்ற முன்னணி திரையிசைக் கலைஞர்களுடைய இசைக் குழுக்களில் இணைந்து பணியாற்றியிருக்கிறேன். இப்போது இந்தியத் தொலைக்காட்சி சீரியல்களுக்கு இசையமைத்து வருகிறேன்.

*கேள்வி:–* இதுவரை எத்தனை படங்கள், பாடல்களுக்கு இசைக்குழுக்களுடன் இணைந்து இசைப் பணியாற்றியிருக்கிறீர்கள்?

*பதில்:–* 500 பாடல்களுக்கு மேல் செய்திருக்கிறேன். குறிப்பாக புன்னகை மன்னன் தொடங்கி காசி, பிதாமகன் போன்ற பாடல்கள் வரை இசைப் பங்களிப்பாற்றியிருக்கிறேன்.

*கேள்வி:–* இவற்றில் தங்களுக்கு பிடித்தமான பாடல் எது?

*பதில்:–* 'அம்மா என்றழைக்காத உயிரில்லையே...' என்ற ஜேசுதாஸ் பாடிய பாடல்தான். எந்தக் காலத்திலும் திரும்பத்திரும்ப இந்தப் பாடலைக் கேட்கலாம்.

*கேள்வி:–* 'ஸக்ஸபோன்' இசைக்கு கர்நாடக இசை ரசிகர்களின் வரவேற்பு எப்படி இருக்கிறது?

*பதில்:–* இசையென்றாலே உலகத்தில் எல்லா இடங்களிலும் நிறைந்த வரவேற்பு உண்டு. கர்நாடக இசைக் கலைஞர்கள், ரசிகர்கள் மத்தியில் அவர்களிடம் இருந்து ஸக்ஸபோன் இசையை பிரிக்க முடியாத அளவுக்கு இடம் பிடித்திருக்கிறது. என்றுமில்லாத வரவேற்பு மிகப் பிரமாதமாய் இப்போது இருக்கிறது.

*கேள்வி:–* இந்தியாவில் 'ஸக்ஸபோன்' இசையைப் பயிலும் மாணவர்களது ஆர்வம் எப்படி இருக்கிறது?

*பதில்:–* ஸக்ஸபோனை பயில்வோரது எண்ணிக்கை ஆரம்பத்திலே குறைவாகத்தான் இருந்தது. ஆனாலும் இப்போது இதைக் கேட்டுவிட்டு (ஸக்ஸபோன் இசையை) நிறையப்பேர் கற்று வருகிறார்கள். இந்தக் கருவியைக் கையாள்வது தொடக்கத்திலே கொஞ்சம் கடினமாய்த்தான் இருக்கும். போகப்போக இலகுவாகிவிடும். ஆர்வமுடன் முயற்சி எடுத்தால் முன்னேற வாய்ப்புண்டு.



*கேள்வி:–* பலவித இசைக் கருவிகளைக் கையாளும் திறம்படைத்த தாங்கள், ஸக்ஸபோன் இசையை யாரிடம் விரும்பிக் கற்றீர்கள்?

*பதில்:–* நான் ஸக்ஸபோனை கதிரிகோபால்நாத் என்பவரிடம்தான் கற்றேன். அவர்தான் கர்நாடக இசையை ஸக்ஸபோன் இசைக்கருவியில் முதன்முதலில் வாசித்துக் காட்டியவர். 'டூயட்' படத்தில் ஏ.ஆர் ரகுமானுடன் இணைந்து ஸக்ஸபோன் வாசித்தவர். அதன் பின்புதான் பாமரமக்களுக்கும் கர்நாடக இசையை ஸக்ஸபோன் இசைக்கருவியிலும் வாசிக்கலாம் என்று தெரியப்படுத்தினார்,

*கேள்வி:–* யாழ்ப்பாணக் கலைஞர்களின் பக்க வாத்தியங்களுடன் ஸக்ஸபோன் வாசித்தமை பற்றி...

*பதில்:–* எனக்குப் பக்கவாத்தியம் இசைத்த எல்லாருமே திறமையானவர்கள். மிக ரொம்ப அருமையாக ஸக்ஸபோன் இசைக்கு ஏற்ப அனுசரித்து வாசித்தார்கள். எல்லாமே பிரமாதமாய் இருந்தது.

*கேள்வி:–* தங்களுக்கு யாழ்ப்பாணத்து கலைஞர்கள் யாரையாவது தெரிந்த அல்லது அறிந்த சந்தர்ப்பங்கள் உண்டா?

*பதில்:–* நிறைப்பேரை அறிந்து வைத்திருக்கிறேன். அதிலும் யாழ். மண்ணைச் சேர்ந்த மகாவித்துவான் வீரமணிஐயரை நன்றாகத் தெரியும். இவரைப் பற்றி சென்னையில் நன்றாகக் கதைப்பார்கள். இவருக்குப் பாரதத்தில் நல்ல வரவேற்பு உண்டு. அவரது மறைவு இசையுலகுக்குப் பெரிய இழப்பு. இவ்ரை விட இப்போது லண்டனில் வசிக்கும் ஈழத்தமிழரான பாடகர் யோகேஸ்வரனையும் நன்கு தெரியும்.

*கேள்வி:–* இந்தியாவில் ஈழத்தமிழருக்கு இசையரங்க வாய்ப்புகள் திருப்திகரமாகக் கிடைக்க வாய்ப்புள்ளதா?

*பதில்:–* ஆம் இசை தெரிந்த யாருக்கும் முன்னுரிமை கிடைக்கும். முதலில் கடினம்தான். இது இந்தியர்களாயிருந்தாலும் இதே நிலைதான். யாருக்கும் இசை ரசிகர்கள் மத்தியில் அங்கீகாரம் கிடைப்பது உடனே சாத்தியப்படக் கூடியதொன்றல்ல. உரிய அங்கீகாரம் கிடைத்தால் வாய்ப்புகள் நிறையவரும். இந்தியாவிலே ஈழத்து தவில் வித்துவான்கள் நிறையப்பேர் இசைமழை பொழிகிறார்கள். வாய்ப்பாட்டுக்கு இந்தியாவிலே வாய்ப்புகள் அதிகம். நான் முன்னர் குறிப்பிட்ட யோகேஸ்வரன் என்ற ஈழத்தமிழர் இந்தியாவுக்கு வந்து இசை பயின்று இப்போது லண்டனில் இருக்கிறார். அவர் ஆங்கில படமான 'புருக்ஸ்' என்ற படத்தில் ஓர் ஆங்கிலப் பாடலொன்றை பாடியிருக்கிறார். இவர் இந்தியாவிலே எனது தந்தையாருடன் இணைந்து இசைக்கச்சேரி நடத்தியிருக்கிறார்.

*கேள்வி:–* யாழ்ப்பாணத்து கலைஞர்களின் ஒத்துழைப்பு எப்படி இருந்தது?

*பதில்:–* உயர்வான கலைஞர்கள். யாழ்ப்பாணத்தில் இசை தெரிந்த கலைஞர்கள் இருக்கிறார்கள். நிகழ்வு நிறைவுறும் வரை இருந்து ரசிக்கிறார்கள். உலகம் பூராகவும் யாழ்ப்பாணத்துக் கலைஞர்கள் பரந்து வாழ்கிறார்கள். நான் அரங்கேற்றமொன்றுக்கு லண்டன் சென்ற வேளை என்னை அன்பாக வரவேற்றார்கள். அங்கெல்லாம் எனது கச்சேரியை வந்து பார்ப்பார்கள். அதைவிட கலையை விரும்பி ஆதரிக்கிறார்கள், பயில்கிறார்கள், வளர்க்கிறார்கள். இது எனக்கு பூரண மன நிறைவைத் தருகிறது.

*கேள்வி:–* இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

*பதில்:–* எனக்குத் தெரிந்த இந்த சின்னக் கலையை யாழ்ப்பாணத்து இசை ரசிகர்களிடம் பகிர்ந்து கொண்டதில் மிக்க மகிழ்ச்சி. யாழ்ப்பாணம் வந்து இசை நிகழ்ச்சி நடத்தியதால் ஏற்பட்ட பூரண மனநிறைவு வேறு எங்கும் எனக்கு ஏற்பட்டதில்லை. நான் இங்கு வந்து இசை நிகழ்ச்சி நடத்துவதற்கு முக்கிய காரணமாய் இருந்த றோட்டேரியன் ரகுநந்தனனுக்கு எனது நன்றிகள்.

செவ்வி கண்டவர்: சு.தேசிகன்

# "கண்ணாடிப் பூக்கள்"



தென்னிந்தியத் தமிழ் சினிமா உணர்த்தும் சமூக அக்கறை என்பது ஒன்றில் காதல் அல்லது வன்முறையினூடாக கவனம் பெறுகின்றது. இவற்றைத் தவிர்த்து இளமியராயத்தினரது உணர்வுகளை மலினமாக்கும் விதத்தில் ஆபாசத்தின் வரையறைக்குட்பட்டும் தமிழ் சினிமா சமூக அக்கறையை எமக்குணர்த்தி வருவதும் குறிப்பிடத்தக்க வேதனைக்குரிய விடயமாகின்றது.

தனது முழுக்கவனத்தையும் வியாபார ரீதியிலான வெற்றியின் மீது குவித்திருக்கும் தென்னிந்திய தமிழ் சினிமா அவ்விதமான வெற்றிக்காக எதையும் காட்சிப்படுத்தத் தயாராகிவருகிறது. விதிவிலக்காக நல்ல சினிமாவ்வத் தரமுயலும் கவனத்தை குவித்தவையாகத்தான் இனங்காண முடிகின்றது. இந்த அடிப்படைக்குள் வரக்கூடிய ஷாஜகானின் 'கண்ணாடிப் பூக்கள்' குறித்து கவனிப்பைப் பெறுகின்ற சில அம்சங்களைப் பேசுவதும் முக்கியமானது. 'ஒருபிள்ளை தனது பெற்றோரிடமிருந்து எதிர்பார்க்கும் அன்பும் அரவணைப்பும் கிடைக்காதபோது அதனால் என்னென்ன பின் விளைவுகளை எதிர்நோக்கவேண்டியிருக்கிறது' என்பதை சினிமாமொழியில் தரமுயன்றிருப்பது கவனிப்பிற்குரியதுதான். ஆனால், அதைவிடக் கவனிப்பிற்குரியதாக இருப்பது காட்சிகளில் மேலோங்கச் செய்யப்பட்டுள்ள ஆபத்தான (குழந்தைகளுக்கு) வன்முறையாகும். பிள்ளைகளுக்கு எளிதாகக் கைக்கெட்டும் கருவிகள் மூலம் எவ்விதம் வன்முறையைத் தொடக்குவது என வழிகாட்டும் திரைப்படமாகவே

# உச்சக்கட்ட வன்முறை சினிமா....?

இயக்குநர்களும் இடைக்கிடையே வந்துகொண்டிருப்பதும் கவனங்கொள்ளத்தக்கது. ஜானகி விஸ்வநாதனின் 'குட்டி', 'கனவு மெய்ப்படவேண்டும்' ஆகிய இரு படங்களும் நல்ல சினிமா எனும் வகைப்படுத்தலுக்குள் உள்ளடங்கக் கூடியனவாக இருப்பது குறிப்பிடவேண்டியது, தவிரவும் பி.சி.ஸ்ரீராமின் 'வானம் வசப்படும்' ஜனநாதனின் 'இயற்கை' போன்றவையும் அண்மைக் காலங்களில் கவனிப்பைப் பெற்றுள்ள திரைப்படங்கள்தான். தங்கர்ப்பச்சானின் 'அழகி'யைத் தவிர்த்து 'சொல்லமறந்தகதை' 'தென்றல்' மற்றும் சேரனின் 'ஆட்டோகிராப்' பாலாஜிசக்திவேலின் 'காதல்' முதலான திரைப்படங்களை நல்ல சினிமாவுக்கான ஒருசில அம்சங்களைக்கொண்டு வியாபாரரீதியிலான வெற்றியின் மீது 'கண்ணாடி! பூக்கள்' இனங்காணப்படலாம் என்பதில் மாற்றுக்கருத்துக்கான சாத்தியமில்லை எனலாம். இவ்வாறான அம்சங்களைக் காட்சி பொழியாக்குகின்ற போது வன்முறையை மையப்படுத்திக் காட்சிகளை நகர்த்துவது இயக்குநர்களுக்கான பொதுவியல்பாகி வருகின்றது. 90களின் முடிவில் ஜெயாவின் இயக்கத்தில் வெளிவந்த 'உயிரிலே கலந்தது', 'கண்ணாடிப் பூக்கள்' காட்சிப்படுத்த முனைந்த அதே அம்சத்தையே காட்சிப்படுத்த முனைந்திருந்தது. இந்த விதத்தில் இரண்டும் ஒரே கோட்டிலுள்ள திரைப்படங்கள் என்று சொல்லாம். தம்பி பிறந்த பின் தன்னை யாரும் கவனிப்பதில்லை. அன்பு செலுத்தி அரவணைப்பதில்லை என உணரும் ரகு, பெரியவனானதும் தம்பி சூர்யாவை மலைப்பாங்கான பிரதேசமொன்றிற்கு அழைத்துப்போய் கீழே தள்ளிவிட்டு வருகிறான். தம்பியின் மீதான ஒவ்வொரு வன்முறையையும் பெரிதும் இரசிக்கும் ரகு, அதன் உச்சமாகத் தம்பியைக் கொல்ல முடிவு செய்கிறான். இது 'உயிரிலே கலந்தது' வில் நிகழும் காட்சிப்படுத்தல்.


பிறந்த போதே தாயை இழந்த வாசுதேவன் எனும் சிறுவன் சித்தியைத் தாயாகக் கொள்கிறான். முதல் சிநேகிதியாகக் கொள்கிறான். அவன் எதிர்பார்க்கும் அன்பும் அரவணைப்பும் சித்தியிடமிருந்து கிடைக்கிறது. இந்நிலையில் சித்திக்கு ஒரு குழந்தை பிறக்கவிருப்பது அவனுக்குத் தெரியவருகிறது. அதை அவன் வெகுவாக விரும்புகிறான். குழந்தைக்கு 'அப்பு' எனப் பெயரிடுகிறான். தனது சேமிப்புப் பணத்தைக் கொண்டு பள்ளத்தோழியுடன் கடைக்குபோய் அப்புவுக்காக உடுப்புக்கூட வாங்கிவருகிறான். ஆனால், அவன் மீதான புறக்கணிப்புகள் தொடங்குகின்றன. (இத்தகைய புறக்கணிப்புகள் தொடர்பான காட்சிப்படுத்தல்கள் இயல்பாக அமையவில்லை என்பதுடன் திணிக்கப்பட்ட காட்சிகளாக அமைந்திருக்கக் காணலாம்) வாசுதேவன் மீதான புறக்கணிப்புகளின் உச்சத்தில் அவன் Sprayer ஐக்கொண்டு தொட்டியில் கிடக்கும் அப்புமீது மருந்தினை வீசிறுகிறான் (Spray). குழந்தை இறந்துபோகிறது. தொடர்ந்து குழந்தை அப்புவின் உடல் பிரேதப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவதும், வாசுதேவன் அப்புவின் மீது மருந்தை Spray செய்தது தெரியவருவதும், பாலியக் குற்றவாளிகளுக்கான நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு–குற்றவாளியாக இனங்காணப்படுவதும், சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுவதும், அங்கே குழந்தை உளநல மருத்துவர் வாசுதேவனைக் காண்பதும், அவர் வாசுதேவனின் தந்தை, சித்தி ஆகியோரை வந்து சந்தித்து இன்னொரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்குவதுமென வரும் காட்சிகளை உச்சகட்ட வன்முறைக்கான சமரசங்களாகத்தான் பார்க்கலாம். இதில் உச்சமான சமரசம் என்பது வாசுதேவன் சீர்திருத்தப்பள்ளியிலிருந்து வீடுதிரும்பும்போது குழந்தையின் அழுகையொலியைக்கேட்டு உள்ளே ஓடிச் சென்று தொட்டிலில் கிடக்கும் குழந்தையைக்காண்பதும், அதனைக்தொடர்ந்து பரபரப்பாக எதையோ தேடுவதும், இறுதியில் முன்னர் அப்புவுக்கென தான் எடுத்திருந்த உடுப்பை குழந்தையின் கையில் கொண்டு வந்து கொடுப்பதுமான காட்சிக்கோர்வை ஆகும். இவ்வாறான சமரசங்கள் பார்வையாளரை அவமதிப்பதுடன் இது ஒரு நல்லசினிமா எனும் தவறான முடிவுக்குவரத் தூண்டுகிறது என்பது கவனிக்கத்தக்கது.

பா.கார்த்திகா

# ஹிட்லரின் மறைவிடத்தைக் கண்டுபிடிக்க நேசப்படைகள் நடத்திய உளவு.....

ஜேர்மனிய இராணுவத்தின் அட்மிரல் கார்ல் டொனில் ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லர் போர் முனையில் காயமுற்று இறந்தவிட்டதாக மே மாதம் முதலாம் திகதி பகிரங்கமாக உலகுக்குச் செய்தி வெளியிட்டார். இச்செய்தி வெளியானதை யடுத்து பொதுமக்கள் ஹிட்லர் மீது மதிப்பும் மரியாதையும் கொள்ளத் தொடங் கினர். இதனை நேசநாட்டுப் படைத் தலைவர்கள் சிறிதும் விரும்பவில்லை. பொதுமக்கள் மத்தியில் ஹிட்லருக்கு ஆதரவு பெருகுவதை அமெரிக்க இராணு வத்தை வழிநடத்தும் அதிகாரியான ஜெனரல் ஜோர்ஜ் மார்ஷல் எப்படியாவது தடுத்தாக வேண்டுமென விரும்பினார். ஆனால், ஜெனரல் ஐசனோவர் இக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வேளையில் நேச நாட்டுப் படைகள் மத்தியில் ஜெனரல் ஐசனோவர் பிரபல்யம் மிக்கவராகக் காணப்பட்டார்.

ஜூன் மாதத்தில் பாரிஸ் 'ரபாயல்' ஹோட்டலில் இடம்பெற்ற பத்திரிகை யாளர் மாநாட்டில் ஜெனரல் ஐசனோவரும் கலந்து கொண்டார். அக்கூட்டத்தில் வைத்து ஹிட் லர் உண்மையிலேயே இறந்து விட்டதாகத் தாம் நம்புவதாக ஜெனரல் ஐசனோவர் கருத்து வெளியிட்டார். நேச நாட்டுப் படைகள் சார் பில் படை அதிகாரியொருவர் முதன் முதலாக ஹிட்லரின் நிலை



குறித்து வெளியிட்ட தகவல் இதுவேயாகும்.

இதனிடையே ரஷ்ய அரசுப் பத்திரிகையான 'இஸ்வெஸ்தியா' ஹிட்லரும் அவரது காதலி ஈவா பிறவுனும் ஜேர்மனியில் 'வெஸ்ட பேலியா' பகுதியில் சிரமமெதுவு மின்றி வாழ்ந்து வருவதாக அடிக் கடி செய்தி வெளியிட்டுவந்தது. குறிப்பிட்ட அப்பகுதி பிரிட்டிஷ் இரா ணுவத்தின் நிர்வாகத்தின் கீழ் அச் சமயம் இருந்து வந்ததால் இச் செய்தி பிரிட்டிஷ் இராணுவத் தரப்பை அசௌகரியத்துக்கு உள்ளாக்கியது. அது மட்டுமன்றி ஹிட்லர் தங்கியிருக்கும் பிரதேசம் எனப் பல இடங்களைக் குறிப்பிட்டுப் பல தரப்புச் செய்திகளும் வெளிவந்தவண்ணம் இருந்தன. தமக்குப் பெரும் தலை வலியை உருவாக்கியுள்ள இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகண்டாக வேண்டிய நிலைக்குப் பிரித்தானிய இராணுவம் தள்ளப்பட்டது.

### பூரண விசாரணைப் பணி

பிரித்தானிய இராணுவத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்த ஜேர்மனியின் பகுதிகள் 'எம்.ஐ.5' என்றழைக்கப்படும் பிரித்தானிய உளவுப் படைப் பிரிவின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தன. அந்தப் பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் டிக்வைற்றிடம் ஹிட்லர் குறித்து ஆராய்ந்தறியும் பணி ஒப்படைக்கப் பட்டது. அவர் அப்பணியில் தமக்கு உதவும் பொருட்டு மேஜர் டேவர் ரோபர் என்ற இராணுவ அதிகாரியைத் தேர்ந்தெடுத்து ஹிட்லர் குறித்து பூரண விசாரணை மேற்கொள்ளும் பணியை அவரிடம் கையளித்தார்.

மேஜர் டேவர் ரோபர் திறமை மிக்கதோர் உளவுத்துறை அதிகாரியாவார். அவர் இராணுவ சேவையில் இணைவதற்கு முன்னர் 'ஒக்ஸ்போர்ட்' சர்வ கலா சாலையில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றியிருந்தார் . பிரித் தானிய உளவுத்துறையினரால் சேகரிக்கப்பட்ட தகவல்கள் அடங்கிய கோவை அவரிடம் கையளிக்கப்பட்டது. ஹிட்லர் தினமும் தமது நாயுடன் குறிப்பிட்ட ஓர் இடத்துக்கு, குறிப்பிட்ட ஒரே நேரத்தில் வந்து தமது கையில் கொண்டு வரும் தடியொன்றினை குறிப்பிட்ட திசையில் வீசியெறிந்து விட்டுத் திரும்பிச் செல் வதாக ஒரு விசித்திர உளவுத் தகவலொன்றும் அவற்றுள் அடங்கியிருந்தது. ஹிட்லரின் மனநிலை அவ்வேளையில் குழப்பமடைந்ததாய் இருந்திருக்கக்கூடும் என்ற கோணத்தில் அத்தகவல் கூட விரிவாகப் பரிசீலனைக்கு உட்படுத்தப் பட்டது.

ஹிட்லரின் கடைசி நாள்களில் அவர் தங்கிருந்த இரகசிய இடத்தில் அவருடன் கூட இருந்தவர்களில் எவரையாவது கண்டு பிடிக்கும் முயற்சியில் டேவர் ரோவர் இரு மாத காலத்தைச் செலவிட நேர்ந்தது. ஹிட்லர் கடைசியாக எத்தகைய திட் டத்தை தீட்டினார் என்பதைச் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டுமாயின், அவரு டன் கடைசியாகக் கூட இருந்தவர்களில் ஒருவரையாவது தேடிக் கண்டுபிடிக்க வேண் டியிருந்தது. அந்தவகையில் ஹிட்லருடன் கடைசிவரை கூட இருந்தவர்கள் என யோசெப்கோபல்ஸ் மற்றும் மாட்டின் போமன் ஆகிய இருவரும் கருதப்பட்டனர்.

கோபல்ஸ் ஹிட்லரின் பிரசார நடவடிக்கைகளுக்கான அமைச்சராவார். பொய்ப் பிரசாரம் தொடர்பாக இன்றும் உலகம் பூராகவும் 'கோபல்ஸ் பிரசார நடைமுறை' என்ற வகையில் குறிப்பிட்டுப் பேசப்படுகிறது.

எந்தவொரு பொய்யையும் பொது மக்களை நம்ப வைக்க வேண்டுமானால், திரும்பத் திரும்ப பல தடவைகள் கூறியாக வேண்டும் என்பது கோபல்ஸின் தத்து வமாகும். அவர் ஹிட்லரின் நம்பிக்கைக்குரிய அமைச்சராகச் செயற்பட்டு வந்தார்.

### சகாக்கள் இருவரும் எங்கே?

நாஜிக் கட்சியின் செயலாளராகவும், அதே சமயம் ஹிட்லரின் பிரத்தியேகச் செயலாளராகவும் மார்டின் போமன் செயற்பட்டுவந்தார். ஹிட்லரின் சகல ஆவ ணங்கள் மற்றும் கடிதங்கள் மார்டின் போமனாலேயே கையாளப்பட்டன. ஹிட்ல ரின் சகல செயற்பாடுகள் குறித்தும் தெரிந்து வைத்திருந்த நபராக இவர் கருதப் பட்டார். இதனாலேயே ரோபரின் முக்கிய கவனம் மார்டின் போமன் கீழ் திரும்பி யிருந்தது. இவ்விருவரையும் தேடிக்கண்டுபிடிக்கும் ரோபரின் முயற்சி எதுவித பலனும் அளிக்கவில்லை. ஹிட்லரைப் போன்றே ஹிட்லரின் இவ்விரு உதவியாளர் கள் குறித்தும் எவ்வித தகவலையும் திரட்டிக் கொள்ள முடியவில்லை. இவ்விரு இரா ணுவ அதிகாரிகளும் ஒன்றில் மரணமடைந்திருக்கலாம் அல்லது காணாமற் போயிருக் கலாம் என்றே கருதப்படலாயிற்று.

> 2 இரண்டாம் உலகப்போரின் போது ரஷ்யத் துருப்புக்களால் ஹிட்லரின் நாஜிப் படைகள் தோற்கடிக்கப்பட்ட சம்பவத்தின் 60ஆம் ஆண்டுப் பூர்த்தியை ரஷ்யா கொண்டாடி வரும் இவ்வேளையில், இரண்டாம் உலகப் போரில் நாஜிப் படைகள் தோற்கடிக்கப்பட்டதையடுத்துக் காணாமல் போயிருந்த ஹிட்லர் தொடர்பான தகவல்களைக் கண்டுபிடிக்க நேச நாட்டுப் படைகள் மேற்கொண்ட பிரயத்தனங்கள் குறித்துக் கூறும் இத்தொடர், பொருத்தமான வேளையில் இரண்டாம் உலகப்போர் குறித்த நினைவுகளை மீட்டிப் பார்க்க ஒரு சந்தர்ப்பமாக அமைகிறது. இக்கட்டுரையின் முதற்பகுதி 08.05.2005 சூரியகாந்தியில் வெளியாகியிருந்தது.

இதனையடுத்து ஹிட்லரின் இரகசிய இடத்தில் அவருடனிருந்த ஏனைய ஊழி யர்கள் குறித்த விவரங்களைச் சேகரிப்பதில் ரோபர் அக்கறை எடுத்துக் கொண் டார். ஹிட்லரின் உதவியாளர்களாகப் பணியாற்றிய ஹேறன்ஸ் லின்கே, மாட்டோ குன்சே, பிரத்தியேக விமான ஓட்டியான ஹான்ஸ் பவர் மற்றும் பிரதான மெய்ப் பாதுகாவலர் யோகான் ரடென் கௌபர் ஆகியோரில் ஒருவரையாவது தேடிக்கண்டு பிடிப்பதே ரோபரின் இலக்காய் அமைந்தது. ஆனால், அவர்களில் எவராவது ஒருவர் பற்றிய தகவலெதனையும் கூட ரோபரால் திரட்டமுடியவில்லை. இதனால் ஹிட்லரின் நிலை குறித்துத் தீர்மானிக்கும் முயற்சிக்குப் பெரும் பின்னடைவு ஏற்படலாயிற்று. ஆனால், டேவர் ரோபரால் தமது முயற்சியைக் கைவிடமுடியாத நிலை நிலவியது. எவ்விதத்திலாவது ஹிட்லரின் நிலை குறித்து சரியான தகவலை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டிய நிலையில் ரோபர் இருந்தார். ஹிட்லர் எங்கோ ஓரிடத்தில் மறைந்து வாழ்ந்துகொண்டு நேசநாட்டுப் படைகள் மீது கடும் தாக்குதலொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டு வருவதாக அடிக்கடி செய்திகள் வெளிவந்த வண்ணமிருந் தமையால் இது அவசியமானதும், அவசரமானதுமான பணியாகக் கருதப்பட்டது.

### முக்கிய நபர்கள் சிக்கினர்

கடைசியில் எதிர்பாராத வகையில் ஹிட்லர் கடைசியாகக் காணப்பட்ட வேளை யில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து அறிந்துள்ள இரு நபர்கள் ரோபரிடம் அகப் பட்டனர். அவர்களில் பிறாவுஹெர்டா கிறிஸ்ரியன் என்பவர் ஹிட்லரின் செயலா ளராகச் செயற்பட் டவர். பிறாவு எல்சே குறுகர் எனப் பெயர் கொண்ட மற்றையவர் மார்டின் போமனின் செயலாளராகக் கடமையாற்றியவர்.

ஹிட்லரின் ரகசிய மறைவிடத்தில் இடம்பெற்ற சம்பவங்களை இவர்கள் நேரில் கண்டிராத போதி லும், அவற்றை நேரில் கண்டிருந்த லின்கே மற் றும் குன்சே ஆகியோர் அச்சம்பவங்கள் குறித்து இவ் விருவருக்கும் விபரித்திருந்தமை விசாரணைகள் மூலம் வெளிவந்தன. இது ரோபரின் நீண்ட கால முயற்சிகளுக்குக் கிட்டிய முதலாவது வெற்றியாக அமைந்தது. ஆயினும் அவ்விருவர்களது வாக்கு மூலங்கள் மூலம் பெற்ற தகவல்கள் பூரணமற்ற வையாகவும், ஒன்றுக்கொன்று முரண்பாடானவை யாகவும் கருதப்பட்டன.

ரோபரின் விசாரணைகளுக்கு அவசியமான விவரங் களைப் பெறத்தக்க சந்தர்ப்பமொன்று அந்த ஆண் டின் இறுதிப் பகுதியில் கிட்டியது. ரெஜர்ன்சே என்ற பின்தங்கிய கிராமமொன்றில் போஸ்ரின் என்ற பெயர் கொண்ட பூங்காப் பராமரிப்பாளரொருவர் வாழ்வதாகவும், ஹிட்லரின் செயலாளரான மார்டின் போர்மனது உதவியாளராகவிருந்த வில் ஹேர்ம் ஷான்டர் என்பவரே அவ்விதம் தமது பெயரை மாற் றிக்கொண்டு ஒளிந்து வாழ்வதாகவும், அத்தகவல் தெரிவித்தது. எவ்விதமாவது ஷான்டரைக் கைது செய்துவிடும் நோக்குடன் பிரித்தானிய உளவுச் சேவை எம்.ஐ.5ஐச் சேர்ந்த ஆர்னோல்ட்வெயிஸ் மற்றும் அமெரிக்க உளவுச் சேவையைச் சேர்ந்த ரோஸ்னர் ஆகியோரின் தலைமையில் உளவுப் படை அதிகாரிகள் ஷான்டரைத் தேடிக்கண்டு பிடிக் கும் முயற்சியில் இறங்கினர்.

### பணப்பை சிக்கியது

ஷான்டரைத் தேடிச் சென்ற நேசநாட்டு உளவுப் பிரிவினர் 1945டிசெம்பரில் அங்கு சென்ற சமயம் ஷான்டர் அவ்விடத்தில் இருக்கவில்லை; அவ்வேளை யில் ஷான்டர் தனது காதலியைச் சந்திப்பதற்காக பசோ என்ற இடத்துக்குச் சென்றிருந்தார். இரண்டு நாள்களின் பின்னர் ரோபருக்கு மற்றொரு முக்கிய தகவல் கிட்டியது. ஷான்டருக்குச் சொந்தமான பய ணப்பையொன்று மற்றொரு வீட்டில் பாதுகாப்புக் காக் கொடுத்துவைக்கப்பட்டுள்ளது என்பதே அத் தகவலாகும். இதனால், உஷாராகிய அந்த நேச நாட்டு உளவுப் பிரிவினர், விரைவாகச் சென்று குறிப்பிடப் பட்ட அந்த வீட்டிலிருந்த ஷான்டருக்குச் சொந்த மான பயணப்பையைக் கைப்பற்றினர். ஆரம்பத் தில் அப்பையிலிருந்த பொருள்கள் எதுவும் பிரயோசன மானவையாகத் தோற்றவில்லை. ஆனால், அப்பையை மிக நுண்ணியமாகப் பரிசோதனை இட்டசமயம், அந்தப் பையின் ரகசியப் பகுதியொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் சிலவற்றை அந்த உளவுப் பிரிவினரால் கைப்பற்ற முடிந் தது. அவ்விதம் அவர்களால் கைப்பற்றப்பட்ட ஆவணங்களே ஹிட்லர் தொடர்பான மர்மத்தை வெளிக் கொணர் வதற்கான முக்கிய, பிரபல சாட்சியமாக அமைந்தன.

நேச நாட்டு உளவுப் படைப் பிரிவினரால் ஷான் டரின் பிரயாணப்பையில் கண்டெடுக்கப்பட்ட அந்த ஆவணங்கள் ஹிட்லர் தொடர்பான மர்மத்தை வெளிக் கொணர எந்த அளவுக்கு உதவின என்பதை அடுத்த வாரத்தில் பார்ப்போமே!

(பொறுத்திருங்கள்)

தொகுப்பு :– வீயெஸ்ரீ

---

## மறக்க முடியாதவை....

வெப்பக் காற்றில்
வெந்து – எம்
உடல்கள் கருகிப் போனது
காகங்களும் கழுகளும்
உடல்களில் வந்து
மொய்த்துக் கொண்ட...
புதைப்பதற்கு கூட....
மனிதர்களில்லை
எல்லாமே...
பாதுகாப்புத் தேடி
ஓடி விட்டார்கள்
யாரிடம் போவது
யாரிடம் சொல்வது
யார் தான் வந்து
புதைக்கப் போகிறார்கள்
எம் நிலங்கள்
பாலை வனங்களாய்...
வெப்பக் கனல் கக்கி
வெறிச்சோடிக் கிடக்கிறது
எல்லாமே – எம்
வாழ்வில் ஏற்பட்ட
வடுக்களாய் பதியப்பட்டு
மறக்க முடியாத..
காவியங்களாய்..
என்றும் நிலைத்திருக்கும்

இன்பராஜ்
மீசாலை

---

## கண்கெட்ட பிறகு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

அதற்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற தோரணையில் அவர்கள் செயலாற்றுகிறார்களோ என்று மக்கள் கேட்கிறார்கள்.

அரசியல் பணி செய்ய வந்த இடத்தில் வேறு விடயங்களைக் கவனிப்பதென்பது நடைமுறைச் சிக்கல்கள் நிறைந்தது தான். ஆனால் காலங்கடந்து - நிர்வாக அதிகாரங்கள் கிடைத்தபிறகுதான் இதையெல்லாம் செய்வதென்று அவர்கள் கருதினால் அது கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதுபோல -செத்த கிளிக்கு சிங்காரம் பண்ணுவது போலத்தான் - இருக்கும். என்பதும் பலரது கருத்தாக இருக்கிறது.

### நடந்து வந்தபாதை

சந்திக்குச் சந்தி குடித்துக்கும் மாளம் அடிக்கும் -கூச்சமின்றி வெட்டிச்சரிக்கும் - இளைஞர்களில் சுமார் 18வயதுக்கும் 22வயதுக்கும் இடைப்பட்ட விடலைகளே அதிகப்பேர்.

எனவே ஒரு வகையில் பார்கின்ற போது அவர்கள் பாவம்; அவர்கள் மீது நாமெல்லாம் அனுதாபப்பட வேண்டும்; ஏனென்றால் எமது இனத்துக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் - நாங்கள் அனுபவித்த வேதனைகளையும், நாளாந்தம் எங்கள் கண்களால் பார்த்துப்பார்த்து மரத்துப்போன கோரக்காட்சிகளையும் அவர்கள் காணவில்லை.

இப்போது 20வயதில் இருக்கின்ற ஓர் இளைஞனுக்கு 1995ஆம் ஆண்டுக்கு முன்னார் 10வயதிலும் குறைவாகத்தான் இருந்திருக்கும். அந்த வயதில் அதனையெல்லாம் புரிந்து கொள்ளக்கூடிய அறிவும் அனுபவமும் அவர்களுக்கு இருந்திருக்காது என்று கொள்ள வேண்டுமா, என்ன?

நிலைமைகளைப் புரிந்து கொள்ளக்கூடிய வயதை அடைந்த போது அவர்கள் பார்த்தது புக்கார வீச்சில் துண்டு துண்டாகிப்போன உடல்களையல்ல, புதிதுபுதிதாய் வெளியாகும் படங்களைத்தான் ! ஷெல் வீச்சில் பற்றி எரிந்த குடிசைகளையல்ல; பலவித 'மொடல்களில்' கட்டப்பட்ட மனைகளைத்தான்...! விறகு கட்டிக்கொண்டு ஓடமுடியாமல் ஓடிய சைக்கிள்களை அவர்கள் கண்டிருக்க மாட்டார்கள்...! விதம் விதமான மோட்டார் சைக்கிள்களே அவர்களின் கண்ணில்பட்டன.

18ஆயிரம் மாந்தர் எமக்காகவே மண்ணில் புதையுண்டார் என்ற வீர வரலாறு அவர்களுக்கு ஊட்டப்படவில்லை - புகட்டப்படவில்லை. இதுதான் யதார்த்தம்.

தமிழர்களுக்கு அதைக்கொடுக்கப்போகிறேன் -இதைக்கொடுக்கப்போகிறேன் - என்று பூச்சாண்டிகாட்டி நல்ல பெயர் எடுத்து அதிகாரத்தைத் தக்க வைக்கத் துடிக்கும் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் தான் எங்களுடைய விடலைகளுக்குத் தெரியுமே ஒழிய, இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு - தமிழர்கள் இந்த நாட்டின் வந்தேறுகுடிகள் - அவர்களுக்கு இந்த நாட்டில் இடமே இல்லை - என்று வீரமுழக்கம் செய்த சந்திரிகாவை அவர்களுக்குத் தெரியவே தெரியாது?

நாங்கள் நடந்து வந்த கரடுமுரடான பாதைகளை இன்றைய இளைஞர்களுக்கு - அவர்கள் சிறுவர்களாக இருக்கும் போதே புகட்டியிருக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பிலிருந்து எமது சமூகம் தவறிவிட்டது - தவறிழைத்துவிட்டது.

இதைப்பற்றியெல்லாம் இந்த இளைஞர்களுக்கு அவர்கள் சிறுவர்களாக - மாணவர்களாக - இருக்கும் போதே பெற்றோர்களும் ஆசிரியர்களும் சொல்லி வைத்திருந்தால் நிலைமை இந்தளவு விபரீதமடைந்திருக்காது.


சரி, போனது போகட்டும்... இனியாவது நாம் ஒவ்வொருவரும் எங்களால் இயன்ற வரையில் இந்த யதார்த்தப் புறநிலைகளை சிறுவர்களுக்கும் இளையோருக்கும் புரிய வைப்பதென்று சபதம் எடுத்துக் கொள்வோமா...?

கஞ்சா புகைத்து விட்டு - போதைவஸ்து அடித்து விட்டு - 'பிக்பொக்கற்' அடிக்கின்ற - கத்தியைக் காட்டிப் பணம் பறிக்கின்ற - பணத்துக்காக கொலையும் செய்யத் தயாரான இனமல்ல நாங்கள்.

இனவிடுதலைக்காக - தேசத்தின் மீட்சிக்காக - சம உரிமைக்காக - அடக்கு முறையை உடைத்தெறிந்து துணிச்சலுடன் வேள்வி நடத்திய வீரத்தமிழர்கள் நாங்கள் என்பதை இனிவரும் சந்ததிகளின் மனத்திரையிலாவது விதைத்து வைத்தால் எதிர்காலத்திலாவது கோஷ்டி மோதல்கள் - கொடூரக் கொலைகள் - அற்ற நேரிய சமூகத்தை - எழுச்சி மிகு இளைஞர்களை அறுவடையாகப் பெறமுடியும்.

# ஒவ்வொரு சொற்றொடரிலும் விரிந்த பொருள்களை சொல்லும் திறமை கம்பனின் கவித்துவத்தின் சிறப்பு

"சொல்லுக்குள்ளே வாக்கியத்தைச் சுருக்கிவைத்த கம்பனை நான் வணங்குகின்றேன்" என்று கம்பனை இருகரங்கூப்பி ஏத்தித் துதிக்கின்றார் கவிஞர் வைரமுத்து. 'அபிநவகவிநாதன்' என்றும் 'புதுமை மிகுந்தவன்' என்றும் பலவாறாகக் கற்றோரால் போற்றி வியக்கப்பட்டவன் கம்பன்.



சிறப்புமிக்க பல கவிஞர்கள் வாழ்ந்த சோழர் காலத்திலே கம்பனும் வாழ்ந்தான். கம்பனின் கருத்துக்கள் பற்றி மக்கள் வியப்பதற்கு - அதிசயப்படுவதற்கு - அவன் கையாண்ட சொற்பிரயோகம், எதுகை மோனை, சிலேடை, சந்தம் என்பனவே காரணங்கள் ஆகும். வால்மீகி இராமாயணத்தைத் தமிழிலே சொல்நயம் ததும்பக் கூறமுற்பட்ட கம்பர், "வான்மீகி இராமாயணத்தைத் தான் ஓர் அட்சரம் கூடத் தவறாது அப்படியே ஒப்பித்திருக்கின்றேன். இதில் யாதேனும் குற்றம் நிகழுமாயின் அது என்குற்றமன்று, வால்மீகி குற்றமே" எனக்கூறி, தனது இராமாயணத்தில் ஏற்படுகின்ற தவறுகள் அனைத்தையும் வால்மீகியின் தலையிலே போட்டுவிட்டுத் தப்பிவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வால்மீகி இராமாயணத்தைத் தமிழிலே கூறுகின்றேன் என்று சத்தியம் செய்துகொண்ட கம்பர், தசரதர் உயிர்துடிக்கின்ற சந்தர்ப்பத்தில் வால்மீகியோடு மாறுபடுகின்றார். வால்மீகி இராமாயணத்திலே கைகேயி தசரதன் முன்னிலையிலே ஸ்ரீராமனை நோக்கித் தான்பெற்ற இரு வரங்களைத் தெரிவித்து, வரத்தின்படி இராமனைக் காடேகுமாறு ஏவுகிறாள். இராமன், "நீ சொல்லி நான் போவதில்லை" என்று மறுக்கின்றான்; தனது சொல்லம்புகளாலே அவளைத் துளைக்கின்றான். "உன் வஞ்ச நெஞ்சங்களை இன்றுநேற்றன்று நெடுங்காலமாக அறிவேன்" என்கின்றான். இது வால்மீகி கூறும் இராமப் பண்பு.

ஆனால் கம்பன், தசரதன் வரங்களைக் கொடுத்து ஆவிசோர்ந்த சமயத்தில் கைகேயி யாதும் அறியாத சுமத்திரன் மூலம் இராமனை அழைத்து, இராமன் தன்னை அணுகுவதற்கு முன் தான் இராமனை அணுகி, உன் அப்பா உனக்கு இரு கட்டளைகள் இட்டிருக்கிறார். பரதன் நாடாள்வது; நீ 14 வருடம் காடாள்வது என்பவையே அவை.இதனைக்கேட்ட இராமனின் முகம் "அன்று அலர்ந்த செந்தாமரையை வென்றது".

"அலர்ந்த செந்தாமரையில் வண்டு படிவது போல" ஒருகுறை மட்டுந்தான் காணப்பட்டது. "அப்பா சொன்னாரென்று சொல்லவேண்டுமா? தாங்கள் சொன்னால் நான் மறுப்பனா?" என்பதே அந்த 'செந்தாமரை வண்டு' போன்ற இராமனின் வடு.

சொல்லுக்குள்ளே கம்பன் பல சொற்களைச் சுருக்கிவைத்து சொல்தாண்டவம் ஆடுகிறார் கம்பராமாயண அரங்கு மூலம்.

இந்தச் சொற்றொடரைச் சற்று நோக்குவோம்.

ஆளையா - யாரையும் தரக்குறைவாகப் பேசக்கூடாது. இராவணன் இலங்கை வேந்தன். ஆகவே, 'இலங்கையை ஆளுகின்ற ஐயா!' என்று விளிக்கிறான் இராமன்.

ஆளையா - நானில்லாத நேரத்தில் என்னுடைய மனைவியாகிய சீதையை நீ கடத்திச்சென்றாயே! 'நீ ஒரு நல்ல ஆளையா!' (இச்சொற்றொடர் நாம் பேச்சுவழக்கில் பாவிக்கின்ற 'நல்ல ஆள்' என்பதாகும்).

## சுவை தோய்த்துச் சொல்வதிலும் அவன் வல்லவன்

இந்த இடத்தில் இராமன் கைகேயியைப் பார்த்து "மன்னவன் பணியன்றாங்கில் நும்பணி மறுப்பனோ...?", "என் பின்னவன் பெற்ற செல்வம் அடியேன் பெற்றதன்றோ..." என்ற சொற்றொடர்களைக் கூறுகின்றான்.

இங்கு இரு பொருள்கள் உள.

ஒன்று, அப்பா சொன்னார் என்று சொல்லவேண்டுமா? தாங்கள் சொன்னால் நான் மறுப்பேனா? என்பதாகும்.

மற்றையது இதற்கு மறுப்புத் தெரிவிப்பது போன்றது.

மன்னவன் பணியன்றாங்கில் - மன்னவன் பணி அன்று ஆங்கில் - மன்னவனது பணியன்று. நும்பணி -

## இலக்கியப் பரல்

உன்னுடைய பணி. மறுப்பனோ - மறுப்பன் ஓ. என்று இருவிதமாகவும் நோக்கலாம்.

"பின்னவன் பெற்ற செல்வம் அடியேன் பெற்றதன்றோ?" இதற்கும் கம்பர் இருபொருளில் கூறுகின்றார்.

ஒன்று - யான் பெற்றசெல்வம் பரதன் பெற்றது போன்றது. பரதன் நாட்டை ஆளட்டும். நான் காடாள்கிறேன் என்று இராமன் மிகுந்த மகிழ்வோடு காடுசென்றதாகக் குறிப்பிடலாம்.

மற்றையது - அந்த நேரத்தில் - அந்த இடத்தில் - இராமன் பெற்ற செல்வம் 14 வருடம் காடாள்வது, தன் தம்பி நாடாள்வது. அதைப் பரதனும் பெற்றுத் தன்னோடு காட்டுக்கு வரட்டும். தமது மற்றைய தம்பியர்களான இலக்குவன் அல்லது சத்துருக்கன் நாட்டை ஆளட்டும் என்று இருபொருள்படக் கூறியுள்ளார்.

### கம்பனது சிலேடையின் செல்வாக்கு

கம்பன் கையாண்ட ஒருசில சொற்பிரயோகங்களை எடுத்தாராய்ந்து, அதில் சிலேடை எவ்வகையான செல்வாக்கினைச் செலுத்துகின்றது என்றும் அதில் சுவைபடவுள்ள விடயங்களையும் பார்ப்போம்.

இராவணன் முதல்நாள் போரிலே நிராயுதபாணியாக, நிலங்கரித்திட, மாமியார் மருங்கிற் சென்ற மருமகன் போல, காலாலே நிலத்திற் கோடு கீறியபடி தலைகுனிந்து வெட்கித்து நின்றான். இந்தக் காட்சியைக் கம்பர், "ஆளையா வுனக்கமைந்தன...." என்று இராமன் பேராண்மையாகக் கூறி, இராவணனைக் கொல்லாது திருப்பியனுப்பி நாளை வரும்படி கூறுகின்றான் என்று கம்பர் கூறுகின்றார். இங்கு 'ஆளையா' என்ற ஒரு

ஆளையா - நீ பரலோகம் செல்வதால் உனக்கு விண்ணிலும் மண்ணிலும் இடமில்லை. ஆகவே, 'நீ பரலோகத்தைப் போய் ஆளையா!' என்பதாகும்.

ஆளையா - நீ சீதையைச் சிறைவிட்டு, மீண்டும் என்னிடம் திருப்பி ஒப்படைப்பாயேயானால் இலங்கையை உன்னிடமே தருகின்றேன். 'இலங்கையை மீண்டும் ஆளையா!' என்று பல விரிந்த சொற்களால் விவரித்துள்ளார்.

அடுத்த சம்பவம், மாரீசன் மாயமானாக வந்த காட்சி.

கம்பராமாயணத்திலே மாரீசன் இவ்வாறாக மாயமானாக வந்த நிகழ்வுதான் இராமாயணம் என்ற யுத்தம் ஆரம்பிப்பதற்கே மூலகாரணமாகி அடித்தளமிட்டது. ஒருவேளை, மாரீசன் இவ்வாறாக மாயமானாக வராவிட்டால் இராமாயண யுத்தமே இடம்பெற்றிருக்காமல் - இவ்வாறான ஓர் ஒப்பற்ற காவியம் எழுந்திருக்காமல் - கூட இருந்திருக்கலாம்.

மாரீசன் மாயமானாக வந்ததால்தான் சீதை அந்த மாயமான்மேல் மையங்கொண்டு இராமனிடம் அதைப் பிடித்துத்தரும்படி விடாப்பிடியாகத் தொந்தரவுபடுத்தியதும் இராமன் அந்த மானைப் பிடிக்கச்சென்று மாரீசன் மீது அம்பெய்ததும் அது இராமன் கத்துவதுபோன்று 'இலக்குவனா!' என்று கத்தியபடி மாய்ந்ததும் சீதை இலக்குவனனைப் பார்த்து உன் அண்ணனுக்கு ஏதோ நிகழ்ந்துவிட்டது, அதனால்தான் உன்னை அழைத்தான் என்று கூறி இலக்குவனைச் சொல்லமுடியாத வார்த்தைகளால் தூற்றி அவனை அனுப்பியதும், இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்திச் சீதையை இராவணன் கடத்திச் சென்றதும் இராமசரிதம்.

இங்கு குறிப்பிட்ட இந்த 'மாயமான்' என்ற சொற்றொடரை கம்பன் எவ்வாறு நோக்கினான் என்று பார்த்தால் - மாயமான் - மாயையின் காரணமாக வந்தமான் மாயமான் என்றும், அங்கு மாரீசன் இராமபாணம் பட்டு இறக்கின்றான். ஆகவே, மாய்வதற்காக வந்தமான் மாயமான் என்றும், இராமாயணம் என்ற கதை உருப்பெற்று பெரிய இராம - இராவண யுத்தம் இடம்பெறுவதற்குக் காரணம் இந்த மாயமான்தான் (மா+யமன் = மா-பெரிய, யமன்-யமன் - - பெரிய யீமன்) என்றும் சுருங்கிய சொற்களுக்குள்ளே விரிந்த பொருள்களை விதைத்துள்ளார் கம்பர்.

இவ்வாறாகக் கம்பரின் இராம காதையில் ஒவ்வொரு சொற்றொடர்களுக்கும் பல விரிந்த பொருள்கள் விரவிக்கிடப்பதைக் காணலாம்.

சிவஹரி

---

# எதிர்ப்பை வெளிப்படுத்த ரயர்களை எரிப்பது உகந்த வழிமுறையல்ல!

மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்படும் போது அதற்கு எதிராக, ஜனநாயக ரீதியாக, வெகுஜன எதிர்ப்புப் போராட்டங்கள் முனைப்புப் பெறுவது வழமை. இலங்கையில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் சர்வதேச கண்காணிப்பின் கீழ் போர் ஓய்வுச் சூழல் நிலவுகிறது. போர் ஓய்ந்துள்ளதேயன்றி மக்களின் இயல்பு வாழ்க்கை சீரடையவில்லை.

ஆங்காங்கே நிகழும் சம்பவங்களும், அரசியல் வாதிகள் உதிர்க்கும் பேச்சுக்களும், தென்னிலங்கையின் இனவாத சக்திகளின் செயற்பாடுகளும், இராணுவ புலனாய்வு தந்திரோபாய நகர்வுகளும் ஆகிய இவையெல்லாம் ஊடகங்கள் வாயிலாக மக்களை வந்தடைந்து, அவர்களை அச்சுறுத்திக் கொண்டேயுள்ளன. இருக்கின்ற யுத்தமற்ற சூழலாவது நீடிக்குமா என்பதே சாமானிய மக்களின் அங்கலாய்ப்பாக உள்ளது

தாங்கள் பிறந்து வளர்ந்த முற்றத்தில் சுற்றத்தோடு குலவியிருக்கும் வாழ்க்கைக்காக ஏங்குவோர் பலர்.

நிம்மதியாகத் தொழிலாற்றிய தொழிற்சாலைகள் இயங்காமல் போக, தொழிலின்றி வாடியவாறு தமது தொழிற்சாலைகளின் மீள்இயக்கத்துக்காகக் காத்திருப்போர் பலர்.

விதவைகளை, அனாதைகளை, அங்கவீனர்களை உருவாக்கி, பல்லாயிரம் உயிர்களைப் பலி கொண்ட யுத்த அரக்கன் மாய மாட்டானா என்ற

## யாரோடு நோவோம்...?

அங்கலாய்ப்போடு இருப்போர் எல்லோருமே. ஆனால், அந்த அமைதிச் சூழலில் பெருந்துயரளிப்பதாய் தொடரும் உயிர்ப்பலிகளும் அச்சுறுத்தல்களும் தமிழ் மக்களைப் பீதிக்குள்ளாக்கும் செயலாயுள்ளது. அவ்வகையில், அமைதிச் சூழலுக்குப் பங்கம் நேர்வதை எதிர்த்தும், திட்டமிட்ட வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஆங்காங்கே வெகுஜன எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. பாதிக்கப் பட்டவர்களுக்கு இருக்கும் ஒரே மார்க்கமும் இதுதான்.

ஆர்ப்பாட்டப் பேரணிகள், மனித சங்கிலிப் போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், ஹர்த்தால், ஒத்துழையாமை, வேலைப் பகிஷ்கரிப்பு எனப் பல வழிகளில் – பல வடிவங்களில் – இந்த எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

ஜனநாயக ரீதியாக மக்களின் குரலை வெளிப்படுத்தும் மார்க்கங்களாக இவை உள்ளன. ஆர்ப்பாட்டங்களின் போதும், கடையடைப்பின் போதும் போக்குவரத்தைத் தடை செய்தல், வீதிகளில் ரயர்களை எரித்தல் என்பன பொது வழக்காகி விட்டது. அது பாகிஸ்தானிலென்றாலும் இந்தியாவிலென்றாலும் பங்களாதேஷ், பலஸ்தீனம், இந்தோனேசியா போன்ற நாடுகளிலென்றாலும் எங்கும் வழமையான விடயமாகிவிட்டது. அதனால் நமது சூழலும் இதற்கு விதிவிலக்கல்ல.

இது ஓர் உணர்வு பூர்வமான விடயம். நேரடியாகப் பொருத முடியாவிடினும் இவ்வழியிலாவது தமது எதிர் நிலைப்பாட்டை வெளிப்படுத்த எண்ணும் மனப்பாங்கே ரயர் எரிப்பாகப் பரிணமிக்கிறது எனலாம்.

நமது சூழலிலும் ரயர்களை எரிப்பது பரவலாக இடம்பெறும் ஒரு நிகழ்வாகி விட்டது. ரயர்களை எரிப்பதால் நமது சூழலுக்குத்தான் கேடு.ஒரு முறை ஹர்த்தாலின் போது ரயர்கள் எரிக்கப்பட்டன. அன்றிரவு மழை பெய்தது. ரயர் எரித்த பிரதேச நிலப் பகுதி கருமையாகியிருந்தது. வாகனங்களில் கறுப்புப் பசை அப்பியிருந்தது. ஆக, இதனால் நமது சூழலுக்கு, நமது சுவாசத்துக்குத்தான் கேடு. இதனால் நாம் வெளிப்படுத்த விரும்புவது என்ன?

ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் பல கட்டமைப்புகளோடு கட்டிவளர்க்கப்பட்ட பூமியிது. அதில் ஒன்று சூழல் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களிலும் கவனம் செலுத்துகிறது. யுத்தம் அழித்த மரங்களை மீள் நடுகை செய்து சூழல் பாதிப்புக்களிலிருந்து மக்களையும் தேசத்தையும் காக்கும் பணியில் அந்நிறுவனம் செயற்படுகிறது.

ஆனால், நாம் வெகுஜன எதிர்ப்புப் போராட்டங்கள் செய்யும்போது நமது சூழல் பற்றிய அக்கறையின்றி இருக்கிறோம். இறுதியாக நடைபெற்ற ஹர்த்தாலுக்கு அழைப்புவிடுத்த பிரிவினர் ரயர்கள் எரிக்க வேண்டாம் என்பதை வலியுறுத்தியிருந்தும், அதன் தாற்பரியம் பல இடங்களிலும் உணரப்படவில்லை.

இத்தகைய ஹர்த்தால்களின் போது வீதிகளில் ரயர்களைப் போட்டு எரிப்பதைக் காட்டிலும் மனித சங்கிலிப்போராட்டங்களைச் சந்திகள் தோறும் மேற்கொள்ளலாம். அன்றேல் எதிர்ப்பை வெளிப்படுத்தும் பதாகைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடலாம். வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டி, அமைதியான முறையில் சுலோக அட்டைகளைத் தாங்கி எதிர்ப்பை வெளிப்படுத்தலாம். ஜனநாயக வெகுசனப் போராட்டங்கள் என்பது அதனதன் மொழியில் அமையும் போது அது பயனும் தாக்கமும் மிக்கதாக அமையும்.

ஏகலைவன்